T.N.L.C. Debates

Official Report

1981

Vol: CLXXX No 3,4

C

D

V2-11,32'N81

N81.180.3-4

143881

[ISSUED 5—2—1982

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

THURSDAY 14th MAY 1981

Volume CLXXX (No. 3)

©
GOVERNMENT OF TAMIL NADU
1982

*Legislative Council Department*
*Fort St. George, Madras*-600 009.

Price 2 *Rupees*.]

## பொருளடக்கம்.

பக்கங்கள்


1. வினாக்கள்-விடைகள்

2. அறிவிப்புகள்—

(1) பேரவையிலிருந்து செய்தி — 195—221

(2) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு — 271—222

3. கவன ஈர்ப்பு—

(1) குமரி மாவட்டம், விளவங்கோடு, கல்குளம் தாலுகாக்களில் தோட்டத் தொழிலாளர்களுக்கும், பொது மக்களுக்கும் வழங்கப்பட்டு வந்த அரிசியை, தற்போது குறைத்து வழங்குவதால், ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து. — 222—223

(2) உடற்பயிற்சி ஆசிரியர் கழகத்தினர் கோரிக்கைகளை வற்புறுத்தி அண்ணா சதுக்கத்துக்கருகே உண்ணாவிரதம் இருப்பது குறித்து — 224—225

4. அரசின் தீர்மானம்—

அலுவல் வரிசையில் மாற்றம் குறித்து — 225, 257—258

5. அரசின் சட்ட முன்வடிவுகள்—

(1) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்தச் சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1981). — 225—256

(2) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வன (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1981). — 256—257

(3) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மின்சார வாரியம் (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு 29/1981). — 258—274

5. அரசின் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(4) 1981 ஆம் ஆண்டு சிறைக் கைதிகளின் அடையாளங்களைப் பதிவு செய்தல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1981). 275—277

(5) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கடன் நிவாரண (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1981). 278—282

6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் 283

143881

D

Y21,32'N81

NA1.19..3—4

(400)

## தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.

வியாழக்கிழமை, 1981 மே 14.

(வைகாசி 1, துன்மதி, திருவள்ளுவராண்டு—2012)

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

குழந்தைகள் கடத்தல்.

* 289 வினா—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1980 ஜூன், ஜூலை மாதங்களில், சென்னை நகர் நீங்கலாக மாநிலம் முழுவதிலும் எத்தனை பிள்ளைகள் கடத்தப்பட்டனர்?

(இ) பிள்ளை பிடித்து கடத்துகிறவர்கள் எத்தனை பேர் கண்டுபிடிக்கப் பட்டார்கள்?

(உ) அவர்கள் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்): (அ) மாதம்—கடத்தப்பட்ட/காணாமல் போன பிள்ளைகளின் எண்ணிக்கை.

ஜூன் 1980—5.

ஜூலை 1980—7.

(இ) & (உ) 1980 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பிள்ளை கடத்தியதற்காக ஐந்து வழக்குகள் பதியப்பட்டு இரண்டு பேர்கள் கைது செய்யப் பட்டனர். மூன்று வழக்குகள் புலன் விசாரணையில் உள்ளன. இரண்டு வழக்குகள் உண்மையைத் தவறாகப் பிராது செய்யப்பட்டது என முடிக்கப் பட்டன.

[1981 மே 14

ஜூலை மாதத்தைப் பொறுத்தவரையில், 4 வழக்குகள் பதியப்பட்டு 7 நபர்கள் கைது செய்யப்பட்டனர். அவற்றில் ஒரு வழக்கு புலன் விசாரணையிலும் ஒரு வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையிலும் உள்ளன. ஒரு வழக்கில் நீதிமன்றத்தில் குற்றவாளிக்கு தண்டனை விதிக்கப்பட்டது. மற்றொரு வழக்கில் காணாமல் போன சிறுவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு பெற்றோர்களிடம் சேர்க்கப்பட்டனர்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** 2 மாதங்களில் 12 பிள்ளைகள் கடத்தப்பட்டதாக அல்லது காணாமல் போனதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதில் எத்தனை குழந்தைகள் மீட்கப்பட்டனர்? மீட்கப்பட்ட குழந்தைகளிடமிருந்து பெற்ற தகவலின் அடிப்படையில், பிள்ளை கடத்தும் குழு கடத்தப்பட்ட குழந்தைகளை எந்தப் பணிக்கு ஈடுபடுத்துகிறார்கள் என்பதையும் கண்டறிந்து ஒரேயடியாக அந்தக் குழுக்களைக் கட்டுப்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகம்மது :** தென்னாற்காடு மாவட்டத்தில் 16 வயது பெண் ஆரோக்கியம்மாள் என்பவள் காணவில்லையென்று புகார் கொடுக்கப்பட்டது. அதில் யார் மீதும் குற்றம் சாட்ட முடியவில்லை. செங்கற்பட்டில் காணாமல் போன ஒரு பையன் இன்னும் கிடைக்கவில்லை. அது போலீஸ் விசாரணையில் இருக்கிறது. சில இடங்களில் பையன்கள் கண்டு பிடிக்கப்பட்டு பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும், இது தொடர்பாக ஒரு கேள்விக்கு, அதாவது சென்னை நகரில் இந்தமாதிரி எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதைப் பற்றி நான் பதில் சொல்லும்போது, விரிவாக விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். பொதுவாக நாம் மீட்பவர்களிடமிருந்து பெற்ற தகவல்படியும் நமக்குக் கிடைத்த தகவல்படியும், நகைகளை அணிந்திருந்தால், இப்படிச் செய்கிறார்கள். அது நகையல்ல என்று தெரிந்தவுடன், துன்புறுத்தி விட்டும் இருக்கிறார்கள். மேலும் அவர்களை வைத்து அந்தக் குழுக்களைக் கண்டு பிடிக்கலாம் என்றாலும், வயது குறைவின் காரணமாக அவர்களால் அடையாளம் காட்ட முடியவில்லை. வந்தவர்கள் கடத்திச் சென்று விட்டார்கள், இருந்த பொருள்களை எடுத்துச் சென்றுவிட்டார்கள் என்றுதான் தகவல் கிடைத்திருக்கிறது. அது தவிர, தவறாக பிள்ளைகளைப் பயன்படுத்தி பணம் சம்பாதிக்க இதில் ஈடுபட்ட ஒருவர் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறார்.

**திரு. ந. சந்தோஷம் :** மதுரை மாவட்டத்தில் சென்ற ஆண்டு இப்படிப்பட்ட புகார்கள் 2 வந்தன. ஆனால் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் யார் என்று இன்னும் கண்டுபிடிக்க முடியாமல் இருப்பது உண்மை தானா ?



1981 மே 14]

**மாண்புமிகு திரு. கா. இராசா முகம்மது :** மதுரை நகரத்தைப் பொறுத்தவரையில், ஒட்டன்சத்திரத்தில் 18—8—1980 அன்று இம்மாதிரி ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. குற்றம் சாட்டப்பட்டவர் பெயிலில் போய் 'அப்ஸ்காண்ட்' ஆகிவிட்டார். 'நான் பெயிலபிள் வாரன்ட்' அனுப்பப்பட்டிருக்கிறது.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** வெளி மாநிலங்களிலிருந்து வந்தும் பிள்ளைகளைக் கடத்துகிறார்கள். ஆகவே முக்கியமான ரெயில் நிலையங்களிலும், பேருந்து நிலையங்களிலும் வருவோர் போவோரைக் கண்காணிக்க, தனியாகப் போலீஸ் நியமிப்பதுபற்றி அரசு கவனம் செலுத்துமா ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** பொதுவாக அறிமுகமில்லாத அந்நியர் வரும்போது, சந்தேகம் இருந்தால், பொதுமக்கள் அவர்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று காவல் துறையினர் எற்கெனவே அறிவுரையைப் பொதுமக்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். பெற்றோர்களுடைய கண்காணிப்பில் தான் பிள்ளைகள் எப்போதுமே இருக்கிறார்கள். பள்ளிகளுக்குச் செல்லும் நேரங்களில் பெற்றோரின் கண்காணிப்பும் ஆசிரியர்களின் கண்காணிப்பும் அவசியம் தேவை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறமாதிரி, பல்வேறு மாநிலங்களிலிருந்து மக்கள் வந்து கூடிச் செல்கிற இடங்களிலெல்லாம் கொஞ்சம் எச்சரிக்கையாக, விழிப்புணர்வுடன் இருந்துகொண்டு தான் இருக்கிறார்கள்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** பிள்ளைகளைக் கடத்துகிறார்கள் என்ற செய்தி வந்த உடனே நிராபாரிகளாக இருப்பவர்கள், சாமியார்கள், எளிய வர்கள் இப்படிப்பட்டவர்கள் எல்லாம் துன்புறுத்தப்பட்டு, பாதிக்கப்பட்டு, இறக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. பிள்ளைகள் கடத்தப் படுகிறார்கள் என்கிற செய்தி பரவிய உடனே, பிள்ளைகளை கடத்தப்படாமல் பாதுகாப்பு கொடுப்பதுடன், நிரபராதிகளும் பாதிக்கப்படாமல் பாதுகாப்பு கொடுக்க வேண்டியது அரசின் கடமை, அப்படி இதுவரை எத்தனை நிரபராதிகள் பாதிக்கப்பட்டு அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறார்கள் ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** அதற்கான விவரம் இல்லை. ஆனால் இந்தக் கருத்தைப் பரிசீலனை செய்ய வேண்டும். பல்வேறு இடங்களில் பாதுகாவலாக இருப்பவர்கள், எந்தவிதமான பற்றும் பாசமும் இல்லாமல் இருப்பவர்கள், அவர்களின் தோற்றத்தின் காரணமாகச் சந்தேகப்படும்படியாக இருப்பவர்கள் துன்புறுத்தப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை வரும்போது, பொதுமக்களே சில நேரங்களில் ஆத்திரப்பட்டு சட்டத்தைக் கையில் எடுத்துக்கொள்கிறார்கள். சந்தேகப்படுகிறவர்

[1981 மே 14

களைப் பிடித்து காவல் துறையினரிடம் பொதுமக்கள் ஒப்படைக்க வேண்டும். அதுதான் முறை. அப்படிச் செய்தால், சிக்கல் ஒன்றும் வராது. ஆனால், கூட்டம் கூடுகிறபோது ஆத்திரப்பட்டு அவர்கள் யாரைச் சந்தேகிக்கிறார்களோ அவர்கள் உண்மையிலேயே குற்றவாளி என்று முடிவுக்கு வந்து, தீர்ப்பளித்து விடுகிறபடியால், இப்படிப்பட்ட தவறுகள் நடக்கின்றன. ஆகவே சந்தேகப் படும்படியாக இருப்பவர்களைப் பிடித்து, காவல் துறையினரிடம் பொதுமக்கள் ஒப்படைக்க வேண்டும். அவர்களே தண்டனையைத் தரக்கூடாது. அந்த முறையில் ஒரு ஏற்பாட்டினைப் பொதுமக்கள் சேர்ந்து செய்தால், அதுவே ஒரு பாதுகாப்பாக இருக்கும் என்று அரசு கருதுகிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** கடத்திப் போகிற பிள்ளைகளைப் பொதுவாக எந்த மாநிலத்திற்கு அதிகமாகக் கடத்திப் போகிறார்கள்? குறிப்பிட்ட மாநிலத்திற்கு இம்மாதிரி பிள்ளைகள் பெருவாரியாகக் கடத்தப்படுகிறார்கள் என்கிற தகவல் அரசுக்குக் கிடைத்திருந்தால், உடனடியாக அந்த மாநிலத்துடன் நம்முடைய மாநில அரசு அல்லது காவல் துறை தொடர்பு கொண்டு கண்காணிக்க நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** நம்முடைய மாநிலத்தில் இது குறைவுதான். பெரும்பாலும் இங்கே கொடுக்கப்பட்டுள்ள கணக்குப்படி காணாமல் போய்விட்ட பிள்ளைகளைக் கண்டுபிடித்திருக்கிறோம். குறிப்பாக தொழில் நகரங்களில் அதிகமாகப் பிள்ளைகளைக் கடத்திச் சென்றிருக்கிறார்கள். பம்பாய் போன்ற மக்கள் தொகை அதிகமாக உள்ள பகுதிகளுக்கு பிள்ளைகளைக் கடத்திக்கொண்டு போய், அவர்களை அங்கே ஊனப்படுத்தி, அவர்கள் மேல் மற்றவர்களுக்குப் பரிவு உணர்வு உண்டாகச் செய்து. பணம் சம்பாதிக்கும் தொழில் நடத்துகிறார்கள். இப்படிச் செய்பவர்கள் ஆயிரக் கணக்கில் இருக்கிறார்கள். அன்றைக்கு நான் இதுபற்றிச் சொல்லும் போதுகூட, இதே கருத்தைத்தான் சொன்னேன். அந்த மாநில அரசுடன் நம்முடைய மத்திய அரசு தொடர்பு கொண்டு இப்படிக் கடத்தப்பட்ட பிள்ளைகளை விடுவிக்க வேண்டும். அதைக் கவனத்தில் கொண்டுதான் நாமும் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

**திரு. ஜே. எம். மியாகான் :** நான் ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். 12 முதல் 17 வயது வரை உள்ள ஆண் பிள்ளைகளைக் கடத்திச் சென்று வெளிநாட்டின் கன்ட்ரிக்கு, அதாவது அரபு, மிடில் ஈஸ்ட் போன்ற கன்ட்ரிகளுக்கு அனுப்பி விடுகிறார்கள். குறைந்தபட்சம் ஒரு பிள்ளைக்கு 1 லட்சம் ரூபாய் என்கிற விதத்தில் விற்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?



1981 மே 14]

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தமிழகத்திலிருந்து இம்மாதிரி கடத்திச் செல்லப்பட்டதாகப் புகார் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்து, தமிழகத்தைப் பொறுத்தவரை, புதிது. வேறு மாநிலங்களிலிருந்து அப்படிக் கடத்திச் சென்று விற்றிருப்பார்கள். அப்படிப் பட்ட செய்தியைத்தான் நான் பத்திரிகை வாயிலாகப் படித்து அறிந்திருக்கிறேன்.

## கடலூரில் வகுப்புக் கலவரம்.

* 290 வினா—**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தென் ஆற்காடு மாவட்டம், கடலூரில் 1980, செப்டம்பரில் ஏற்பட்ட வகுப்புக் கலவரத்தில் காயமடைந்தவர்கள் எத்தனை பேர் ?

(இ) கலவரத்தினால் ஏற்பட்ட பொருள் இழப்பு எவ்வளவு ?

(உ) கலவரம் தொடர்பாக, அரசு மேற்கொண்ட நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்) :** (அ) சாதி இந்துக்களில் எட்டு பேர்களும் ஒரு ஆதி திராவிடரும் காவல் துறையினரில் 7 பேர்களும் காயமடைந்தனர்.

(இ) சாதி இந்துக்களில் 12 பேர்களுக்கு மொத்தம் சுமார் ரூ. 5,250 அளவிலும், ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்த மூவருக்கு, மொத்தம் சுமார் ரூ. 2,600 அளவிலும் சேதம் விளைந்துள்ளது.

(உ) தகவல் அறிந்தவுடன் காவல் துறையினர் விரைந்து, அமைதி ஏற்பட நடவடிக்கைகள் மேற்கொண்டனர். கண்ணீர்ப்புகை, தடியடிப் பிரயோகம் முதலியன பயனளிக்காமல் போகவே காவல் துறையினர் துப்பாக்கியால் சுட நேர்ந்தது. உயிரிழப்பு ஏதும் இல்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் நேரில் சென்று நிலைமைகளைக் கண்காணித்தார். அமைதிக் குழு ஏற்படுத்தப்பட்டு அமைதி நிலவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இச்சம்பவங்களின் தொடர்பாக காவல் துறையினரால் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்பொழுது நிலைமை அமைதியாக உள்ளது.

(முற்பகல் 9-40)

**திரு. ம. சங்கரலிங்கம் :** இந்தக் கலவரத்தில் பல சேதங்கள் எவ்வாறு ஏற்பட்டன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வார்கள். இந்தக் கலவரம் நடந்த பிறகு, இந்தக் கலவரத்தை வராமல் தடுத்திருந்திருக்க

முடியுமா என்று அரசு ஆராய்ந்ததா? சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முறையாக முதலிலே செயல்பட்டிருந்தால், அந்தக் கலவரத்தை தவிர்த்திருக்கலாம் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டதா? அப்படி முன்கூட்டியே அதைத் தவிர்க்க முயற்சி எடுத்திருந்தால், மற்ற இடங்களுக்கும் அது வழிகாட்டியாக இருந்திருக்காதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சப்-கலெக்டர் அவர்களிடம் இதுபற்றி விசாரித்து ஒரு அறிக்கை கேட்டிருக்கிறார்கள். அந்த அறிக்கை அரசுக்கு இன்னும் வரவில்லை. அப்படி அந்த அறிக்கை வரும்போதுதான், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய அந்தக் கருத்துபற்றி அரசுக்குத் தகவல் தெரிய வாய்ப்பு இருக்கிறது. இதைப் பொறுத்தவரையில், தனிப்பட்ட இருவரிடையே ஏற்பட்ட தகராறுதான் இதற்குக் காரணம். இவர்களிடையே கடை வைத்துக்கொள்வதிலேதான் தகராறு ஏற்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு அவரவர்களுக்கு வேண்டியவர்கள் எல்லாம் சேர்ந்து ஓர் இனக் கலவரம் என்ற அளவுக்கு இது நடந்திருக்கிறது. இரண்டு பேருக்கிடையில் உள்ள தனிப்பட்ட வியாபாரம் போன்ற சம்பந்தப்பட்ட நிலைமைகள் என்று வரும்போது, வெளிப்படையாக இதுதான் காரணம் என்று தெரிந்தாலும், உண்மையான காரணம் என்னவென்று முன்கூட்டியே தெரியாவிட்டாலும், இந்த அறிக்கை வரும்போது அதைத் தெரிந்து கொள்ளலாம்.

திரு. க. இராமமூர்த்தி : கடலூர் நகரத்தினுடைய அமைப்பு காரணமாக வன்முறைச் சம்பவங்கள், ஜாதிச் சண்டைகள், இந்துக்களுக்கும், ஹரிஜனங்களுக்கும் இடையே சண்டைகள் தொடர்ந்து கடந்த நான்கைந்து ஆண்டு காலமாக ஆண்டுக்கு ஒரு தடவை, இரண்டு தடவை என்று நிரந்தரமாக நடைபெற்று வருகின்றன. பல நேரங்களில் இவற்றைத் தொடர்ந்து, கொலைகள், துப்பாக்கிச் சூடு, கண்ணீர்ப் புகை என்ற அளவுக்கு நிலைமைகள் ஏற்படுகின்றன. ஆகவே, இதற்கு நிரந்தரமாக ஒரு முடிவு ஏற்படுத்தும் அளவுக்கு அதிகாரிகளோடு கலந்து பேசி, அதிகாரப் பற்றற்றவர்களைக் கொண்ட ஒரு குழுவை ஏற்படுத்தி, அவர்களுடைய ஆலோசனையை அரசு கேட்குமா? அங்கே பெரும்பாலும் பொது வாழ்க்கையிலே இருப்பவர்கள் சிலர் ஏதாவது ஒரு பிரிவினரோடு அதிகத் தொடர்பு கொண்டு இருப்பதால், தங்கள் உணர்வு மேலோங்கப் பேசுகின்ற நிலை ஏற்படும். ஆகவே, இவைகளை மனதில் கொண்டு, மாவட்ட அளவிலே இருக்கும் முக்கியமானவர்களை அழைத்து குழு அமைத்து, இந்தச் சங்கடத்திற்கு ஒரு நிரந்தரமான முடிவு காணப்படுமா?





**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மற்ற மாவட்டங்களில் இருக்கும் நிலைமை எப்படியோ, தென்னாற்காடு மாவட்டத்திலே அப்படியொரு குழு அமைக்கப்படுகின்றபோது அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களைக் கொண்டு அந்தக் குழுவை நியமித்தால், என்னென்ன பிரச்சினைகள் வரும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிவார்கள். ஒருசிலர் ஏதோ அந்த ஜாதியைக் காப்பாற்றுவதாக நினைத்துக்கொண்டு பெரிய குரல் எழுப்பும் போக்கு சமீபத்திலே இருக்கிறது. அப்படிப்பட்டவர்களைத் தவிர்ப்பது நல்லது. நாம் எல்லோருக்கும் பொதுவாக இருக்கிறோம் என்ற உணர்வுடையவர்கள் யார் என்று பார்த்துச் செய்ய வேண்டும். அதை விட்டுவிட்டு, ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்குத்தான் வக்காலத்து வாங்குவார்கள் என்று இருந்தால் நல்லதல்ல. எல்லோருக்கும் பொதுவாக இருக்கக்கூடியவர்கள் இந்த நாட்டிலே இருக்கிறார்கள். ஒரு செக்யூலர் மைண்ட்லே இருப்பவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். ஏற்கெனவே இராமநாதபுரம் மாவட்டத்திலே நடந்த கலவரம் சம்பந்தமாகப் பேசும்போது, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதை அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. அது ஒரு நல்ல கருத்து. எப்படி அந்தக் குழுவைப் போடுவது என்ற நிலைமை வரும்போது, மாண்புமிகு உறுப்பினர்களையும் கலந்து பேச அரசு தயாராக இருக்கிறது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** Time cures many a problem 'காலம் பல பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளும்' என்ற நிலைமை இருக்கிறது. ஆனால் இன்றைய நிலை, காலம் கொடுப்பது என்பது பல பிரச்சினைகளை உருவாக்கி விடுகிறது. வெள்ளைக்காரர்கள் இந்த நாட்டை ஆண்டபோது, அவர்கள் அந்நியர்களாக இருந்ததால், ஒவ்வொரு மாவட்டத்தின் நிலை என்னவென்பது பற்றியும், உணர்ச்சிவயப்பட்ட பகுதி எது என்பதுபற்றியும் விவரங்கள் அடங்கிய ஒரு 'டைரி' வைத்திருந்தார்கள். இப்போது கூட அதுபோன்ற விவரங்கள் அதிகாரிகளுக்கு அளிக்கப்படுகின்றன. அதுபோல, எந்தெந்த இடங்கள், எந்தெந்த மாவட்டங்கள் உணர்ச்சிவயப்பட்ட பகுதி என்றுள்ள குறிப்புகளை வைத்து, 'சென்சிட்டிவ் பாயிண்ட்' எங்கெங்கே இருக்கிறது என்று அட்மினிஸ்ட்ரேட்டர்கள் அமைச்சர்களோடு கலந்து அந்தத் தகவல்களை ரகசியமாக வைத்து, அந்தப் பகுதிகளில் ஏதாவது ஒரு பிரச்சினை வந்தால், அதைக் காலம் கடத்தாமல் தீர்க்கும் வகையில் ஒரு ரகசியமான ஏற்பாடு அரசு மட்டத்திலே செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இந்தக் கருத்து கொண்டுவரப்படும். இதில், அரசாங்கம் கவனம் செலுத்தும்.

[1981 மே 14

**திரு. த. சந்தோஷம்:** மூலக் கேள்வி கடலூரில் நடந்த நிகழ்ச்சியைப் பற்றியதாக இருந்தபோதிலும், சமீப காலத்திலே பரவலாக நமது மாநிலம் முழுவதும் ஜாதிச் சண்டைகள் நடப்பதில், குறிப்பாகக் கல்லூரிகளில் இந்தச் சாதிச் சண்டைகள் ஏற்பட்டு, கோரமான வன்முறைகள் ஏற்படுகின்றன. இவைகளுக்கு அரசியல் பின்னணி இருக்கிறதா அல்லது வேறு காரணமா என்பதைப்பற்றி அரசு ஆராய்ந்து, தடுப்பு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** இதற்கு என்னென்ன காரணங்கள் என்றெல்லாம் இப்போது ஓர் யூகத்தின் அடிப்படையிலே கருத்துக்கள் சொல்வது என்பது நல்லதல்ல. இதிலே நடவடிக்கை எடுப்பது என்றால், நாம் எல்லோரும் கலந்துதான் செய்ய வேண்டும். அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் மற்றும் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் ஒன்று சேர்ந்து ஒரு முடிவுக்கு வர வேண்டும். வேறு சில மாநிலங்களிலே கூட வெளிப்படையாக ஜாதிக் கலவரங்கள் நடக்கின்றன. இந்துக்கள்-தாழ்த்தப் பட்டவர்கள் இடையே தகராறு ஏற்படுகிறது, அங்கெல்லாம் அரசியல் வாதிகள் கூட வெளிப்படையாகச் செயல்படுகிறார்கள். தமிழ் நாட்டிலே உள்ள நிலைமை அப்படியல்ல. மேடையில் பேசும்போது, நாம் எந்த அளவுக்குச் சில உணர்வுகளை வெளிப்படுத்துகிறோமோ, அது நடைமுறையிலே இல்லை. நடைமுறையிலே இல்லை என்பது மக்களுக்குத் தெரியாது. மேடையிலே அந்த உணர்வுகளை வெளிப்படுத்துவதால்தான் அவர்களுடைய தூண்டுதல்கள் இருக்குமோ என்ற அச்சம் இருக்கிறது. எந்த ஒரு குறிப்பிட்ட கட்சியையும் நான் சொல்லவில்லை. அது கூடாது என்ற வகையில் உணர்வுகளை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். இரண்டாவது, பாதிப்புக்கு உள்ளாகின்றவர்களையும் பார்க்க வேண்டும். இப்போது இருக்கும் நிலைமை களுக்கு இன்றைக்கு இருக்கும் நாம் யாரும் காரணமல்ல. பாதிக்கப்பட்டிருப் பதாகக் கருதுபவர்கள் அவர்களை அந்த நிலைமையில் வைத்திருப்பது இப்போது இருக்கிறவர்கள் என்ற எண்ணத்தை ஒழிக்க வேண்டும். ஆண்டாண்டு காலமாக இருக்கும் தவறான நம்பிக்கைகளின் அடிப்படையிலே ஜாதி வெறுப்புகள் இருந்திருக்கலாம். அதை நாம் ஒழிக்க வேண்டும். ஜாதியில் தாழ்ந்தவர்களைப் பொருளாதார ரீதியிலே உயர்த்துவதன் மூலமாக அதைச் செய்யலாம். அப்படி இல்லாதவர்கள், ஏதாவது ஒரு தொழிலிலே ஈடுபட்டு வியாபாரம் அல்லது வேறு ஏதாவது தொழில் செய்தால், அவர்கள் தங்களுடைய உடைமைகளை இழக்க மனம் வராது. சமீபக் காலத்திலே ஏற்பட்ட கலவரங்கள்பற்றி அங்கே போய்க் கேட்டு அங்கே நிலவும் கருத்துக் களைப் பார்க்கும்போது, சிலருடைய வீடுகள் தீ வைக்கப்பட்டிருக்கின்றன, உடைமைகள் அழிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இன்னும் சில பகுதியிலே அந்த அளவுக்குச் சேதாரங்கள் ஏற்படவில்லை என்ற கருத்தைச்



1981 மே 14]

சொல்லும்போது, அவர்களுக்கும் சில உடைமைகள் இருந்தால், அதைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்ற முறையிலே இந்த வன்முறைச் செயல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்ற கருத்தும் சொல்லப்படுகிறது. நாம் போட உத்தேசித்துள்ள இந்தக் குழு போடப்படும்போது, இதைப்பற்றி முடிவு செய்யலாம். ஒவ்வொரு மாவட்டத்திலேயும் வெவ்வேறு காரணங்களால் இந்த நிகழ்ச்சிகள் ஏற்படுகின்றன. ஆகவே, இந்தக் குழு போடப்படும்போது, இதைப்பற்றியெல்லாம் விவாதித்து, வருமுன் காக்கக்கூடிய நடவடிக்கை என்னவென்பதைப் பற்றியெல்லாம் நாம் யோசித்துச் செய்ய வேண்டும், ஆகவே, அந்த வழியிலே அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

**திரு. க. அருணாசலம்:** இந்தச் சாதிச் சண்டைகள் அல்லது இனச் சண்டைகள் நம் நாட்டிலே மட்டுமல்ல, வேறு பல நாடுகளிலேயும் நடக்கின்றன. இதை எப்படித் தீர்ப்பது என்று சம்பவங்கள் நடந்து முடிந்த பிறகு குழுக்கள் அமைத்து, நாம் யோசிக்கிறோம். அதற்குப் பதிலாக, இந்த நாட்டிலே இருக்கும் நல்ல இளைஞர்களைச் சேர்த்து, புதிதாக வந்திருக்கும் இயல்களிலே எப்படிச் சிக்கல்களைத் தீர்க்க வேண்டும் என்பதுபற்றிப் பயிற்சி கொடுத்து, ஒரு நிரந்தரமான குழுவை அமைத்தால், சிறப்பாக இருக்கும். எப்படி இப்போது போலீஸ் படை இயங்குகிறதோ அதுபோல இயங்கச் செய்யலாம். மேலும் அந்தக் குழுவை ஒரு கௌரவக் குழுவாகக் கூட வைக்கலாம். படித்த இளைஞர்கள், சமூக இயல்களிலே நன்கு பயிற்சி பெற்றவர்கள் எல்லோரும் சேர்ந்து இந்தப் பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்று பார்த்து, கலவரம் செய்பவர்களை அடையாளம் கண்டுகொண்டு, அவர்களை முன்னாலேயே சந்தித்து, அவர்களிடம் நல்ல முறையில் பேசிப் பழகி, பேச்சு வார்த்தைகள் மூலமும், ஆர்பிட்ரேஷன் மூலமும் இந்த நிகழ்ச்சிகள் நடைபெறுவதைத் தவிர்க்கலாம் என்ற முறையிலே இந்தக் கருத்தை அரசு பரிசீலித்து, இப்படிப் பட்ட பயிற்சிகளை கல்வித் துறை மூலமாகக் கொடுத்து, இந்தக் கருத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** இதிலே அரசு முன்வருமா என்பதல்ல பிரச்சினை. முன்வந்தாக வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதெல்லாம் நல்ல யோசனைதான். அரசு இதில் நிச்சயமாக முன்வந்தாக வேண்டும். இந்தியா முழுவதும் இந்தப் பிரச்சினை இருக்கிறது. இந்தியா முழுவதும் உள்ள நிலைமைகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தமிழ் நாட்டிலே அந்த அளவுக்கு நிலைமை இல்லை. ஆனால், நடப்பது வருந்தத் தக்கது. மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லும் யோசனைகளையெல்லாம் பரிசீலித்து தகுந்த முறையிலே அரசு நடவடிக்கை எடுக்கும்.

(முற்பகல் 9-50)

*மாண்புமிகு மேலவைத் தலைவர்:* மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்னும் 7 சட்ட முன்வடிவுகள் இங்கே நிறைவேற்றப்பட வேண்டியிருக்கின்றன. இதுவரை இரண்டு வினாக்கள்தான் முடிவுற்றிருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் குறைவான நேரத்தை எடுத்துக்கொண்டு அவையின் நிகழ்ச்சிகளை முடித்துக் கொடுக்க வேண்டுகிறேன்.

ஆசிரியர்களுக்கு சிறப்பூதியம்.

** 291. வினா—திரு. ம. சங்கரலிங்கம்:* மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடி கல்வி மாவட்டத்தின் எல்லையில் உள்ள சில மேல் நிலைப் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு அவர்களுக்குரிய சிறப்பு ஊதியம் வழங்கப்படவில்லை என்று அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அரசு அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது?

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:* (அ) மற்றும் (இ) முறையீடு ஏதும் வரவில்லை. ஆனால், சில பாடங்களில் குறிப்பாக வேதியியல், பொருளாதாரம் போன்றவைகளில் பட்டப்படிப்பில் முதன்மைப்பாடமாக பயிலாத ஆசிரியர்களும், புவியியலில் டிப்ளமா பெற்றவர்களும் மேல்நிலைப்பள்ளி வகுப்புகளை நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்டனர். இவர்களுக்கும் மேல் நிலைப்பள்ளிகளுக்கு உட்படுத்தப்பட்ட ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சிறப்பூதியம் அளிக்க வேண்டுமென்ற கருத்துருவை அரசு ஏற்று ஆணை வெளியிட்டுள்ளது. அதன்படி தூத்துக்குடி கல்வி மாவட்டத்தில் 5 ஆசிரியர்கள் சிறப்பூதியம் பெறுவர்.

ஆசிரியர்களின் பணி வரன்முறை செய்தல்.

** 292. வினா—செல்வி அ. லீலாவதி:* மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசுப் பள்ளிகளில் ஆசிரியர்கள் பணியில் சேர்ந்து பத்து ஆண்டுகளாகியும் அவர்களுடைய பணி வரன்முறை செய்யப்படாமலிருப்பது அரசுக்குத் தெரியுமா?





(இ) ஆம் எனில், பத்தாண்டு பணி நிறைவு பெற்ற ஆசிரியர்களுடைய பணியினை வரன்முறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:* (அ) 1-4-1970 முதல் 3-3-1973 வரையுள்ள காலத்திற்கு முதன்மைக் கல்வி அலுவலர்களால் அரசு உயர்நிலைப் பள்ளிகளில் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் பலர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படாததால் அவர்களது பணி வரன்முறை செய்யப்படாமல் இருக்கிறது.

(இ) அவர்களுக்காக அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு, 1980-இல் சிறப்புத் தேர்வு நடத்தியுள்ளது. இத்தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களின் பணியினை அவர்களின் தற்காலிக நியமன நாளிலிருந்து பணி வரன்முறை செய்யப்படும்.

*திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:* தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவால் 1980-ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட தேர்வின் முடிவுகள் இதுவரை அறிவிக்கப்படவில்லை. காரணம், யாரோ 'ஒரு சிலர் சென்னை உயர்நீதி மன்றத்திற்குச் சென்று தமிழ்நாடு தேர்வாணைக் குழுவின் தேர்வு முடிவினை வெளியிடக்கூடாது என்று ஒரு தடையுத்தரவைப் பெற்றிருக்கிறார்களாம். எனவே அரசு தமிழ்நாடு தேர்வாணைக் குழுவோடு இது குறித்துத் தொடர்பு கொண்டு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தடையுத்திரவை நீக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா?

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:* அப்படிப்பட்ட விவரம் என்னிடம் இல்லை. எனினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அவையில் தெரிவித்துள்ள கருத்தின் அடிப்படையில், அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

*செல்வி அ. லீலாவதி:* அரசுப் பள்ளியாசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் செலக்ட்டான தேதியிலிருந்துதான் அவர்களுக்கு இன்கிரிமெண்ட் வழங்கப்படுகிறது. ஆனால், அன்செலக்டட் ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் எந்தத் தேதியில் ஆசிரியர்களாக 'அப்பாயின்ட்' செய்யப்பட்டார்களோ அந்தத் தேதியிலிருந்தே கொடுக்கப்படுகிறது. எனவே இந்த முரண்பாட்டை நீக்கும் வகையில் செலக்ட்டான ஆசிரியர்களுக்கும், அவர்கள் பணியில் சேர்ந்த தேதியிலிருந்தே இன்கிரிமெண்ட் தருவதற்கு அரசு ஆணை பிறப்பிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்தே பணி வரன்முறை செய்யப்படும்.

திரு. பா. ரா. தாமஸ் : இவ்வாறு பணி வரன்முறை செய்யப்படாத ஆசிரியர்கள் 10 ஆண்டுக்காலம் பணி செய்து முடித்திருந்தாலும், அவர்களுக்குத் தேர்வு நிலை வழங்கப்படலாம் என்றிருக்கிறது. எனவே அந்த அடிப்படையில் 10 ஆண்டுக்காலம் பணி முடித்தவர்களுக்குத் தேர்வு நிலை வழங்குவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போது தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் யார் என்பதே தெரியாமல் இருக்கிறது. காரணம் அந்தப் பட்டியல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். எனவே, தேர்வாணைக் குழுவின் முடிவுகள் வெளிவந்த பிறகு, தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைப் பொறுத்தவரையில, நியமன நாளிலிருந்தே அவர்களின் பணி வரன்முறை செய்யப்படும். அதற்குப் பிறகுதான் மற்றவைகளைப் பற்றிப் பரிசீலிக்கப்படும்.

## கூடுதல் ஊழியர்களை நியமித்தல்.

*293. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மேல் நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்ட அரசுப் பள்ளிகளில், வகுப்புகளை நடத்துவதற்கு கூடுதல் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளதைப் போல, மிகுந்துள்ள பணிப்பளுவுக்கேற்ப கூடுதலாக ஆசிரியரல்லாத ஊழியர்களை நியமனம் செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) இல்லையெனில், கூடுதல் ஊழியர்கள் நியமனம் செய்ய இனியாவது அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மேல்நிலைப்பள்ளியாக உயர்த்தப்பட்ட பள்ளிகளில் கூடுதல் அமைச்சுப் பணியாளர்களை நியமிப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : பள்ளிகளில் உள்ள கூடுதல் பணிகளுக்கேற்ப கூடுதலாக ஆசிரியரல்லாத ஊழியர்களை நியமனம் செய்வதைப்பற்றிய பரிசீலனை செய்வதற்கு முன்பாக, கூடுதல் பணியாற்றும் அத்தகைய



ஆசிரியரல்லாத ஊழியர்களுக்கு, தற்போது இண்டக்ட் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவதைப் போன்று சிறப்பூதியம் ஏதேனும் வழங்குவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படிப்பட்ட உத்தேசம் எதுவும் அரசுக்கு இல்லை.

திரு. பா. ரா. தாமஸ் : ஏற்கெனவே உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து, கூடுதலாக அலுவலர்களை நியமிக்க அனுமதியளிக்கும் அரசாணை இருந்தது. ஆனால் அவசர காலத்தின் போது இவ்வாறு நியமனங்கள் செய்வது தடை செய்யப்பட்டது. பிறகு அந்த முறை அமுல்படுத்தப்படவே இல்லை. எனவே அந்த விதி முறையைத் தற்போது தளர்த்தி மீண்டும் பழையபடி பள்ளி மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் கூடுதலாக அலுவலகப் பணியாளர்களை நியமிக்க அனுமதிப்பது குறித்து அரசு பரிசீலித்து ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்த யோசனையையும் அரசு பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளும்.

திரு. செ. முத்துசாமி : கடந்த பல ஆண்டுகளாகவே தமிழகத்தில் உள்ள பள்ளிகளின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. ஆனாலும் பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தைப் பொறுத்தவரையில், கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பிருந்த அதே அளவு பணியாளர்கள்தான் இப்போதும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தாததால்தான், ஆசிரியர்களின் பல்வேறு பிரச்சினைகள் அங்கே தேங்கிக் கிடப்பதாகச் சொல்லப்படுகிறது. எனவே அங்கேயுள்ள பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது குறித்துத் தனிக் கேள்வி போட்டால் பதிலளிக்க இயலும்.

## *Standing Counsels in Municipalities*

*294 *Q.*—THIRU K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for Co-operation and Law be pleased to state:

(*a*) the names of the Municipalities, that have appointed Standing Counsels on a fixed remuneration, for a term not exceeding three years;

(b) the number of Standing Counsels appointed in the Tindivanam Municipality; and

(c) the remuneration paid to each of them?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : (அ) மூன்று ஆண்டுகளுக்கு மிகையாகாமல், நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்திற்கு சட்ட ஆலோசகர்களை நியமனம் செய்துள்ள நகராட்சிகளின் பெயர்கள் விவர அறிக்கையில் @ கொடுக்கப்பட்டுள்ளன. விவர அறிக்கையில் குறிப்பிடப்படாத நகராட்சிகள், சட்ட ஆலோசகர்களை நியமனம் செய்யவில்லை.

(இ) திரு. ரா. சினிவாசன், பி.ஏ., பி.எல்., திண்டிவனம் நகராட்சியின் சட்ட ஆலோசகராக 24-2-1980 முதல் மூன்று ஆண்டுகளுக்கு நியமனம் செய்யப் பட்டுள்ளார்.

(உ) நகராட்சி நிர்வாகத்துறை இயக்குநர், திண்டிவனம் நகராட்சியின் சட்ட ஆலோசகருக்கு 24-2-1980 முதல் மூன்று ஆண்டுகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 100 (ரூபாய் நூறு மட்டும்) விதம் ஊதியம் வழங்குவதற்கு அனுமதி அளித்துள்ளார். மேலும், அவருக்கு ஒவ்வொரு வழக்கிற்கும் ஊதியத் துடன் சேர்த்து, அமுலிலுள்ள விதிகளின்படி, அனுமதிக்கப்பட்ட கட்டணமும் (Regulation fee) அளிக்கப்படும்.

**திரு. க. இராமமூர்த்தி** : திண்டிவனம் உட்பட்ட பல நகராட்சி மன்றங் களிலும் இத்தகைய சட்ட ஆலோசகர்களுக்கு ரிடெய்னர் பீஸ் என்பது ரூ. 100, ரூ. 200 என்ற அளவில் கொடுக்கப்பட்டாலும், ஒவ்வொரு நகராட்சி மன்றத்தின் வழக்குகள் அனைத்துமே அவர்கள் மூலமாகத்தான் நடத்தப்பட வேண்டும் என்ற நிலை இருப்பதால், ஒரு பெரிய தொகை, இந்தச் சட்ட ஆலோசகர் களுக்கு ஆண்டுதோறும் சென்று கொண்டிருக்கிறது. வருவாய் வரும் காரணத்தால், வரி விதிப்பு உள்பட பல விஷயங்களையும் அவர்கள் நீதிமன்றத் திற்கு எடுத்துச் செல்ல வேண்டிய அவசியத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். எனவே அதுபற்றி அரசு பரிசீலனை செய்ய முன் வருமா? அதோடு, ரிடெய்னர்ஸ் பீஸ் கொடுக்கப்பட்டு நியமிக்கப்படும் இத்தகைய சட்ட ஆலோசகர்களைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு

@ 286—287 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



நகராட்சியும் ஆண்டுதோறும் புதியவராக மாற்றி நியமிக்கும் வாய்ப்பிருக்கிற பகுதிகளிலாவது மாற்றி அமைக்க அரசு ஆணை பிறப்பிக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் குறைபாடு சில இடங்களில் இருக்கத்தான் செய்கிறது. ஆனால், நகராட்சிகளுக்காகத் திறமை மிக்க வழக்கறிஞர்களைத் தேடிப் போகும் போது, இந்த அளவுக்குக் குறைந்த ரிடெய்னர் பீசுக்கு அவர்கள் வரத் தயா ராக இல்லை. எனவே ரிடெய்னர் ஃபீஸ் 100 ரூபாய் என்றிருப்பதை மாற்றி ரூ. 1,000 அல்லது ரூ. 1,500 என்று வைத்தால்கூட, வழக்குக்கு ஏற்ப தனித் தனியாக பீஸ் கொடுக்கும் நிலை வருகிறது. நல்ல வழக்கறிஞர்கள் கிடைக்காத நிலை இருப்பதால், இதுபோன்ற பிரச்சினைகளைத் தீர்க்க என்ன செய்யலாம் என்று அரசு ஆலோசித்து வருகிறது.

**திரு. த. சந்தோஷம்** : ஸ்தல ஸ்தாபனங்கள் இம்மாதிரி சட்ட ஆலோசகர் களை நியமித்துக்கொள்ளும்போது, அவர்களுக்குப் பப்ளிக் பிராசிக் யூட்டர்களுக்குக் கொடுக்கும் முறையில் பீஸ் அளிக்கப்படுகிறதா அல்லது ஸ்தல ஸ்தாபனங்களின் நிதிநிலைக்கு ஏற்ப அவர்களின் இஷ்டப்படி பீஸ் கொடுக்கும் முறையை வைத்துக் கொண்டிருக்கின்றனவா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : முனிசிபாலிடிகள் தங்கள் இஷ்டம் போல் கொடுப்பதில்லை. பொதுவாக வழக்கறிஞர்களுக்கு ஷெடியூல்டு பீஸ் இருக்கிறது. அதன் அடிப்படையில்தான் வழங்கப்படுகிறது.

**திரு. க. இராமமூர்த்தி** : பல நகராட்சி மன்றங்களின் சட்டத் துறை எவ்வாறு இயங்கிக் கொண்டிருக்கிறது என்று அறிந்துகொள்ளும் வகையில் ஒவ்வொரு நகராட்சி மன்றத்திலிருந்தும் எத்தனை வழக்குகள் நீதிமன்றத் திற்குச் சென்றிருக்கின்றன, அவற்றிற்காக எவ்வளவு செலவு செய்யப் பட்டிருக்கிறது என்ற கணக்கையெல்லாம் அரசு பரிசீலனை செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : நகராட்சி மன்றங்கள் நியமிக்கும் சட்ட ஆலோசகர்கள் அவர்கள் பெறும் பீஸ், அவர்களுக்கு பீஸ் வழங்கும் முறை, அவர்களுக்காக ஆகும் செலவு, வழக்குகளை நடத்துவதற்காக ஆகும் செலவு இவைகள் அனைத்தும் எந்த வகையில் இருக்கின்றன என்பதைக்கூட அரசு பரிசீலிக்க முடியாத அளவுக்கு விதிமுறைகள் இருக்கின்றன. இதன் காரணமாக, பல விஷயங்கள் அரசாங்கத்தின் கவனத்திற்கே வராமல் போயிருக் கின்றன. எனவே கடந்த 3 மாதங்களுக்கு முன்பு அனைத்து நகராட்சி மன்றங்களுக்கும், அரசாங்கத்திலிருந்து கடிதம் எழுதி ஒவ்வொரு

நகராட்சியிலும் சட்ட ஆலோசகர்கள் நியமித்தல் எந்த அடிப்படையில் இருந்தது என்பதுபற்றி கேட்டு எழுதியிருக்கிறோம். இவ்வாறு அரசாங்கத்திலேயே தணிக்கை செய்யும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## *Breaches in Vaigai River*

*295 *Q.*—THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Irrigation be pleased to state:

(*a*) whether it is a fact that the bunds of the Vaigai River had breached in several places during the last floods causing serious damages to the huts, cocoanut topes, paddy fields, etc., on its sides between Viraganur Dam and Tiruppuvanam in Ramanathapuram District:

(*b*) if so. whether the breaches have since been closed; and

(*c*) whether steps have been taken to strengthen the bunds in this area to prevent recurrences of such damages in future?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன்வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. த. சந்தோஷம் :** அந்த விவர அறிக்கையிலே, பல நடவடிக்கைகளை எடுப்பதற்காக சீஃப் என்ஜினியர் பரிந்துரை செய்திருப்பதாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆனால் சமீப காலத்திலேகூட நான் அந்தப் பகுதிக்குச் சென்றிருந்தேன். ஒரு வேலையும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. இதை வறட்சி நிவாரணப் பணிகளோடு சேர்த்துக் கொண்டாவது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். ஏனென்றால் வைகை நதியைப் பொறுத்த வரையில், பெரும்பாலும் வறட்சியாகவே மணல் மாத்திரம் உள்ள நதியாக இருக்கிறது. திடீரென்று ஒரு வருஷத்தில் ஒரு பெரிய வெள்ளம் வந்து, அதன் கரைகளில் உள்ள வீடுகளையும், மரங்களையும் அடித்துக் கொண்டு போகிறது. ஆகவே மொத்தமாக ஒரே வருஷத்தில் இப் பணியைச் செய்ய சாத்தியம் இல்லாவிட்டாலும்கூட, கொஞ்சம்-கொஞ்சமாக எடுத்துக்கொண்டு வைகை நதிக்கு நிரந்தர கான்கிரீட் கரை அல்லது கல் கரை கட்ட அரசு முன்வருமா ?

---

@ 288 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.





**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** பழுதடைந்த பாசனப் பகுதி களைச் செப்பனிடுவதற்காக 287 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தலைமைப் பொறியாளர் ஒரு விரிவான செயற்குறிப்பை அனுப்பியிருக்கிறார். ஏற்கெனவே இருக்கக் கூடிய கால்வாயின் பெரும்பகுதி ஆற்றையொட்டி இருக்கிற காரணத் தால், வெள்ளம் வருகிறபோது மணலால் மூடப்பட்டு கால்வாய் எங்கே இருக்கிறது என்று தெரியாமல் சேதம் ஏற்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அறிவார். எனவே சில பகுதிகளுடைய அலைன்மென்டைச் சரி செய்து, ஆற்றுக்கு அப்பால் கால்வாய் தனியாகச் செல்லவேண்டிய அளவிற்குச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான், ஆற்றிலே வெள்ளம் வருகிற போது, கால்வாய் பாதிக்கப்படாது. இதுதான் முக்கியமான அடிப்படை. அப்படிச் செய்ய வேண்டுமென்றால், நில ஆர்ஜிதம் செய்ய வேண்டியிருக்கிறது. இதிலே காலதாமதம் ஏற்படுகிறது. இந்தக் கூடுமானவரைக்கும் விரைவு படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். வைகைப் பகுதியில் தென்னை, வாழை போன்ற நல்ல பணப் பயிர்களைப் பயிர் செய்யும் நிலங்கள் இருக்கின்றன. அவற்றை ஆர்ஜிதம் செய்யும்போது, பொதுவாக எதிர்ப்பு இருக்கிறது. ஆகவே அரசின் திட்டத்திற்கு அவர்கள் ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று தனிப்பட்ட முறையிலே சொல்லியிருக்கிறோம். நில ஆர்ஜிதம் முடிந்துவிட்டால் இந்தப் பணி உடனடியாக எடுத்துக்கொள்ளப்படும். அப்படிச் செய்கிறபோது, கான்கிரீட் கரை போட வேண்டும் என்பது குறிப்பிலே இருக்கிறது. அப்போதுதான் எவ்வளவு பெரிய வெள்ளம் வந்தாலும், கால்வாய் பாதிக்கப்படாது என்பது திட்டத்தின் முக்கிய நோக்கம். பணிகள் நடக்கவில்லை என்பது உண்மைதான். நில ஆர்ஜிதப் பணி முடிந்தால்தான், பணிகள் நடக்கும். அதை விரைவுபடுத்த அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

**திரு. பா. ரா. தாமஸ் :** வைகை ஆற்றுப் படுகையில் முறையாக மணலை வாராமல் மக்கள் தாங்கள் பிரியப்படும் இடங்களில் மணலை எடுத்துச் செல்வ தால் மட்டப்படுத்திவிடுகிறார்கள். அதன் ஓரங்களில் உள்ள தோப்புகளுக்கு வேண்டிய நீரை எடுப்பதற்காக ஆற்றின் வெளிப் பகுதியிலே வாய்க்கால் களைத் தோண்டிவிட்டு ஆற்றின் உட்பகுதி மேடாக இருக்கக்கூடிய வகையில் செய்து விடுகிறார்கள். இதனால் வெள்ளம் வருகிறபோது, அதிகமான அரிப்பு ஏற்படுகிறது. இதையெல்லாம் மாற்றியமைக்கக்கூடிய திட்டத்தை நிறை வேற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு உறுப்பினர் சொல்லு வது ஒரு முக்கியமான கருத்துதான். ஆற்றின் மத்திய பகுதி பூராவும் மேடாக இருக்கிறது, ஓரங்களில் பார்த்தால் பள்ளமாக இருக்கிறது. அதோடு

அவரவர்கள் வாய்க்கால்களைத் திருப்பி அனுமதியின்றி நீரை எடுத்துக்கொள்கிறார்கள். வெள்ளம் வருகிறபோது, ஆற்று வேகம் அதிகமாகி, உடைப்பு, சேதம் ஏற்படுகின்றன. ஆகவே, அதிகமாகப் பலப்படுத்த வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட பார்வையிட்டு, கரையைப் பலப்படுத்த வேண்டும் என்றும், யாரும் தங்கள் இஷ்டப்படி தோண்டி தண்ணீரைத் திருப்பிக்கொள்ளும் சூழ்நிலை இருக்கக் கூடாது என்றும் சொல்லியிருப்பதால், அதற்குரிய செயற்குறிப்பும் இந்தத் திட்டத்திலே சேர்க்கப்பட்டிருக்கிறது.

## *Export of Black Granite.*

* 296 Q.—THIRU K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(*a*) the names of the firms and the individuals having the licence to export Black Granite to foreign countries; and

(*b*) the quantity exported annually by each of the licensees

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** (அ) & (இ) தமிழ் நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு கருப்புக்கல் ஏற்றுமதி செய்த நபர்கள் மற்றும் நிறுவனங்களின் பெயர்கள், ஏற்றுமதி செய்த அளவு பற்றிய விவர அறிக்கை @ ஒன்று மேலவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. க. இராமமூர்த்தி :** மிக நீண்ட அறிக்கையாக இருப்பதால், கேள்வியைக் கேட்க முடியவில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வல்லவர்களுக்குப் புல்லும் ஆயுதம்.

**திரு. க. இராமமூர்த்தி :** இந்தக் கறுப்புக் கல்லைப் பொறுத்த வரையில், மிக அதிகமான அந்நியச் செலாவணி வரக்கூடிய அளவிற்கு, ஏற்றுமதி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே இதை அரசே ஏற்று நடத்துவது என்று முடிவு செய்திருக்கிறது என்று ஒரு நேரத்திலே அறிவிப்பு வந்தது. அந்த அடிப்படையிலே என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? அந்த அடிப்படையிலே புதிய லைசென்சுகள் வழங்கப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** கறுப்புக் கல்லைப் பொறுத்த வரையில், தமிழ் நாடு கனிமவள நிறுவனம்தான் ஏற்றுமதி செய்ய வேண்டுமென்று தமிழ் நாடு கனிமவள விதிகள் திருத்தம் செய்யப்பட்டு, அது உச்சநீதிமன்றத்

@ 280-312 ஆம் பக்கங்களில் இணைப்பு III, ஆக அச்சிடப்பட்டுள்ளது.



தாலேகூட ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு, தோற்றுவிக்கப்பட்ட இந்த கனிமவள நிறுவனம் கடந்த மூன்றாண்டுகளாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதன் மூலம் இந்த ஆண்டு மட்டும் ஏறக்குறைய 64 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் விற்பனை செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல, அதிலே 90 சதவீதம் அந்நியச் செலாவணியாக நமக்குக் கிடைக்கும். இந்த ஆண்டு மட்டும் அதன் மூலமாக பத்து இலட்சம் ரூபாய் இலாபம் கிடைக்குமென்று நம்பப்படுகிறது. இது தவிர, கறுப்புக் கல்லைப் பொறுத்த வரையில், தனியார் கையில் லீஸ் கொடுப்பதில்லை என்ற முடிவில் அரசு உறுதியாக இருக்கிறது.

மொத்தமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற வகையிலே தமிழ் நாட்டிலே சுரங்கக் குத்தகையை எடுத்ததோடு மட்டுமல்லாமல், நம் மாநிலத்திற்குப் பக்கத்திலேயுள்ள ஆந்திரா, கர்நாடகம் போன்ற மாநிலங்களிலிருந்தும் கற்களைக் கொண்டு வந்து தமிழகத்தின் மூலமாக ஏற்றுமதி செய்கிறார்கள். இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற பட்டியலில் வேறு மாநிலத்திலிருந்து கொண்டு வந்து தமிழகத்தின் மூலமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களுடைய பெயர்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இதற்கு முன்னால் இருந்த ஆட்சிக் காலத்திலே சிலர் 15 ஆண்டுக் காலம், 20 ஆண்டுக் காலம் என்று நீண்ட கால லீஸ் போட்டு குத்தகை எடுத்திருக்கிறார்கள். அந்தக் கால அளவு முடிகிறபோது, மீண்டும் அவர்களிடமிருந்து கைப்பற்றி தமிழ்நாடு கனிமவள நிறுவனம் அந்தத் தொழிலை விரிவாக்கத் தயாராக இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** இந்தக் கறுப்புக் கல்லைப் பொறுத்த வரையில், மைனிங் செய்வதற்காக நாம் குறைந்த கட்டணத்தைப் பெற்றுக் கொண்டு அனுமதி கொடுக்கிறோம். ஆனால் அதை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறபோது, பல மடங்கு அதிகமான தொகை அவர்களுக்கு வருகிறது. இப்படிப்பட்ட பெரும் ஆதாயம் அரசுக்கு வாராமல், தனிப்பட்டவர்களுக்குச் சென்றடையும் நிலை இருக்கிறது. ஆகவே, நம்முடைய அரசு கறுப்புக் கல்லைப் பாலிஷ் செய்து ஃபினிஷ்ட் புராடெக்டாக மாற்றி வெளிநாடுகளுக்கு அனுப்புகிற உரிமையை ஏற்றுக்கொள்ள முன்வருமா? பதினைந்து, இருபது ஆண்டுகளுக்கும் அதற்கு மேலும் சிலர் தங்கள் செல்வாக்கின் காரணமாக அனுமதி பெற்றிருக்கிறார்கள். கடந்த நான்கைந்து ஆண்டுகளாகத்தான் இதன் முக்கியத்துவம் பெருமளவில் உணரப்பட்டிருக்கிறது. ஆகவே இது குறித்து

[1981 மே 14

மீண்டும் புனராலோசனை செய்ய அரசு முன்வருமா? அந்த அடிப்படையிலே அவசியமானால் ஏற்கெனவே அளித்த உரிமங்களையும் ரத்து செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** தமிழ்நாடு கனிமவள நிறுவனம் இப்போது கறுப்புப் பாறைகளை அப்படியே வெட்டியெடுத்து வெறும் பாறைகளாக வெளிநாடுகளுக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, மெருகேற்றி ஃபினிஷ்ட் புராடெக்டாக அனுப்பினால், இப்போது இருப்பதைப்போல இரண்டு மடங்கு இலாபம் வரும். அதற்காக 1.50 இலட்சம் ரூபாய் செலவில் 'கட்டிங் அண்டு பாலிஷிங் யூனிட்' ஒன்றைத் தமிழ்நாடு கனிமவள நிறுவனத்தின் சார்பிலே ஏற்படுத்த, பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் மைனிங் லீஸ் நீண்டகாலமாகக் கொடுக்கப்பட்டிருந்தாலும்கூட, கறுப்புக்கல்லை வெட்டியெடுப்பதைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு கனிமவள நிறுவனம் ஏற்றுக்கொள்ளுமா என்று கேட்டார்கள்.

(முற்பகல் 10-10)

ஏற்கெனவே கறுப்புக் கல்லை வெட்டி எடுக்கின்ற உரிமை அரசுக்கு இருக்கிறது. அதற்கென்று உச்ச நீதிமன்றத்திலே கூட தீர்ப்பு பெற்றிருக்கிறார்கள். அவர்கள் வெளி நாட்டிற்கு அனுப்பிக்கொண்டிருக்கின்ற உரிமையை ரத்து செய்தால், அதிலே சில சட்டப் பிரச்சினைகள் எழலாம். அதைப்பற்றி அரசு பரிசீலித்துச் செய்யலாம். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொல்கின்ற யோசனை ஒரு நல்ல யோசனைதான். வெட்டி எடுக்கின்ற கறுப்புக்கல்லை தமிழ்நாடு கனிமவள நிறுவனத்தின் மூலம்தான் அனுப்ப வேண்டும் என்று கட்டாயப்படுத்த சட்டத்திலே ஏதாவது வழிமுறைகள் இருக்கின்றனவா என்று பார்த்துச் செய்ய வேண்டும். அரசு அதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிதம்பரம் அருள்மிகு நடராஜர் ஆலயம்.

* 296. அ. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சிதம்பரம் அருள்மிகு நடராஜர் ஆலய நிர்வாகத்தில் குறைபாடுகள் இருப்பதாக அரசுக்கு புகார்கள் வந்துள்ளன என்பது உண்மையா?



1981 மே 14]

(இ) ஆம் எனில், அந்த ஆலயத்தை, அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரும் உத்தேசம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(உ) அது, தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

(எ) அந்த ஆலயத்தில் உண்டியல் வைக்கப்படுவது குறித்து, சென்னை உயர் நீதிமன்றம், தனது தீர்ப்பில் ஏதும் கருத்துக்கள் கூறியுள்ளதா?

(ஐ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

(ஒ) அந்த ஆலயத்துக்குச் சொந்தமானவை என்று 1—1—1981 ஆம் நாளன்றுள்ளபடி, கண்டறியப்பட்டுள்ள நிலங்களின் பரப்பளவு எவ்வளவு?

(ஔ) அந்த ஆலயத்தின் ஆண்டு வருமானம் எவ்வளவு?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை @ அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் குறிப்பிட்டுள்ள விவரங்களுக்குமேல், நம்முடைய அறநிலையத் துறை கொள்கை விளக்கக் குறிப்பிலே கூட, இந்த அறநிலையத் துறை பணிகள் செலவுக்காக 20 விழுக்காடு, அதாவது 9½ லட்சம் ரூபாய் அரசு மானியமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பழனிக் கோயிலுக்கு ரூ. 2.65 லட்சமும், பொதுமக்கள் நன்கொடை மூலம் ரூ. 9.96 லட்சமும், ஆணையாளர் பொதுநல நிதியிலிருந்து ரூ. 20 ஆயிரமும் ஒதுக்கப்படுவதாக விவரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அரசு ஆலயங்களினுடைய வளர்ச்சிக்கு நடவடிக்கைகள் எடுக்கின்ற அதே நேரத்தில், அந்த ஆலயங்களினுடைய தற்போதைய தீட்சிதர்களுடைய நிர்வாகமும், ஆலயத்தினுடைய மேற்பார்வைக்கு ஆலோசனைகள் அளிப்பதற்கு என்று அமைக்கப்பட்ட குழுவும் மறுப்பு சொல்லிக்கொண்டிருப்பது உண்மையா? அவர்கள் உயர்நீதி மன்றத்திற்குச் சென்று தடை வாங்கியுள்ளதாக இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே உயர் நீதிமன்றத்திலே இந்த ஆலய நிர்வாகம் சம்பந்தமாகச் சில திட்டங்களை, அறிவுரைகளை, குறிப்புகளை முன்னால் நடைபெற்ற வழக்குகளிலே கொடுத்திருக்கிறதா? அப்படியானால், அந்த ஆலய நிர்வாகம் சம்பந்தமான குறிப்புகளில் மிக முக்கியமானவைகள் என்ன? அந்தக் குறிப்புகளின்படி அந்தக் கோயில் நிர்வாகங்கள் நடந்துவருகின்றனவா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

---

@ 312-314 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1981 மே 14

* **மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த சிதம்பரம் ஆலயம் சம்பந்தமாக, கடந்த 55 ஆண்டுக் காலமாக தொடர்ந்து ஒரு போராட்டமே நடந்து வந்து கொண்டிருக்கிறது. முதன் முதலாக சென்னை இராஜதானி என்று அழைக்கப்பட்ட அந்தக் காலத்திலே, 1925 ஆம் ஆண்டிலேதான் இந்து சமய அறநிலைய ஆலயங்களை ஒழுங்குபடுத்த வேண்டும் என்று ஒரு போர்டு உருவாக்கப்பட்டது. அதற்கான சட்டமும் அன்றைய சென்னை இராஜதானி என்று இருந்தபோது கொண்டு வரப்பட்டிருக்கிறது. அப்போது இந்த சிதம்பரத்திலேயுள்ள ஆலயத்தைச் சேர்ந்தவர்கள், இந்தச் சட்டத்திற்குள்ளே தங்களுடைய கோயிலை இணைக்கக்கூடாது என்றும், அதற்கு விதிவிலக்கு தரவேண்டும் என்றும் அன்றைக்கு இருந்த கவர்னரின் நிர்வாகச் சபையிலே மனுபோட்டு கேட்டிருக்கிறார்கள். அப்படி விதிவிலக்குக் கேட்டபோது, அன்றைக்கு இருந்த கவர்னரின் நிர்வாகச் சபையினர் சில குறிப்பிட்ட பிரிவுகளை நீக்கிவிட்டு சில செக்ஷன்கள், ஆக்ட் 1/1925, 38, 57, 58, 59, 60, 65, 70 நீங்கலாக மற்ற செக்ஷன்களுக்கு விதிவிலக்கு அளித்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு 1931-லே தீட்சிதர்களில் ஒரு பிரிவினரிடமிருந்தும், பொதுமக்களிடமிருந்தும் புகார்கள் வரப்பெற்று, அன்றைக்கிருந்த இந்து சமய அறநிலைய போர்டு ஒரு சில நடவடிக்கைகளை எடுத்து அந்த விதிவிலக்குகளை ரத்து செய்ய வேண்டும் என்று முனைகிறார்கள். அப்போது தீட்சிதர்கள் தென்னாற்காடு மாவட்ட வழக்கு மன்றத்திற்குச் சென்று அதை எதிர்க்கிறார்கள். அந்த மாவட்ட நீதி மன்றத்திலே ஒரு ஸ்கீம், அதாவது ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு, அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே இந்த நிர்வாகம் நடைபெற வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டு, அதையும் எதிர்த்து உயர் நீதிமன்றத்திற்கு வருகிறபோது, அங்கேயும் அது உறுதி செய்யப்பட்டு அந்தத் திட்டத்தில் சில திருத்தங்களைச் செய்து, அந்தத் திட்டம் 1933-லே டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டிலே வந்த அந்தத் திட்டத்தை, 1936-ல் ஹைகோர்ட் உறுதி செய்தது. அந்தத் திட்டத்திலே அவர்கள் சில முக்கியமான நிபந்தனைகளை விதிக்கிறார்கள். உண்டியல் வைக்க வேண்டும். அர்ச்சனைச் சீட்டு வைக்க வேண்டும். கணக்கு வழக்குகளை வைத்துக்கொள்ள வேண்டும். அங்கு ஒரு மேனேஜரை நியமிக்க வேண்டும். அவர் அந்தக் கணக்கு வழக்குகளை எல்லாம் பொறுப்பாக இருந்து கவனிக்க வேண்டும். இப்படிப்பட்ட ஆலயங்களுக்கான நிலங்களிலிருந்து எவ்வளவு வருமானம் வருகின்றது என்ற விவரங்களைக் கண்காணிக்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டும், அந்தக் கோயிலுக்கு வருகின்ற பொருள்களை, பொதுமக்கள் பார்வையிலேயே ஏலத்திற்கு விட வேண்டும். இப்படிப்பட்ட நிறுவனங்கள் சரியாக நடக்கின்றனவா என்பதைப் பார்ப்பதற்கு ஆனரரி



1981 மே 14]

விசிட்டர்கள் இருக்க வேண்டும். மூன்றுக்கு மேற்பட்டவர்களை போர்ட் நியமிக்கிறது. இப்படி நியமிக்கப்படுகின்றவர்கள் இவைகளையெல்லாம் பார்ப்பதற்கு, தீட்சிதர்கள் பொறுப்பிலே இருப்பவர்கள் வசதி செய்து தர வேண்டும் என்பதுதான் அந்த ஸ்கீம். அதை அன்று ஹைக்கோர்ட் ஏற்றுக் கொண்டிருக்கின்றது. இவைகள்தான் அந்தத் திட்டத்தின் முக்கியமான பகுதிகள். அதையொட்டி அங்கே அதற்குமேல் நடவடிக்கை எடுத்தபோது, அதையும் தீட்சிதர்கள் தடுத்து நிறுத்திவிடுகிறார்கள். 1947-லே காலஞ்சென்ற முன்னாள் முதலமைச்சர் திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, இந்த அறநிலையத்துறையில் மிகப் பெரிய சீர்திருத்தங்களையெல்லாம் கொண்டு வந்தார்கள். இந்தக் கோயில்களில் கணக்கு வழக்குகளை எல்லாம் சீராக வைத்துக்கொள்ள வேண்டும். வெரிபிகேஷன் ஆபீசர்கள் எல்லாம் அங்கே செல்லும்போது, அவர்களுக்குக் கணக்குக் கொடுக்க வேண்டும் என்று வந்தது. அப்போது இந்த சிதம்பரம் கோயில் பற்றி புகார்கள் மீண்டும் வந்த காரணத்தினாலேயே, இந்த சர்க்கார் கொடுத்திருந்த அந்த விதிவிலக்குகளை ரத்து செய்து ஒரு நோட்டிபிகேஷன் கொடுக்கிறார்கள். இது சம்பந்தமாக அறநிலைய போர்ட் நிறுவனம் இந்த நிர்வாகத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற நிலை வருகிறது. உடனே மனுக் கொடுக்கிறார்கள். அதற்கிடையிலே அவர்கள் முதலமைச்சர் அவர்களிடத்திலே 'ரெப்ரசன்டேஷன்' கொடுக்கிறார்கள். அவர்கள் அந்த நோட்டிபிகேஷனைத் திரும்ப 'வித்ட்ரா' செய்வதற்கு முன்னாலேயும் உயர்நீதி மன்றத்திற்கு மீண்டும் செல்கிறார்கள். 1951-லே மீண்டும் உயர்நீதி மன்றத்திற்குச் சென்று இந்த நோடிபிகேஷனை வித்ட்ரா செய்துகொண்ட காரணத்தினாலே அந்தப் பழைய திட்டத்தையே அமுல்படுத்தலாம் என்ற நிலை வருகிறது. அங்கே தீட்சிதர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், "இந்தக் கோயிலுக்கு வருமானம் கிடையாது. நிலங்களே கிடையாது. இந்தக் கோயிலுக்கு திருவிளக்குக் கட்டளை என்று கொஞ்சம் நிலங்கள்தான் இருக்கின்றன. அதிலிருந்து ரூ. 800 தான் வருகிறது. மற்ற சில வருமானங்கள் எல்லாம் சேர்த்து கிட்டத்தட்ட ஒரு ஆறாயிரம் ரூபாய் அளவிற்குத்தான் மொத்த வருமானம் வருகிறது" என்று சொல்கின்றார்கள். "இந்த வருமானத்தை வைத்துக்கொண்டுதான் 250 குடும்பத்தினர்கள் பிழைத்துக் கொண்டிருக்கிறோம். அதிலே தலையிட்டு எங்கள் பிழைப்பை வீணாக்கக் கூடாது" என்றுதான் கேட்டிருக்கிறார்கள். ஹைகோர்ட்டிலே இந்தத் திட்டத்தை அவர்கள் ஒழுங்காக நடத்துகின்றார்களா என்று அரசாங்கம் பரிசீலித்து அவர்களுக்கு வேண்டிய தகவல்கள் கொடுத்து, பிறகு வேண்டுமானால் நடவடிக்கை எடுக்கலாம் என்று சொல்லப்பட்டு. 1953-லே இந்தத் திட்டத்தை அவர்கள் மீண்டும் ஏற்றுக்கொண்டார்கள். அந்தத் திட்டத்தின்படி சில நேரங்களில் நடவடிக்கைகள் எடுப்பதும், சில நேரங்களில் கைவிட்டு

விடுவதும் என்ற நிலையிலே இருந்துகொண்டிருக்கின்றது. இந்த நிலையிலே இப்போது மிகப் பெரிய குற்றச்சாட்டுக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குற்றச்சாட்டுக்களைப்பற்றியெல்லாம் இங்கே நான் சொல்ல விரும்பவில்லை. அந்த தீட்சிதர்களிலே ஒரு பிரிவினர், இந்த நிர்வாகத்திலே இருந்தவர்கள், அதிலே ஈடுபட்டிருப்பவர்கள், பாதிக்கப்பட்டவர்கள், அதிலே உண்மை தெரிந்தவர்கள் எல்லாம் பல புகார்களைச் சொல்லியிருக்கிறார்கள். அது மாத்திரம் அல்ல. இந்த ஆலயத்தின் சொத்திலிருந்து வருகின்ற வருமானம் கிட்டத்தட்ட 38,000 அல்லது 40,000 ஆயிரம் ரூபாய் வரையில் இருக்கிறது என்று தெரிகிறது. அந்த ஆலயத்திற்கு என்ன வருமானம் வருகிறது என்று கேட்டால், தீட்சிதர்கள் கணக்குத் தருவதில்லை. அந்தத் திட்டத்தின்படி, அந்த விதிவிலக்கு தரமாட்டோம் என்று அறிவித்திருக்கிறோம். அந்த ஆலயத்தின் பட்ஜெட் ஒவ்வொரு ஆண்டும் தரப்பட வேண்டும். அப்படி அவர்கள் தருகின்ற பட்ஜெட் ரூபாய் மூவாயிரத்து சொச்சம் தான் என்றும் அது செலவழிக்கப்பட்டிருக்கிறது என்றும் தெரிவித்திருக்கிறார்கள். இந்தக் கோயிலுக்கு விதிவிலக்கு தரமுடியாது என்று அன்றைக்கே அரசு தெரிவித்திருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் நாம் அந்தக் காரியத்தை நல்ல ஓர்ஷிப்ஃபுல் ஆக இருக்கின்றவர்கள் இடத்திலே, ஆனரரி விசிட்டர்கள் ஐந்து பேர்களிடத்திலே ஒப்படைக்கிறோம். பொது வாழ்க்கையிலே ஈடுபட்டிருப்பவர்களை, கட்சி சார்பு இல்லாதவர்களை, தெய்வ நம்பிக்கையிலே முழுவதும் ஈடுபட்டிருப்பவர்களை, சொல்லப்போனால் ஆலயத் திருப்பணிகளிலே பல லட்சக்கணக்கான ரூபாய்களை ஒழுங்காகப் பொறுப்பேற்று செலவழிக்கின்றவர்களை, அதிலே சம்பந்தப்பட்டவர்களை எல்லாம் இணைத்து நியமித்திருக்கிறோம். அதற்குத் தான் இப்போது அவர்கள் உயர்நீதி மன்றத்திலே தடை வாங்கியிருக்கிறார்கள். அதை எதிர்த்து அரசு வழக்கு மன்றத்திற்குப் போயிருக்கிறது.

(முற்பகல் 10-20)

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: இதே சிதம்பரம் நடராசர் ஆலய சம்பந்தமாக முன்பு பேரவையில் நான் கேள்வி கேட்டபோது, அந்த ஆலயத்தை அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர அரசு உயர்நீதி மன்றத்தினுடைய ஆலோசனையைக் கோரியிருக்கிறது அல்லது கோர இருக்கிறதென்று அமைச்சரவர்கள் சொன்னதாக நினைவு. அந்த ஆலோசனை கோரப்பட்டுவிட்டதா? அதன்மீது உயர்நீதி மன்றம் ஆலோசனை கொடுத்திருக்கிறதா?



மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: உயர்நீதி மன்றத்திலே உறுதி செய்யப்பட்ட ஒரு திட்டத்தை, ஸ்கீமை இன்றைக்கு அவர்கள் மீறியிருக்கிறார்கள் என்பது குற்றச்சாட்டு, அதுகுறித்துதான் இப்போது வழக்கு மன்றத்திற்குப் போயிருக்கிறோம். 1951-லே உயர்நீதி மன்றத்திலே அளித்த தீர்ப்பிலேகூட, அவர்களுக்கு அனுமதி கொடுங்கள், அவகாசம் கொடுங்கள், அவர்கள் நிர்வாகத்தில் தவறு இருக்கிறதா என்று கண்டுபிடியுங்கள்; வேறு வருமானமே இல்லை என்று சொல்லுகிறார்கள், அதைப் பரிசீலியுங்கள் என்று தான் சொல்லியிருக்கிறார்கள். இதில் பாரம்பரை உரிமையோ, சொத்து உரிமையோ இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. 1925-லே இந்த நாட்டிலே முதன்முதலாக அறநிலையங்களை ஒழுங்குபடுத்தும் சட்டம் வந்தபோது, அவர்கள் விதிவிலக்குதான் கேட்டிருக்கிறார்கள். சில குறிப்பிட்ட விதிகளைத் தவிர, மற்றவற்றுக்கு விதிவிலக்கு தரப்பட்டிருக்கிறது. உயர்நீதி மன்றத்திடம் கேட்டிருப்பது, உயர்நீதி மன்றத்தின் அந்த ஸ்கீமை ஏற்று நடத்தப் போகிறார்களா, இல்லையென்றால் 1959 ஆம் ஆண்டு ஆக்ட்படி, நமக்குள்ள உரிமைப்படி அந்த நிர்வாகத்தை அரசு ஏற்றுக்கொள்ள நம்முடைய உயர்நீதி மன்றம் அனுமதிக்கிறதா என்பதுதான். இந்த இரண்டையும்தான் கேட்டிருக்கிறோம். அதற்கு எதிராக அவர்களும் நீதிமன்றத்திற்குப் போயிருக்கிறார்கள். தனியான சட்டத்தின் மூலமாக, இன்றைக்கு வளர்ந்துள்ள ஜனநாயக யுகத்தில் கிட்டத்தட்ட 30 இலட்சம் ரூபாய் செலவில் அந்த ஆலயத் திருப்பணி நடந்து கொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட 25 லட்சம் ரூபாய் செலவாகிவிட்டது. தீட்சிதர்கள் இதைப்பற்றிக் கவலைப்படவில்லை. நாமும், இந்த நாட்டு மக்களும் அதில் என்ன நடக்கிறதென்று தெரிந்துகொள்ளக் கூடாது, தெரிந்துகொள்ள உரிமையில்லை என்று சொல்கிற அளவிற்கு நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றன என்றால், ஆன்மீகத்தில் ஈடுபட்டுள்ள பெரியவர்களின் முடிவிற்கு அதை இந்த அரசு விட்டுவிட்டு, மேல் நடவடிக்கைகளைத் தொடருமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: இந்த ஆலயத்தினுடைய பல்வேறு செலவுகளுக்காக அறக் கட்டளைகள் மூலம், மாநிலத்திலுள்ள எல்லா மாவட்டங்களிலும் பெருமளவில் சொத்துக்கள் எழுதிவைக்கப்பட்டிருக்கின்றன. அதன் அடிப்படையிலேதான் மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறிய வருமானம் வந்து கொண்டிருக்கிறதென்று நினைக்கிறேன். ஆலயத்திற்கென்று அறக் கட்டளைகள் எந்த அளவிற்கு எழுதி வைத்திருக்கின்றன என்ற விவரங்களை பதிவுத் துறைத் தலைவர் மூலமாக அரசு கண்டறிந்து, அந்த அறக்கட்டளைகளின் நோக்கங்களுக்கேற்ப அதிலிருந்து வரும் வருமானம் செலவிடப்படுகிறதா என்பதைக்

கண்டறிய வேண்டும். மேலும் அந்த வருமானம் எந்த அடிப்படையிலே நிர்ணயிக்கப்படுகிறது என்பதையும் கண்டறிய வேண்டும். நாமினல் என்று ஏதாவது கொடுக்கிறார்களா அல்லது. அரசாங்கம் மற்ற ஆலயங்களுக்கு நிர்ணயித்துள்ளதுபோல் குத்தகை, வாரம் என்ற முறையில் வசூலிக்கப் படுகிறதா? எந்த அளவிற்கு அதிலிருந்து வரும் வருவாய் செலவாகிறது என்பது போன்ற விவரங்களை அறிய விரும்புகிறேன். ஆலயத்தின் உரிமை களைக் கோருபவர்கள், அறக்கட்டளைகள்மீது உரிமை கோர முடியாதென்ப தால், அதற்காக தனியான நடவடிக்கை எடுக்கப்படுமா? அதே நேரத் திலே. . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஒரேயொரு துணைக் கேள்வியில் 4, 5 கேள்விகள் கேட்கிறார்கள்.

**திரு. க. இராமமூர்த்தி :** நடராசர் ஆலயத்தின் ஒரு பகுதியில் கோவிந்த ராஜ சுவாமி ஆலயம் இருக்கிறது. அந்தப் பகுதியில் எந்தச் சங்கடமும் இருக்காதென்று நினைக்கிறேன். அதற்குத் தனியாக வருமானம் எவ்வளவு என்பதை அரசு கண்டறிய முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** நிலங்களைப் பொறுத்தவரையில், இருக்கின்ற நிலைமைகளைக் கண்டறிய ரெவின்யூ துறையிலேயிருந்து ஸ்பெஷல் தாசில்தார் போட்டு, ஆய்வு நடத்தி, கண்டுபிடிக்கப்பட்டதுதான் இவைகள். இவைகள் எல்லாம் கட்டளைகளாகவும் இருக்கின்றன, சபாநாயகர் பெயரில் பட்டாக்களாகவும் இருக்கின்றன. இதில் கவலை தரும் நிகழ்ச்சி என்னவென்றால், இப்படிப்பட்ட நிலங்கள், சொத்துக்கள் இந்த ஆலயத்திற்கு இருக்கிறதென்று சொன்னாலே, இந்த ஆலயத்தின் வருமானம் கணக்கில் வந்துவிடும். அப்படி வரும்போது, உயர்நீதி மன்றத்திலே சொன்னார்களே, திருவிளக்கு கட்டளை நிலத்திலே 800 ரூபாய்தான் வருகிறது என்று, அது தவறான தகவலாகி, அப்படி தவறான தகவல் கொடுத்த குற்றத்திற்கு ஆளாகிவிடுவோமென்று எண்ணி, இதைக் கண்காணிக்க வேண்டிய தீட்சிதர்கள் இதை விட்டுவிட்டு, இது எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை என்று எண்ணி, சபாநாயகருக்கு அது வந்து சேராமல் இருக்க மிகுந்த கவனத்துடன் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். வருவாய்த் துறை மூலம், அறநிலையத் துறை மூலம் இந்த நிலங்களைக் கண்டுபிடிக்கும் வேலை நடந்து வருகிறது. பல்வேறு கட்டளைகள் இருக்கின்றன. பிள்ளை இல்லாத சொத்தைப்போல் அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஏழை, எளியவர்கள் அனுபவித் தாலும், கொஞ்சம் மனத் திருப்தி அடையலாம். வசதி உள்ளவர்கள் அனு பவித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த முறையிலேதான் அறநிலையத்



துறையும், அரசாங்கமும் அதிலே கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது. இந்த போகம், பரம்பரை உரிமை பறி போய்விடுமே, பொதுமக்கள் பார்வை அதில் பட்டுவிடுமே என்றுதான் அவர்கள் அதைச் சிதம்பர ரகசியமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** அமைச்சரவர்கள் கொடுத்த விவரங்கள் மிக நிறைய இருக்கின்றன . . . . .

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** அடுத்து, இந்த அறநிலையத் துறை குறித்த சட்ட முன்வடிவு வருகிறது. அதில் விவரமாகப் பேசலாம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

## 2. அறிவிப்புகள்.

### (1) பேரவையிலிருந்து செய்தி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சட்டமன்றப் பேரவையால் நிறை வேற்றப்பட்டு, அரசியலமைப்புச் சட்டப்படி பணச் சட்ட முன்வடிவு என பேரவைத் தலைவரால் நிர்ணயிக்கப்பட்டு, இம்மேலவையின் பரிந்துரைக்காக பேரவைத் தலைவரால் கையொப்பமிடப்பட்டு கீழ்க்கண்ட சட்ட முன்வடிவு களை பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்:

(1) தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு விற்பனை வரி (மேல்வரி) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1981).

(2) தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1981).

(3) 1981-ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/1981).

சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரின் கையொப்பத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன் :

(1) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித் துறைகளும்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 42/1981).

(2) 1981 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1981).

(3) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1981).

### (2) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்று காலை நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவின்படி இன்றைக்கும், நாளைக்கும் அரசின் சட்ட முன்வடிவுகள் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும். அவசியமிருப்பின் நாளை மாலையும் அவை கூடும். நாளை கேள்வி நேரமில்லை.

### 3. கவன ஈர்ப்பு.

**(1) குமரி மாவட்டம், விளவங்கோடு, கல்குளம் தாலூகாக்களில் தோட்டத் தொழிலாளர்களுக்கும், பொது மக்களுக்கும் வழங்கப்பட்டு வந்த அரிசியை தற்போது குறைத்து வழங்குவதால், ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.**

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு நிதி அமைச்சரவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன் :

“ குமரி மாவட்டம், விளவங்கோடு, கல்குளம் தாலூக்காக்களில் கூட்டுறவுக் கடைகளிலும், மாதிரிக் கடைகளிலும் தோட்டத் தொழிலாளர்களுக்கும், பொது மக்களுக்கும் வாரத்திற்கு 7½ கிலோ என்று வழங்கப்பட்டு வந்த அரிசியை, தற்போது எந்தவிதக் காரணமுமின்றி 6 கிலோ அரிசி என்று வழங்கப்பட்டு வருவதால், அப்பகுதி பொது மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து ”.



**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது** (மாண்புமிகு நிதி அமைச்சர் சார்பில்) : தலைவரவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஆ. நல்லசிவன் :** அரிசி கடத்தல் இருப்பதைத் தவிர்க்க, செக்-போஸ்ட் முறையை குமரி மாவட்டத்தில் அமல் நடத்தி வருகிறோம். எல்லைப்புற வட்டங்களான கல்குளம், விளவங்கோடு வட்டங்களில் சட்டபூர்வமான முறையில் ரேஷனை அமல் நடத்தி வருகிறோம். அங்கே ஒரு வாரத்திற்கு, ஒரு நபருக்கு இரண்டு கிலோ அரிசி என்ற முறையில் அரிசி விநியோகிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** அந்த மாவட்டத்தினுடைய நிலைமையைக் கவனத்தில் கொண்டுதான், முதலிலே மற்ற மாவட்டங்களில் 24 கிலோ அரிசி என்று வழங்கியபோது இங்கே 30 கிலோ அரிசி வழங்கப்பட்டது. இன்றைக்கு வறட்சி நிலைமை காரணமாக உணவு நிலைமை திருப்திகரமாக இல்லாததால், பின்னாலே இப்போது இருப்பதைவிட பெரிய பிரச்சினை வருமென்பதால், இருக்கும் உணவைச் சரியான முறையில் பங்கீடு செய்ய வேண்டிய அவசியம் இருப்பதால், தற்காலிகமாக அளவு குறைக்கப்பட்டிருக்கிறது. நிலைமை கொஞ்சம் அபிவிருத்தி அடைந்தவுடன், மாண்புமிகு உறுப்பினரவர்களின் கருத்தை அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும்.

(முற்பகல் 10-30)

**திரு. ஆ. நல்லசிவன் :** ஏற்கெனவே ஒரு நபருக்கு ஒரு வாரத்திற்கு 2 கிலோ விதம் கொடுத்து வந்தார்கள். அதை பிறகு ஒரு குடும்பத்திற்கு அல்லது ஒரு கார்டுக்கு 30 கிலோ என்று ஆக்கினார்கள். நான் எல்லா தாலுக்காக்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை. குறிப்பாக கல்குளம், விளவங்கோடு தாலுக்காக்களுக்காவது கொடுக்க வேண்டுமென்றுதான் நான் கேட்கிறேன். அங்கு 3.00 ரூபாயிலிருந்து நான்கு ரூபாய் வரை ஒரு கிலோ அரிசியின் விலை இருக்கிறது. அந்த இரண்டு தாலுக்காக்களில் கூட ஒரு நபருக்கு ஒரு வாரத்திற்கு இரண்டு கிலோ அரிசி விதம் கொடுங்கள் என்று நான் கேட்கவில்லை. ஒரு குடும்பத்திற்கு அல்லது ஒரு கார்டுக்கு 30 கிலோ அரிசியாவது கொடுங்கள் என்றுதான் கேட்கிறேன். அது கொடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** குறிப்பிட்ட இரண்டு தாலுக்காக்களின் நிலைமையைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுகுறித்து அரசு பரிசீலனை செய்யும்.

---

@ 314 ஆம் பக்கத்தில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(2) உடற்பயிற்சி ஆசிரியர் கழகத்தினர் கோரிக்கைகளை வற்புறுத்தி அண்ணா சதுக்கத்துக்கருகே உண்ணாவிரதம் இருப்பது குறித்து.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

“தமிழ்நாடு உடற்கல்வி ஆசிரியர் கழகத்தினர் தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்தி சென்னை அண்ணா சதுக்கத்துக்கருகே உண்ணாவிரதம் இருந்ததால் மாநிலமெங்குமுள்ள உயர்நிலை, மேல்நிலைப் பள்ளி மாணவர்களிடையேயும், பெற்றோர்களிடையேயும் தோன்றியுள்ள பதட்ட நிலை குறித்து”.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: கடந்த 17—3—1981 அன்று முதல் பிரிவு இரண்டாம் பிரிவு உடற்பயிற்சி ஆசிரியர் கழகத்தினர்களின் பிரதிநிதிகளுடன் கல்வித் துறைச் செயலாளர் முன்னிலையில் இக்கோரிக்கைகள் விவாதிக்கப் பட்டன என்று விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதோடு விவாதத்திற்குப் பிறகு, இவ்விரு பிரிவுகளையும் நன்றாக இணைத்து அவர்களிடை முன்னுரிமை நிலையைப்பற்றி அரசு பரிசீலித்து வருகிறது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் எந்த வகையில் அது இப்போது பரிசீலிக்கப்பட இருக்கிறது என்பதை விளக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இரு சாராரையும் அழைத்து விவாதித்திருக்கிறார்கள். இரண்டு சாராரும் ஒப்புக்கொண்டபடி, இப்போது பரிசீலித்துக்கொண்டிருக்கிறார்கள். பரிசீலித்து முடிந்த பிறகு மறுபடியும் அவர்களை அழைத்து விவாதித்து அரசு முடிவெடுக்கும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: முதல் பிரிவு இரண்டாம் பிரிவு உடற்பயிற்சி ஆசிரியர்களை ஒன்றாக ஆக்கினாலுங்கூட முதல் பிரிவு உடற்பயிற்சி ஆசிரியர்கள் தங்களுக்கு இருக்கக் கூடிய கூடுதல் கல்வித் தகுதியை கருத்தில் கொண்டு ஒன்றிரண்டு இன்கிரிமென்ட் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்களே. அதுவும் இதனுடன் சேர்த்து பரிசீலிக்கப்படுமா?

---

@ 314-315 ஆம் பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அந்த அடிப்படையில்தான் பரிசீலனை நடந்துகொண்டிருக்கிறது. அது அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிற கோரிக்கைகளில் ஒன்று. அதுகுறித்து விரைவிலே முடிவெடுக்க வேண்டு மென்று நாம் அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

4. அரசின் தீர்மானம்.

அலுவல் வரிசையில் மாற்றம் குறித்து.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: தலைவரவர்களே,

“மேலவை விதி 23 (3)-ன் கீழ் இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றுள்ள தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த-சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1981), தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு வன (திருத்த) சட்ட முன்வடிவும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1981) முதலில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்” என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

“மேலவை விதி 23 (3)-ன் கீழ் இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றுள்ள தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த-சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1981), தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு வன (திருத்த) சட்ட முன்வடிவும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1981) முதலில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்”.

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

5. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த-சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1981).

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: தலைவரவர்களே,

“சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த-சிறப்பு விதித்துறைகள்)

## தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1981)

[திரு. இராம. வீரப்பன்] [1981 மே 14

திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த-சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

திரு. ஆ. நல்லசிவன் : தலைவரவர்களே, தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையிலும், அதனுடைய நோக்கத்தைப்பற்றிக் கூறும்போது கோயில்களுக்கு தர்மகர்த்தா குழுக்களை நியமிப்பதில் ஏற்படும் காலதாமதத்தினால், பரம்பரையாக இல்லாதவர்களை டிரஸ்டிகளாக நியமிப்ப தற்கான ஆரோக்கியமான நிலை கருதி ஓராண்டு கேட்டிருக்கிறார்கள். 1977 ஆம் ஆண்டில் இப்போது ஆட்சியில் இருக்கும் இதே கட்சி ஆட்சிக்கு வந்ததிலிருந்து அப்போதிருந்தே இந்த அறங்காவலர் குழுக்களுக்கு அறங் காவலர்களை நியமிக்க முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கிறது. ஆனாலும் இன்னும் பல்லாயிரக்கணக்கான கோயில்களுக்கு அறங்காவலர்களை நியமிக்க வில்லை. அதற்கு அவகாசம் வேண்டுமென்று கேட்கிறார்கள். அதிக வருமான முள்ள கோயில்களுக்கு அறங்காவலர்களை நியமிக்கவில்லையா அல்லது அதற்கு ஆள் கிடைக்கவில்லையா ? பொதுவாகவே வருமானம் அதிகமாக உள்ள கோயில்களுக்கு நான் நீ என்று போட்டி போட்டுக்கொண்டு வருவார்கள். 25 ஆயிரம் கோவில்களுக்கு என்று சொல்லுகிறார்கள். அவ்வளவு கோயில்களுக்கும் யாரும் முன்வரவில்லையா ? இல்லை, வருமானம் குறைவாக இருக்கிற கோயில்கள் என்ற காரணத்துக்காக யாரும் முன்வரவில்லையா ? இப்போதெல்லாம் கோயில்களில் நகைகள் திருட்டுப் போகின்றன. உண்டியலில் மோசடி நடக்கிறது. கோயில் சொத்துக்கள் பலரால் மோசடி செய்யப்படு வதாகத் தகவல் வந்திருக்கிறது. நான் கேட்பதெல்லாம் அறங்காவலர்கள் இல்லாத கோயில்களில் இப்படியெல்லாம் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றனவா. இல்லை, அறங்காவலர்கள் உள்ள கோயில்களில் இப்படி எல்லாம் நடை பெறுகிறதா என்பது தான். அறங்காவலர்கள் நியமிக்கப்பட்ட கோயில்களில் எல்லாம் நிலைமை எப்படி இருக்கிறது என்று 'ரெவியூ' செய்யப்பட்டதா ?

@ 315ஆம் பக்கத்தில் இணைப்பு VII ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1981 மே 14] [திரு. ஆ. நல்லசிவன்]

ரெவியூ செய்யப்பட்டதன் அடிப்படையில் இனிமேல் தவறுகள் நடைபெறாமல் இருக்கும் வகையில் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறதா ? அப்படியானால் எப்படி முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது ?

அடுத்தபடியாக, இன்னொரு விஷயம். கோயில்களிலிருந்து வருகின்ற வருமானம் கல்வி, வைத்தியம் போன்ற பொதுக் காரியங்களுக்குப் பயன் படுத்தப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அது தொடர்பாக அரசு சில முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. ஆனால் எந்த அளவுக்கு அது வெற்றி பெற்றிருக்கிறது என்பதையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். பொதுமக்களுக்கு உதவக் கூடிய வகையில் கல்வி, வைத்தியம் போன்றவற்றுக்காக கோயில் களிலிருந்து வரக்கூடிய வருமானம் பயன்பட தீவிர முயற்சி மேற்கொள்ளப் பட்டிருக்கிறதா ? முயற்சியில் ஈடுபட்டவைகளில்கூட தொடர்ந்து அந்த வகையில் பணம் செலவிடப்படுகிறதா என்பதையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அந்தத் திட்டத்தைத் திறம்பட நடத்த அரசு தீவிரமாக முயற்சி மேற்கொண்டிருக்கிறதா ?

ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் பல தடவை கூறியிருக்கிறேன். ஆலய ஊழியர்களுடைய சம்பளம்பற்றிச் சொல்லியிருக் கிறேன். குறைந்தபட்சம் மாதந்தோறும் 100 ரூபாய் சம்பளம் அளிக்கப்படும் என்று அறிவித்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. கன்னியாகுமரி மாவட்டத்தில் கோயில் குருக்களுக்குத்தான் இந்த 100 ரூபாய் சம்பளத்தைக் கொடுத்திருக் கிறார்கள். ஆகவே இது வரவேற்கக் கூடியது. ஏற்கெனவே இருக்கிற கோயில் குருக்களுக்குத்தான் இந்த 100 ரூபாய் சம்பளத்தைக் கொடுத்திருக் கிறார்களா அல்லது கோயில் குருக்கள் என்று அங்கீகரிக்கப்பட்டுள்ள அனைவருக்கும் இது உண்டா ? போன தடவை பேசும்போது நான் இதைப் பற்றிப் பேசியிருக்கிறேன்.

அடுத்து. ஹிண்டு ரிலிஜியஸ் அன்ட் சேரிட்டபிள் என்டோமென்ட் ஆக்டின் கீழ் கோயில் நிதியிலிருந்து இந்தச் சம்பளத்திற்குச் செலவு செய்ய முடியாதா ? ஏன் இந்த ஆக்டை ஒழுங்குபடுத்தக் கூடாது ? அந்த நிதியிலிருந்து ஒரு பைசாவைக்கூட செலவு செய்யக் கூடாது என்று சொல்கிறார்கள். அதற்கான திருத்தத்தை இந்த ஆக்டில் கொண்டுவர வேண்டும். தமிழ் நாட்டில் இந்து கோயில்கள் நிறைய இருக்கின்றன. அந்தக் கோயில்களிலிருந்து வரக்கூடிய வருமானத்திலிருந்து ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்கக் கூடாதா ? வருமானம் அதிகமாக உள்ள கோயில்களிலுள்ள ஊழியர்களுக்கு மாதம் 100 ரூபாய் கொடுத்தால்கூட போதும். அது வேறு விஷயம். ஆனால்

வசதியில்லாத கோயில்களில் பணியாற்றுகின்ற ஊழியர்களுடைய பசியைப் போக்க வேண்டாமா? குறைந்தபட்சத் தேவையை அவர்கள் வாழ்க்கையை ஓட்டுவதற்காகத் தர வேண்டாமா? அவர்கள் 1½ மணி நேரம், இரண்டு மணி நேரம் வேலை செய்தால் போதும் என்று சொல்லி, குறைந்த ஊதியத்தைக் கொடுத்தால், எப்படி அவர்கள் வாழ்க்கையை நடத்த முடியும்? மீதி நேரம் அவர்கள் எங்கே வேலைக்குப் போய் சம்பாதிக்க முடியும்? ஆகவே அதில் ஒரு திருத்தம் அவசியம் கொண்டுவர வேண்டும். அரசு செலவு செய்ய வேண்டாம். மொத்தமாகக் கோயில்களிலிருந்து வருகின்ற வருமானத்தை 'பூல்' பண்ணி இவ்வளவு குறைந்தபட்ச ஊதியம் என்று நிர்ணயித்து, அதிலிருந்து ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். அப்படி ஹிண்டு ரிலிஜியஸ் அன்ட் சேரிட்டபிள் என்டோமென்ட் ஆக்டில் திருத்தம் கொண்டுவருவதற்கு எங்காவது தடை இருக்கிறதா

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 10-40)

என்று நான் கேட்கிறேன். அதற்குப் பதிலாக அந்தக் கோயில்களுக்கு அந்தக் காலத்திலே எழுதி வைத்த சொத்துக்கள் குறித்து, 'இது இந்தக் கோயிலுக்கு என்று எழுதி வைத்தது, இதை எடுத்து வேறு கோயில்களுக்குப் பயன்படுத்தக்கூடாது' என்று சொன்னால், இது எப்படி நியாயம்? வேறு கோயில்களில் பூஜை செய்பவர்கள் இன்றைக்கு பட்டினி கிடக்கும் நிலை இருந்தபோதிலும், இதை மாற்றக்கூடாது என்று அரசியல் சட்டம் சொல்கிறதா? ஒரு குறைந்தபட்ச சம்பளம் அவர்களுக்கு நிர்ணயித்துக் கொடுக்க இந்த ஆக்டிலே வழி இல்லையா? தமிழ் நாட்டிலே இருக்கும் அத்தனை கோயில்களிலிருந்து வரும் வருமானத்தையும் 'பூல்' பண்ண வேண்டும். பான்டட் லேபரை ஒழிக்க வேண்டும் என்று சொல்லி அதற்குத் தனிச் சட்டம் கொண்டு வந்து அவர்களுக்குச் சலுகைகள் அளிக்கும் இந்தச் சமயத்திலே, அவர்களுக்கு அளிக்கும் அந்தச் சலுகை கூட இவர்களுக்கு இல்லையா? இதற்குக் காரணம் என்ன, ஏன் அவர்களுக்கு போதுமான அளவுக்கு சம்பளம் கொடுக்கவில்லை என்றால், அந்தக் கோயில்களுக்குப் போதுமான வருமானம் இல்லை என்று சொல்கிறார்களே, இது என்ன நியாயம்? இங்கேயும் தெய்வம் தான் இருக்கிறது, அங்கேயும் தெய்வம் தான் இருக்கிறது. ஆயிரக்கணக்கான சாமிகளையும், சிலைகளையும் வைத்துக் கொண்டு பூசை செய்யும் இந்த நாட்டிலே ஒரு பூசாரி வாழ்வதற்கு வழி



இல்லையா? எல்லா ஆலயங்களின் நிதியையும், வருமானத்தையும் 'பூல்' செய்வதற்கு இந்த அரசியல் சட்டம் குறுக்கே நிற்கிறதா? அப்படியென்றால் இதுபற்றி மத்திய அரசிடம் சொல்ல ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? கல்லாக இருக்கும் சாமிக்குப் பூசை செய்யும் இரத்தமும், சதையும் உள்ள மனிதனுக்குச் சாப்பிடுவதற்கு வழியில்லை. ஆகவே, இதையெல்லாம் பார்த்துச் செய்ய வேண்டும்.

திரு. க. இராமமூர்த்தி: இந்து அறநிலையத் துறையைப்பற்றி நாம் இப்போது பேசிக்கொண்டிருக்கிறோம். 'கல்லாக இருக்கிற சாமி' என்று குறிப்பிட வேண்டுமா என்று கேட்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன்: 'கல்லாக இருக்கிற' என்று சொல்லும்போது நான் சாமியைச் சொல்லவில்லை. கல்லாக இருக்கும் சாமிக்குப் பூசை செய்யும் உயிரோடு இருக்கும் சாமிக்குச் சாப்பாடு இல்லை. இப்படிச் சொல்லும்போது, கல்லாக இருக்கும் சாமியைக் குறை சொல்வதாகக் கொள்ளக் கூடாது. அந்தக் கருத்தை வலியுறுத்துவதற்காகத்தான் அப்படிச் சொன்னேன். ஆகவே, இந்தப் பிரச்சினைகளைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அமைகிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு மீது பேச வாய்ப்பு கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நான் சிதம்பரம் நடராசர் கோயிலைப் பற்றிச் சில கருத்துக்களைச் சொல்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விவர அறிக்கை சுருக்கமாக இருந்தாலும், அதிலுள்ள உண்மைகள் இந்த மன்றத்திற்குத் தெரிவிக்கப்பட வேண்டிய உண்மைகள். அதுமட்டுமல்ல, இன்னும் தெரிவிக்கப்பட வேண்டிய உண்மைகள், விவரங்கள், செய்திகள் பல இருக்கின்றன. அவற்றையெல்லாம் கூட விவர அறிக்கையாக அறநிலையத் துறையின் சார்பாக வைக்கலாம். உயர்நீதி மன்றம், உச்சநீதி மன்றம் இவைகள் கொடுத்த பல திட்டங்கள் அறிவுரைகள் இவைகளை ஆலய நிர்வாகம் எவ்வாறு ஏற்று நடத்தவில்லை என்ற விவரங்களை ஓர் அறிக்கையாக இந்த மாமன்றத்திலே வைத்தால், மாண்புமிகு உறுப்பினர்கள் படித்துத் தெரிந்துகொள்ள உதவியாக இருக்கும் என்ற என்னுடைய கருத்தினைச் சொல்லிக்கொள்கிறேன். பாரம்பரையற்ற முறையிலே வரும் அறங்காவலர்கள் சம்பந்தமாக இப்போது சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரும்போது, பாரம்பரை முறையிலே இன்னும் நீடித்திருக்கும் நிர்வாகத்தைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டும். ஒரு 300

குடும்பங்களுக்கு நடராசர் என்று இன்று வணங்குகிறவர்கள் என்றில்லாமல் யார் யார் நடராசர் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்களோ அத்தனை பேருக்கும் அந்த நடராசர் கடவுள் சம்பந்தமேயொழிய, சுமார் 300 குடும்பங்களுக்கு மட்டும் தான் அவர் சொந்தம் என்ற அளவிலே நடவடிக்கை இருந்தால், நிச்சயமாக நாடு அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டும் என்ற கருத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிர்வாகத்தைப் பொறுத்த வரையில், சுமார் 40 ஏக்கர் நிலப்பரப்பிலே அமைந்திருக்கும் அந்தக் கோயில், அந்த அறக்கட்டளைக்கு எழுதி வைக்கப்பட்டிருக்கும் சொத்துக்கள் பல இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் பல கண்டுபிடிக்கப் பட்டு வருகின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நிலம் மட்டுமல்ல, வீடுகள் போன்ற சொத்துக்கள் கூட பல இடங்களிலே அந்தக் கோயில்களுக்கு எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன. வீடுகள் மட்டுமல்ல, வங்கிகளிலே குறிப்பிட்ட தொகை டெப்பாசிட் செய்யப்பட்டு, அந்தத் தொகைகளிலிருந்து வரும் வட்டியெல்லாம் இந்தக் கோயில்களுடைய அறக் கட்டளைக்குச் செலவழிக்கப்பட வேண்டும் என்று பல பெரியவர்கள் எழுதி வைத்துச் சென்றதெல்லாம், அவர்கள் எந்தக் காரணங்களுக்காக எழுதி வைத்தார்களோ அந்தக் காரணங்களுக்காகப் பயன்படுத்தப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அறநிலையத் துறை இவ்வாறு நிலங்களைக் கண்டுபிடித்ததுபோல, வங்கிகளிலே வைத்திருக்கும் தொகை வீடுகளிலிருந்து வரும் வருமானம் இவைகளையும் கண்டுபிடித்து அந்த வருமானங்களையும் கோயில்களுடைய நிர்வாகச் செலவிற்காகச் செலவிடும் நிலை உருவாக்கப்பட வேண்டும்.

உயர்நீதி மன்றம், உச்ச நீதிமன்றம் கொடுத்த திட்டங்களை எவ்வாறு கோயில் நிர்வாகம் ஏற்று நடத்தவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதுமட்டுமல்ல, இந்தக் கோயிலிலே இப்போது இருக்கும் ஒருசில நிலைமைகளை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கோயில்களுக்கு உள்ளே இருக்கவேண்டிய சுகாதார நிலை இந்தக் கோயிலிலே பின்பற்றப்படவில்லை. அங்கே சுகாதாரச் சீர்கேடு இருக்கின்றது. நோய்கள் அங்கிருந்து உற்பத்தியாகும் நிலைமைகள் இருக்கின்றன. இதைப்பற்றி மலேரியா ஒழிப்புத் துறையும், சிதம்பரத்திலே இருக்கும் டாக்டர்களும் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். எவ்வாறு அந்தக் கோயிலிலே இருக்கும் சுகாதாரமற்ற சூழ்நிலை நோய்கள் வரக் காரணமாக இருக்கின்றது என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தச் சுகாதாரச்





சீர் கேடுகளை ஒழிக்க இப்போது நமக்கு அதிகாரம் இல்லை. இப்படியெல்லாம் நிலைமைகள் இருந்தால், அங்கே இருக்கும் தெய்வங்கள் மீது எப்படி பக்தர்களுக்கு நம்பிக்கை வரும்? இரவு நேரங்களிலே அங்கே நடைபெறுகிற சமூக விரோதச் செயல்களை இந்த அவையிலே சொல்லக்கூட கூச்சமாக இருக்கிறது, அந்த அளவுக்கு நடைபெறுகின்றன. அந்தக் கோயிலினுடைய நுழைவாயில்கள் பூட்டப்பட்ட பிறகு, சமூக விரோத சக்திகள் அங்கே சென்று விரும்பத்தகாத செயல்களைச் செய்கிறார்கள். இந்த மன்றத்திலே சொல்ல முடியாத, சொல்ல கூச்சப்பட வேண்டிய சமூகச் சீர்கேடுகளை ஆலயங்களிலே ஒவ்வொரு இரவு நேரத்திலேயும் அவர்கள் செய்கிறார்கள். இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை கூட இதைக் குறிப்பிட்டிருக்கிறது. இரவு 10 மணிக்கு மேலே அந்தக் கோயிலிலே மகளிர் நடமாட முடியாத நிலைமை இருக்கிறது. இந்தமாதிரியான சட்ட விரோதமான காரியங்கள் அங்கே நடைபெற அனுமதிக்கலாமா? அந்த இடத்திலே சட்டத்தைப் பயன்படுத்த வழியில்லையா? அது மட்டுமல்ல, சட்டத்திற்கு விரோதமாக இரவு நேரங்களிலே ஒரு காவலர் முறை என்ற முறையை அங்கிருக்கும் தீட்சிதர்கள் அவர்களுக்குள்ளே ஏற்படுத்திச் செய்கிறார்கள். இது சட்டத்திற்கு உட்பட்டதா? அந்தக் கோயிலுக்கு உள்ளே போட்டி அரசாங்கம் போல காவல் முறை ஒன்றை ஏற்படுத்திக்கொண்டு செயல்படுகிறார்கள். ஆனால், அதைக்கூட அவர்கள் ஒழுங்காகப் பின்பற்றவில்லை. இது சரிதானா என்று பரிசிலனை செய்ய வேண்டும்.

இன்னொன்று, சிதம்பரத்தைப்பற்றிய மிக முக்கியமான குற்றச்சாட்டு, தமிழ்நாட்டிலே பால்ய விவாகம் இப்போது அதிகமாக இருக்கும் இடம் சிதம்பரம். பால்ய விவாகத்தைத் தடை செய்யும் சட்டங்கள் இருந்தாலும், அவைகளைத் தூக்கியெறிந்துவிட்டு 10-12 வயதான குழந்தைகளுக்குத் திருமணங்கள் நடைபெறுகின்றன. தீட்சிதர் குடும்பங்களிலே இப்படி நடைபெறுகிறது. அவர்களுடைய குடும்பங்களிலே ஜாதியின் மதிப்பை நிலைநிறுத்த வேண்டும், ஜாதியின் புனிதத் தன்மையை நிலை நிறுத்த வேண்டும் என்பதற்காக அவர்கள் இவ்வாறு செய்கிறார்கள். இது அங்கே பயங்கரமாக நடைபெறுகிறது. அந்தத் திருமண விழாக்கள் தொடர்ந்து 7 நாட்கள், 12 நாட்கள் என்றுகூட அங்கே நடைபெறுகின்றன. இந்தச் சட்ட விரோதமான செயல்களைத் தடுப்பதற்கு இருக்கும் சட்டங்களை அரசு ஏன் பயன்படுத்தக்கூடாது என்ற கருத்தை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(முற்பகல் 10-50)

என்னிடம் நிறைய விவரங்கள் இருந்தாலும், நேரமின்மை காரணத்தால் அவைகளை இங்கே குறிப்பிடவில்லை. மேலும் அவையெல்லாம் மாண்புமிகு

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1981 மே 14

அமைச்சர் அவர்கள் அறியாதவையுமல்ல. என்றாலும் ஒன்றை மட்டும் நான் சொல்லி முடித்துக்கொள்கிறேன். 40 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள சிதம்பரம் நடராஜர் ஆலயத்தில் ஒரு பெரிய நந்தவனம் இருக்கிறது. அதைப் பல ஆண்டுகளுக்கு முன்னால் கோயில் நிருவாகம் குறைந்த குத்தகைக்கு ஒரு தனிப்பட்ட நபருக்கு விட்டது. அந்த நந்தவனத்திலிருந்து மிகப் பெரிய வருவாய் வந்தபோதிலும், குறைந்த அளவு தொகைக்குக் குத்தகை எடுத்த அந்த நபர் இன்னொருவருக்கு உள்குத்தகைக்கு விட்டிருக்கிறார் என்ற தகவல் எனக்கு வந்திருக்கிறது. இது முறைதானா என்றும் இது உண்மைதானா என்றும் அறநிலையத் துறை விசாரித்தறிய வேண்டும். உள் குத்தகைக்கு அவ்வாறு அந்த நந்தவனம் விடப்பட்டிருந்தால், அதைப்பற்றி உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று இங்கே கேட்டுக்கொள்வதோடு, நான் ஏற்கெனவே குறிப்பிட்ட பல்வேறு அம்சங்களைப்பற்றியும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன். இன்றையதினம் பரம்பரை முறை நீடிப்பதால் பல தொல்லைகளும் கோளாறுகளும் ஏற்படுகின்றன. சிதம்பரம் நடராஜர் ஆலயத்தைப் பொறுத்தவரையில், அது சைவர்களுக்கு மிகப் பெரிய திருத்தலமாக விளங்குகிறது. ஆண்டுதோறும் லட்சக்கணக்கான யாத்திரிகர்கள் அங்கே வந்து போகிறார்கள். ஆனித் திருமஞ்சனமும், ஆருத்திரா தரிசனமும் அங்கே சிறப்பாகக் கொண்டாடப்படும் பெருவிழாக்களாகும். பலவகையில் தமிழ் நாட்டுத் திருக்கோயில்களுக்கெல்லாம் முன்னோடியாக இருக்கும் கோயில். அதனுடைய நிர்வாகத்தில் இன்றையதினம் நிறைய முறைகேடுகளும், சீர்கேடுகளும் மலிந்திருக்கின்றன. அங்கே சட்ட விரோதமான காரியங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அதுமட்டு மல்லாமல், சுகாதாரச் சீர்கேடுகள் அகற்றப்படாமல் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே இந்த நிலைமையைப் போக்க அரசு தைரியமாக முன்வந்து உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, உயர்நீதி மன்றத்தின் ஆலோசனையைப் பெற்றாவது இதில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, நான் அந்த ஊரைச் சேர்ந்தவன் என்ற அடிப்படையிலும், எந்தக் கட்சியையும் சேராதவன் என்ற அடிப்படையிலும் பொதுப்படையாகச் சொன்ன கருத்துக்களையும் நடுநிலையில் நின்று சொன்ன கருத்துக்களையும் அரசு கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

(மின்சாரம் ஒரு சில வினாடிகள் தடைபட்டது.)



1981 மே 14]

டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது அவையில் சிறிது நேரம் இருள் சூழ்ந்ததைப்போல் சிதம்பரத்தில் உள்ள கோயிலின் விவகாரம் பெரிய இருள் சூழ்ந்ததாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த இருளை வெளியேற்றுகிற காரியத்தை மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு, ஒளியை ஊட்டுவார்கள் என்ற நம்பிக்கையோடு ஒரு சில கருத்துக்களை மட்டும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இத்தனை ஆண்டுக் காலமாக ஆண்டு வருமானம் ரூபாய் 3,000 மட்டுமே என்று சிதம்பரத்தில் உள்ள அந்த ஆலயத்தின் நிருவாகத்தினர் காட்டிக் கொண்டு வந்திருந்தாலும், அங்கேயிருக்கிற நிலங்களிலிருந்து குத்தகையாக வரும் வருவாய் மதிப்பீடு மட்டும் ரூபாய் 39,000 என்று அவர்கள் வைத்திருக்கும் இரண்டாவது கணக்கில் காட்டப்பட்டிருக்கிறது. இதைப் பார்க்கும்போது, அதிலே அடங்கியிருக்கிற சிதம்பர ரகசியத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெளிக் கொணர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சுயமரியாதைக்காரர்கள் என்றாலே ஒருவகையான அச்சத்தோடு பார்த்துக் கொண்டிருந்த காலம் ஒன்று உண்டு. ஆனால் இந்த நாட்டுக்குத் தேவைப்பட்ட சமுதாய சீர்திருத்தத்தைக்கூட நாம்தான் செய்து காட்டியிருக்கிறோம். தந்தை பெரியார் அவர்களும் பேரறிஞர் அண்ணா அவர்களும் நாட்டில் தொடங்கி வைத்த கலப்புத் திருமணமானாலும் சரி, தற்போது அவர்களால் நாட்டில் உருவாக்கப்பட்டிருக்கும் மறுமலர்ச்சியானாலும் சரி, இவையனைத்தும் நமது இயக்கத்தின் வெற்றிகளாகும். தமிழ் நாட்டில் இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சில ஜாதிக் கலவரங்கள் நடைபெற்றாலும், மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தமிழகத்தில் அவைகள் அந்த அளவுக்கு இல்லாமல் இருப்பதற்குக் காரணம் இதுவரை நாம் மேற்கொண்ட முயற்சிகள் தாம் என்பதை யாரும் மறுக்க முடியாது. அதைப்போலவே கோயில்களைப் பொறுத்தவரையில், இவர்கள் ஆட்சிக்கு வந்தால் என்ன செய்வார்களோ என்று எண்ணிக்கொண்டிருந்த நிலை மாறி, நாம் பொறுப்பேற்ற பிறகுதான் திருக்கோயில்களின் நிருவாகங்களிலும் பல நல்ல மாற்றங்களைச் செய்து வந்திருக்கிறோம். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களே நன்கு விளக்கியிருக்கிறார்கள். எவ்வொரு கால கட்டத்திலும் ஆட்சியில் இருந்தவர்கள் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதையும் அவர் தெளிவுபடுத்தினார். அதிலே [illegible] என்னவென்றால், ஆலயங்கள் குறித்த சட்டம் வந்தபோதே, [illegible] அவரும் கட்சியில் இருந்த சில வைதிகர்கள் அதை எதிர்த்தவர்களாகும் இந்த நாட்டில் உண்டு. அந்த அளவுக்கு ஒரு கட்சி ஒரு கருத்தைச் சொன்னாலும்,

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1981 மே 14

தங்களுடைய வைதிக மனப்பான்மையை விடாப்பிடியாகக் கொண்டு செயல் பட்ட காரணத்தால்தான், இதில் இன்னும் பிரச்சினைகளும் குழப்பங்களும் இருக்கின்றன என்பதோடு, அங்கே போகிறவர்களுக்கும் சந்தேகம் வருகிற நிலை ஏற்படுகிறது. அந்த அளவுக்கு சமயத்தைச் சேர்ந்த பெரியவர்கள் இன்னும் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். ஆனால் நமது அரசைப் பொறுத்த வரையில், ஆலயங்களில் நல்ல நிருவாகம் நடக்க வேண்டும் என்றுதான் செயல் படுகிறோம். ஆகவே சமயத்தைச் சார்ந்தவர்கள் வருத்தப்படுவார்களோ என்று தயக்கம் காட்டாமல் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் தீவிர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நீதிமன்றத்தின் தீர்ப்புகள் என்பவை ஒருபக்கம் இருந்தாலும், இடைக்கால ஏற்பாடாக இதில் ஏதேனும் நடவடிக்கைகளை மேற்கொண்டு அதன் நிருவா கத்தைச் சீர்திருத்துவதில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மிகப் பெரிய வருவாய் வருகிற அந்தத் திருக்கோயிலில் இந்த அளவுக்குக் குறைவான வருமானத்தைக் காட்டி இத்தனை ஆண்டுக் கால மாக ஏமாற்றிய அந்தப் பெருச்சாளிகள் யார் என்பதைக் கண்டுபிடித்து அவர்களைத் தண்டித்தால்தான், இனியாவது இதுபோன்ற காரியங்களில் மற்ற வர்கள் யாரும் ஈடுபடாமல் இருப்பார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்த வகையில் கருத்தைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.

*திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே! இந்தச் சட்டத் திருத்த முன்வடிவின்மீது சில கருத்துக்களை அவையின் பரிசீலனைக்காக வைப்பதற்கு முன்வருகிறேன். தமிழ் நாட்டி லுள்ள கோயில்களுக்கான அறங்காவலர்களை நியமிப்பதற்குக் கால கெடுவை ஓராண்டுக்குத் தள்ளி வைக்க வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால் கிராமங்களில் உள்ள ஆலயங்களைப் பொறுத்த மட்டிலாவது, அவைகளுக்கு உடனடியாக அறங்காவலர்களை நிய மித்துவிடுவது நல்லது. அதிகமான வருவாய் உள்ள ஆலயங்களின் நிலை வேறு. கிராமங்களில் உள்ள ஆலயங்களின் நிலை வேறு. கிராமங்களில் உள்ள ஆலயங்களைப் பொறுத்தவரையில், இவை சென்டிமெண்டலாகக் கருதப்படுபவையாகும். பல கிராமங்களில் அறங்காவலர்கள் இல்லாமல் உற்சவங்களேகூட நின்றுபோய்விட்டிருக்கின்றன.



1981 மே 14] [திரு. க. இராமமூர்த்தி]

கிராமங்களில் மழை பொழியவில்லை என்றாலும், அதற்கு தெய்வக் குறைபாடு காரணமாக இருக்குமோ என்று எண்ணுகிற நிலை இன்னும் இருக்கிறது. மழை பெய்யாமல் இருப்பது இயற்கை உற்பாதங்களில் ஒன்று என்று நாம் நினைத் தாலும், அங்கே இருப்பவர்கள் அதை தெய்வத்தின் குறுக்கீடாக நினைக் கிறார்கள். எனவே கிராமக் கோயில்களைப் பொறுத்தவரையில், உடனடியாக யாரையாவது நியமிக்க வேண்டும். கட்சி அடிப்படையில் என்றுகூட நான் சொல்லவில்லை. அதைப் பரிசீலனை செய்து நியமிப்பதை அரசுக்கே விட்டுவிடுகிறேன். ஆனால் கூடியவரை நியமனத்தை விரைவுபடுத்துங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தந்தப் பகுதியில் இருப்பவர்கள் முடி வெடுத்து அனுப்பி வைக்கும்போது, அதை அப்படியேகூட அங்கீகரிக்கலாம். ஒன்றிரண்டு மாற்றங்கள் செய்ய வேண்டும் என்றாலும் அதில் செய்யலாம். அல்லது மேற்கொண்டு ஒன்றிரண்டு அறங்காவலர்களை நியமிக்க வேண்டு மென்றாலும், கூடுதலாகச் செய்யலாம்.

அடுத்து, தமிழகத்தில் இருக்கும் அனைத்து ஆலயங்களிலும் ஒரு இன் வெண்டரி எடுத்தாக வேண்டும். ஒவ்வொரு ஆலயத்தின் வருமானம் எவ்வளவு, அதன் சொத்துக்கள் எவ்வளவு, அவை எங்கெங்கே இருக்கின்றன, அதைச் சேர்ந்த அறக்கட்டளைகள் எவையெவை, அவை எந்தெந்த ரூபத்தில் எங்கெங்கே இருக்கின்றன, அவைகள் எப்படியெல்லாம் நிருவகிக்கப்படுகின்றன, அந்த ஆலயங்களின் நகைகள் எவ்வளவு, அவற்றின் மதிப்பு எவ்வளவு என்பதையெல்லாம் கணக்கெடுத்தாக வேண்டும். காரணம் இந்த ஆலயங்களில் தான் தமிழகத்தின் சரித்திரமே இருக்கிறது. அந்தக் கோயில்களின் வழிபாட்டு முறைகளிலும் அங்கேயுள்ள ஆவணங்களிலும் இருந்து பல்வேறு புதிய தகவல் களை நாம் பெற முடியும். இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும் போது, சிதம்பரம் நடராசர் ஆலயத்தைப்பற்றிச் சில புதிய தகவல்களை யெல்லாம் தெரிவித்தார்கள். அப்படிப்பட்ட திருக்கோயில்களில் நிருவா கத்தை முறைப்படுத்த எடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் இந்த அமைச்சரவைக்கு எல்லோரும் துணையாக இருப்பார்கள் என்ற உறுதி மொழியை அளிக்க விரும்புகிறேன்.

அதோடு இன்னொரு கருத்தைச் சொல்லவும் விரும்புகிறேன். அந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தவறாகக் கருதமாட்டார்கள் என்றே நினைக் கிறேன். ஆலய நிர்வாகத்தைப் பற்றியோ அங்கே இருக்கிற குறைபாடுகளைப் பற்றியோ, அவை எதுவாக இருந்தாலும், அவையெல்லாம் ஒரு பப்ளிக் டிஸ்கஷ னாக மாற்றிவிட வேண்டாம், 'லவுட் திங்க்கிங்' Loud Thinking என்ற

அளவில் அவற்றை விவாதத்திற்குரியவையாக ஆக்கிவிட வேண்டாம் என்று மிகுந்த உரிமையோடு அவரைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நடைபெறுகிற தவறுகளைப் பார்க்கும்போது, அவருக்குக் கோபமும் வேகமும் வரலாம். அவைகளைத் தாங்கிக் கொள்ள முடியாத நிலைகூட ஏற்படலாம். ஆனால் அதன் காரணமாக அவற்றையெல்லாம் பப்ளிக் டிஸ்கஷனுக்குரியவையாக மாற்றினால், அதன் விளைவு என்ன ஆகும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்து அறநிலையங்கள் எந்தக் காரணத்திற்காகத் தோற்றுவிக்கப் பட்டனவோ அந்த அடிப்படையே போய்விடும். அமைச்சர் அவர்கள் மேற்கொள்ளுகிற விவாதம் அதோடு நின்று விடாமல் அதுவே வெளி விவாதமாக மாறிவிடும்போது, யார் வேண்டுமானாலும் அதைப்பற்றிக் கருத்துச் சொல்ல முடியும் என்ற நிலை ஏற்பட்டுவிடுமானால், அதன் விளைவு நல்லதாக இருக்காது. அமைச்சர் அவர்கள் சில தகவல்களின் அடிப்படையில் சிலவற்றைக் கூறலாம். ஆனால் பலர் தகவல்கள் ஏதுமில்லாமலேயே . . .

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசும்போது. சிதம்பரம் போன்ற ஆலயங்களில் இந்து அறக் கட்டளைகள் பற்றிய சட்டப்படி நிருவாகம் நடக்காவிட்டால், அவைகளைப் பற்றி பொது மன்றத்தில் பேசினால், அதன் காரணமாக அறநிலையங்களின் நோக்கமே மாறிவிடும் என்று பேசுகிறார். அவற்றின் சொத்துக்களை எப்படிப் பராமரிக்க வேண்டும் என்பதில் சிதம்பர ரகசியம் ஏதும் இருக்கக் கூடாது. அப்படி அந்த ரகசியத்தை உடைத்துக் காட்டவில்லை என்றால்தான், ஆபத்து என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் என்னுடைய கருத்துக்கு மாறுபாடாகச் சொல்லமாட்டார்கள் என்று நினைக்கிறேன். நான் என்ன சொல்லுகிறேன் என்பது அவருக்குப் புரியும் என்று நினைக்கிறேன். இருந்தாலும் அவர் சார்ந்திருக்கிற கட்சி நான் எதைச் சொல்லும்போதும் குறுக்கிட வேண்டிய நிலையை அவருக்கு ஏற்படுத்தியுள்ளது என்றும் நினைக்கிறேன். என்னைப் பொறுத்த வரையில், வெளியே நடைபெறுகிற மேடைப் பேச்சுக்களில் கலந்து கொண்டு பேசுகிறபோது, அது தொடர்பாக பல விவாதங்கள் ஏற்படக்கூடிய சூழ்நிலைகள் உருவாகிவிடுகின்றன என்று சொல்லுகிறேன். என்னுடைய வேதனை, இந்து ஆலயங்கள், இந்து அறநிலையங்களைப் பற்றி மட்டும்தான்



இப்படிப்பட்ட 'லைட் திங்கிங்' என்ற "உரத்த குரல்" தைரியம் வருகிறதே என்பதுதான். வேறு எந்த மதத்தைப் பற்றியாவது இப்படிச் சொல்ல முடிகிறதா? மற்ற மதத்தின் தலைவர்களும்தான் பணம் கொடுத்து சரித்திரத்தையே மாற்றும் பல நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளனர்.

**திரு. ஆ. நல்லசிவன் :** துணைத் தலைவர் அவர்களே, எல்லா மாநிலத்திலும் தவறுகள் நடக்கின்றன. ஆனால் ஒரு இந்து அமைச்சர் அவர்கள் முஸ்லீம் மதத்தைப்பற்றிப் பேசினால், அது வகுப்புவாதமாக மாறும் அபாயம் இருக்கிறது. இந்து அமைச்சர் அவர்கள் இந்துக் கோயிலைப் பற்றிப் பேசினால், அதிலுள்ள உண்மைகளைப்பற்றி விவாதிக்க வாய்ப்பு ஏற்படும். அப்படிப் பேசும்போது, இந்து மதத்தை மட்டும் பாதிக்கும் என்ற பிரச்சினை எழவில்லை. முஸ்லீம் அமைச்சர் முஸ்லிம் மதத்தைப் பற்றியும், கிருத்துவ அமைச்சர் கிருத்துவ மதத்தைப் பற்றியும் பேசினால், ஆபத்து வராது. ஏனென்றால் நம்முடைய நாட்டில் அரசியல் அப்படி இருக்கிறது. ஆகவே இந்து அமைச்சர் அவர்கள் இந்துக் கோயில்களைப் பற்றிச் சொல்லுவது நல்லது என்று கருதுகிறேன். இதில் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களுக்கு மாறுபட்ட கருத்து இருக்காது என்று நினைக்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** ஆனால், அந்த மதங்களைப் பற்றியெல்லாம் இப்படி யாரும் சொல்ல முடியாது. இந்து மதத்தைப் பற்றி. இந்து மத ஆலயங்களைப் பற்றி, அதன் நிர்வாகத்தைப் பற்றி மட்டும் யார் வேண்டுமானாலும் சொல்லலாம் என்ற நிலை இருக்கிறது. இன்றைக்கு இப்படிப்பட்ட உணர்வுகள் இருக்கும்போது, இந்துக்கள் அதுபற்றி பகிரங்கமாக 'ரியாக்ட்' செய்ய முடியாமல் இருக்கலாம். ஆனால் இப்படி இந்து மதத்தைப்பற்றிக் கேலியும், கிண்டலுமாகப் பேச வாய்ப்பு இருக்கிறதே, வேண்டுமென்றே இப்படிச் சொல்லுகிறார்களே என்பது இந்துக்களுடைய மனதிலே பதிந்து விடுகிறது. இதற்கு சட்டமும் இடம் கொடுக்கிறதே என்ற வேதனை உணர்வு பல காலமாக இருக்கிறது. அதுவே பல போராட்டங்களுக்கு, சம்பவங்களுக்கு இடம் கொடுத்து விடுகிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லாமல் இருக்க முடியவில்லை. ஆனால் செய்ய வேண்டிய திருத்தங்களைச் செய்துதான் ஆகவேண்டும். இதிலே யாரும் குறுக்கிடவில்லை. இந்து மதத்திலே எல்லோருக்கும் நம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்பது வேறு. இந்து மத ஆலயங்களைப் பொறுத்த வரையில், அதில் நம்பிக்கையுடையவர்கள் அதை முழுமையாகப் பயன்படுத்துகிறார்கள். அந்த நம்பிக்கைக்கு மரியாதை கொடுக்க வேண்டுமென்று கருதுகிறார்கள். அந்த

மரியாதையையும் மதிப்பையும் கொஞ்சம் கொஞ்சமாக நழுவவிட்டு விட்டு சட்டத்தின் மூலமாகப் பாதுகாப்புக் கொடுத்து காப்பாற்ற இருக்கிறோம் என்று சொன்னால், அது பண ஆதாயம் என்ற அளவிலேதான் இருக்குமே தவிர, இந்து மதப் பண்போடு இந்து மத அறநிலையங்களுக்குச் செய்கிற காரியமாக அமையாது என்று சொல்ல விரும்புகிறேன். இதை நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை, ஓர் ஆலோசனையாகச் சொல்கிறேன். ஏதாவது தவறுகள் நடந்து அதைப்பற்றி விசாரிக்க வேண்டுமென்ற நிலை வந்தால், அது தொடர்பாக உள்ள மாவட்டத்துக்காரர்களை அல்லது மாநிலத்திலே உள்ளவர்களை அழைத்து வைத்துப் பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரிய ஆலயங்களுக்கு அறங்காவலர்களைப் போடுவதைப் பொறுத்த வரையில், அமைச்சர் அவர்கள் கவனத்தோடுதான் செய்துகொண்டு வருகிறார். எதையும் தொடாதவர்களாகப் பார்த்துப் போட வேண்டுமென்று முயற்சி செய்கிறார். பல பேர் அறநிலையங்களின் சொத்துக்களையெல்லாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அறக்கட்டளைகளின் சொத்துக்களை அனுபவித்துக்கொண்டு, சட்டத்தின் ஓட்டைகளின் மூலமாகத் தப்பித்துக் கொண்டு பெரிய மனிதர்களாக இருக்கிறார்கள். அந்த மாதிரியான பெரிய மனிதர்கள் இந்த அறக்கட்டளை நிர்வாகத்தில், சாதி என்ற பெயராலோ, அரசியல் செல்வாக்காலோ அல்லது தனிப்பட்ட செல்வாக்காலோ இடம் பெறுவதைப் பார்க்கிறேன். அவர்களையெல்லாம் மாற்றி நல்லவர்களை அறங்காவலர்களாக நியமிக்க அரசு முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில், சிதம்பரம் உட்பட அமைச்சர் அவர்கள் தனியாகக் கவனம் செலுத்த வேண்டும். அப்படி நடவடிக்கை எடுத்தால், பினாமிபற்றி பல உண்மைகள் வெளி வருகிறபோது அமைச்சர் அவர்கள் எப்படி இப்போது அதிர்ச்சி அடைகிறார்களோ, அதைவிட பெரிய அதிர்ச்சி அடைவார்கள். அப்போது பல பயங்கர உண்மைகள் வெளிவரும் என்று சொல்லி அமர்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த-சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு ஏற்கெனவே நியமிக்கப்பட்டிருக்கிற அறங்காவலர்களுடைய பதவிக் காலத்தை மேலும் ஓராண்டுக் காலத்திற்கு நீட்டிக்க வகை செய்கிறது. இது உண்மையிலேயே வரவேற்கத்தக்கதொரு அம்சம் அல்ல என்பதை அமைச்சர் அவர்களே ஒத்துக்கொள்வார்கள் என்று நான் நினைக்கிறேன். இப்போதுள்ள அறங்காவலர்கள் கடந்த நான்கைந்து ஆண்டுகளாகப்





பணி புரிந்து வருகிறார்கள் என்று நினைக்கிறேன். அவர்களுடைய பணிக் காலம் மே 31 ஆம் தேதியன்று முடிவடைகிறது. எனவே அவர்களுடைய பணி முடிவடைந்த பிறகு, புதிய அறங்காவலர்களை நியமிப்பதிலே என்ன சிக்கல் இருக்கிறதென்று எனக்குப் புரியவில்லை. நியமிக்கப்பட்டிருக்கிற அறங்காவலர்களில் நல்ல முறையில் பணிபுரிந்து பாராட்டுப் பெற்றவர்களை தொடர்ந்து நியமிக்கலாம். சில இடங்களில் சிறப்பாகப் பணி புரியாதவர்கள் இருந்தால், அவர்களை மாற்றிவிட்டு புதிய அறங்காவலர்களை நியமிக்கலாம். அதை விட்டுவிட்டு மொத்தமாக அப்படியே ஓராண்டுக்கு நீட்டித்துக் கொடுக்க வேண்டுமென்ற நிலை என்ன, அதற்கான காரணங்கள் என்னவென்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

நான் ஏற்கெனவே ஒரு முறை சொல்லியிருக்கிறேன். அப்போது அமைச்சர் அவர்களும் பதில் சொன்னார்கள். இருந்தாலும் இப்போதும் சொல்லுகிறேன். எந்தக் கட்சியையும் சேராதவர்கள் இந்த நாட்டிலே இருக்கிறார்கள். ஓராண்டுக்குப் பிறகு நியமிக்கிறபோது, சமய உணர்வு உடையவர்களாகப் பார்த்து, அரசியலைச் சேராதவர்களாகப் பார்த்து அவர்களை அறங்காவலர்களாக நியமித்தால், அரசியல் சாயம் பூச வேண்டிய சூழ்நிலை வராமல் இருக்கும். அதை நான் முன்பே சொன்னபோது, அமைச்சர் அவர்கள், அரசியல் கட்சியைச் சார்ந்திருப்பது பாவமா என்று கேட்டார்கள். பாவம் என்று நான் சொல்லவில்லை. அவர்கள் தொடர்ந்து அரசியல் பணியைச் செய்து கொண்டிருக்கட்டும். இந்த நாட்டில் அந்த அளவிற்கு ஆளுக்குப் பஞ்சமில்லை, படித்தவர்களுக்குப் பஞ்சமில்லை, பண்பாளர்களுக்குப் பஞ்சமில்லை. ஆனால் அரசியலிலே ஈடுபடுகிறவர்கள் பல்வேறு சூழ்நிலை காரணமாக சில நிர்பந்தங்களுக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்பதை மறந்துவிட முடியாது. அறநிலையங்கள் எல்லாம் அதற்கு அப்பாற்பட்டு இருக்க வேண்டுமென்று நாம் கருதுகிறோம். ஒருவேளை அமைச்சர் அவர்கள், 'உங்கள் ஆட்சிக் காலத்தில் அப்படிச் செய்யவில்லையா?' என்று கேட்கலாம். எங்கள் ஆட்சிக் காலத்தில் நடந்ததை முன்னுதாரணமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லவில்லை. புதிய ஓர் அமைப்பை உருவாக்குங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் இத்தகைய அறநிலையங்கள் எல்லாம், நாட்டிலே இருக்கக் கூடிய அரசியல் கட்சிக்கு அப்பாற்பட்டு நின்று சமய உணர்வை வளர்க்கின்றனவோ, இல்லையோ, அற உணர்வை வளர்க்கின்றன என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இது நான் சார்ந்திருக்கிற கட்சியின் கருத்து என்று எண்ணாமல், என்னுடைய சொந்தக் கருத்தாக

[திரு. ம. சங்கரலிங்கம்] [1981 மே 14

எண்ண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய நாட்டில் வருகிற
பல்வேறு தொல்லைகளுக்குக் காரணம், பண்பாடு குன்றி வருவது, அற உணர்வு
குன்றி வருவதுதான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. சென்னையிலே
இருக்கக் கூடிய உம்மிடியார் நகைக் கடையில் உள்ள நகைகளைக் காப்பது
நம்முடைய காவல் துறையுமல்ல, கடைக்கு முன்னால் அவர்கள் போட்டிருக்கும்
இரும்புக் கதவுகளும் அல்ல. தமிழ் மக்களிடத்திலே வளர்க்கப்பட்ட பண்பாடு
தான் அதைக் காத்துக் கொண்டிருக்கிறது. அந்தப் பண்பாடு எங்கேயாவது
சிதறுகிறதென்றால், அதைத் தடுத்து நிறுத்த காவல்துறை, அரசு பயன்
படுகிறது. நல்ல பண்பாட்டு மையமாக இருந்த பண்பாட்டை வளர்க்கிற
அறநிலையங்கள் எல்லாம், ஆலயங்கள் எல்லாம் மூட நம்பிக்கையைப்
பரப்புகிற இடமாக மாறிவிட்ட பிறகுதான் நாம் கவலைப்பட வேண்டியதாக
இருக்கிறது. வெள்ளைக்காரனை எதிர்த்துப் போராட வேண்டுமென்ற
நினைத்தபோது, அந்நிய நாட்டுத் துணியை எரித்தோம். அப்படி எரித்த
காலத்திலே கூட காந்தியடிகள் வெள்ளைக்காரனை நண்பராக வைத்துக்
கொண்டிருந்தார். அப்போது வெள்ளைக்கார நாட்டை, இனத்தை, அவர்கள்
தந்த அரசியல் நெறிமுறைகளை, ஜனநாயக முறைகளை நாம் எதிர்க்க
வில்லை, அவர்களுடைய ஆதிக்கத்தைத்தான் எதிர்த்தோம். அதைப் போலவே
மூட நம்பிக்கையை நாம் எதிர்த்தோம். அதை எதிர்த்து திராவிட முன்னேற்றக்
கழக இயக்கம் நடத்திய பிரச்சாரத்தின் மூலமாக வெற்றி கண்டதன்
காரணமாக ஓரளவிற்கு மூடநம்பிக்கை அகன்றிருக்கிறது என்பதை நாம்
உணர்ந்து கொள்ளுகிறோம். இந்த நிலையில் அவர்களை அகற்றிவிட்டு அந்த

(முற்பகல் 11.10)

இடங்களில் பண்பட்டவர்களை மாற்றிப்போடுகின்ற ஓர் அமைப்பு முறை வர
வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். அரசியல் சார்பில்லாதவர்கள்
வரலாம். நான் இப்போது அதற்கு ஒரு உதாரணத்தைச் சொன்னால்,
அதற்குப் பதிலாக இன்னொரு உதாரணத்தை இங்கே சொல்வார்கள். நாம்
இங்கே சொல்லிக்கொள்கின்ற உதாரணங்கள் ஒருவேளை சரியாகவும்
இருக்கலாம், தவறாகவும் இருக்கலாம். ஆகவே அப்படிப்பட்ட உதாரணங்
களை நாம் சொல்லவேண்டியதில்லை. இப்போது இருக்கின்ற ஒரு அறங்
காவலர் மீது குற்றம் சாட்டப்பட்டால், அவர்கள் ஒரு கட்சி சார்பு அற்றவராக
இருந்தாலும், அப்படிக் குற்றம் சாட்டப்பட்டவர் மீதுள்ள குற்றம் நிச்சய
மாகின்றவரையில், அவர் அறங்காவலர் பொறுப்பிலே இருக்கக்கூடாது என்ற
ஒன்றில் விதியை ஏற்படுத்த வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



1981 மே 14] [திரு. ம. சங்கரலிங்கம்]

பொதுமக்களுக்கு அவர்களிடத்திலே இருக்கக்கூடிய மரியாதை உயர வேண்டும். ஆகவே அந்த மாதிரியான நிலைமைகள் இருக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். இப்போதுகூட திருத்தணியிலே ஒரு சம்பவம் நடந்தது. அதைப்பற்றிப் பத்திரிகையிலே வருகிறது. இவைகள் எல்லாம் வருந்தத்தக்க நிகழ்ச்சிகளாக இருக்கின்றன. இங்கே திரு. சி. ரா. லெட்சுமி காந்தன் அவர்கள் அந்த ஆலயங்களுக்குள்ளே 10 மணிக்கு மேலே நடக்கின்றதைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். ‘விநோத சமஸ்தானங்கள்’ என்று ஒரு புத்தகம் படித்திருக்கிறேன். சுதந்திர காலத்திற்கு முன் சமஸ்தானாதிபதிகளுடைய விநோதங்கள், லீலா விநோதங்கள் என்று புத்தகம் எழுதியிருக்கிறார்கள். அந்தக் காலத்தில் 1942-43லே படித்திருக்கிறோம். இவர்கள் சொல்வதைப் பார்த்தால், அவரேகூட ‘10 மணிக்கு மேலே சிதம்பரம் கோயிலிலே விநோதங்கள்’ என்று புத்தகம் எழுதலாம்போல் இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் அங்கேயிருக்கின்றன என்றால், அது மிகவும் வருந்தத்தக்கவைகள் ஆகும். அறங்காவலர்களாக நியமிக்கப் படுபவர்கள் எல்லாம் இதற்கெல்லாம் அப்பாற்பட்டவர்களாக, சீர்திருத்து கின்றவர்களாக, ஆற்றல் பெற்றவர்களாக, அந்த சக்தியைப் பெற்றவர்களாக, நல்ல பயன் உடையவர்களாக இருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்களைத் தான் நாம் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். மற்ற சம்பவங்களை இப்போது இங்கே சொன்னால், அந்தக் கருத்திலே நாம் வைத்திருக்கக்கூடிய அழுத்தத்தைக் குறைத்து அமைச்சர் அவர்கள் எனக்கு பதில் சொல்கின்ற நிலை ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக மற்றவைகளைப் பற்றிச் சுட்டிக்காட்டுகின்ற சூழ்நிலையிலே இருந்தாலும்கூட, அவைகளை விட்டுவிடுகிறேன்.

அடுத்து, கன்னியாகுமரி மாவட்டத்தில் அறங்காவலர் அமைப்பில் ஒரு கல்லூரி நடத்தப்படுகிறது. இரண்டு பள்ளிகள் நடத்தப்படுகின்றன. தேவி கருமாரி கல்லூரி என்று இருக்கிறது. குழித்துறையிலே ஒரு கல்லூரி இருக்கிறது. கன்னியாகுமரியிலே ஜனத்தொகை நெருக்கமாக இருக்கின்ற விளவங்கோடு தாலூக்காவிலே ஒரே ஒரு கல்லூரி இருக்கிறது. அது கிருத்துவ கல்லூரி. அங்கே மாணவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. பெண்கள் இடம் பெற முடியாது என்ற சூழ்நிலை இருக்கிறது. அந்த அளவில் தேவி கருமாரி கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. அறங்காவலர் அமைப்பின்கீழ் அமைக்கப் பட்டது. தேவஸ்வம் போர்டு என்று அதை அழைக்கிறார்கள். அது மேற் கொண்டு விரிவடையவில்லை. அதை ஒரு மகாராஜா கொடுத்த மண்டபத்தில்,

அந்த இடத்திற்குள்ளேயே வைத்திருக்கிறார்கள். அதற்கு என்று ஒரு 8 ஏக்கர் அல்லது 10 ஏக்கர் அந்தக் கமிட்டியார் வாங்கி வைத்திருக்கிறார்கள். குளித்துறை டி.பி.க்குப் பக்கத்திலே இருக்கிறது. அங்கே ஆரம்பிக்க வேண்டும் என்ற ஒரு முயற்சி இருக்கிறது. ஆனால் அது இன்னும் தொடரவில்லை என்று நினைக்கிறேன். அங்கிருந்து ஆலயடிக்கு மாற்ற வேண்டுமென்று முயற்சி இருக்கிறது. அதற்கு அந்த ஊர்க்காரர்கள் எதிர்த்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு நிதி ஒதுக்கீடு செய்து கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு பெண்கள் கல்லூரி சிறப்பாக நடைபெறுவதற்கு இந்த அறநிலையத்துறை முனைய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைக் கன்னியாகுமரிக்கு மாற்றுவது என்றுகூட ஒரு திட்டம் போட்டார்கள். நாங்கள் எல்லாம் எதிர்ப்பு தெரிவித்தோம். அந்த இடத்திலேயே அது அமைய வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மண்டைக்காட்டிலே ஒரு உயர்நிலைப் பள்ளி. அந்தப் பள்ளி இப்போது மேல்நிலைப் பள்ளியாக மாறியிருக்கிறது என்று கருதுகிறேன். திருப்பரப்பிலே ஒரு உயர் நிலைப் பள்ளி இருக்கிறது. குளித்துறையிலே ஒரு நடு நிலைப் பள்ளி இருக்கிறது. இவைகள் எல்லாம் சிறப்பாக நடைபெறுவதாகச் சொல்ல முடியவில்லை. அவைகள் சிறப்பாக நடைபெற ஒரு தனிக் குழு, அல்லது கல்விக் குழு அமைக்க வேண்டும். அதைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற மாவட்டங்களில், பிற பகுதிகளில் உள்ள கோயில்களில் உள்ள அறங்காவலர்கள், அந்தப் பகுதிகளில் பெருத்த வருவாய் உள்ள கோயில்கள் சார்பில் கல்வி நிறுவனங்களை ஏற்படுத்தி, ஏழை இந்துக் குழந்தைகள் இலவசமாகப் படிப்பதற்கும் அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் தொகை அளிக்கப்பட்டு படிப்பதற்கும் வழிவகை செய்ய வேண்டும். அங்கு கல்வியைப் பரப்புகின்ற பணியை பண்பாட்டைப் பரப்புகின்ற பணியை இந்த அறநிலையத்துறை ஏற்று நடத்தி, அதிலே வெற்றி பெற வேண்டும். அப்படி வெற்றி பெற்றால்தான் நமக்கு நல்லது என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

* மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறக் கட்டளைகளுடைய திருத்தச் சட்ட முன்வடிவின் மீது இங்கே மாண்புமிகு அங்கத்தினர்கள் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களைப் பொறுத்த வரையில், அதிலே மிகப் பெரிய அளவிலோ அல்லது குறைந்த அளவிலோ எனக்குக் கருத்து வேறுபாடுகள் இல்லை என்பதை முதலிலேயே நான், துணைத் தலைவர் அவர்கள் மூலம் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொண்டு, அந்த அங்கத்தினர்கள் சொன்ன கருத்துக்களுக்கு, நான் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் நம்முடைய மாண்புமிகு அங்கத்தினர் திரு. நல்லசிவன் அவர்கள் அந்த ஊழியர்கள் சம்பளத்தை குறைந்தபட்சம் ரூபாய் 100 என்று அறிவித்திருப்பதை வரவேற்றுப் பேசி, அது வருமானம் இருக்கின்ற ஆலயங்களுக்கு மாத்திரம் தானா அல்லது எல்லா ஆலயங்களுக்கும் சேர்த்தா என்ற வினாவை எழுப்பியிருக்கிறார்கள். எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு முயற்சிக்க வேண்டும் என்றும், அதற்கான கணக்கை எடுக்க வேண்டும் என்றும் சொல்லி, நாங்கள் அந்தத் துறைக்கு உத்தரவிட்டிருக்கிறோம். சுமார் 37 ஆயிரம் அல்லது 38 ஆயிரம் பேர்கள் குருக்களாக இருக்கிறார்கள். அதிலே ஒரு ஆயிரம் பேர்கள்தான் ஒரு நியாயமான அளவிற்கு வருமானம் பெறுகிறார்கள். சில இடங்களிலே அதிகமான அளவுக்குக்கூட பெறுகின்றார்கள். வருமான வரி செலுத்துகின்ற அளவுக்குகூட வருமானத்தைப் பெறுகின்றார்கள். அந்த அளவுக்கு வருமானத்தை அவர்கள் செய்த புண்ணியத்தாலே பெற்றிருக்கிறார்கள். ஆனால் 20 ஆயிரம் அல்லது 30 ஆயிரம் அல்லது 35 ஆயிரம் பேர்கள் மிகக் குறைந்த அளவிலே, வருமானம் பெற்று வறுமையோடு அவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வாழ்விற்கே, ஜீவனத்திற்கே வழியில்லாமல் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இதை எப்படித் தீர்ப்பது என்று வருகிறபோது, இங்கே பார்த்தால், ஆயிரக்கணக்கிலே கோயில்களின் எண்ணிக்கையைத் தருகிறோம். ஆண்டு வருமானம் ரூபாய் 200-க்கு உட்பட்டு உள்ள கோயில்கள் 15 ஆயிரம் அளவுக்கு இருக்கின்றன. அதிலே ரூபாய் 200 லிருந்து ரூபாய் 500 வரை வருமானம் உள்ள கோயில்கள் 5 ஆயிரம் என்று இருக்கிறது. இப்படிப் பார்த்துக்கொண்டே வந்தால், ரூபாய் 10,000-த்தைத் தாண்டி வருமானமுள்ள கோயில்கள் சுமார் 782 கோயில்கள் தான் தமிழ்நாட்டில் இருக்கின்றன. அதற்குக் கீழே வருமானம் உள்ள கோயில்கள் நம்முடைய கணக்கிலே இருப்பது 10,663 கோயில்கள். ஆகவே நம்முடைய நிர்வாக அமைப்புக்குள்ளே வருகின்ற 17 ஆயிரம் அல்லது 18 ஆயிரம் கோயில்கள் இருக்கின்றன. 15 ஆயிரம் கோயில்களில் உள்ள வருமானம் நூறு, இருநூறு என்பதுதான் இருக்கின்றது. ஆக எல்லாக் கோயில்களிலும் குருக்கள் இருக்கிறார்கள். அவர்கள் பகுதிநேர ஊழியர்களாக இருக்கிறார்கள். அங்கத்தினர் அவர்கள், "முடிந்தால் அவர்களுக்குச் சம்பளத்தைக் கொடுத்து வழங்காக வைத்துக்கொள்ளுங்கள், இல்லையானால், பூசையை நிறுத்தி விடுங்கள், மூடி விடுங்கள்" என்று சொன்னார்கள். நாங்கள் அந்த நிறுத்தி விட்டு நிறுத்தச் செய்யவேண்டிய நிலைமைகள் இல்லை. பல கிராமங்களிலே அவர்களாகவே மூடிவிட்டார்கள். இன்றைக்கு தஞ்சை மாவட்டத்திலே உள்ள

[திரு. இராம. வீரப்பன்] [1981 மே 14

ஒரு குருக்கள், என்னை மாயவரம் ஜங்க்ஷனிலே வந்து பார்த்தார்கள். நான் ரெயிலுக்குப் போகும்போது பார்த்துச் சொன்னார்கள். அவர் கவனித்துக் கொண்டிருந்த கோயிலை அவரே மூடிவிட்டதாகச் சொன்னார்கள். காரணம் என்ன என்று கேட்டபோது, அவருக்கு ஒன்றரை வருடத்திற்குச் சம்பளம் கிடைக்கவில்லை? ஆகவே 3 மாத காலமாக மூடிவிட்டிருப்பதாகச் சொன்னார்கள். அந்தக் கோயிலுக்கு நிலங்கள் இருக்கின்றன. ஆனால் அந்த நிலங்களைக் குத்தகை எடுத்திருப்பவர்கள் அதற்கான குத்தகையைத் தருவதில்லை என்று சொன்னார்கள். அதற்கு வேறு வருமானமும் இல்லை. ஆகவே அந்த குருக்கள் அதற்கு வேண்டிய பூசை, நைவேத்தியங்களைச் செய்யமுடியாத நிலை ஏற்பட்டு விட்டது என்று சொன்னார்கள். அவர்கள் அந்தக் கோயிலுக்கு வருகின்ற குத்தகை வருமானத்திலிருந்து அந்தப் பூசைகளைச் செய்துவிட்டு அவருக்கும் அதிலேயிருந்து சம்பளத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். அரசியலிலே முழு நேர ஊழியர்கள் இருக்கிறோமே அது மாதிரி அவர்களுக்கும் கிடைக்க வேண்டும். அவருக்கு அந்தக் கோயிலிலே வருமானம் வராத காரணத்தினாலே, பட்டினி கிடக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டதாலே, அந்தக் கோயிலை மூடிவிட்டதாகச் சொன்னார்கள்.

இன்றைக்கு இந்திய துணைக் கண்டத்திலே மற்ற மாநிலங்களில் இருக்கின்ற கோயில்களின் எண்ணிக்கையைவிட அதிகமாகக் கோயில்கள் நம் தமிழ் நாட்டில்தான் இருக்கின்றன என்று கருதுகிறேன். காரணம் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். கோயில் இருப்பது நம் நாட்டிலே உள்ள சமுதாயத்தைக் கட்டுப்படுத்துவதற்கும், நெறிப் படுத்துவதற்கும், அவர்கள் ஒரு தூய்மையான வாழ்க்கையை காணுவதற்கும் என்று ஏற்படுத்தப்பட்ட முறையாகும். அதற்காக ஏற்படுத்தப் பட்டவைகள் தான் அந்த அறநிலையங்களும் ஆலயங்களும். அது எப்படி இடையிலே மாறிவிட்டது என்பதையும், அதிலே வந்த சிக்கல்களைப் பற்றியும் சொன்னார்கள். இன்றைக்கு வருமானம் வராத குருக்களுக்கு எந்த அளவுக்குக் கொடுக்க முடியுமோ அந்த அளவிற்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அதுபோலவே அறநிலையத் துறையில் பணியாற்றும் அலுவலர்களுக்கும் கொடுக்க வேண்டும். அந்த அளவில் அவர்களையும் முழு நேர ஊழியர்களாக ஆக்க வேண்டும் என்று நினைக்கிறோம். அங்கே குறைந்த பட்ச வருமானத்தில் இருப்பவர்களுக்கு எவ்வளவு அதிகமாகக் கொடுக்க முடியுமோ அந்த அளவிற்குக் கொடுப்பதற்கு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.



1981 மே 14] [திரு. இராம. வீரப்பன்]

இங்கே வருமானத்தை 'காமன் பூல்' என்று ஆக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதற்கு சட்டத்திலே திருத்தம் செய்யலாமா என்று கேட்கிறார்கள். அந்த ஆலயங்கள் எல்லாம் முழுமையாக தனித்தனி நிறுவனங்களாக இருக்கின்றன. அவைகள் இந்தச் சட்டத்தின் கீழ் இருக்கின்ற நிறுவனங்களாக இருக்கின்றனவே தவிர வேறல்ல. 20 ஆயிரம் அல்லது 30 ஆயிரம் கோயில்கள் இருக்கின்றன என்று சொன்னால், அவையெல்லாம் தனித்தனியான நிறுவனங்களாக இருக்கின்றன. அந்த ஆலயங்களுக்குத் தனித்தனியாக அறங்காவலர்கள் இருக்கின்றார்கள். ஆகவே அந்தக் கோயில்கள், அதன் சொத்துக்கள் எல்லாம் தனியார்கள் சொத்து போன்று உரிமைகள் பெற்றிருக்கின்றன. சட்டமன்றப் பேரவையிலே கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் இதே போன்ற கேள்வியைக் கேட்டார்கள். அதற்கு நான் பதில் அளித்தேன். காணிக்கை தருகின்ற பக்தர்கள்கூட இந்த இந்தக் கோயிலுக்கு என்றுதான் தருகிறார்கள். சென்னைக்குப் பக்கத்திலே இருக்கின்ற தேவி கருமாரி அம்மன் கோயிலுக்குத் தருபவர்கள், இங்கே சென்னையிலே இருக்கின்ற கபாலீஸ்வரர் கோயிலுக்குத் தருவதில்லை. கபாலீஸ்வரர் கோயிலுக்குத் தருபவர்கள், மாங்காட்டு அம்மன் கோயிலுக்குத் தருவதில்லை. மாங்காட்டு அம்மன் கோயிலுக்குத் தருபவர்கள் ஸ்ரீரங்கம் கோயிலுக்குத் தருவதில்லை. ஸ்ரீரங்கம் கோயிலுக்குத் தருபவர்கள் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்குத் தருவதில்லை. மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்குத் தருபவர்கள், திருப்பரங்குன்றம் கோயிலுக்குத் தருவதில்லை. ஆக பக்தர்கள், அவரவர்கள் வேண்டுதல் செய்துகொண்டிருக்கின்ற கோயில்களுக்குத்தான் தருகிறார்கள். அதனால்தான் அங்கேயெல்லாம் வருமானம் வருகின்றது. அங்கே வருமானம் அதிகமாகிறது. அங்கங்கே சென்று பக்தர்கள் காணிக்கைகளைச் செலுத்துகிறார்கள். வேண்டுதலுக்குரிய கோயில்களாக விளங்கிக் கொண்டிருக்கின்றவைகள் இருக்கின்றன. அங்கே வருமானம் இருக்கிறது. இன்றைக்கு சொத்துக்கள் இல்லாத ஆலயங்கள்தான் இந்த அறநிலையத் துறையைக் காப்பாற்றிக்கொண்டிருக்கின்றன. உண்டியல் மூலமாகவும், அபிஷேகம் மூலமாகவும், காணிக்கைகள் மூலமாகவும் அந்த வேண்டுதலுக்கு உரிய கோயில்களுக்கு வருமானம் வருகிறது. அவைகள்தான் தமிழ் நாட்டிலே வருமானம் பெற்றுக்கொண்டிருக்கின்றன. பல ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலம் வைத்துக்கொண்டிருக்கின்ற ஆலயங்கள், நம்முடைய மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னதுபோல வருமானம் இல்லாமல் இருக்கின்றன. அந்தச் சொத்துக்களின் வருமானம் எல்லாம் பலராலே சுரண்டப் பட்டு, கபளீகரம் செய்யப்பட்டு வருகின்றது. எந்தெந்த சொத்துக்கள்

எங்கெங்கே இருக்கின்றன என்றுகூட தெரியாமல் இருக்கின்றன. அப்படித் தெரிந்துவிட்ட சொத்துக்களுக்கு ஏக்கருக்கு ரூ. 1, 2, 3 என்ற அளவில்தான் குத்தகைகள் இருக்கின்றன. இப்படி சொத்துக்கள் இருக்கின்ற ஆலயங்கள் கூட பட்டினி கிடக்கின்ற நிலைமைகள் இருக்கின்றன. இங்கே அங்கத்தினர்கள் சொன்னார்கள். அந்த வார்த்தையைக்கூட நீக்க வேண்டுமென்று கேட்டார்கள். இன்றைக்கு நிலைமைகள் அப்படித்தான் இருக்கின்றன.

(முற்பகல் 11-20)

பல ஆலயங்களிலே, நாம் ஆண்டவனையே பட்டினி போடும் சூழ்நிலைக்கு ஆளாக்கியிருக்கிறோம். ஆகவேதான், ஒன்றாக ஆக்குவதென்று சட்டம் கொண்டு வந்தாலும், உடனடியாக நீதிமன்றம் செல்ல வாய்ப்பு இருக்கிறது. நாங்கள் இதற்குத்தான் கொடுத்திருக்கிறோம், அதை நீங்கள் இன்னொன்றுக்குச் செலவு செய்யக்கூடாதென்று நீதிமன்றம் செல்வார்கள். இன்றைக்கு எல்லாவற்றையும் மீறி நடைமுறையிலே நாம் அதை வைத்துக்கொண்டிருக்கிறோம். 'காமன் குட் பண்ட்' என்று ஒன்றை உருவாக்கியிருக்கிறோம். அறநிலையங்களிலே, அவர்களே தீர்மானம் போட்டு, பொது நல நிதிக்கு இவ்வளவு தருகிறோம் என்று தரலாம். அந்தந்த ஆலயங்களின் அறங்காவலர்களே முடிவெடுத்து, அவர்களின் விருப்பத்தின்மீது செய்யப்படுகிறது. அப்படித் தரும் நிதியை, பொது நிதியாக வைத்து, பல உதவிகளைச் செய்கிறோம். 'டைவர்ஷன்' என்றும் செய்கிறோம். ஒரு ஆலயத்தின் உபரி நிதியை வேறு ஆலயங்களுக்குத் தருகிறோம். ஆலய வளர்ச்சிக்காக, ஆலயப் பணிக்காகத்தான் நிதியை மாற்றலாமே தவிர, சம்பளம் தர வேண்டுமென்று மாற்ற முடியாது. இன்றைக்கு சிதம்பரம் கோவிலுக்கு 2½ இலட்சம் ரூபாயை பழனி தேவஸ்தானம் தந்திருக்கிறது. ஒரு கோவிலிலிருந்து, அதன் உபரி நிதியை, இன்னொரு கோவிலின் கோபுரத்தை எழுப்ப, மாற்ற முடியும். ஆனால், அங்கே சம்பளம் இல்லை என்று சொல்லி, உபரி தொகையை மாற்ற முடியாது. இந்தக் கஷ்டங்களையெல்லாம் தாண்டி, மனிதாபிமான உணர்வோடு, எப்படியும் அவற்றைப் பாதுகாக்க வேண்டுமென்ற அடிப்படையிலே நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறோமென்பதைப்பற்றி இங்கே உறுதி அளிக்கிறேன். எந்த அளவிற்கு முடியுமோ, அந்த அளவிற்கு ஈடுபட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி ஆண்டுக்காண்டு இதை நீட்டிக்கொண்டு போகிறீர்களென்று கேட்டார்கள். இதை அமைச்சரே விரும்ப மாட்டார் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொன்னார்கள். இந்த ஆண்டுகூட எக்ஸ்டென்ஷன்-க்கு வர வேண்டாமென்று முயற்சி செய்து பார்த்தேன். முடியவில்லை. காரணம், பட்டியலில் சேராத ஆலயங்கள் 10,663.



பட்டியலில் சேராத ஆலயங்கள் என்றால் 10,000 ரூபாய்க்குக் கீழே வருமானமுள்ள ஆலயங்களாகும். 10,000 ரூபாய்க்கு மேலே வருமானமுள்ள ஆலயங்கள், பழனி ஆலயம் உட்பட மொத்தம் 782. மொத்தம் 11,445 ஆலயங்கள். இதுவரை 6,881 ஆலயங்களுக்கு அறங்காவலர்களை நியமித்திருக்கிறோம். 4,564 ஆலயங்களுக்கு இன்னும் நியமிக்கவில்லை. இதிலே ஒரு கஷ்டம், 3,444 ஆலயங்களுக்கு விண்ணப்பங்களே வரவில்லை. அதிலேதான் மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் சொன்ன கருத்து வருகிறது. கிராமங்களிலுள்ள சிறிய கோவில்களுக்கு வருமானமே இராது. ஆனால் அங்கே பிரச்சினை பெரிதாகி, வெட்டு, குத்துவரை போகிறது. யாருமே அதில் அக்கறை காட்ட மறுக்கிறார்கள். யாரையாவது போட்டால், 'ஸ்டே' கேட்பார்கள். பிரச்சினைகள் வருகின்றன. அப்படி பிரச்சினைகளை சந்தித்துக் கொண்டிருக்கிறோம். இந்தச் சூழ்நிலையில் அரசாங்கம் ஒரு முடிவு எடுத்திருக்கிறது. விண்ணப்பம் வராத கோவில்களுக்கு யாரையாவது ஒருவரை, ஆலயத்திற்குத் தொடர்பான ஒருவரை, பக்தர் ஒருவரை, அறங்காவலராக்கி, 'பிட் பேர்சனை', நீக்கியாக வேண்டுமென்று இப்போது ஆணையிட்டிருக்கிறோம். மிக விரைவிலே எப்படியாவது இதை முடித்துவிட வேண்டுமென்பதுதான் எங்களுடைய நோக்கம். அறங்காவலர்கள்மீது ஏதாவது குற்றச்சாட்டு எழுமானால், அதிலிருந்து குற்றச்சாட்டு மறுக்கப்பட்டு, குற்றம் செய்யாதவர் என்று நிரூபிக்கப்படும்வரை, அவரைப் பதவியிலிருந்து நீக்கி வைக்க வேண்டுமென்ற கருத்தை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் தெரிவித்தார்கள். 'சோசியல் ஜஸ்டிஸ்' என்று இருக்கிறது. குற்றச்சாட்டுகள் என்று சொல்லும்போது, யார் மீது யாரும் குற்றம் சொல்லலாம் என்பது வழக்கத்தில் வந்துவிட்ட ஒன்று. இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, நாங்கள் நியமித்த அறங்காவலர்கள்மீது மிகக் கடுமையான, தெளிவான குற்றச்சாட்டுகள் வந்த நேரத்தில் அவைகளுக்குக் காரணகாரியங்களைக் கேட்டு, உங்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று கேட்டு நோட்டீஸ் அனுப்பியிருக்கிறோம். தஞ்சையில் உள்ள மிகப் பெரிய கோவிலிலே ஒருவரை நீக்கி வைத்திருக்கிறோம், இடைக்காலமாக. குற்றச்சாட்டுகள் தெளிவாக வரும்போது, அந்த நடவடிக்கைகள் எடுப்பதை இந்த அரசு நடைமுறையாகக் கொண்டிருக்கிறது. இதற்கு முன்னாலே அப்படி இருந்ததா இல்லையா என்பது தெரியாது. அதனால்தான் சொல்கிறேன். மூன்று பேரைக் கமிட்டி பேர்டுகிறது. இரண்டு பேர்களை அரசாங்கம் போட உரிமை வைத்திருப்பதற்குக் காரணம், நல்லவர்கள், கட்சி சார்பற்றவர்கள், அறநிலையத் துறையில் ஈடுபாடு உடையவர்கள் ஆகியவர்களைப் போட வேண்டுமென்பதுதான். அப்படிப் போட்டிருக்கிறோம். பல பேர்கள் அதில்

கவனம் செலுத்துவதில்லை, அக்கறை செலுத்துவதில்லை. அதனால் போட முடியாத சூழ்நிலை இருக்கிறது. அது குறித்து ஆணையிட்டிருக்கிறோம். 3 பேர்கள் இருந்தால், அவர்களை வைத்தே, அறங்காவலர் குழுத் தலைவரைத் தேர்ந்தெடுங்கள். மேலும் இருவரைப் போட வேண்டுமென்று காத்திருக்க வேண்டாமென்று சொல்லிவிட்டோம்.

இத்தனை ஆயிரம் கோவில்களுக்கு அறங்காவலர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு அறநிலையத் துறைக்கு இருக்கிறது. அதனால் இன்றைக்கு ஒரு தாலூக்காவிற்கு ஒரு இன்ஸ்பெக்டர் இருக்கிறார். முன்னாலே அவ்வளவு கூட இன்ஸ்பெக்டர்கள் இல்லை. இந்த இன்ஸ்பெக்டர்கள்தான் ஆயிரக்கணக்கானவர்களின் விண்ணப்பங்களைப் பரிசீலித்து, தந்த தகவல்கள் உண்மையா என்று பார்த்துச் சொல்லி, அவர்கள் நியமிக்கப்பட வேண்டும். இதிலே நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதால்தான் சங்கடங்கள் வந்திருக்கின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளாக மிகுந்த முயற்சி எடுத்து, இந்தப் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிதம்பரம் பற்றித் தெரிவித்தார்கள். கேள்வி நேரத்திலேயே விவரமாகச் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. நா லெட்சுமிகாந்தன் அவர்கள் சொன்ன பல உணர்வுகள் இன்றைக்குப் பொதுவாக இருக்கின்றன. நாற்பது ஏக்கர் நிலத்தில் இருக்கும் ஆலயம் அது. அதற்குள் நுழைந்து பார்த்தால்தான் தெரியும். ஒரு நிகழ்ச்சிக்காக நான் உள்ளே போனேன். அங்கே பல பகுதிகளிலே என்ன நடந்தாலும் வெளியே தெரியாத அளவிற்கு, யாரையாவது கொலை செய்துவிட்டால்கூட தெரியாத அளவிற்கு இருள் அடைந்திருக்கிறது. அதுதான் வருந்தத்தக்க நிலைமை. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். நான் சார்ந்துள்ள கட்சியின் கருத்தல்ல, என்னுடைய கருத்தாகச் சொல்கிறேன் என்று சொல்லி, அறநிலையங்கள் என்பது அற நெறி உணர்வுகளைத் தோற்றுவிக்க உருவாக்கப் பட்ட ஒன்று என்று தெரிவித்தார்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். நான் செல்லுகிற இடங்களிலும் அதை நான் சொல்லிக்கொண்டு வருகிறேன். என்னுடைய சொந்தக் கருத்து என்ன என்று கேட்டால், அதைச் சொல்லத் தேவையில்லை, அவசியமும் இல்லை. அந்தத் துறையின் பொறுப்பேற்றுள்ள நிலையில், அறநிலையங்கள் காப்பாற்றப்பட வேண்டும். அந்த உணர்வுகள் இளைஞர்களிடத்தில் உருவாக்கப்படாததால், இன்றைக்கு இளைஞர்



கட்டுப்படாமல் செல்லும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அது தெரிந்தோ, தெரியாமலோ ஒரு தவறைக் களைய முற்பட்டபோது, இன்னொரு தவறு நடந்துவிட்டது. அதுபோல இன்றைக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதற்கெல்லாம் ஒரு மார்க்கத்தைக் கொண்டுவர வேண்டுமென்பதுதான் என்னுடைய பேச்சு. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பத்திரிகையிலே வருகிற செய்தியைப் படித்துவிட்டு, எந்தச் சூழ்நிலையில் சொல்லப்பட்டது என்பதைத் தெரிந்துகொள்ளாமல், பேசுகிறார்கள். நான் பேசுகிற கூட்டங்கள் எல்லாம், சமயச் சார்புள்ள, சமயப் பெரியவர்கள் உள்ள கூட்டங்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** பத்திரிகையில் வருவதைத் தொடர்ந்து, விவாதங்கள் வருகின்றன. அதுபற்றிக் கருத்துக்கள் பல்வேறு இடங்களில், பலர் தெரிவிக்க வேண்டிய அவசியம் வருகிறது. பொதுப் பிரச்சினையாக அது மாறி, பலரும் விவாதிக்கும் நிலை ஏற்படுகிறதென்பதுதான் என்னுடைய கருத்து.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** இதிலே சிறு திருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பிரச்சினைகள் இன்றைக்கு மக்கள் மன்றத்தின் முன்னால் வைக்கப்பட்டாக வேண்டும். காரணம், எந்த இந்து சமயத்தை நாமெல்லாம் காப்பாற்ற வேண்டுமென்று கருதுகிறோமோ, அது காப்பாற்றப்பட வேண்டுமென்றால், இதிலே மிகப் பெரிய சீர்திருத்தங்களை உருவாக்க வேண்டும், குறைகளைப் போக்க வேண்டும். இந்த மன்றத்திலே நான் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். திருநெல்வேலி மாவட்டத்தில் சுமார் 3,000 அரிசனங்கள் இஸ்லாமிய மதத்தைத் தழுவியிருக்கிறார்கள் என்ற செய்தி; இந்து சமயத்தை வளர்க்க வேண்டுமென்று விரும்புகிற கோடான கோடி இந்து சமயத்தைச் சேர்ந்தவர்கள் இதை ஏற்றுக்கொள்கிறார்களா என்பதைக் கேட்க விரும்புகிறேன். மதத்திலிருந்து மதம் மாறுவது அவர்களுடைய உரிமை. அதைக் குறை சொல்லவில்லை. ஆனால் அவர்கள் மதம் மாறுவதற்குச் சொன்ன காரணம், "எங்களுக்கு இந்து சமயத்தில் பாதுகாப்பு இல்லை" என்று சொல்லியிருக்கிறார்கள். "எங்களுக்கு உரிமையில்லை" என்று சொல்லியிருக்கிறார்கள். இந்து சமய அறநிலையத் துறையின் பாதுகாப்பு . . .

**திரு. க. இராமமூர்த்தி:** இதில் இருக்கிற பிரச்சினை, The institution is permanent. ஆலயங்கள், மடங்கள் இவைகளெல்லாம் நிரந்தரமானவை. இடையிலே வருகிறவர்கள் தவறு செய்யலாம், தவறு செய்யாமல் இருக்கலாம்.

அதுவே தூற்றுவதற்கான காரணமாக அமைந்துவிட்டால், என்னவாகும்? நாடு எங்கே போய்க்கொண்டிருக்கிறதென்பதைப் பார்க்க வேண்டும். போப் ஆண்டவரைச் சுட்டிருக்கிறார்கள். பல மதங்களிலும் இந்தக் குறைகள், இதே நிலைமைகள் இருக்கின்றன. ஆனால் இந்து மதத்தைப் பற்றித்தான் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களும் விவாதிக்கும் அளவிற்கு பிரச்சினைகள் வெளியே சென்றுவிடுகின்றன. ஆகவே அதைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்து, எவ்வளவு வேண்டுமானாலும் நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் இந்த விவாதத்தை வெளி விவாதமாகக் கொண்டுவந்துவிட வேண்டாம் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

(முற்பகல் 11-30)

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற உணர்வை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் ஆப்பரேஷன் செய்ய வேண்டிய கேசை ஆப்பரேஷன் செய்தால்தான் நோய் தீரும் என்கின்றபோது, ஆப்பரேஷன் செய்துதானே ஆக வேண்டும். எப்படி அறுப்பது, எப்படி அறுப்பது என்றால், கேன்சர் நோய் பரவிப் போய் காப்பாற்ற முடியாத சூழ்நிலைக்குப் போய்விடும் என்பதுதான் எனக்குள்ள கவலை எல்லாம். என்னைப் பொறுத்தவரையில், எப்படி வேண்டுமானாலும் போகட்டும் என்று கருதுபவன் அல்ல நான். நான் சார்ந்திருக்கிற இயக்கமோ, நான் ஏற்றிருக்கிற கொள்கையோ வேறாக இருக்கலாம். ஆனால் இன்றைக்கு ஒரு சரியான வழியை இந்த நாட்டு மக்களுக்காக நாம் காட்டியாக வேண்டும். இந்த நாடு இந்து மதத்தவர்கள் நிறைய இருக்கிற நாடு. மதச் சார்பற்ற ஆட்சி உள்ள நாடு என்று சொன்னாலும் கூட, இந்து மதத்தவர்கள் நிறைய இருக்கிற நாடு. நானே பல நேரங்களிலே விமர்சிக்கப்பட்டிருக்கிறேன்; அதோடு மட்டுமல்ல, குறை கூட சொல்லப்பட்டிருக்கிறேன். சமீபத்திலே பன்றிமலை சாமியாருடைய பிறந்தநாள் அன்று நடத்தப்பட்ட விழாவுக்குப் போயிருந்தேன். அதற்காகவும் நான் கண்டிக்கப்பட்டேன். ஆனால் நான் சொன்ன கருத்தைச் சொல்ல வேண்டிய இடத்தில்தான் சொல்லியிருக்கிறேன் என்பதை, பிறகு கண்டித்தவர்களே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அங்கே போய் நான் ஒன்றைக் கேட்டுக்கொண்டேன். "நீங்கள் இந்த நாட்டு மக்களுக்கு ஒரு வழியைக் காட்டுங்கள். ஒரு நெறியைக் காட்டுங்கள். ஒரு வழியிலே நாட்டு மக்களை நடத்திச் செல்லுங்கள். இதற்கு பெரியவர்கள் அனைவரும் முன் வர வேண்டும்". இதைத்தான் நான் கேட்டேன். அதைப் போல் "தம்முடைய ஆதீனத் தலைவர்கள் எல்லாம் பக்தர்களிடத்திலே வாருங்கள். நீங்கள் இருக்கிற இடத்துக்கு மக்களை அழைக்காதீர்கள்.



இன்றைக்கு அப்படி அல்ல சூழ்நிலை. ஆகவே நீங்கள் இந்த நாட்டிலே சமயத்தை வளர்ப்பதற்கும், தமிழை வளர்ப்பதற்கும் மக்கள் மன்றத்திற்கு வாருங்கள்" என்று வேண்டுகோள் விடுத்தேன். ஆகவே நான் அறநிலையத் துறை சார்பில் முந்தாநாள், அதாவது 11 ஆம் தேதி திருச்சிக்குப் போயிருந்தேன். நான் இதுவரை கதா காலட்சேபங்களுக்குப் போனது கிடையாது. கிருபானந்த வாரியாருடைய கதா காலட்சேபங்களைக் கேட்டிருக்கிறேன். வாரியாருடைய தமிழ் உணர்வுக்காக, அன்றைக்கு ஒரு அம்மையார் திருமதி சிவானந்தா விஜயலட்சுமி அவர்கள் அங்கே ஒரு திருப்பணி நிகழ்ச்சிக்காக அங்கேயிருக்கிற திருப்பணிக் குழுத் தலைவர் திரு. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில் ஏற்பாடு செய்து என்னை வரவேண்டுமென்று கேட்டார்கள். எனக்கு ரெயிலுக்குப் போக சிறிது ஓய்வு இருந்த காரணத்தால் அன்றைக்கு நடைபெற்ற கதா காலட்சேபத்திற்கு, கண்ணப்ப நாயனார் பற்றிய கதா காலட்சேபத்திற்குப் போயிருந்தேன். 1½ மணி நேரம் உட்கார்ந்து முழுவதையும் கேட்டுவிட்டு கடைசியில் என்னுடைய கருத்தைக் கூறிவிட்டு வந்தேன். அன்றைக்கு அங்கே பார்த்தால், 5 ஆயிரம் பேர் கூடியிருந்தார்கள். அதிலே 3 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் பெண்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இப்போதெல்லாம் அமைச்சர் அவர்கள் ரொம்ப சிவ பக்தராக மாறி வருவதாகப் பேசிக்கொள்கிறார்கள். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** அதற்குத்தான் காரணத்தையும் நான் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி கொஞ்சம் சந்தேகப்படுகிறார். அந்த சந்தேகம் அவருக்கு வேண்டாம் என்பதற்காகத்தான் காரணத்தையும் சொல்கிறேன். அங்கே 1½ மணி நேரம் அந்த அம்மையார் அவர்கள் அற்புதமாக இசையோடு நிகழ்ச்சியை நடத்தினார்கள். அன்றைக்கு நடைபெற்றது கண்ணப்ப நாயனார் சரித்திரக் கதை, முதல் நாள் நடைபெற்றது நந்தனார் சரித்திரக் கதை நிகழ்ச்சி. ஆகவே நான் நிகழ்ச்சியின் இறுதியிலே பேசுகிறபோது இந்தத் தத்துவங்கள் எல்லாம் எந்த நோக்கத்திலே இயற்றப்பட்டிருந்தாலும், கண்ணப்ப நாயனார் தன்னுடைய கண்ணைக் கொடுத்தார் என்பது ஒரு நாட்டிலே மனிதன் பெற வேண்டிய தியாக உணர்வுக்கு அடையாளமாக, சின்னமாக இருக்கிற கதை என்று குறிப்பிட்டேன். இது அன்றைக்குத்தான் நடந்தது என்று எண்ணாதீர்கள். இன்றைக்கும் ஒரு மாதத்திற்கு முன்னாலே ஒருவன் 'கிட்னி' இல்லாமல் இறந்து போகிற நிலையில் இருந்தபோது, ஒரு சகோதரன் தன்னுடைய கிட்னியைத் தர முன் வந்தான்

என்பதைப் பார்க்கும்போது, அது கண்ணப்ப நாயனார் கதை, வரலாறு இந்த நாட்டிலே ஏற்படுத்தியிருக்கிற ஒரு நல்ல உணர்வு என்று கூட எடுத்துக் கொள்ளலாம். இன்றைக்கும் 'ஐ பேங்க்' (கண் வங்கி) நாட்டிலே இருக்கின்றது. கண் தானம் செய்ய வேண்டுமென்று பிரச்சாரம் செய்கிறோம். அத்தோடு செத்தவர்களுடைய கண்களை நாம் கேட்டுப் பெறுகிறோம். ஆகவே ஒரு தியாக உணர்வை இந்தக் கதைகள், வரலாறுகள் உருவாக்குகின்றன என்பதையும் நாம் பார்க்கிறோம். நாம் ஆயிரம் அரசியல் கூட்டங்கள் போட்டாலும்கூட, 3 ஆயிரம் பெண்கள் வர மாட்டார்கள். ஆனால் அந்த அம்மையாருடைய நிகழ்ச்சிக்கு 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட பெண்கள் வந்திருந்தார்கள். அப்படிப்பட்ட அந்தக் கூட்டத்திலே அந்த அம்மையார் அவர்கள் கதா காலட்சேபத்தை முடித்த உடனே, நான் அரை மணி நேரம் வெயிலுக்கு, தாமதமானால்கூட பரவாயில்லை என்று என்னுடைய கருத்துக்களைச் சொல்லிவிட்டு வந்தேன். ஆகவே நான் சொன்ன கருத்துக்கள் அறநிலையத் துறையிலே அல்லது ஆன்மீகத் துறையிலே ஈடுபட்டிருக்கிற லட்சக்கணக்கான மக்களுடைய உணர்வுகளை ஒருமைப்படுத்த, ஒழுங்குபடுத்த இன்றைக்கு ஏற்றுக்கொண்டிருக்கிற பொறுப்புக்குச் செய்ய வேண்டிய கடமை என்று கருதுகிறேன். ஒன்றை நான் சொல்கிறேன். நான் ஏற்றுக் கொண்டிருக்கிற கொள்கைக்கு மாறாகக் கூட அது இருக்கலாம். இத்தனை ஆண்டு காலமாக வேலூர் ஜலகண்டேஸ்வரர் ஆலயம், சிலை அகற்றப்பட்ட, சிலை இல்லாத, வெறும் கோயிலாக இருந்தது. இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு இன்றைக்கு அங்கே சிலையைக் கொண்டு போய் வைக்கிற உணர்வினை மக்கள் பெற்றிருக்கிறார்கள். அப்படியானால் இந்து சமயத்தை வளர்த்திருக்கிற துறையா அல்லது அழித்துக்கொண்டிருக்கிற துறையா என்பதை மாத்திரம் உறுப்பினர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இன்றைக்கு சிதம்பரத்திலே 40 ஏக்கர் நிலத்திலே கோயில் இருக்கிறது. ஒரு சமயத்திலே அது கோட்டையாக, போராட்டத்திற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அங்கே இருக்கின்ற உணர்வைப் புரிந்துகொள்ள வேண்டும். திருவாசகத்தை மாணிக்கவாசகர் அரங்கேற்றிய இடம் அது. ஆனால் அந்தத் திருவாசகத்தை அங்கே படிக்கக்கூடாது. அதையெல்லாம் கூட இன்றைக்கு நாங்கள் பொறுத்துக் கொண்டுதான் இருக்கிறோம். இதையெல்லாம் சொல்லவில்லையானால், அறுக்க வேண்டிய கேசை நாம் அறுத்துத்தான் ஆக வேண்டும். காரணம் சீர்திருத்துவதற்கு, காப்பாற்றுவதற்கு, வளர்ப்பதற்குத்தான். தனிப்பட்டவர்கள் யாரையும் குறை சொல்கிறோம் என்று எடுத்துக்கொள்ள வேண்டாம்.



இன்றைக்கு குன்றக்குடி அடிகளார் அவர்கள் சமய உணர்வோடு, தமிழ் உணர்வோடு மக்கள் மன்றத்திற்குத் தொண்டாற்ற முன்வருகிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். அதைப்போல எல்லா சமயத் தலைவர்களும் முன்வர வேண்டும். இங்கே நீங்கள் மற்ற மதத்தை சொல்லுகிறீர்கள். நான் அதிலே கவலைப்படுவதில்லை. இன்றைக்கு வக்ஃப் போர்டு பற்றி வழக்குமன்றத்திலே கேஸ் வந்திருக்கிறது. ஆகவே அதற்குள்ளே எல்லாம் நாம் இன்னும் அதிகமாக நுழையாத காரணத்தால், நமக்கு அவற்றைப் பற்றித் தெரிவதற்கான வாய்ப்பு இல்லை, நம்முடைய சமயத்தைப்பற்றித்தான் இப்போது நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். நம்மைப்பற்றிப் பேச வேறு யாரும் முன்வர மாட்டார்கள். நம்முடைய சமயத்தைப்பற்றி நாம்தான் பேச வேண்டும். நம்முடைய குடும்பத்தைத் திருத்த வேண்டுமானால், நாம்தான் கவலைப்பட வேண்டும். நம்முடைய பிள்ளைகள் நன்றாக வளர வேண்டுமானால், நாம்தான் கவலைப்பட வேண்டும். அந்த உணர்வாலேதான் இந்த விஷயத்தை எடுத்துக்கொண்டிருக்கிறோம். பொதுவாகவே சிதம்பரத்தைப் பற்றி நான் விரிவாகவே சொல்லிவிட்டேன். அது மிகப் பெரிய பிரச்சினையாக உருவாகிக்கொண்டிருக்கிறது. நான் இந்த மன்றத்தின் மூலம் நாட்டு மக்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் ஒன்றுதான். சிதம்பரம் என்பது மிகப் பெரிய தொன்மை வாய்ந்த ஆலயம். அது பஞ்ச பூத ஸ்தலங்களில் ஒன்றாகக் கருதப்படுகிற ஆலயம். அந்தக் கருத்தைக் கூட அரசாங்கம் பார்க்கவில்லை. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக தொன்மை வாய்ந்த, சிறப்பு வாய்ந்த, சிற்பக் கலையில் சிறப்பு மிக்க அந்த ஆலயம் பாதுகாக்கப்பட்டாக வேண்டும். வெளி நாட்டவர்களை அழைத்துக்கொண்டு போய் காட்டுவது அங்கே அவர்கள் வணங்குவதற்காக அல்ல. எங்களுடைய திறமையைப் பாருங்கள். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக இருக்கின்ற எங்கள் முன்னோர்களின் சிற்பக்கலையைப் பாருங்கள் என்பதற்காகத்தான் அனுப்புகிறோம். அதுவும் சுற்றுலாத் துறைக்கும் நான் பொறுப்பாக இருக்கிற காரணத்தினால், அப்படிச் செய்கிறேன். அதற்காகவாவது நாங்கள் எத்தனை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பெருமையாக இருந்திருக்கிறோம், தெரியுமா என்று அவர்களுக்குச் சொல்லுவதற்காகவாவது அது காப்பாற்றப்பட்டாக வேண்டும். இன்றைக்கும் லட்சக்கணக்கான மக்கள் அங்கே கூடுகிறார்கள். எத்தனை லட்சம் வருகிறது என்ற கணக்கே தெரியவில்லையென்றால், ஒரு ஜனநாயகத்தில் சட்டமன்றமும் நாடாளுமன்றமும்தான் தலைசிறந்த உரிமை பெற்ற நிர்வாகங்கள் என்று சொல்கிறபோது, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுதான் ஒரு மாநிலத்தினுடைய, ஒரு நாட்டினுடைய தலைசிறந்த நிர்வாகப் பொறுப்பிலே இருக்கிற அமைப்பு என்று சொல்கிறபோது, இந்த நிர்வாகம்

[திரு. இராம. வீரப்பன்] [1981 மே 14

நம்முடைய அமைப்புக்கு உள்ளே, நம்முடைய துறைக்கு உள்ளே வரக் கூடாது என்று சொல்கிற உணர்வு இந்த நாட்டிலே இன்னும் வர வேண்டுமா? அதற்குள்ளே தலையிட வேண்டுமா, தலையிடாமல் இருக்க வேண்டுமா என்பதையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி போன்றவர்கள்தான் சொல்ல வேண்டும். இங்கே அறங்காவலர்களை எப்படிப் போடுகிறோம் என்பதற்கு ஒன்றைச் சொல்கிறேன். சிதம்பரத்திற்கு ஆளுநர் ஆட்சியில் போட்டோம். அதிலே இருந்த ஜோதிடரைப்போடு அங்கே திருப்பணியிலே ஈடுபாடு தன்னை ஒப்படைத்துக் கொண்டிருக்கிற திரு. வாகீசம் பிள்ளை அவர்களையே கேட்டேன். அவர்கள் என்ன காரணத்தினாலோ, தயவு தாட்சண்யங்கள் இருக்கும் என்று எண்ணினாரோ என்னவோ வேண்டாம் என்றார்கள். இன்றைக்கு அந்த ஜூரர் யார் என்று சொல்கிறேன். ஐந்துபேர் சபையில், பொள்ளாச்சி திரு. என். மகாலிங்கம், இருபது செல்வந்தர் கைலாசம், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. இளையபெருமாள், நம்முடைய சிதம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. வி. வி. சாமிநாதன். இவர்கள் ஐந்து பேரும் சிதம்பரம் அற நிலையத்திலே போய், அந்தக் கோயிலைப் பார்த்து, நிர்வாகத்தைப் பார்த்துத் தெரிந்துகொள்கிற தகுதி உள்ளவர்களா இல்லையா என்பதை மாண்புமிகு திரு. சங்கரலிங்கம் அவர்களே சொல்லட்டும். ஐந்துபேர் சபையைப் போடுவதற்கு முன்னாலே டாக்டர் சுந்தரவேல் சுப்பிரமணியத்தைத்தான் கேட்டேன். காரணம் அவர்கள் இன்றைக்கு சிதம்பரத்தில் ஒரு மிகப் பெரிய கோபுரத் திருப்பணி செய்துகொண்டிருக்கிறார்கள். அவ்வளவு மிகப் பெரிய பக்தர். அவரைத்தான் முதலில் கேட்டேன். அவர்கள் அந்தப் பணியில் ஈடுபட்டிருக்கிற காரணத்தால், என்னவோ வேண்டாமென்று சொல்லிவிட்டார்கள். ஆகவே ஐந்துபேர் சபையில் அவர்களை அதிலே சட்டப்பிரச்சினைகள் வருகிற காரணத்தால், ஒரு நீதிபதி இருக்க வேண்டுமென்பதற்காக, விரும்பிக் கேட்டு, இசைவிக்கப்பட்ட ஆணைகளையெல்லாம் அனுப்பி அவர்களை ஏற்றுக்கொள்ளச் செய்தோம். அவர்களைத்தான் அங்கே வரக் கூடாது என்று தடை செய்கிறார்கள். இதுதான் இன்றைய சூழ்நிலை.

அடுத்து, சொத்துக்களை எல்லாம் கண்டுபிடிக்க முயற்சி எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்து பரிசீலனையில் இருக்கிறது. ஓய்வுபெற்ற நீதிபதிகள் போன்ற சட்ட நுணுக்கம் தெரிந்தவர்களைக் கொண்டு, ஒவ்வொரு பகுதியாக ஆலயங்களைத் தொகுத்து, அந்தச் சொத்துக்கள் எங்கே இருக்கின்றன. யார் யார் வைத்திருக்கிறார்கள், அதனுடைய பாரம்பரியம் என்ன போன்றவைகளைக் கண்டுபிடிக்க வேண்டிய முயற்சியிலே ஈடுபட வேண்டும், ஈடுபட்டாக வேண்டும். அந்த உணர்வை அரசாங்கம்



1981 மே 14] [திரு. இராம. வீரப்பன்]

பெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். இதுபற்றி ஆட்சிக்கு எந்தவிதமான வேறுபாடும் இல்லை. இதிலே நம்மாலே முடியாத காரணத்தால்தான், கொஞ்சம் நல்லவர்களாகப் பார்த்துப் போட வேண்டும். ஆனால் அப்படி நல்லவர்களாகப் போடப்படுகிற நேரத்தில் தடையும் வந்து விடுகிறது. தடையை வாங்கி விடுகிறார்கள். இப்படி இந்தப் பிரச்சினை நீண்டுகொண்டே போகிற காரணத்தால்தான், எப்படியாவது இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்ற நோக்கத்துடன் இன்றைக்கு ஒருவரைக் கூட நீங்களே போடுங்கள் என்றெல்லாம் உத்தரவு பிறப்பித்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொன்ன கருத்தைப் பொறுத்தவரையில், கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இப்பொழுது கொஞ்சம் வருவாய் அதிகமாக இருக்கிறது. ஆகவே அந்தக் கல்லூரி, உயர்நிலைப் பள்ளிகளை எல்லாம் கட்டுவதற்குக்கூட ஏற்கெனவே அனுமதி தரப்பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். அதேபோல பாத்திர மன்னாயன், மதுரைப் பல்கலைக் கழகத்தோடு தொடர்பு கொண்டு அங்கே புதிய வகுப்புகள் நடத்த அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஆகவே தேவஸ்வம் போர்டு நடத்துகிற அந்தக் கல்வி நிலையங்களுக்கு, இன்றைக்கு தமிழ் நாடு முழுவதும் அப்படிப்பட்ட பொதுவான கல்வி சம்பந்தமான சமுதாயப் பணிகளுக்கு நிதியை ஒதுக்கிடு செய்வதற்கான முயற்சிகளைச் செய்துகொண்டிருக்கிறோம். அந்தக் கல்லூரிக்கு புதிய கட்டடங்கள் கட்ட சுமார் ரூபாய் 2.65 லட்சத்திற்கு நேர் மதிப்பீடு செய்யப்பட்டு, கேள்வுகள் செய்யப்பட்டு அங்கே முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு விட்டன.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 11-10)

ஆகவே, இந்த உணர்வுகளையெல்லாம் நான் ஏற்றுக்கொண்டதைப்போலவே, மாண்புமிகு உறுப்பினர்களும் எங்களுடைய உண்மையான முயற்சியை, தூய்மையான பணிகளை ஏற்றுக்கொள்ள வேண்டும், ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையோடு இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை,—

“சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த-சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.”

[1981 மே 14

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த-சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1981) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை,—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த-சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1981) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

### (2) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வன (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1981.)

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, வன (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, வன (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

@ 316 ஆம் பக்கத்தில் இணைப்பு 8 ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1981 மே 14]

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு வன (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1981) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை,—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, வன (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1981) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

### 4. அரசின் தீர்மானம்—தொடர்ச்சி.

அலுவல் வரிசையில் மாற்றம் குறித்து.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு தலைவர் அவர்களே,

"அடுத்த சட்ட முன்வடிவை எடுப்பதற்கு முன்பாக மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் அவர்கள் பேரவையிலே ஒரு முக்கியமான பணியில் இருப்பதால் அதற்கு அடுத்து இருக்கும் சட்ட முன்வடிவான, சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு மின்சார வரி (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1981) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளலாம்"

என்று முன்மொழிகிறேன்.

D II C 32 9

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"அடுத்த சட்ட முன்வடிவை எடுப்பதற்கு முன்பாக மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் அவர்கள் பேரவையிலே ஒரு முக்கியமான பணியில் இருப்பதால் அதற்கு அடுத்து இருக்கும் சட்ட முன்வடிவான, சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு மின்சார வாரியம் (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1981) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளலாம்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## 5. அரசின் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(3) தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு, மின்சார வாரியம் (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1981.)

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு, மின்சார வாரியம் (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, மின்சார வாரியம் (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தம் கொள்கை அடிப்படையிலே மிகவும் தேவை. ஆனால் திருத்தம் கொண்டு வந்திருக்கிற வாசகத்தின் அடிப்படையிலே இது தேவையில்லாத சில நடவடிக்கைகளை எடுப்பதற்கு அதிகாரத்தை உள்ளடக்கிய சட்ட முன்வடிவாக

@317 ஆம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.



இருக்கிறது. மின்சாரத் துறையைப் பொறுத்தவரையில், நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன், இந்த மாமன்றத்திலும் சரி அல்லது இந்த மன்றத்திற்கு வெளியிலேயும் சரி, அரசியல் கட்சிகள் இன்று வரையிலும் இந்த மின்சார நிலுவையைக் கொடுக்கக்கூடாது என்று எந்த அதிகார பூர்வமான முடிவையும் எடுக்கவில்லை. அது மட்டுமல்ல, இந்த மாமன்றத்திலேயும், அதுபோன்று ஒரு நிலை ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக, அவ்வப்போது அரசினுடைய கவனத்தை ஈர்த்து வந்திருக்கிறோம் என்பதையும் மன்றைப் பொறுத்தவரையில் ஆனாலும் சரி, வெளியிலே கட்சியைப் பொறுத்த வரையிலும் சரி சொல்ல முடியும். இந்த நிலுவை அதிகரித்துக்கொண்டிருக்கிறது. இதை உடனடியாக வசூல் செய்ய வேண்டும் என்ற உண்மையைச் சொல்லியிருக்கிறோம். ஆனால், இப்போது நாம் விரும்பியோ விரும்பாமலோ நாம் எதிர்பார்த்தோ எதிர்பார்க்காமலோ, ஒரு பெரிய தொகை நிலுவையாக இருக்கிறது. அந்த நிலுவையைத் திரும்ப வசூலித்தேயாக வேண்டும். இதிலே 'ரைட்-ஆஃப்' (write off) பிரச்சினையே கிடையாது. வசூலிப்பதற்கு பல வழிகள் சொல்லப்பட்டன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவர்களுக்கே உரிய முறையிலே, இந்தக் கருத்துக்களின் அடிப்படையிலே சிலவற்றை ஏற்றுக்கொண்டு, சிலவற்றை ஏற்க முடியாத அளவிலே, இந்த அடிப்படையிலே வசூலிக்க வேண்டும், பழைய பாக்கி இப்படி வரவேண்டும், புதிய நிலுவையை கட்டாயம் இப்படி வசூலிக்க வேண்டும் என்று சில முறைகளின் அடிப்படையிலே ஒரு தீர்வுதான் (solution) கொடுத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே இப்போது வசூலாகிக்கொண்டிருக்கிறது. இதற்கிடையில் நிலுவை வசூலிக்கப்படவில்லையென்றால், அதற்குரிய அதிகார பூர்வமான நடவடிக்கை களை எடுக்க வேண்டும். அப்படி அதிகாரபூர்வமான நடவடிக்கை எடுப்பதிலே யாரும் குறுக்கே நிற்கவில்லை. இந்தத் திருத்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில், அந்த நடவடிக்கைகளை எடுப்பதோடு மட்டுமல்ல, யார் யார் நிலுவை பாக்கியாக வைத்துக்கொண்டிருக்கிறார்களோ அவர்களுடைய பெயர் பட்டியலை விளம்பரப்படுத்துவது, அதிகாரபூர்வமான பட்டியல் போட்டு இன்னின்னார் தான் பாக்கிதாரர்கள் என்று வெளியிடுவது என்ற அதிகாரத்தைக் கொடுக்கிறது. அதோடு மட்டுமல்ல, இந்தத் திருத்தத்தின் வழியாக அப்படிப்பட்ட பட்டியலை அப்படிப்பட்ட வகையிலே விளம்பரம் வெளியிடுவது அதிலும் குறிப்பாக யார் யாரைப்பற்றி வெளியிடுவது. எதைப் பற்றியும் வெளியிடுவது என்பதையெல்லாம் 'டிஸ்கிரஷனரி பவர்ஸ்' (discretionary powers) என்ற வகையிலே இந்தத் திருத்தத்தின் மூலமாக அரசாங்கம் பெற்றுவிடுகிறது. பொதுவாக எல்லோருக்கும் ஒரே முறைதான் என்று சொன்னால், அதற்கான விவாதங்கள் வேறாக இருக்கும். மாண்புமிகு

[திரு. க. இராமமூர்த்தி] [1981 மே 14

அமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில், அவர்மீது எனக்குப் பரிபூரண நம்பிக்கை உண்டு. தவறாக இந்த அதிகாரத்தைப் பயன்படுத்த விடமாட்டார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆனால் நிரந்தரமாக சட்டமாக்கப் படும்போது, எப்போது வேண்டுமானாலும், இதைப் பயன்படுத்துபவர்கள் தவறாகப் பயன்படுத்தி விடுவார்களோ என்று நினைக்கும்போதுதான் பிரச்சினையே உருவாகிறது. தவறாகப் பயன்படுத்த வேண்டுமென்று நினைத்தாலும், அதற்குரிய வகையில் இந்தச் சட்ட முன்வடிவு இடமளிக்கிறது. இன்னொன்று இந்த நிலுவைத் தொகை பாக்கியாக நின்றுவிடும்போது, அவர்களுடைய பொருட்களை எடுப்பது, அவர்களை அவமானப்படுத்துவது என்பதும், மிகவும் கொடுமையாக இருக்கிறது. சில நடவடிக்கைகளை எடுக்கின்ற விதம் இருக்கிறதே, அது மிகவும் வருத்தத் தக்கதாக இருக்கிறது. நோக்கம் சரியாக இருக்கலாம், ஆனால் அந்த 'விதம்' பல புதிய சிக்கல்களை உருவாக்கி விடுகிறது. இப்போது இருக்கும் நிலைமையில் நகரங்கள், கிராமங்கள் என்று பிரிக்க முடியாத வகையில் அவைகள் ஒருவிதமாக இணைந்திருக்கின்றன. இந்த விளம்பரங்களைப் போட்டு, ஆடு, ஓநாய் போன்ற படங்களைப்போட்டு, ஆடு நனைகிறது, ஓநாய் அழுகிறது என்றெல்லாம் விளம்பரம் போடுவது என்பதெல்லாம் விளம்பரத்திற்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடியதாக இருக்கலாம். ஆனால் அந்த மகிழ்ச்சியையும் தாண்டி இவை புதிய சமுதாயச் சிக்கல்களை உருவாக்கிவிடும் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். ஆக அதிகாரபூர்வமாக இந்த விளம்பர முறையை எல்லோருக்கும் பயன்படுத்தும் என்றால், அதைப் பாராட்டமுடியும். இப்போது அரசுக்குத் தரவேண்டிய பாக்கியை லட்சக்கணக்கிலே வைத்துக் கொண்டிருக்கும் தொழிலதிபர்களை என்ன செய்வது? மேட்டூர் அலுமினியம் தொழிற்சாலையை எடுத்துக்கொண்டால், அவர்கள் பல கோடி ரூபாய் அரசுக்குக் கொடுக்க வேண்டியதிருந்தும், ஏன் அவர்கள் படம் போடவில்லை? பல பெரிய பணக்காரர்கள் அரசாங்கத்திற்கு எட்டு லட்சம் ஒன்பது லட்சம் என்று எவ்வளவோ பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. அவர்களை ஏன் படம் போட்டுக் காட்டவில்லை? ஓநாய்கள் போட்டு பலரை அடையாளம் காட்டும்போது, ஊரிலே பல புதிய பிரச்சினைகள் வருகின்றன. அந்தப் பிரச்சினைகள் பல ரூபங்களிலே பரவும். நம்முடைய அமைப்பு முறையிலே, சில ஊர்களிலே சில ஜாதிகள், சில பிரிவுகள் எல்லாம் இருக்கின்றன. அந்தக் குறிப்பிட்ட ஊர்களிலே, இன்னின்னார்தான் பாக்கி தரவேண்டும், இந்த செட்டியார், அந்த முதலியார், இந்த கவுண்டர் என்று சொல்லும்போது, இந்த விளம்பரத்தின் அடிப்படையிலே, இந்த விளம்பரத்தை வைத்துக்கொண்டு, வெளியிலே அவர்கள் கேலிக்கு ஆளாவார்கள்.



1981 மே 14] [திரு. க. இராமமூர்த்தி]

(முற்பகல் 11-50)

அப்படி கேலி பேசுவதன் காரணமாக பல கிராமங்களில் பல்வேறு பிரிவினர் களுக்கிடையே வன்முறைச் சம்பவங்கள் நடைபெறுவதற்கு இடமளித்துவிடக் கூடாது. பணம் செலுத்தாதவர் தம்பதியாக வீட்டிலே இருப்பார். ஆனால் அவர் சார்பாகச் சண்டையை உருவாக்குகிறவர்கள் மிகச் சாதாரண மனிதர் களாக இருப்பார்கள். இந்த வகையில் தமிழ் நாட்டிலுள்ள கிராமங்களில் வன் முறைச் சம்பவங்கள் நிரந்தரமாக நடப்பதற்கு நாம் வழி செய்துவிடக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னைப் பொறுத்தவரை, மின் கட்டண பாக்கியைச் செலுத்தாதவர்கள் மீது கண்டிப்பான நடவடிக்கை எடுத்து அதை வசூல் செய்ய வேண்டும் என்று ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அதற்காக அவர்களைப்பற்றி விளம்பரம் செய்துதான் ஆக வேண்டும், அது அவசியமானது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருதுவார்களேயானால், அதை எப்படிச் செய்வது என்பதைப்பற்றியும் சட்டபூர்வமாகவே தீர்மானித்துவிட வேண்டும். எத்தனை நாளைக்குப் பிறகு விளம்பரப்படுத்த வேண்டும், எவ்வளவு தொகைக்குமேல் கட்டாதவர்களை விளம்பரப்படுத்த வேண்டும் என்பதையெல்லாம் சட்டபூர்வமாக்க வேண்டும். அதோடு விளம்பரத்தையும் இந்த ரூபத்தில்தான் செய்வோம் என்பதையும் தெளிவாகச் சட்டத்திலே சொல்லிவிட வேண்டும். அதைச் செய்யாமல் அரசாங்கம் விரும்புகிறவர்களிடம் மட்டும், அல்லது விரும்புகிற பகுதி களில் மட்டும், விருப்பப்படியான விளம்பரங்களைக் கொண்டு வருவது என்ற அடிப்படையில் ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டுவந்து நிறைவேற்றிக் கொள்வது என்பது சரியல்ல. இன்றைய தினம் இருக்கும் அமைச்சர் இருக்கும் வரைகூட இது பாதுகாப்பாக இருக்கலாம். இந்தத் துறை ஒருவேளை வேறு ஒருவருக்கு மாறினால், அந்த நிலையில் இத்தகைய அதிகாரத்தைக் கையாளும் போது, மற்றவர்களுக்கு எதிராக இந்தச் சட்ட முன்வடிவை உருவாக்கிச் சென்றுவிட்டாரோ என்ற உணர்வு நிச்சயமாக அவர்மீது ஏற்படத்தான் செய்யும். எனவே இந்தச் சட்ட முன்வடிவின் நோக்கத்தை நான் ஆதரித் தாலும், ஆக இதைச் செயல்படுத்த விரும்பும் முறையை நான் எதிர்க்கிறேன் என்று சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்திற்குச் சேர வேண்டிய நிலுவையை வசூலிக்கும் வகையிலும், மின் கட்டணத்தைச் செலுத்தாதவர்களில் மின்சார வாரியம் அவசியம் என்று

[திரு. சோ. ஆறுமுகம்] [1981 மே 14

கருதுகிறவர்களின் பெயர்ப் பட்டியலை விளம்பரப்படுத்துவதற்கும் வழி செய்யும் வகையில் இங்கே சட்ட முன்வடிவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள்.

தற்போது தமிழகத்தில் விவசாயிகளும் தொழில் நடத்துவோர்களும் மின்சாரத் தட்டுப்பாட்டின் காரணமாக ஏற்கனவே பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதன் காரணமாகத் தொழில் நடத்துவோரும், உணவு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளும் பெரும் துன்பத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவந்து, யார் யார் எவ்வளவு மின் கட்டண பாக்கி செலுத்தாமல் இருக்கிறார்கள் என்று விளம்பரப்படுத்தி, அவர்களையெல்லாம் அவமானப்படுத்த நினைப்பது என்பது உள்ளபடியே வேதனைக்குரிய செய்தியாகும். மின்சாரத்தை மின் வாரியம் அவர்களுக்கு வழங்குவதற்கு முன்னாலே ஒரு ஒப்பந்தம் செய்யப்படுகிறது. அதாவது குறைந்தது 10 ஆண்டுக் காலத்திற்கு மின்சார வாரியத்திற்கு வருவாய் வரும் அளவுக்குக் கணக்கிட்டு, அந்த வகையில் திட்டமிட்டு, தொழிற்சாலைகளுக்கானாலும் சரி, விவசாயத்திற்கானாலும் சரி, மின்சார வாரியம் மின் இணைப்பை வழங்குகிறது. ஆனால் மின்சார வாரியம் செய்துகொண்ட ஒப்பந்தப்படி, தொழில் நடத்துவோருக்கும் விவசாயம் செய்வோருக்கும் வழங்குகிறதா என்றால், வழங்குவதில்லை. பருவ மழை தவறியது என்றோ, பிற மாநிலத்திலிருந்து நாம் எதிர்பார்த்த அளவுக்கு மின்சாரம் கிடைக்கவில்லை என்றோ காரணம் காட்டி, மின்சார வாரியம் மின்சாரத்தை உபயோகிப்பவர்களுக்குத் தொடர்ந்து மின்சக்தியை வழங்க முடியாத நிலை இருந்து வருகிறது. இவ்வாறு மின் வாரியத்தோடு ஒப்பந்தம் செய்தும், நாங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறோம் என்று அவ்வாறு பாதிக்கப்படும் உபயோகிப்பாளர்கள் இதைப்போன்ற ஒரு விளம்பரத்தைப் போட்டு மின் வாரியத்தின் மீது அல்லது அரசாங்கத்தின் மீது பழியைப் போட்டு விளம்பரம் செய்ய முடியுமா என்று பார்த்தால், அத்தகைய வாய்ப்பு அவர்களுக்கு இல்லாமல் இருக்கிறது. தற்போது விவசாயிகளுக்கு 6 மணி நேரம் மின் சப்ளை என்றும், தொழிற்சாலைகளுக்கு 6 மணி நேரம் மின் சப்ளை என்றும் நிர்ணயித்து மின்சாரம் வழங்கப்படுகிறது. மின் வெட்டு காரணமாக இந்த முறையைக் கொண்டு வந்திருக்கிறோம் என்றாலும், மின்வாரியம் அறிவித்தபடியாவது மின்சாரத்தைத் தொடர்ந்து குறிப்பிட்ட நேரத்திற்குத் தொழிற்சாலைகளுக்கோ, விவசாயிகளுக்கோ கொடுக்கிறதா என்றால், அதுவும் இல்லை. இப்படிப்பட்ட நிலையில் மின் கட்டணம் செலுத்தாதவர்கள் யார் யார் என்பதை மட்டும்



1981 மே 14] [திரு. சோ. ஆறுமுகம்]

பட்டியல் போட்டு விளம்பரப்படுத்த மின் வாரியம் அதிகாரத்தைப் பெறுவது [illegible]ல்லதல்ல. நாட்டில் தொழில் வளர வேண்டும், விவசாயம் பெருக [illegible]த்தி பெருக வேண்டும் என்பதைப்பற்றி அக்கறை இல்லாமல் [illegible]றோமோ என்ற ஐயப்பாடு எழ இது இடமளிக்கிறது. நாட்டில் [illegible]த்தியைப் பெருக்க வேண்டும் என்று அரசாங்கம் திட்டமிட்டு, [illegible] பணியாற்றிக் கொண்டிருக்கும்போது உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகளை அவமானப்படுத்தும் வகையில் காரியங்களைச் செய்வதில் நாட்டம் செலுத்தினால், எவ்வாறு விவசாயிகள் மனநிறைவோடு அதில் கவனம் செலுத்துவார்கள் என்பதை அரசு எண்ணிப் பார்க்க வேண்டும். அண்மையில் மின் வாரியத்திற்கும் விவசாயிகளுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் 1:3 என்ற அடிப்படையில் பழைய பாக்கியையும் புதிய மின் கட்டணத்தையும் இணைத்துச் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையில் இப்படிப்பட்ட ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வருவது நல்லதுதானா என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒப்பந்தத்தின் அடிப்படையில் மின் கட்டணத்தைச் செலுத்திக் கொண்டிருக்கும் போது, இத்தகைய சட்ட முன்வடிவைக் கொண்டு வருவது அவசியம்தானா என்பதை எண்ணிப் பார்த்து, இதைத் திரும்பப் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைச் செய்யாமல் நாட்டிலுள்ள விவசாயப் பெருங்குடி மக்களை அவமானப்படுத்தும் வகையில் இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றினால், இந்த ஆட்சியாளர்களை அவமானப்படுத்தும் முறையில் வாக்காளர்கள் என்ற அடிப்படையில் அவர்களுக்கும் இந்த உரிமை இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதையெல்லாம் எண்ணிப் பார்த்து இந்தச் சட்ட முன்வடிவைக் கைவிட வேண்டும் என்று வலியுறுத்தி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு ஒரு மிகச் சிறிய திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு பேரவையின் ஆய்விற்காக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. மின் சக்தியைப் பயன்படுத்திவிட்டு, அதற்குரிய கட்டணத்தைச் செலுத்த மறுக்கிறவர்கள் அல்லது செலுத்தக் காலதாமதம் செய்கிறவர்கள் யாராக இருந்தாலும், அவர்களிடமிருந்து மின்கட்டண பாக்கியை வசூலிக்க மின் வாரியம் நடவடிக்கை மேற்கொள்ளும்போது, அவர்களுடைய பெயர்களையும் அவர்கள் செலுத்த வேண்டிய தொகையையும் தேவையானால் விளம்பரப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் கொண்டு வரப்பட்ட திருத்தமாகும் இது:

[திரு. ச. இராமச்சந்திரன்] [1981 மே 14

இந்தத் திருத்தத்தின்மீது பெரிய மாண்புமிகு உறுப்பினர்கள் இவ்வாறு விளம்பரப்படுத்துவது என்பது அவமானமாகாதா என்று கேட்டார்கள். மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, எது மானம் எது அவமானம் என்று எனக்கு இப்போது உண்மையிலேயே புரியவில்லை. ஒரு குழப்பத்தில் இருந்து கொண்டிருக்கிறேன். மின்சாரத்தைப் பயன்படுத்திவிட்டு அதற்கான மின்கட்டணத்தைக் கட்டுவது மானமா அல்லது கட்டாமல் இருப்பது மானமா

(நண்பகல் 12-00)

என்று எனக்குப் புரியவில்லை. அதேபோல் கட்டணத்தை பாக்கியாக வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது மானமா அல்லது நடவடிக்கை எடுக்காமல் இருப்பது மானமா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் இங்கே உறுப்பினர் பேசுகின்றபோது யார் யார் கட்டணத்தைக் கட்ட மாட்டேன் என்கிறார்களோ அவர்களுடைய பெயர்களையெல்லாம் வெளியிடுவது அவமானமாகாதா என்று கேட்டார்கள். நான் அவர்கள் மூலமாக கட்டணம் கட்டாதவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். எது அவமானம் என்றால், கட்டாமல் இருப்பதுதான் அவமானம். ஆகவே அந்த அவமானத்தை நீக்குவதற்காகத்தான், யார் யார் கட்ட வேண்டுமோ அவர்களுடைய பெயர்களை வெளியிட்டால், அதன் மூலமாக அவர்கள் தங்கள் மானத்தை நிலைநிறுத்திக் கொள்ள முடியும் என்ற வகையில் இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவு தேவைதான், ஆனால் இங்கே இருக்கின்ற முறையைப் பற்றித்தான் எங்களுக்குச் சந்தேகம் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் பேசுகின்றபோது, இந்தச் சட்டம் இப்போது தேவையில்லை என்று சொன்னார்கள். வேறு எப்போது தேவைப் படும் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் நான் ஒன்றைச் சொல்ல விரும்பு கிறேன். விவசாயிகளை மட்டும் நோக்கி விடப்படுகிற கணையாக இதைக் கருத வேண்டியதில்லை. யார் யார் மின் கட்டணத்தைச் செலுத்தத் தவறி யிருக்கிறார்களோ அவர்கள் அத்தனை பேரும் இதிலே இடம் பெறுகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், காங்கிரஸ் கட்சியின் சார்பிலும் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் விவசாயிகளை மட்டும்தான் பாதிக்கும் என்று சொன்னார்கள். என் தொழிலதிபர்களின் படங்களைப் போட்டு, "ஆடு நனைகிறது, ஓநாய் அழுகிறது" என்று விளம்பரம் போடக்கூடாதா என்றும்,



1981 மே 14] [திரு. ச. இராமச்சந்திரன்]

ஊரிலே உள்ளவர்களை ஓநாய் என்று சித்தரிப்பதால் பிரச்சினைகள் வளராதா என்றும் கேட்டார்கள். ஆட்டு மந்தைக்குள் ஓநாய் இருப்பது ஆபத்து. அதைப் போலவே ஊருக்குள் ஓநாய் இருப்பதும் ஆபத்து என்று திரு. இராம மூர்த்தி அவர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். பணம் கட்டாத தொழிலதிபர்கள் என்று படம் போட நாங்கள் தயங்கவில்லை. எப்படி படம் போடுவது என்பது சிந்தனையாக இருக்கிறது. அவர்களைப் பண முதலைகள் என்று வர்ணிக்கலாம். பணம் கட்டாமல் முதலைக் கண்ணீர் வடிக்கும் பண முதலைகள் என்றுகூடப் போடலாம். இந்த அரிய யோசனையை மின்சார வாரியம் நன்கு சிந்தித்துத் தக்க நேரத்தில் பயன்படுத்திக் கொள்ளு மென்று தெரிவித்துக்கொள்கிறேன். தொழிலதிபர்களானாலும் சரி, விவசாயி களானாலும் சரி, யாரானாலும், மின்சார வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய கட்டணத்தைச் செலுத்த வேண்டுமென்ற அடிப்படையிலேதான் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது.

நம்முடைய அரசைப் பொறுத்த வரையில், சுமார் 5,63,946 விவசாயிகள் மின் கட்டணத்தைக் கட்டாமல் இருந்தார்கள். பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களுடனும், விவசாயச் சங்கத் தலைவர்களுடனும் சேர்ந்து பேசி நிலுவையைக் கட்ட வேண்டுமென்ற அடிப்படையிலே ஒத்துக்கொண்டு மாதம் 1 பிளஸ் 1 என்ற அடிப்படையிலே கட்டணம் கட்டியவர்களுடைய எண்ணிக்கை 4,67,422. ஆகவே பாக்கி கட்டாதவர்களுடைய எண்ணிக்கை 96,524. மொத்தம் உள்ள சுமார் 9 இலட்சம் பம்புசெட்டுகளில் ஒரு இலட்சம் பம்பு செட்டுகளை வைத்திருப்பவர்கள் இன்னும் கட்டாமல் இருக்கிறார்கள். அநேக மாக இதிலேயுள்ளவர்களுடைய பெயர்கள் வந்தால் வருமே தவிர, ஒழுங்காகக் கட்டுகிறவர்களுடைய பெயர்கள் நிச்சயமாக வராது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாம் எடுத்துக்கொண்டிருக்கிற நடவடிக்கைகளின் மூலமாக தமிழகத்திலேயுள்ள பெரும்பாலான விவசாயிகள் நம்மோடுதான் இருக் கிறார்கள். ஒரு சிலர்தான் மாயையில் இருக்கிறார்கள். கட்டணம் ரத்தாகு மென்று சொல்லியிருப்பார்கள். இன்றைக்குப் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளாமலே பேசுகின்ற தலைவர்கள் நாட்டிலே இருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்களின் விவசாயிகளுக்கென்றும் சில தலைவர்கள் கிடைத்திருக்கி

றார்கள். அதன் காரணமாக இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்குமோ என்று கருதுகிறேன். ஏனென்றால் நாம் எல்லோரும் பேசி, மின்சார வாரியம் எவ்வளவு சிறப்பாக இயங்க வேண்டும் என்று எடுத்துச் சொல்லி, இருக்கின்ற நிதிநிலைமைகளை ஆராய்ந்து, கட்டண விதங்களை ஆராய்ந்து ஒரு முடிவை எடுக்கிறோம். ஆனால் வெளியேயிருந்து லேசாக, ஹார்ஸ் பவருக்கு 50 ரூபாய் வாங்குங்கள் என்று சொல்கிறார்கள். இத்தகைய அறிவாளிகளை நாம் இங்கே பெறவில்லையே என்று நினைக்கத் தோன்றுகிறது. இதற்குக் காரணம், 24 மணி நேரமும் ஊற்றுள்ள கிணற்றுக்கும் 50 ரூபாய், ஒரு நாளைக்கு ஒரு மணி நேரத்திற்கு விட்டுவிட்டு நீர் இறைக்கும் கிணற்றுக்கும் ஹார்ஸ் பவருக்கு 50 ரூபாய்தானா என்று நினைக்கத் தோன்றுகிறது. ஹார்ஸ் பவருக்கு 50 ரூபாய் என்று வசூல் செய்யுங்கள் என்று அவர்கள் மிகச் சுலபமாகச் சொல்லு கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்திக்குத் தெரியுமென்று நினைக்கிறேன். கெடிலத்திற்கும் பெண்ணையாற்றுக்கும் இடையே உள்ள பகுதியில் ஐந்து ஹார்ஸ் பவர் மோட்டாரை வைத்தால் 24 மணி நேரம் ஓட்ட முடியும். ஆனால் காடாம்புலியூரில் ஒரு மணி நேரம் கூட ஓட்ட முடியாது. காரணம் அங்கே தண்ணீர் கிடையாது. ஆகவே ஐந்து ஹார்ஸ் பவரை 24 மணி நேரமும் ஓட்டுபவரும் 250 ரூபாய் கட்ட வேண்டும். ஒரு நாளைக்கு ஒரு சில மணி நேரமே ஓட்டக்கூடியவர்களும் 250 ரூபாய் கட்ட வேண்டும் என்றால் எப்படி? இன்னுமொரு விஷயம். பத்து ஹார்ஸ் பவர் மீட்டரில் உள்ள பெயர்ப் பலகையை மாற்றி ஐந்து ஹார்ஸ் பவர் என்று வைத்துவிட்டால், கண்டுபிடிக்க முடியாது. அதற்கும் மேலாக மீட்டர் இல்லாமலே பணம் வசூலிக்க ஆரம்பித்தால், மின்சாரத்தைத் திருடுகிறவர் களுக்குச் சௌகரியமாக இருக்கும். ஆகவே இப்படிப்பட்ட அரிய யோசனைகளைத் தருகிறவர்கள் வெளியே இருக்கிறார்கள். அதனுடைய விளைவாகத்தானோ என்னவோ 96 ஆயிரம் பேர்கள் இன்னமும் தயக்கம் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இது குறித்து ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இதிலே சர்க்கார் எந்தவித தயவு தாட்சண்யமும் காட்டாது. அவர்களிடமிருந்து வசூலிக்க உடனடியாக நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நல்ல வேளையாக நம்முடைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ரொம்ப அழகாகக் குறிப்பிட்டார். மின் கட்டணம் வசூலிக்க வேண்டுமென்று சொல்வதில் கூடாது என்று எந்த அரசியல் கட்சியும் சொல்லவில்லை என்று சொன்னார். ஜாக்கிரதையாக ஒரு வார்த்தையைப் போட்டார். அதற்குக் கொஞ்சம் விளக்கம் தேவைப்படுகிறது. "அதிகாரபூர்வமாக முடிவு எடுக்க



வில்லை" என்றார்கள். அதாவது "கட்டணத்தைக் கட்டாமல் இருப்ப தற்கோ, கட்டணம் வசூலிப்பதைத் தடைப் படுத்துவதற்கோ எந்த அரசியல் கட்சியும் முன்வரவில்லை. மின்சார வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய பாக்கியை வசூல் செய்வது முறைதான் என்று எல்லோரும் ஏற்றுக்கொண் டிருக்கிறார்கள்" என்று சொன்னார்கள். அப்படிச் சொல்லுகிறபோது, "கட்டக்கூடாது என்று அதிகாரபூர்வமாக எந்தக் கட்சியும் முடிவு எடுக்க வில்லை" என்றும் சொன்னார்கள். அப்படியானால் அதிகாரபூர்வமாக இல்லாமல் முடிவு எடுத்திருப்பார்களோ என்று எனக்குச் சந்தேகமாக இருக் கிறது.

**திரு. க. இராமமூர்த்தி:** சில பகுதிகளில் இருக்கின்ற பிரச்சினைகளைத் தெளிவாக எடுத்துக்கூறி, அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் நிவாரணம் கேட்கின்றபோது, காங்கிரஸ் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம் இப்படிச் செய்கிறது என்று அதைத் தொடர்புபடுத்துகிற போக்கு அதிகமாக மலிந்திருப் பதால்தான், சர்வ ஜாக்கிரதையாகப் பேசவேண்டிய கட்டாயத்திற்கு நான் ஆளாகியிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உறுப்பினருடைய கவலை எனக்குப் புரிகிறது. ஒரு கட்சியினுடைய இலக்கணம் என்ன? ஒரு கட்சி முடிவு சொல்லுகிறபோது, அந்தக் கட்சியின் முடிவை ஏற்றுக் கொள்வதுதானே அந்தக் கட்சிக்கு இலக்கணம். அந்த இலக்கணமே இல்லை யென்று கவலைப்படுகிறார்கள் என்றால், அதற்குப் பிறகு வேறு என்ன பரிகாரம் இருக்கிறது என்று தெரியவில்லை. அனைத்துக் கட்சியினரும் சேர்ந்து ஒரு முடிவை எடுக்கிறோம். உண்மையிலேயே நான்கூட எல்லாக் கட்சிகளுடைய தேர்தல் அறிக்கைகளையும் பார்த்தேன். இந்திரா காங்கிரஸ் திராவிட முன்னேற்றக் கழகம், ஆளும் கட்சி ஆகியவர்களின் தேர்தல் அறிக் கையை நான் படித்துப் பார்த்தேன். எந்தத் தேர்தல் அறிக்கையிலும் மின் கட்டணத்தைப் பொறுத்த வரையில், விவசாயிகளுக்குக் குறைக்கப் போகி றோம் என்று சொல்லவில்லை. கட்டாமல் இருக்கின்ற பாக்கியை, நிலுவையை ரத்து செய்கிறோம் என்றும் சொல்லவில்லை. மின்சார வாரியத்திலிருந்து பெற்ற மின்சாரத்திற்குரிய கட்டணத்தைக் கட்ட வேண்டும் என்பதை அனைத்துக் கட்சியினரும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். எல்லோரும் ஏற்றுக் கொண்ட முடிவை தமிழகத்திலேயே நிறைவேற்ற நம்மாலே இயலவில்லை என்றால் உண்மையிலே நம்மை நாமே ஏமாற்றிக்கொள்கிறோம் என்றுதானே பொருள்? அதிகாரபூர்வமாகவோ அல்லது அதிகாரபூர்வமாக இல்லா

[திரு. ச. இராமச்சந்திரன்] [1981 மே 14

விட்டாலும்கூட அனைத்துக் கட்சிகளும் ஒரு கருத்தைச் சொல்லுகிற
போது, அதை நிறைவேற்றுவதிலே நாம் கவனமாக இருக்க வேண்டும்.
அதற்கு அரசுக்கு முழு ஒத்துழைப்புத் தர வேண்டும். இதிலே எந்தவித
மான அரசியல் ஆதாயத்திற்கும் இடம் கொடுக்கக் கூடாது என்று எதிர்க்
கட்சிகளைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே நான் சற்று முன்னர் சொன்னதைப் போல, அண்மையிலே
நிலுவைகள் குறைந்து வருகின்றன. மீதமுள்ள நிலுவைகளும் விரைவிலே
வசூலிக்கப்படுமென்ற உறுதியையும் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து
மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்
னார்கள். "இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றலாம். ஆனால் நடை
முறையில் இவர் அமைச்சராக இருக்கும் வரையில் பரவாயில்லை. வேறு ஒரு
அமைச்சர் வந்துவிட்டால் என்னாகுமோ" என்று சொன்னார். அமைச்ச
ரைப் பார்த்து ஒரு சட்ட முன்வடிவை நிறைவேற்றக் கூடாது. சட்டமுன்
வடிவைப் பார்த்து அதை நிறைவேற்ற வேண்டும். அரசாங்கத்திற்கு
அதிகாரம் கொடுப்பதுதான் சட்ட முன்வடிவு. அப்படி அரசாங்கத்திற்கு
அதிகாரத்தைக் கொடுக்கிறபோது, அந்த அதிகாரம் தவறாகப் பயன்
படுத்தப்பட்டால், அதைச் சுட்டிக்காட்ட மாண்புமிகு உறுப்பினர்கள்தான்
இருக்கிறார்களே. நடைமுறையில் ஏதாவது கோளாறு ஏற்பட்டால், அதைக்
கண்டிக்க மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இருக்கிறார்களே. அப்படி

(பிற்பகல் 12-10)

அங்கத்தினர் கண்டித்தும், எதிர்க் கட்சி கண்டித்தும் ஒரு அரசு திருந்தா
விட்டால், அந்த அரசைக் கண்டிக்க நாட்டு மக்கள் இருக்கிறார்கள். ஆகவே,
ஜனநாயகத்திலே நம்பிக்கையுள்ள நாம், ஒரு சட்டத்தின்மூலம் ஒரு அரசுக்கு
அதிகாரத்தைக் கொடுக்கின்றபோது, அவநம்பிக்கையோடு கொடுக்கக்கூடாது
என்பதை அவர்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. சோ. ஆறுமுகம் : நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
இங்கே விளக்கம் தருகிறபோது, 9 லட்சத்திற்கு மேற்பட்ட பம்புசெட்டுகள்
உடையவர்களில் பெரும்பாலோர் கட்டண பாக்கியைக் கட்டி வருகிறார்கள்.
இன்னும் 90 ஆயிரம் பேர்கள்தான் பாக்கியிருக்கிறார்கள் என்று சொன்
னார்கள். ஏற்கெனவே மின்சார வாரியத்திலே, ரெவின்யூ ஆக்டின்படி
அப்படிக் கொடுக்காதவர்கள் மீது நடவடிக்கை எடுத்து வசூல் செய்யலாம்.
நமக்கு அதற்குச் சட்டம் இருக்கிறது. அப்படி நடவடிக்கை எடுக்கலாம்.



1981 மே 14] [திரு. சோ. ஆறுமுகம்]

அப்படி இருக்கின்றபோது, இதுபோன்று ஒரு விளம்பரப்படுத்திக்கொண்டிருக்
கிறார்களே என்றுதான் சொல்கின்றேன். இதற்கு ஒரு சட்டம் ஏன் கொண்டு
வரவேண்டும் என்பதுதான் என் கேள்வியாகும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நமக்
கெல்லாம் அந்த ஆசை இருப்பதில்லையா? இப்போது நான் பேசுகிறேன்.
அது மாலையிலே வரவேண்டும் என்ற ஆசைப்படுவதில்லையா? அவர்களுக்
கும் அந்த ஆசை இருக்கும். அந்த ஆசையைத்தான் நாங்கள் நிறைவேற்று
கிறோம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : எனக்குக் கிடையாது. இந்த இடத்
திலே உட்கார்ந்துகொண்டிருக்கின்ற நான் எந்த ஒரு விளம்பரத்தையும்
அடைய முடியாது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்த விளம்பரத்தைக் கண்டு
யாரும் அஞ்சவேண்டியதில்லை. வெளிச்சத்தைக் கண்டு பயப்படுகிறார்கள்
என்றாலே, ஏதோ தவறு செய்கின்றார்கள் என்றுதான் பொருள். எல்லாச்
சட்டங்களிலேயும் இருக்கிறது. வருமான வரிச் சட்டத்திலே இருக்கிறது.
கூட்டுறவுச் சட்டத்திலே இருக்கிறது. ஒவ்வொரு சட்டத்திலேயும் இருக்
கின்றது. இவைகள் எல்லாம் ஒப்புக்கொள்ளப்பட்ட முறைகள் தான்.
ஆகவே இதை அவை ஏகமனதாக நிறைவேற்றித் தரவேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—
"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1981 ஆம்
ஆண்டு மின்சார வாரியம் (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) திருத்தச்
சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/1981)
ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.
சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** பிரிவு 2-ல் மாண்புமிகு அங்கத்தினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் தன் திருத்தத்தை முன்மொழிகின்றார்களா?

THIRU K. RAMAMOORTHY: Sir, I move the following amendments:—

In clause 2,

(i) In sub-clause (i) of the proposed section 6-A, *delete* the words 'in such manner as it thinks fit'.

(ii) in the Explanation to the proposed section 6-A, *delete* the words 'may also be' and *for* the words 'if, in the opinion of the Board, the circumstances of the case justify it' *substite* the words "along with their account of wealth".

திரு. பி. முனுசாமி அவர்கள் தீர்மானத்தை வழி மொழிந்தார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அங்கத்தினர் அவர்கள் திருத்தத்தின் மீது பேச விரும்புகிறார்களா?

**திரு. க. இராமமூர்த்தி:** நான் பேச விரும்புகிறேன். மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இந்தத் திருத்தத்தின் கருத்திலே மாறுபட்ட கருத்து இல்லை என்றே கருதுகிறேன். காரணம் அவர்கள் சொன்னார்கள். நான் முதலில் பேசுகின்றபோது "அமைச்சர் அவர்கள் இருக்கின்ற வரையில் பாதகமில்லை. நாங்கள் நம்புகிறோம். இப்போது உள்ள இந்த அமைச்சர் மாறினால் என்ன ஆகுமோ என்ற அச்சம் இருக்கிறது" என்று சொன்னதைச் சொன்னார்கள். பிறகு அமைச்சர் அவர்கள் "என்னைப் பார்க்கவேண்டாம், அரசைப் பாருங்கள்" என்று சொன்னார்கள். எங்களுக்கு அந்த உரிமை இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படி இருந்தாலும்கூட, அதிலே ஒன்றைச் சொல்கின்றேன். அப்படி ஏதாவது தவறு செய்தால், அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு ஒரு வாய்ப்பு இருக்கும் என்பதற்காகச் சொல்கிறேன். ஏதாவது தவறுகள் ஏற்படுமானால், நடவடிக்கை என்ற அளவிலேதான் அமைந்திருக்கிறது. என்னுடைய திருத்தத்தைப் பொறுத்தவரையில், இன்னொன்றும்



கூட தெளிவாக இருக்கிறது. அப்படி விளம்பரப் படுத்தி இஷ்டம்போல் சொல்கின்ற மாதிரி இல்லாமல் இருக்க வேண்டும். யார்யார் நிலுவைக்காரர்களாக, பாக்கிதாரர்களாக இருக்கின்றார்கள் என்று வருகிறபோது, அவர்களுடைய சொத்துப் பட்டியலும் வெளியே வரவேண்டும். எந்த அளவுக்கு சொத்து வைத்துக் கொண்டிருக்கின்றார்கள், எந்த அளவுக்கு பாக்கிதாரர்களாக இருக்கின்றார்கள், என்ற விவரங்கள் வெளியே தெரியவேண்டும். பலர் சொத்துக்கள் வைத்துக் கொண்டிருப்பவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் எல்லாம் கொடுக்க முடியாதவர்கள் என்று மற்றவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் திருத்தம் அவர்கள் பற்றிய முழுமையான விவரங்கள் வெளிவர பயன்படும். அந்த அளவிலேதான் நான் இதைக் கொடுத்திருக்கிறேன். நிலுவையை வசூல் செய்வதைப் பொறுத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், அது ஒரு கட்சியினுடைய கொள்கை என்பதல்ல. எல்லோரும் சேர்ந்து நிறைவேற்றித்தான் ஆகவேண்டும். இதிலே கொள்கை என்று இல்லை. ஆனால் இப்போது ஏற்பட்டிருக்கின்ற சூழ்நிலை வேறு. ஒரு ஐந்து, ஆறு ஆண்டுக்காலமாக வறட்சி, பயிர்கள் சாவி ஆகிவிட்டன. விவசாயம் சரியாக அமையவில்லை என்ற காரணங்களினால், மனிதாபிமானத்தின் அடிப்படையிலே சில ஆண்டுகளுக்கு கடனை, பாக்கியை வசூல் செய்யாமல் நிறுத்திவிட்டோம். கொள்கையின் அடிப்படையிலே அதை நாம் நிறுத்தவில்லை. அரசு சில நடவடிக்கைகள் அடிப்படையிலே அப்போது வசூல் தேவையில்லை என்று நிறுத்திவிட்டது. அதற்குப் பிறகு தொகைப் பளு சேர்ந்துவிட்டது. அதற்குப் பிறகு அவர்கள் நிலைமைகளைப் பொறுத்து, கடன் பளுவைக் குறைக்கவேண்டிய ஒரு கட்டாயம் எல்லாக் கட்சிகளுக்கும் ஏற்படுகிறது. அப்படி நடவடிக்கைகள் எடுக்கின்றபோது, பல இடங்களில் குறைகள் ஏற்படுகின்றன. இதிலே காங்கிரஸ் கட்சியைப் பற்றியோ, அல்லது தி. மு. க. வைப் பற்றியோ, கம்யூனிஸ்ட் கட்சியைப் பற்றியோ குறிப்பிட்டுச் சொல்லத் தேவையில்லை. அ. தி. மு. க.-வில் இருக்கின்றவர்கள் கூட பல இடங்களிலே உள்ள குறைகளைச் சொல்லி, இதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும், அதற்கெல்லாம் பரிகாரம் காண வேண்டும் என்று கேட்பதைப் பார்க்கிறோம். ஆகவேதான் சொல்கின்றேன், இதிலே கொள்கை என்பது இல்லை. இதிலே அரசாங்கம் எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு எப்படி நாங்கள் துணை இருக்கிறோம் என்பதைப் பார்க்கின்றபோது, அதிலே குறுக்கீடு இருக்கக்கூடாது என்றுதான் சொல்கின்றேன். அரசியல் கட்சிகள் எல்லாம் சேர்ந்து இதிலே துணை இருக்க வேண்டும் என்றுதான் விரும்புகிறேன். அதே நேரத்திலே இரண்டொரு சிக்கல்கள் வருகிறபோது, அதற்கு பிணைப்பாக கட்சியை

இணைத்துப் பேசவேண்டாம் என்ற அளவிலே தான் சொல்கின்றேன். அரசுக்கு முழுமையான அளவுக்கு ஒத்துழைப்புத் தரவேண்டும் என்ற அளவிலேதான் நினைக்கிறேன். அந்த அளவிலேதான் நடவடிக்கைகள் அமைய வேண்டுமென்று விரும்புகிறேன். இப்போது விளம்பரப்படுத்தயிருக்கிறோம். இன்னொரு அபாயம் இருக்கிறது. அதையும் நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

கட்டணங்கள் கட்டுவதற்கு வருகின்ற பில்கள் முறையாக இல்லை. பல இடங்களிலே சங்கடங்கள் இருக்கின்றன. அதிகமான தொகைக்கு பில் வந்து விடுகின்றது. பல மாதங்கள் போடாமல் வைத்திருந்து, திடீரென்று ஆறு மாதத்திற்கு வந்துவிடுகின்றது. சில இடங்களில் மினிமம் என்று சொல்லி வசூல் செய்திருக்கிறார்கள். நியாயமான தொகையை வசூல் செய்யாமல் இருந்திருப்பார்கள். அந்தத் தொகைகளையெல்லாம் ஒன்று சேர்த்து 'பில்' போட்டு, ஒரே காலத்தில் வசூலிக்க வேண்டுமென்று அனுப்புகிறார்கள். இப்போது இந்தத் தொகைகளை வசூலிப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுத்தாலும், அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் எதிர் காலத்தில் அப்படிப்பட்ட சூழ்நிலைகள் வருகின்றபோது, அதில் சர்வ ஜாக்கிரதையோடு இருக்க வேண்டும், இந்தச் சட்டம் அந்தக் குறைகள் இல்லாமல் இருக்கின்ற அளவுக்கு முழுமை பெற வேண்டும் என்ற அளவிலேதான் இந்தத் திருத்தத்தை நான் இங்கே கொண்டு வந்திருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச இராமச்சந்திரன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்திலே மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் 'in such a manner, as he thinks fit' என்பதை நீக்க வேண்டுமென்று சொல்கின்றார்கள். எந்த முறையில் வெளியிட்டால் தகுதியாக இருக்குமோ அந்த முறையில் வெளியிடுவதற்கு அரசுக்கு உரிமை இருக்கிறது, அந்த உரிமை கூடாது என்பதுபோல அங்கத்தினர் அவர்கள் சொல்கிறார்கள். ஒரு காரியத்தைச் செய்யச் சொல்கின்றபோது, அதற்கு முழு உரிமையும் அளிக்க வேண்டியது மிகவும் முக்கியம். நான் மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

'தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்'





இந்தக் குறளை நான் சொல்ல விரும்புகிறேன். அந்த அதிகாரத்தைக் கொடுக்கிறது என்ற முடிவுக்கு வந்த பிறகு, அதிலே சந்தேகப்பட வேண்டாம் என்று அவரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோலவே அடுத்து அவர் கொடுத்திருக்கக்கூடிய திருத்தம் the words 'may also be' என்பதை நீக்கிவிட வேண்டுமென்றும் and for the words 'if, in the opinion of the Board, the circumstances of the case justify it' என்பதை எடுத்து விட்டு, அதிலே 'along with their account of wealth' என்று போடவேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒவ்வொருவருடைய அக்கவுண்டையும் கண்டுபிடித்து எவ்வளவு சொத்து, தொகை என்பதையெல்லாம் அறிவது என்பது எவ்வளவு கடினம் என்பது மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும். மத்திய அரசில் உள்ள எவ்வளவு பெரிய நிறுவனம், நிர்வாக இயந்திரம் அதிலே எவ்வளவு அவஸ்தைப்படுகின்றார்கள் என்பது தெரியும். அந்த அவதிக்கு எங்களை ஏன் ஆளாக்க விரும்புகிறார்கள் என்று புரிந்து கொள்ள முடியவில்லை. அது ஏற்றுக்கொள்கின்றதாக இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, பில்களைப் பற்றித் தெரிவித்தார்கள். இப்போதே பில்களில் குறைபாடுகள் இருக்குமானால், அந்தப் பணத்தைக் கட்டிவிட்டு, மேற்கொண்டு அதைப்பற்றிப் பிரச்சினை எழுப்பி தீர்வு காணுவதற்கு நடைமுறையில் வழிவகைகள் இருக்கின்றன. அதுவும் அல்லாமல் நாங்கள் பில்கள் முறைகளை மாற்றியமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

அமைச்சர் அவர்கள் இன்னொன்றைச் சொன்னார்கள். இது ஒரு கொள்கை என்பதல்ல என்று சொன்னார்கள். காங்கிரஸ் கட்சியைப்பற்றி அப்படிச் சொல்ல வேண்டாம் என்றார்கள். இதிலே கொள்கை என்று ஒன்றுமில்லை. நாட்டிலே வாங்குகின்ற பொருளுக்குத் கொடுக்கவேண்டிய சாதாரணமான காரியம். பில்லுக்குப் பணம் கட்ட வேண்டும் அவ்வளவுதான். சாதாரணமாக ஒரு ஜவுளிக் கடையிலே கூட வாங்குகின்ற துணிக்குத் தொகையைக் கொடுத்

கிறோமே அது போலத்தான். இதிலே கட்சிதான் முடிவு எடுக்க வேண்டும் என்பதல்ல. எல்லோரும் சேர்ந்து முடிவெடுத்தோம், அந்த முடிவினை அப்படியே வெளியிலே அமுல்படுத்த வேண்டும், அப்படிச் செய்தால்தான், தேச விரோத சக்திகள், விஷக்கிருமிகள் இவைகள் வருவதற்கு இடம் கொடுக்காமல் இருக்க முடியும் என்பதைச் சொல்கிறேன். அந்தத் திருத்தத்தை வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் திருத்தத்தை வலியுறுத்துகிறார்களா ?

**திரு. க. இராமமூர்த்தி:** தலைவர் அவர்களே, திருத்தத்தை வலியுறுத்தவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 2 அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு மின்சார வாரியம் (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1981) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு மின்சார வாரியம் (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1981) நிறைவேற்றப்பட வேண்டும்".

**தீர்மானம்,** அவையின் முடிவிற்கு விடப்பட்டு, **நிறைவேற்றப்பட்டது.**



### (4) 1981 ஆம் ஆண்டு சிறைக் கைதிகளின் அடையாளங்களைப் பதிவுசெய்தல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1981.)

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு, சிறைக் கைதிகளின் அடையாளங்களைப் பதிவுசெய்தல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு, சிறைக் கைதிகளின் அடையாளங்களைப் பதிவுசெய்தல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

(பிற்பகல் 12-20)

**திரு. ஆ. நல்லசிவன்:** தலைவரவர்களே, பிங்கர் பிரின்ட் எடுக்கும்போது அரசியல் காரணங்களுக்காக வரும் கைதிகளுக்கு எடுக்கக் கூடாதென்று கேட்டுக்கொள்கிறேன். இதிலே வேறு ஒன்றும் பிரச்சினை இல்லை. சப் இன்ஸ்பெக்டர் எடுத்ததை, இப்போது பிங்கர் பிரின்ட் எக்ஸ்பர்ட் எடுக்கப் போகிறார். பல்வேறு பிரச்சினைகள் குறித்து, சிறைக்குப் போகலாம். தொழிலாளர்கள்கூட சட்டத்தை மீறி சிறைக்குப் போகிறார்கள். அவர்களை ஒன்றும் செய்யாமல் வெளியே விட்டுவிடுகிறார்கள். எனவே சிறைக்குள்ளே போகும் அனைவரிடமும் பிங்கர் பிரின்ட் எடுப்பது சரியல்ல. அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களிடம் பிங்கர் பிரின்ட் எடுக்க வேண்டாமென்று, இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது, உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

---

@ 318-ஆம் பக்கத்தில் இணைப்பு X ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மத்திய சட்டம் எஸ்.ஐ. ராங்கில் உள்ளவரால் கைரேகை எடுக்கப்பட வேண்டுமென்று இருக்கிறது. இந்தச் சட்டம், கைரேகை நிபுணர்களை வைத்து எடுக்க வழிவகை செய்கிறது. இதிலே கருத்து வேறுபாடில்லை. இதுவரை கிரிமினல் குற்றவாளிகளுக்கு மட்டும் தான் கைரேகை எடுக்கப்பட்டது என்று நினைக்கிறேன். அரசியல்வாதிகள் தொழிலாளர்கள் அந்தச் சட்டத்தின்கீழ் வரவில்லை என்று நினைக்கிறேன். இந்தச் சட்டத்தை மிக வேகமாகக் கொண்டு வருகிறார்கள். சிறை சீர்திருத்தம் பற்றி ஆராய ஒரு கமிஷன் அமைக்கப்பட்டு, சீர்திருத்தம் குறித்து முழு அளவிற்கு சட்ட முன்வடிவு கொண்டு வரப்படுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதோடு சேர்த்தே இதையும் கொண்டு வந்திருக்கலாம். கைரேகை எடுப்பதில் இப்போது தகராறு எதுவுமில்லை. ஒரு எஸ்.ஐ. அதைச் செய்கிறார். எஸ்.ஐ, எடுத்துக்கொண்டிருக்கிறார். அதிலே பெரிய சட்டச் சிக்கல்கள் வரவில்லை. சில நேரங்களில் வழக்குகளில் சிக்கல்கள் வராமென்று எண்ணி இதை வேகமாகக் கொண்டு வந்துள்ளதைப் பார்க்கும்போது, சிறை சீர்திருத்தம் பற்றிய முழுமையான சட்டமுன்வடிவைக் கொண்டுவர காலதாமதம் ஏற்படுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. சிறையில் கழிப்பறை வசதிகள், தண்ணீர் வசதி, கைதிகளை நடத்தும் முறைகள், அவர்களுக்குக் கொடுக்கும் பயிற்சி முறைகள் எல்லாம் அடங்கிய சிறை சீர்திருத்தக் கமிஷன் அறிக்கையை ஆலோசித்து, முழு அளவில் நல்லதொரு சட்டம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவர்களே, மேலவையிலே இருக்கிற உறுப்பினர்கள் அத்தனை பேரும் இந்தச் சட்ட முன்வடிவை ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்ற முறையில்தான் இப்போது நிலைமைகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசுகிறபோது, அரசியல் கட்சிக்காரர்களின் கைரேகையை எடுப்பார்களோ என்ற அச்சம் இருப்பதாகச் சொன்னார்கள். இந்தச் சட்ட முன்வடிவு எதற்கும் வழிவகை செய்யவில்லை. இப்போது அந்தக் காரியத்தை எஸ்.ஐ. செய்கிறார்கள். அவர்களுக்குப் பதிலாக பிங்கர் பிரிண்ட் எக்ஸ்பேர்ட் அந்த வேலையைச் செய்வார்கள். அதைத்தான் இந்தச் சட்ட முன்வடிவு அதிகாரபூர்வமாக்குகிறது. மற்றபடி எந்தவித மாற்றங்களுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



அடுத்து, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள் சிறைச்சாலை சீர்திருத்தத்தையும் சேர்த்துக் கொண்டுவரவில்லையே என்று சொன்னார்கள். சீர்திருத்தம் என்பது வேறு. அதைச் சொல்வது உள்நுறை. அந்தச் சீர்திருத்தம், மக்கள் கருத்துக்களை அறிந்து, அதற்கேற்றவாறு என்ன செய்யலாமென்று ஆராய்ந்து, ஆர அமர, நிதானமாகச் செய்ய வேண்டியதாகும். அதை அரசு ஆராயும். இன்றைக்கு கைரேகை எடுக்க பிங்கர் பிரிண்ட் எக்ஸ்பர்ட் தேவைப்படுகிறார்கள். எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னால் செய்ய வேண்டியதை, இந்த அரசு இப்போது செய்கிறது. மத்திய அரசின் அனுமதி பெற்றுத்தான் இதைக் கொண்டு வருகிறோம் என்று சொல்லி, இதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கோருகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1981 ஆம் ஆண்டு சிறைக் கைதிகளின் அடையாளங்களைப் பதிவுசெய்தல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1981 ஆம் ஆண்டு சிறைக் கைதிகளின் அடையாளங்களைப் பதிவுசெய்தல் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/1981) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1981 ஆம் ஆண்டு சிறைக் கைதிகளின் அடையாளங்களைப் பதிவுசெய்தல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1981) நிறைவேற்றப்பட வேண்டும்".

---

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(5) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கடன் நிவாரண (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1981).**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கடன் நிவாரண (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு@ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1981) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கடன் நிவாரண (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1981) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

**திரு. ஆ. நல்லசிவன்:** தலைவரவர்களே, 1981 ஆம் ஆண்டு கடன் நிவாரண (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை வரவேற்கிறேன். இதிலே, 4,800 ரூபாய்க்கு கீழே வருமானம் உள்ளவர்கள் தங்கள் கடனை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்கும் மனுவை 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் தேதி வரையிலும் கொடுக்கலாமென்று திருத்தம் கொண்டு வந்துள்ளார்கள். இந்தச் சட்டத்தை நிறைவேற்றும்போது மே 15 தேதியாகிவிடுகிறது. எனவே இன்னும் 1½ மாத அவகாசம்தான் இருக்கிறது. ஆகவே இதை 1981 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதிவரை நீட்டிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதன்மூலம் கிராமப்புறங்களில் இதைப்பற்றிய விவரம் தெரியாதவர்கள், மேற்கொண்டு மனுச் செய்துகொள்ள அவகாசம் கிடைத்து, அதன்மூலம் அரசின் நோக்கமும் நிறைவேறும். இங்கே சட்டமுன் வடிவு நிறைவேறி, பத்திரிகையில் செய்தி வரும். 1½ மாத அவகாசம் விரைவில் முடிந்துவிடும். அரசாங்கம் கொடுக்க விரும்பியது 6 மாதம். எனவே 1981 டிசம்பர் 31 ஆம் தேதிவரை மனுக்களைக் கொடுக்கலாம் என்று சொல்லி, அந்தத் தேதியை மாற்றிக்கொள்ள அமைச்சரவர்கள் முன்வந்தால், அவர்கள் நோக்கம் இன்னும் இனிதாக நிறைவேறுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் சட்டத்தை அமல் நடத்தும் அனுபவத்திலிருந்து ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இதை அமல் நடத்த, ஒவ்வொரு வட்டத்திலும் ஒரு ஸ்பெஷல் தாசில்தார் நியமிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. இப்போது

@ 318-319ஆம் பக்கத்தில் இணைப்பு XI ஆக அச்சிடப்பட்டுள்ளது



தாசில்தாரே இதைக் கவனிக்க வேண்டியிருப்பதால், இந்த வேலையைச் செய்வதில் காலதாமதம் ஏற்படுகிறது. அதனால் சட்டம் கொண்டுவருவதன் நோக்கம் தோற்றுப் போகிறதென்பதை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். குறிப்பாக நமக்கு வரக்கூடிய புகார்களில், அங்கே உள்ள தாசில்தார்கள்மீது கடன் கொடுத்துள்ளவர்கள் செல்வாக்கைப் பிரயோகப்படுத்துவதால், சட்டத்தை அமல் நடத்தும்போது பாரபட்சமற்ற முறையில் நடக்க வேண்டிய முறைக்குக் குந்தகம் ஏற்பட்டு, பல இடங்களில் கடன் கொடுத்தவர்கள் பக்கம் தாசில்தார்கள் நிற்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆகையால் ஸ்பெஷல் தாசில்தாரை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் அவர் இந்த வேலையைச் செய்ய அவருக்கு உதவிகரமாக இருக்க அந்தந்த பிராந்தியங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் அடங்கிய ஆலோசனைக் குழு நியமிக்க வேண்டும். தாசில்தார்கள் ஸ்தலங்களிலே கடன் கொடுத்தவர்களோடு சேராமல் இருக்க கண்காணிக்க இந்தக் குழு உதவிகரமாக இருக்கும். அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களைப் போடவேண்டுமென்று கேட்கவில்லை. பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் குழுவைப் போட்டால், தவறுகள் நடக்காமல் இருக்க உதவிகரமாக இருக்கும். முதலில் ஸ்பெஷல் தாசில்தாரை நியமிக்க வேண்டும். இரண்டாவதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் குழு போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்பெஷல் தாசில்தாரைப் போடாததால், இன்னொரு குறைபாடும் ஏற்படுகிறது. தாசில்தார் விசாரித்துக்கொண்டிருக்கும்போது, கடன் கொடுத்தவர் கோர்ட்டுக்குப் போகிறார். கோர்ட்டில் கடன் வாங்கியவர் எதிர் வழக்காட வேண்டும். 4,800 ரூபாய்க்குக் குறைவாக வருமானம் இருப்பதால், சட்டப் பாதுகாப்புத் தர வேண்டுமென்று வாதிட வேண்டும். வழக்கை கோர்ட்டில் எடுத்துக்கொள்ளக்கூடாது. இதற்காக தாசில்தார் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர்முன் வாதிட வேண்டும், எனவே கோர்ட்டில் இதை எடுத்துக் கொள்ளக்கூடாது என்று பேச வேண்டியிருக்கிறது. அவருக்கு 4,800 ரூபாய்க்குக் குறைவாகத்தான் வருமானம் வருகிறது என்பதற்கு சர்ட்டிபிகேட் 'ப்ரொட்யூஸ்' பண்ண வேண்டும். அந்த சர்ட்டிபிகேட்டைத் தர வேண்டியது தாசில்தார்தான். நிறைய வேலைகளை வைத்துக் கொண்டுள்ள தாசில்தார், ஆயிரக்கணக்கான பேர்களுக்கு சர்ட்டிபிகேட் கொடுக்க முடியவில்லை. சர்ட்டிபிகேட் இருந்தால்தான் கேசை எடுப்போமென்று சொல்லுகிறார்கள். அதனால் அவர் பாதுகாப்பு பெற முடியவில்லை.

[திரு. ஆ. நல்லசிவன்] [1981 மே 14

இப்படிப்பட்ட நிலைமையில், கடன் கொடுத்தவர் நகைகளை விற்றுவிடு கிறார். எனவே இந்தச் சட்டத்தின்மூலம் அனுகூலம் பெற வேண்டியவர் களுக்குப் பாதுகாப்பு இல்லாமல் போகிறது. ஆகவே இந்தப் பணிக்காக ஸ்பெஷல் தாசில்தாரை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு தாலுக்காவிற்கு ஒருவரையோ அல்லது இருவரையோ இருக்கின்ற மனுக்களுக்குத் தகுந்தாற்போல் நியமிக்க வேண்டும். அடுத்து ஆலோ சனைக் குழு போட வேண்டுமென்பதையும் வலியுறுத்தி அமைகிறேன்.

(பிற்பகல் 12-30)

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** விவாதத்திலுள்ள சட்ட முன்வடிவின் மீதான விவாதம் முடிந்து, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்படும் வரை அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. சோ. ஆறுமுகம்:** தலைவரவர்களே, தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு கடன் நிவாரண இரண்டாவது திருத்த சட்டமுன்வடிவைப் பொறுத்தவரை யில், இந்தச் சட்டத்தை மேலும் 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் தேதி வரை நீட்டிக்க வகை செய்யும் மசோதாவாக இது இருக்கிறபடியால், நான் இதை வரவேற்கிறேன். அதே நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொன்னதைப்போல், ஜூன் 30 வரை நீட்டிப்ப தாக இருப்பதை செப்டம்பர் 15 ஆம் தேதி வரை நீட்டிக்க வேண்டும். ஏனென்றால் நாம் எல்லோரும் பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கை களை ஏற்றுக்கொண்டிருப்பவர்கள் என்று நான் சொல்வதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஒத்துக்கொள்வார்கள். இன்றைக்கு அடித்தளத் திலுள்ள மிக சாதாரண குடிமக்கள், கிராமப்புறங்களில் இருக்கிற சிறிய விவசாயிகள், நிலமில்லாத ஏழையெளிய விவசாயிகள் இப்படிப்பட்டவர்கள் எல்லாம் இந்த நிவாரணச் சட்டம்பற்றித் தகுந்த விளம்பரம் இல்லாத காரணத் தால், பயன் பெற முடியாத நிலையில், இதைப்பற்றித் தெரியாமல் இருக்கி றார்கள். கடன் பெற்றவர்கள் இந்தச் சட்டத்தின் மூலம் பயன் பெற வட்ட ஆட்சியருக்கு விண்ணப்பங்களை அனுப்பினால் கூட, வட்ட ஆட்சியருக்கு இருக்கிற பல்வேறு அலுவல்கள் காரணமாக உடனடியாக விண்ணப்பங்களைப் பரிசீலித்து முடிவு காண முடியாத நிலை இருக்கிறது. இவைகளையெல்லாம் கவனத்தில் கொண்டு மேலும் காலத்தை நீட்டித்தாக வேண்டும். பயன் பெற முடியாதவர்கள் எல்லாம் பயன் பெற வேண்டுமானால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுசம்பந்தமாகத் தகுந்த விளம்பரம் செய்யக்கூட முன்வர வேண்டும். முன்பு கூட ஒரு மசோதாவின் மீது மாண்புமிகு வருவாய்த் துறை



1981 மே 14] [திரு. சோ. ஆறுமுகம்]

அமைச்சர் அவர்கள் பேசும்போது, விளம்பரத்தை எல்லோரும் விரும்பக்கூடிய வர்கள்தான் என்று குறிப்பிட்டார்கள். அந்த அடிப்படையில் 4,800 ரூபாய்க் குக் கீழ் வருமானமுள்ள சிறிய விவசாயிகள், நிலமற்ற ஏழையெளிய விவசாயி கள் இப்படிப்பட்டவர்களுக்கு எல்லாம் நல்லமுறையில் தெரியும் வண்ணம் ஒவ்வொரு ஊரிலும் கவர்ச்சிகரமாக அவர்கள் நின்று என்ன என்று கேட்கும் அளவுக்கு நடன அழகிகளுடைய படத்தைப் போட்டு விளக்கக் கூடிய முறை யில் விளம்பரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சட்டம் இயற்றுகிறோம், அது பத்திரிகைகளில் வருகிறது. படித்தவர்கள், அதைப் பற்றித் தெரிந்தவர்கள் நிவாரணத்தைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் படிப்பறிவு இல்லாத கிராமப்புறங்களில் இருக்கிற ஏழையெளியவர்கள் அவதிப் படுகிறார்கள். அவர்கள் இந்த நிவாரணத்தைப் பயன்படுத்த வாய்ப்பில்லை. ஆகவே சாதாரண கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய ஏழையெளிய மக்களும் பயன் பெறும் வகையில் நல்ல முறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளம்பரம் செய்ய முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். செப்டம் பர் 15 ஆம் தேதி வரை அதாவது பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த தினம் வரை இந்தக் கடன் நிவாரணச் சட்டத்தை நீட்டிக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவரவர்களே, இந்த நிவாரணத் திருத்த சட்டமுன்வடிவு மீது நான் விளக்கமாகச் சொல்லத் தேவையில்லை. இந்தச் சட்டமுன்வடிவு இன்றைக்கு காலத்தை நீட்டிக்க வகை செய்கிறது. எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்ட முன்வடிவு இது. ஆகவே தான் நான் இதைப்பற்றி நீண்ட நேரம் பேச விரும்பவில்லை. அனைவரும் இதனை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். முடிவாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. ஆறுமுகம் ஒன்றைச் சொன்னார். பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் தேதி வரை இந்தச் சட்டத்தை நீட்டிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண் டார். அவர் சார்ந்திருக்கிற கட்சியின் சார்பாக செப்டம்பர் 15 ஆம் நாளி லிருந்து செப்டம்பர் 30 ஆம் தேதி வரையில் அண்ணா பிறந்த நாளைக் கொண்டாடுவார்கள் என்று நான் கருதுகிறேன். இந்தச் சட்டம் 20—9—1981 வரை நீட்டிக்க வகை செய்கிறது என்பதைச் சொல்லி, அனைவரும் நிறை வேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு கடன் நிவாரண (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/1981) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்** : தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு கடன் நிவாரண (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/1981) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு கடன் நிவாரண (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/1981) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : மேலவையின் நிகழ்ச்சிகள் **இத்துடன்** முடிவுற்றன. அவை மீண்டும் நாளை காலை 9-00 மணிக்குக் **கூடும்.**

**பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.**

***(பிற்பகல் 12-34)***

## 6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

### *A. Statutory Rules and Orders.*

267. Notification issued with G.O. Ms. No. 695, Food and Co-operation, dated the 16th December 1980, in regard to make to inclusion of certain commodities in the Schedule to the Tamil Nadu



Warehouses Act, 1951. [Laid on the table of the House under section 27 (4) of the Tamil Nadu Warehouses Act, 1951 (Tamil adu Act XV of 1951)].

268. Notification issued with G.O. Ms. No. 416, Revenue, dated the 18th February 1981 in regard to amendment to the Tamil Nadu Urban Land Tax Rules. [Laid on the table of the House under section 45 (2) of the Tamil Nadu Urban Land Tax Act, 1966 (Tamil Nadu Act 12 of 1966)].

269. Notification issued with G.O. Ms. No. 715, Revenue, dated the 24th March 1980 in regard to amendments to the Tamil Nadu Land Reforms (Disposal of Surplus land) Rules, 1965. [Laid on the table of the House under section 112 (2) of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceilling on Land) Act, 1961 (Tamil Nadu Act 58 of 1961)].

270. Annual Accounts of the Tamil Nadu Housing Board for the year 1969-70. [Laid on the table of the House under section 125 (2) (a) of the Tamil Nadu Housing Board Act, 1961 (Tamil Nadu Act 17 of 1961)].

271. Annual Accounts of the Tamil Nadu Housing Board for the year 1970-71. [Laid on the table of the House under section 125 (2) (a) of the Tamil Nadu Housing Board Act, 1961 (Tamil Nadu Act 17 of 1961)].

272. Annual Accounts of the Tamil Nadu Housing Board for the year 1971-72. [Laid on the table of the House under section 125 (2) (a) of the Tamil Nadu Housing Board Act, 1961 (Tamil Nadu Act 17 of 1961)].

273. Annual Accounts of the Tamil Nadu Housing Board for the year 1972-73. [Laid on the table of the House under section 125 (2) (a) of the Tamil Nadu Housing Board Act, 1961 (Tamil Nadu Act 17 of 1961)].

274. Annual Accounts of the Tamil Nadu Housing Board for the year 1973-74. [Laid on the table of the House under section 125 (2) (a) of the Tamil Nadu Housing Board Act, 1961 (Tamil Nadu Act 17 of 1961)].

275. Annual Accounts of the Tamil Nadu Housing Board for year 1974-75. [Laid on the table of the House under section 125 (2) (a) of the Tamil Nadu Housing Board, Act 1961)]

276. Sixth Annual Report of the Kattabomman Transport Corporation Limited for the year 1980. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

277. Report the Comptroller and Audit General of India for the year 1979-80. (Civil). [Laid on the table of the House under Article 151 (2) of the Constituion of India)].

278. Report of the Comptroller and Audit-General of India for the year 1979-80 (Revenue Receipts). [Laid on the table of the House under Aricle 151 (2) of the Constitution of India]].

279. Appropriation Accounts of the Government of Tamil Nadu for the year 1979-80. [Laid on the table of the House under Article 151 (2) of the Constitution of India].

280. Finance Accounts of the Government of Tamil Nadu for the year 1979-80. [Laid on the table of the House under Article 151 (2) of the Constitution of India)].

*B. Reports, Notifications and Other Papers.*

* 184. Report of the One Man Commission of Inquiry constituting Thiru R.Natarajan, I.A.S., now Commissioner for Transport on the circumstances leading to and cause of the death of on Marimuthu on 13th September 1981, in Police Custody in Manalmedu Police Station, Thanjavur District.(Tamil).

185. Fourth Report of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations of the Committee on Estimates contained in its report in Fisheries Department, 1980-81 (Tamil).

186. Fifth Report of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations of the Committee on Estimates contained in its report on Stationery and Printing, 1980-81. (Tamil).

£ 187. The Tamil Nadu Handloom Workers (Conditions of Employment and Miscellaneous Provisions) Bill, 1981. (L.A. Bill No. 42 of 1981), as passed by the Assembly.

£ 188. The Minimum Wages (Tamil Nadu Amendment) Bill, 1981 (L.A.Bill No.39 of 1981), as passed by the Assembly.



£ 189. The Tamil Nadu Sales Tax (Surcharge) Amendment Bill, 1981 (L.A.Bill No.47 of 1981), as passed by the Assembly.

£ 190. The Tamil Nadu General Sales Tax (Amendment) Bill, 1981 (L.A.Bill No.48 of 1981), as passed by the Assembly.

£ 191. The Indian Stamp (Tamil Nadu Amendment) Bill, 1981 (L.A. Bill No. 50 of 1981), as passed by the Assembly.

£ 192. The Tamil Nadu Payment of Salaries (Amendment) Bill, 1981 (L.A.Bill No.51 of 1981), as passed by the Assembly.

£ 193. Policy Note on Forest Department, 1981-82. (Tamil and English).

£ 194. Performance Budget on Forests, 1981-82. (English).

£ 195. Policy Note on Backward Classes Department, 1981-82. (Tamil and English).

£ 196. Performance Budget on Backward Classes Department, 1981-82. (English).

---

* Laid on the Table of the House on 13th may 1981

£ Circulated to all M.L.Cs. on 13th May 1981.

## இணைப்பு I.

[208 ஆம் பக்கத்தில் குறிப்பிட்ட வினா எண் 294-க்கான விடையைக் காண்க.]

| வரிசை எண். | நகராட்சியின் பெயர். | சட்ட ஆலோசகராக நியமனம் செய்யப்பட்டுள்ள காலம். | வருடாந்திர ஊதியம். | குறிப்புகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | கோயம்புத்தூர் | 3 வருடங்கள் | 900 00 | உரிமை வழக்கு |
| | | 3 ,, | 2,400 00 | குற்ற வழக்கு. |
| 2. | திருச்சிராப்பள்ளி | 3 ,, | 900 00 | |
| 3. | உதகமண்டலம் | 3 ,, | 400 00 | |
| 4. | நாகர்கோவில் | 1 வருடம் | 200 00 | |
| 5. | பொள்ளாச்சி | 3 வருடங்கள் | 500 00 | |
| 6. | கும்பகோணம் | 3 ,, | 250 00 | |
| 7. | வேலூர் | 3 ,, | 720 00 | |
| 8. | சேலம் | 3 ,, | 1,380 00 | |
| 9. | திண்டுக்கல் | 3 ,, | 250 00 | |
| 10. | தர்மபுரி | 3 ,, | 50 00 | |
| 11. | குடியாத்தம் | 3 ,, | 250 00 | |
| 12. | திருவண்ணாமலை | 3 ,, | 200 00 | |
| 13. | வாணியம்பாடி | 3 ,, | 100 00 | |
| 14. | திருப்பத்தூர் | 3 ,, | 250 00 | |
| 15. | திருவெ ற்றியூர் | 3 ,, | 480 00 | |
| 16. | ஆம்பூர் | 3 ,, | — | |
| 17. | காஞ்சிபுரம் | 3 ,, | 720 00 | |
| 18. | இடப்பாடி | 3 ,, | 200 00 | |
| 19. | கோபிசெட்டிப்பாளையம் | 3 ,, | 200 00 | |
| 20. | ஆத்தூர் | 3 ,, | 600 00 | |
| 21. | மேட்டுப்பாளையம் | 3 ,, | 100 00 | |



| வரிசை எண். | நகராட்சியின் பெயர். | சட்ட ஆலோசகராக நியமனம் செய்யப்பட்டுள்ள காலம். | வருடாந்திர ஊதியம். | குறிப்புகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 22. | ராசிபுரம் | 3 வருடங்கள் | 200 00 | குற்ற வழக்கு. |
| 23. | கம்பம் | 3 ,, | — | |
| 24. | பழனி | 2 ,, | 100 00 | |
| 25. | ஸ்ரீரங்கம் | 3 ,, | 150 00 | |
| 26. | தேவகோட்டை | 3 ,, | 200 00 | |
| 27. | காரைக்குடி | 3 ,, | 200 00 | |
| 28. | பரமக்குடி | 3 ,, | 300 00 | |
| 29. | ராமநாதபுரம் | 3 ,, | 50 00 | |
| 30. | சிவகங்கை | 3 ,, | 200 00 | |
| 31. | திண்டிவனம் | 3 ,, | 100 00 | |
| 32. | தஞ்சாவூர் | 3 ,, | 600 00 | |
| 33. | பாளையங்கோட்டை | 3 ,, | 105 00 | |
| 34. | மேலப்பாளையம் | 3 ,, | 300 00 | |
| 35. | ராஜபாளையம் | 3 ,, | 200 00 | |
| 36. | விருதுநகர் | 3 ,, | 300 00 | |
| 37. | ஸ்ரீவில்லிபுத்தூர் | 3 ,, | 200 00 | |
| 38. | மாயவரம் | 3 ,, | 300 00 | |
| 39. | மன்னார்குடி | 3 ,, | 300 00 | |
| 40. | திருவாரூர் | 3 ,, | 400 00 | |
| 41. | நாகப்பட்டினம் | 3 ,, | 300 00 | |
| 42. | பட்டுக்கோட்டை | 3 ,, | — | |
| 43. | சிதம்பரம் | 3 ,, | 250 00 | |
| 44. | கடலூர் | 3 ,, | 720 00 | |
| 45. | விழுப்புரம் | 3 ,, | 150 00 | |

## இணைப்பு II.

(210ம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண் 295-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

(அ) 1979 ஆம் ஆண்டில், வைகை நதியில் ஏற்பட்ட பெரும் வெள்ளத்தினால், விரகனூர் மதகிற்கும், திருப்புவனத்திற்கும் இடையில் உடைப்புகள் ஏற்பட்டு, வீடுகள், தென்னந்தோப்புகள், நெல் வயல்கள் முதலியவை சேதமாயின.

(இ) & (உ) பழுதடைந்த பாசனப் பகுதிகளை, மேலே குறிப்பிடப்பட்ட வகையில், புதுப்பிக்கும் பணிக்காக ரூ. 287 இலட்ச மதிப்பீட்டில் தலைமைப் பொறியாளர் (பாசனம்) ஒரு விரிவான செயற்குறிப்பை அனுப்பி உள்ளார்.

(1) வாய்க்கால்களின் வடிவமைப்பில் மாற்றம் செய்யாமல் மற்றும் ஒழுங்கில் மாறுதல் செய்யாமல், சீரமைக்கும் பணிகள், உடைப்புகளை அடைத்தல், அரிக்கப்பட்ட கரைகளை பலப்படுத்தி நல்ல நிலைக்குக் கொண்டு வருதல், குறைபாடுகளை நீக்குதல் மற்றும் பழுதடைந்த கட்டுமானங்கள், சரிவுக் கற்கள் மற்றும் குறுக்குச் சுவர்களைச் சீரமைத்தல் முதலியன இப் பணிகளில் அடங்கும்.

(2) ஆற்றையொட்டிச் செல்லும் கால்வாயின் சில பகுதிகளின் ஒழுங்கை (alignments) வருங்காலத்தில் வெள்ளச் சேதம் ஏற்படாவண்ணம், மாற்றியமைத்தல். இச்செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

இருந்தபோதிலும், இதற்கிடையில், ஆற்றின் பிரதான பாதையில் நீரை அனுப்புவதால், பாசனத்திற்கு குந்தகம் ஏற்படாது என தலைமைப் பொறியாளர் (பாசனம்) உறுதி அளித்துள்ளார்.



## இணைப்பு III.

[212 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண் 296அ-க்கான விடையைக் காண்க)

*Details of Black Granite Export.*

| | Tonnes. | Value |
|---|---|---|
| | | RS. |
| 1977 | 70,058.25 plus 72Nos. .. .. .. | 15 14 24,434 |
| 1978 | 83,803.100 .. .. .. .. .. | 11,47,35.171 |
| 1979 | 97,568.070 .. .. .. .. .. | 6,32,23,858 |
| 1980 | 51001.402 plus 2Nos. .. .. .. | 4,32,13,622 |

(January to July).

*Details of Black Granite Export for the year 1977.*

| *Serial number and name of the Exporters.* | *Tonnes.* | *Value.* |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | RS. |
| 1 The Prestressed Products Private Limited, Bangalore .. .. .. .. | 216 | 1,05,191 |
| 2 Kwality Monuments, Kuppam .. .. | 868 | 1,10,35,718 |
| 3 Royal Granite, Kuppam .. .. | 130 | 2,92,092 |
| 4 United Granite, Kuppam .. .. | 29 52 Nos. | 65,942 |
| 5 Jupidar Granite, Kuppam .. .. | 85 | 1,85,903 |
| 6 The Indian Granite Art Works, Kuppam. | 235 | 3,93,894 |
| 7 Indian Enterprises, Calcutta .. .. | 231 | 1,02,123 |
| 8 Gobal Trading Co., Madras .. .. | 3,193,31 | 22,29 325 |

*Details of Black granite Export for the year 1977*—cont.

| *Serial number and name of the Exporters.* | *Tonnes.* | *Value.* |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | RS. |
| 9 Pandy Granite, Madras .. .. .. | 4,598,54 | 3,30,08,895 |
| 10 Indian Enterprises, New Delhi .. .. | 583 | 5,09,214 |
| 11 Tapriah & Sons (P) Ltd., Calcutta .. | 707,680 | 3,47,468 |
| 12 Thirumalai Granite, Dharmapuri .. | 130 | 48,800 |
| 13 Hari Brothers, Madras .. .. .. | 132 | 50,492 |
| 14 Obili Granite, Mettur Dam .. .. | 1,689,431 | 7 96 200 |
| 15 Liberty Granite Enterprises, Minnur .. | 389.6 | 2 12 094 |
| 16 Indian Overseas Traders, Bangalore .. | 928 | 4,70,095 |
| 17 Tayaballi Dawood Bhai, Bombay .. | 220 | 1,78,174 |
| 18 Venkateswara Granite, Madras .. .. | Not available. | 31,908 |
| 19 Mayura Trading Co., Bangalore .. | 277 | 1,62,920 |
| 20 Krishna & Associates, Madras .. .. | Not available. | 84,731 |
| 21 Rajmohalli Enterprises, Madras .. | 250 | 1,59,795 |
| 22 Granite Miners, Bangalore .. .. | 115 | 78,279 |
| 23 The Oriental Trading Co. (P) Ltd., Calcutta. | Not available. | 1,90,700 |
| 24 A.D.O. Enterprises, Madras .. .. | Do. | 74,300 |
| 25 Kataric Trading Company, Madras .. | Do. | 3,59,000 |
| 26 V.C. Gurappa, Kuppam .. .. .. | 23 | 30,069 |
| 27 S. Ramaswamy, Tuticorin .. .. | 84 | 47,726 |



*Details of Black granite Export for the year 1977*—cont.

| *Serial number and name of the Exporter.* | *Tonnes.* | *Value.* |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | RS. |
| 28 R. R. Sarma, Madras .. .. .. | Not available. | 1,000 |
| 29 Kurooke Enterprises, Madras .. .. | 40 | 19,744 |
| 30 Rajagopal Granite, Kuppam .. .. | 7 | 9,416 |
| 31 Jain Industries, Kolar Gold Fields. .. | 19 | 38,643 |
| 32 M. S. Granite Industries, Kuppam .. | 7 | 10,779 |
| 33 Sri Suriyakanthi Industries, Bangalore .. | 3 | 9,689 |
| 34 Beeyem Construction Company, Cochin | 45 | 31,321 |
| 35 Southern Granite Corporation, Madras. | 103.96 | 56,269 |
| 36 Viswam Enterprises, Salem .. .. | 509 | 3,61,380 |
| 37 Viswam Enterprises, Bangalore .. .. | 90 | 43,860 |
| 38 Sree Gajana Rice & Oil Mills, Ltd., Mysore. | 50 | 1,49,921 |
| 39 India Granite Company, Kuppam .. | 35 | 1,30,878 |
| 40 Rainbow Granite Polishing Enterprises, Kuppam. | 22 | 34,820 |
| 41 Tamil Nadu Granite Company, Karuru. | 397.51 | 2,43,684 |
| 42 Manjack Home, Bangalore .. .. | 150 | 62,239 |
| 43 Sri Gajana Rice & Oil Mills, Mysore .. | 49.78 | 1,36,692 |
| 44 Five Star Granite, Salem .. .. | 25 | 21,640 |
| 45 Mahearaja Granite, Madras .. .. | 90 | 38,806 |
| 46 the Indian Granite Stone Company **Kuppam.** | **Not** available. | **5,657** |

*Details of Black granite Export for the year 1977—cont.*

| *Serial number and name of the exporter.* | *Tonnes.* | *Value.* |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | RS. |
| 47 Mohan Art & Granite Industries, Robertsonpet. | Not available | 25,433 |
| 48 Beevam Granite Exporting Company, Madras. | 97 | 42,918 |
| 49 R. A. Enterprises, Madras .. .. | 234 | 94,391 |
| 50 Moonstar Mines and Minerals, Karur | 453 | 2,90,272 |
| 51 Gopal Trading Company, Madras. | 265 | 1,64,201 |
| 52 Tamilnadu Granite Company, Madras. | 217 | 1,41,094 |
| 53 Shangridan International, Madras. | 96 | 2,12,786 |
| 54 Sheik Abdul Khadar, Madras .. | 20 | 25,057 |
| 55 Sakthi Enterprises, Attur .. | 205 | 89,090 |
| 56 Minchem Industries, Madras .. | 185 | 81,075 |
| 57 B. M. Overseas Corporation, Madras | 34 | 21,184 |
| 58 Southern Granite Corporation Salem | 475 | 48,467 |
| 59 Granites and Minerals, Bangalore | 123 | 68,189 |
| 60 Tamilnadu Granites Corporation, Hosur. | 748 | 5,54,786 |
| 61 Rambon Granite, Madras | 9 | 14,056 |
| 62 Masilamani Granites, Kuppam | 180 | 17,600 |
| 63 Virgo Granites, Madras .. | 21 | 7,290 |



*Details of Black granite Export for the year 1978—cont.*

| *Serial number and name of the exporter.* | *Tonnes.* | *Value.* |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | RS. |
| 64 Rainbow Granites, Ambur .. | Not available. | 11,755 |
| 65 Vims Granite Corporation, Dharmapuri. | 76 | 37,034 |
| 66 Lens and Taylor (P) Ltd., Calcutta | 26 | 11,997 |
| 67 Bellgems Construction Company, Cochine | 130 | 55,313 |
| 68 Mysore Granites, KGF .. .. | 14 | 25,415 |
| 69 Nippon Impex Company, Madras .. | 395 | 1,83,804 |
| 70 Karthik Exporters, Madras .. | 247 | 1,39,508 |
| 71 Thirumathi Granites Madras .. | 76 | 33,351 |
| 72 Hind Nippon Bysellers Madras .. | 1,955,381 | 13,33,928 |
| 73 Luna Mining Company, Salem .. | 100 | 42,907 |
| 74 Associated Mica Exporters, Gudur | 43 | 29,594 |
| 75 Tamilnadu Handicraft Development Corporation. | 0-123 | 16,580 |
| 76 Garden Woodroffe and Company Madras. | 0-790 | 20,171 |
| 77 Hind stone Madras .. .. | 125 | 43,815 |
| 78 Venus Granite Corporation Dharmapuri. | 97 | 64,821 |
| 79 Tamilnadu Granite and Company Balchapet. | 90 | 43,825 |
| 80 Eastern Producers Company, Madras | 40 | 23,366 |
| 81 Venus Granites Madras .. | 110 | 41,956 |
| 82 Vijai Mines and Minerals, Tiruppur | 6,423 | 2,28,95,690 |

*Details of Black granite Export for the year 1977—cont.*

| Serial number and name of the Exporter. (1) | Tonnes. (2) | Value. (3) |
|---|---|---|
| | | RS. |
| 83 Superfine Granite Art Corporation Kuppam. | 302 | 3,31,471 |
| 84 Enterprising Enterprises, Madras .. | 3656·3 | 18,34,813 |
| 85 Jay Prestressed Products (P) Limited Bangalore. | 2,889 | 1,16,92,435 |
| 86 Uma Mining Corporation, Salem .. | 749 | 3,69,251 |
| 87 Kavitha Granites, Dharmapuri .. .. | 1265.8 | 6,96,925 |
| 88 The Paradise Granite Art Corporation, Bangarpet. | 60.20 Nos. | 1.65,035 |
| 89 The Indian Granite Stone Company, Kuppam. | 7·5 | 7,300 |
| 90 Evershire Granites, Kuppam .. .. | 2,180 | 1,13,06,218 |
| 91 Anna Granite Works, Karur .. .. | 829 | 4,58,266 |
| 92 Gopal Granites, Salem .. .. .. | 2,913 | 14,61,428 |
| 93 Anna Granite Works, Madras .. .. | 164 | 63,795 |
| 94 Anna Enterprises, Attur .. .. .. | 153 | 20,510 |
| 95 Dalmia Agencies (P) Ltd., Madras .. | 1,203 | 5,21,270 |
| 96 Expogran India, Madras .. .. | 595 | 2,53,301 |
| 97 Gem Granites, Madras .. .. .. | 5666·98 | 3,31,82,262 |
| 98 Dharmapuri Granite Corporation Dharmapuri. | 779 | 3,92,633 |
| 99 Akarwal Investment Co., (P) Ltd., Bangalore .. .. .. .. | 1,989 | 10,28,468 |
| 100 Mettur Granites, Mettur Dam .. | 21 001 | 9,92 791 |
| 101 Expo Granites, Madras .. .. | 50 | 18.785 |



*Details of Black granite Export for the year 1977—cont.*

| Serial number and name of the Exporters. (1) | Tonnes. (2) | Value. (3) |
|---|---|---|
| | | RS. |
| 102 Indian Furniture Works, Bangalore .. | 592.206 | 2,63,129 |
| 103 Balaji Granites, Bangalore .. .. | 451.45 | 2,06,808 |
| 104 Galaxy Enterprises, Madras .. .. | 2124.960 | 13,12,844 |
| 105 Hind Nippon Rural Industries (P) Ltd. Bangalore. | 4,923 | 25,55,001 |
| 106 Mass International, Madras .. .. | 2169·5 | 12,39,995 |
| 107 Regal Granites and Stone Polishing Works. Ambur. | 974 | 5,41,378 |
| 108 Narayanasamy and Sons, Bangalore .. | 57 | 1,75,258 |
| 109 Mysore Granites, Andersonpet .. .. | 69 | 1,24,563 |
| 110 Copex Corporation, Salem .. .. | 1,018 | 4,97,431 |
| 111 Srinivas Granites, Madras .. .. | 97 | 40,760 |
| 112 Oriental Select Granites, Bangalore .. | 55 | 69,245 |
| Total quantity Exported .. .. | 70058.251 Tonnes — 72 Numbers. | |
| Total Value .. .. | | 15,14,24,434 |

*Details of Black Granite Export for the year 1978.*

| | | |
|---|---|---|
| 1 Jupiter Granites, Kuppam .. .. | 132·148 | 67,204 |
| 2 Tapriah and Sons (P) Ltd., Calcutta .. | 565·003 | 1,69,502 |
| 3 The Brez International, Vellore .. .. | 920·00 | 5,18,593 |

*Details of Black granite Export for the year 1978—cont.*

| *Serial number and name of the exporters.* (1) | *Tonnes.* (2) | *Value.* (3) RS. |
|---|---|---|
| 4 Royal Granites, Kuppam .. .. | 460.241 | 3,66,243 |
| 5 Jain Industries, K.G.F. .. .. .. | 117,680 | 72,680 |
| 6 Thirumalai Enterprises, Salem .. .. | 128.000 | 1,28,398 |
| 7 Haj Exports, Madras .. .. .. | 42 | 26,760 |
| 8 United Granites .. .. .. .. | 9 | 22,306 |
| 9 Rajagopal Granites, Kuppam .. .. | 26,244 | 39,768 |
| 10 Liberty Granites Enterprises, Minnur .. | 405.975 | 2,28,525 |
| 11 Raj Exports, Madras .. .. .. | 347.88 | 1,76,495 |
| 12 Pcstressed Produc's, Bangalore .. | 156 | 1,24,544 |
| 13 Pondy Granites, Madras .. .. | 4326.51 | 35,52,638 |
| 14 Mayura Traders, Bangalore .. .. | 2378 | 5,65,594 |
| 15 Seema International, Madras .. .. | 654 | 226,627 |
| 16 Indian Overseas Corporation, Madras.. | 73 | 40·888 |
| 17 Tiffin Barytes and Asbestos and Paints, Madras. | 177 | 39,900 |
| 18 Obili Granites, Salem .. .. .. | 1152 | 6,26,068 |
| 19 Thirumalai Granites, Dharmapuri .. | 411 | 19,257 |
| 20 Hind Nippon By Sellers, Madras .. | 552·06 | 2,54,032 |
| 21 Viswam Granites, Madras .. .. | 192 | 1,34,163 |
| 22 Mehta Associates Enterprises, Madras | 13·5 | 14,850 |
| 23 V. C. Guruppa, Kuppam | 63 | 9,120 |
| 24 M. S. P. Enterprises, Madras .. .. | 46 | 24,950 |
| 25 Viswam Enterprises, Salem .. .. | 3,397·005 | 18 83,967 |
| 26 Minchem (India) International, Madras | N.A. | 1,66,547 |
| 27 Indian Furniture Works, Bangalore .. | 540 | 2,40,290 |
| 28 V. S. V. Granites, Bangalore .. .. | 187 | 1,13,568 |
| 29 Moon Star Mines and Minerals, Karur | 407 | 3,29,156 |
| 30 Moon Star Mines and Minerals, Hosur | 89 | 57,570 |
| 31 Granite India (P) Ltd., Madras .. .. | 45 | 26,472 |
| 32 Industrial Mines Corporation, Salem .. | 245 | 1,21,394 |
| 33 Kwality Monuments, Kuppam .. .. | 1,528·164 | 14,33,264 |
| 34 Sakthi Enterprises, Attur .. .. | 213 | 75,849 |
| 35 Hari Brothers, Madras .. .. .. | 56 | 35,273 |
| 36 B.M. Overseas Corporation .. .. | 117 | 70,815 |
| 37 S. Ramasamy, Tuticorin .. .. .. | 95 | 58,821 |
| 38 Suryakanthi Industries, Bangalore .. | 45 | 23,802 |
| 39 Trivandrum Granite Corporation, Kaveripattinam | 49 | 39,905 |
| 40 TANSI, Madras .. .. .. .. | 2,021·739 | 11,75,038 |
| 41 Tamil Nadu Granite Corporation, Dharmapuri | 89 | 57,339 |
| **42 R. A. Enterprises, Madras .. ..** | **469** | **2,51,366** |

Details of Black granite Export for the year 1978—cont.

| Serial number and name of the exporter. (1) | Tonnes. (2) | Value. (3) RS. |
|---|---|---|
| 43 Global Trading Corporation, Madras .. | 5,698 | 48,11,800 |
| 44 Ub.s l Trading Corporation, Madras .. | 225 | 71,569 |
| 45 The Indian Granite Co., Kuppam .. | 72·941 | 86,054 |
| 46 The Indian Granite Art Corporation, Kuppam .. .. .. .. | 90·092 | 1,65,127 |
| 47 Mohan Art Granite Corporation, KGF | 52·11 | 97,780 |
| 48 Indian Granite Exporters, Madras .. | 500·6 | 36,258 |
| 49 Oriental Granite, Bangalore .. .. | 12 | 23,624 |
| 50 V. R. Muralidhar, Kuppam .. .. | 18 | 34,626 |
| 51 Granite Industries, K.G.F. .. .. | 7 | 12,475 |
| 52 The Indian Granite Stone Corporation, Kuppam | 24 | 26,100 |
| 53 Geeth Granites, Madras .. .. | 231 | 1,74,597 |
| 54 Indian Granite Works, Kuppam .. | 44 | 1,58,419 |
| 55 Kosar Mining and Polishing Industries, Dharmapuri. | 540 | 2,65,536 |
| 56 Rainbow Granites, Ambur .. .. | 8 | 16,943 |
| 57 Granites and Minerals, Bangalore .. | 47 | 85,005 |
| 58 Suresh Trading Company, Ambur .. | 228 | 1,52 214 |
| 59 S. P. A. Exporters, Madras .. .. | 100 | 70,219 |
| 60 Southern Enterprises, Madras .. .. | 86 | 46,728 |
| 61 Carz h Company, Madras .. .. | 55 | 29,491 |



Details of Black granite Export for the year 1978—cont.

| Serial number and name of the exporter. (1) | Tonnes. (2) | Value. (3) RS. |
|---|---|---|
| 62 Mining Gas Exporters, Vijayawada .. | N.A. | 49,075 |
| 63 Vindy Rocks and Minerals Corporation Vijayawada. | 80 | 78,694 |
| 64 Goravay Enterprises, Madras .. .. | 159,999 | 1,51,403 |
| 65 Navarat Corporation, Madras .. .. | 80 | 43,555 |
| 66 Deccan Mining Corporation, Salem .. | 1432.2 | 8,72,595 |
| 67 ABR Exports, Bangalore .. .. | 40'.00 | 2,05,145 |
| 68 Hindustan Monumental Corporation, Bangarpet. | 30 | 72,517 |
| 69 S. M. Syed Mubarak, Karur .. .. | 353 | 1,66,764 |
| 70 Abdul Trading Company, Madras .. | 2,014 | 4,08,425 |
| 71 Rameshkumar, Madras .. .. .. | 157 | 34,247 |
| 72 Mini Granite Enterprises, Vijayawada .. | 119 | 73,230 |
| 73 International Export House, Madras .. | 255 | 7,38,650 |
| 74 Minerals and Metals Trading Corporation, Madras. | N.A. | 20,650 |
| 75 The Golden Granites, Kaveripattinam .. | 68.98 | 36,203 |
| 76 Chara Granites Corporation, Madras .. | 575 | 455,052 |
| 77 Karthik Exports, Dharmapuri .. .. | 335.667 | 2,14,478 |
| 78 Gem Granites, Madras .. .. .. | 6,665.72 | 5,57,52,521 |
| 79 Mass Internation, Madras .. .. | 1,161 | 12,49,022 |
| 80 Copex Corporation, Salem .. .. | 1,061 | 5,34,684 |

*Details of Black granite Export for the year 1978*—cont.

| *Serial number and names of the exporter.* (1) | *Tonnes.* (2) | *Value.* (3) Rs. |
|---|---|---|
| 81 Balaji Granites, Bangalore .. .. | 80 | 1,18,807 |
| 82 V. S. V. Granites, Madras .. .. | 40 | 22,667 |
| 83 Indian Overseas Traders, Madras .. | 733 | 3,52,748 |
| 84 Hind Nippon Rural Industries, Bangalore. | 6,425.426 | 43,45,948 |
| 85 Agarwal Investments, Bangalore .. | 201 | 91,729 |
| 86 Mettur Granites, Mettur Dam .. .. | 2,138.143 | 11,96,268 |
| 87 Ramesh Brothers, Bangalore .. .. | 109 | 65,093 |
| 88 Yims Granites Corporation, Dharmapuri | 370.75 | 1,78,879 |
| 89 Indian Enterprises, New Delhi .. | 505 | 3,14,346 |
| 90 Galaxy Enterprises, Madras .. .. | 2,109 | 16,76,894 |
| 91 Regal Granites, Kuppam .. .. | 195 | 1,67,970 |
| 92 Narayanaswamy and Sons, Bangalore .. | 44 | 1,30,862 |
| 93 Nippon Impex Company, Madras .. | 336 | 1,04,041 |
| 94 Mysore Granites, K.G.F. .. .. | 105 | 1,64,228 |
| 95 Oriental Select Granites, Bangalore .. | 65.937 | 1,13,549 |
| 96 Evershine Granites, Kuppam .. .. | 1,479.8 | 74,405 |
| 97 Eastern Produce Company, Madras .. | 269 | 1,41,909 |
| 98 Vijay Mines and Minerals, Tiruppur .. | 7,733.63 | 39,84,402 |
| 99 Jay Prestressed Products, Bangalore .. | 3,098.595 | 22,13,610 |



*Details of Black granite Export for the year 1978*—cont.

| *Serial number and name of the Exporters.* (1) | *Tonnes.* (2) | *Value. rupees.* (3) RS. |
|---|---|---|
| 100 Enterprising Enterprises, Madras .. | 5,453 | 41,37,686 |
| 101 Kavitha Granites, Madras .. .. | 543 | 2,73,622 |
| 102 Anna Granites, Karur .. .. .. | 430 | 1,72,494 |
| 103 Gopal Granites, Salem .. .. .. | 2,429.341 | 1,14,96,931 |
| 104 Uma Mining Company, Salem .. .. | 848.32 | 4,09,229 |
| 105 Super Fine Granite Art Corporation, Kuppam. | 1,512 | 3,17,165 |
| 106 Dharmapuri Granite Corporation, Dharmapuri. | 1,235 | 7,41,444 |
| 107 The Paradise Granite Art Corporation, Bangarpet. | 73.86 | 1,39,881 |
| 108 Dalmia Agencies (P) Ltd., Madras .. | 707.84 | 4,51,395 |
| Total Quantity Exported .. .. | 83,803.100 | Tonnes. |
| Total Value .. .. .. RS. | 11,47,35,171 | |

**DETAILS OF BLACK GRANITE EXPORT FROM MADRAS PORT DURING 1979.**

| *Serail number and names of Firms which exported black granite.* (1) | *Quantity exported (Tonnes.)* (2) | *Value.* (3) Rs. |
|---|---|---|
| 1 Agarwal Investment Co. (P) Ltd., Bangalore. | 363·000 | 2,36,111 |
| 2 Anna Enterprises, Attur .. .. .. | 285.000 | 1,14,020 |
| 3 Anna Granite Works, Karur .. .. | 805·675 | 3,93,540 |

*Details of Black granite Export for the year 1978—cont.*

| *Serial number and names of Firms which exported black granite.* | *Quantity exported (Tonnes).* | *Value.* |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | *Rs.* |
| 4 Balaji Granites, Bangalore .. .. | 144.000 | 1,05,960 |
| 5 B. M. Overseas Corporation, Madras .. | 111.000 | 63,947 |
| 6 Bright 'O' Granites, Kuppam .. .. | 0.500 | 1,460 |
| 7 Chera Granites, Madras .. .. .. | 9,570.28 | 83,78,220 |
| 8 D lmi Agencies (P) Ltd., Madras .. | 207.000 | 1,17,864 |
| 9 Deccan Mining Corporation, Salem .. | 344.018 | 41,06,862 |
| 10 Eastern Granites Co., Madras .. .. | 71.570 | 43,569 |
| 11 Eastern Produce and Co., Madras .. | 665.000 | 4,51,370 |
| 12 Enterprising Enterprises, Madras .. | 1,301.121 | 50,08,666 |
| 13 Enterprising Exporters, Madras .. .. | 480.950 | 3,72,004 |
| 14 Evershine Granites, Kuppam .. .. | 610.526 | 4,54,405 |
| 15 Evershine Monuments, Bangalore .. | 94.080 | 81,859 |
| 16 Gem Exports, Madras .. .. .. | 335.000 | 3,60,190 |
| 17 Gem Granites, Madras .. .. .. | 7,417.42 | 69,06,688 |
| 18 Galaxy Enterprises, Madras .. .. | 1,955.545 | 23,83,356 |
| 19 Gobal Trading Co., Madras .. .. | 383.511 | 1,61,614 |
| 20 Gopal Granites, Salem .. .. .. | 1,800.500 | 1,35,951 |
| 21 Gopal Trading Corporation, Madras .. | 180.000 | 1,35,972 |
| 22 Gopex Corporation, Salem .. .. | 1,890.590 | 14,15,275 |



*Details of Black granite Export for the year 1978—*

| *Serial number and names of Firms which exported black granite.* | *Quantity exported (Tonnes).* | *Value.* |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | *Rs.* |
| 23 Hind Nippon Rural Industries (Private) Limited, Bangalore. | 41,167·541 | 39,59,407 |
| 24 Indian Furniture Works, Bangalore .. | 314·855 | 1,93,902 |
| 25 Indian Granites, Madras.. .. .. | 50·000 | 33,338 |
| 26 Indian Enterprises (Private) Limited, New Delhi. | 1,174·000 | 9,25.582 |
| 27 International, Madras .. .. | 134·000 | 92,899 |
| 28 Jagson International, Delhi .. .. | 51·000 | 23,035 |
| 29 Jay Prestressed Products Limited, Bangalore. | 2,125·855 | 22,55,362 |
| 30 Jupitar Granites, Kuppam .. .. | 56·950 | 1,34,239 |
| 31 Kareem and Sons (Private) Limited, Bangalore. | 100·000 | 64,464 |
| 32 Karthik Exports, Dharmapuri .. .. | 715.625 | 4,91,336 |
| 33 Katti Mix, Madras.. .. .. .. | 691·000 | 5,78,318 |
| 34 Khamam Granites Limited, Madras .. | 163·000 | 1,15,899 |
| 35 K sar Mining and Polishing Industries, Krishnagiri. | 308·59 | 1,50,528 |
| 36 Kwality Monuments, Kuppam .. .. | 387·81 | 4,90,733 |
| 37 Maguam I. N. C., Madras .. .. | 26·000 | 90,760 |
| 38 Mahesh Kumar Singh, Madras .. | 72·000 | 43,128 |
| 39 Majestic Minerals Supplies, Salem .. | 631·000 | 3,06,402 |

| Serial number and names of Firms which exported black granite. | Quantity exported (Tonnes). | Value. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | Rs. |
| 40 Mass International, Madras .. .. | 968·3 | 6,08,126 |
| 41 Mayura Trading Company, Bangalore | 380·352 | 2,04,237 |
| 42 Mettur Granites, Mettur Dam .. .. | 2,528·15 | 12,32,269 |
| 43 Moonstar Mines and Minerals, Harur .. | 532·500 | 4,46,633 |
| 44 M. S. Granites Industries, K.G.F. .. | 9·000 | 23,556 |
| 45 Mysore Granites, Mettur Dam .. .. | 629·000 | 3,15,632 |
| 46 Mysore Granite Works, K.G.F. .. | 56·064 | 1,93,581 |
**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** துணைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரத்தைப் பொறுத்த வரையிலும், கிங் இன்ஸ்டிடியூட்டைப் பொறுத்த வரையிலும், இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பே அறிக்கைகள் வந்து விட்டன. அதிலே ஒன்றும் தவறு கிடையாது. அது மட்டுமல்லாமல் இன்னுமொரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். 'மல்டி டோஸ் வையல்' என்பது பத்து டோஸ் இருக்கக் கூடியது. அதை பத்து நோயாளிகளுக்குப் போடுகிறோம். 9 நோயாளிகள் நன்றாக இருக்கிறார்கள். ஒருவருக்குத்தான் இப்படி ஏற்பட்டிருக்கிறது. மல்டி டோசிலே சௌகரியம் இருக்கிறது. மருந்திலே கோளாறு கிடையாது. காஞ்சிபுரத்திலுள்ள முதுநிலை மருந்து ஆய்வாளரும், கிங் இன்ஸ்டிடியூட்டும் பார்த்துவிட்டுச் சரியாக இருக்கிறது என்று இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பே தகவல் கொடுத்திருக்கிறார்கள். லேடஸ்ட் இன்பர்மேஷன் வேண்டுமென்று தொலைபேசியின் மூலமாக நானே கேட்டு வாங்கியிருக்கிறேன். மகாராட்டிர மாநிலத்திலிருந்து தகவல் வரவில்லை. இந்த மருந்தைப் போட்ட மற்றவர்களுக்கு எந்தவிதமான ஆபத்தும் ஏற்படவில்லை என்பதால், மருந்திலே தவறில்லை. துரதிருஷ்டவசமாக இந்த குறிப்பிட்டவருக்கு ஏற்பட்ட 'அனஃபலிட்டிக் ஷாக்' தான் காரணம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன்:** துணைத் தலைவர் அவர்களே, இந்த நோயாளிக்கு 1977 முதல் ஸ்ட்ரொப்டோமைசின் பென்சிலின் ஊசி போடப் பட்டுள்ளதாக அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், மருத்துவ மனையின் ஆபீஸ் ரிக்கார்டில் 1977 ஆம் ஆண்டிலிருந்து போடப்பட்டதாகக்





குறிப்பிடப்பட்டிருக்கிறதா? இது உண்மைதானா என்று மேலதிகாரிகள் 'செக்' பண்ணியிருக்கிறார்களா? ஏனென்றால் ஏன் டெஸ்ட் டோஸ் போடவில்லையென்று கேட்டதற்கு, இந்த நோயாளிக்கு 1977 ஆம் ஆண்டு முதல் போடப்பட்டிருக்கிறது என்ற காரணத்தைச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பிட்ட டாக்டர் சொல்லுவதை மாத்திரம் கேட்டுக்கொள்ளாமல், ஆஸ்பத்திரியில் உள்ள ரிக்கார்டுகள் அப்படிக் காட்டுகிறதா என்பதை மேலதிகாரிகள் 'செக்' பண்ணிப் பார்த்தார்களா என்பது ஒரு கேள்வி.

அடுத்து, இப்படிப்பட்ட ஊசியை பல மாதங்களாகப் போட்டுக் கொண்டுவந்தாலும், அதனால் ஏதாவது 'ரீயாக்ஷன்' வேறு மாற்றங்கள் ஏற்பட்டிருக்கிறதா என்பதைப் பார்த்திருக்க வேண்டும். 6 மாதங்களுக்கு முன்பு போட்ட ஊசியால் இப்போது ஏதாவது 'ரீயாக்ஷன்' ஏற்பட்டிருக்கலாம். ஏனென்றால் இந்த இரண்டு மருந்துகளையும் சேர்த்துப் போட்டால், நிச்சயம் சாவு வரும், அங்குள்ள மருந்து அதிகாரிகளின் சக்திக்கு மீறியது என்று சொல்லக்கூடிய அளவிற்கு சக்தி வாய்ந்தது அந்த மருந்து என்று சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட நிலைமை இருக்கும்போது, குறிப்பிட்ட நோயாளியினுடைய உடம்பில் 'டிட்டீரியோரேஷன்' ஏற்பட்டிருக்கிறதா என்று தெரியாத நிலைமை வந்தால், இனிமேல் இப்படிப்பட்ட இன்ஜெக்ஷன்களைப் போடும்போது, டெஸ்ட் ஊசி போட்டுத்தான் பார்க்க வேண்டும். ஆகவே, இந்த இரண்டு மருந்துகளையும் சேர்த்துப் போட்டால் சாவு உண்டாகக் கூடிய ஆபத்து இருப்பதால், டெஸ்ட் ஊசி போட்ட பிறகு தான் ஊசியைப் போட வேண்டுமென்று திட்டவட்டமாக உத்தரவு போடப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் இரண்டு கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். ஸ்ட்ரெப்டோமைசின் பென்சிலின் மருந்து ஏற்கெனவே இந்த நோயாளிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கூறுகிறார்களே, அது உண்மையா என்பதைப் பற்றி மேலதிகாரிகள் மருத்துவ மனையில் உள்ள ரிக்கார்டுகளைப் பரிசீலனை செய்தார்களா என்று கேட்டிருக்கிறார். இந்தச் சம்பவம் நடந்தவுடனே அவர்கள் சொன்ன காரணத்தை ஏற்றுக்கொள்ளாமல், மேலதிகாரியிடத்திலே இதைச் சொல்லிப் பார்க்கச் சொன்னேன். என்னுடைய சுபாவமே எதைச் சொன்னாலும் உடனே நம்புவதில்லை என்பதுதான். நானே 'செக்' பண்ணிய பிறகுதான் எனக்கு நம்பிக்கை

வருகிறது. இவ்வளவு அவநம்பிக்கையுடன் இருக்கிறாரே அமைச்சர் என்று கூட என் மீது குற்றம் சாட்டுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் தெரிவித்த அதே உரையின் அடிப்படையிலே நானே அதைப் பார்த்து திருப்தியடைந்திருக்கிறேன். அது உண்மைதான்.

இரண்டாவதாக, ஒரு நோயாளிக்கு ஏற்கெனவே இந்த மருந்து ஊசி போடப்பட்டிருந்தாலும்கூட, 'டெஸ்ட் டோஸ்' போட வேண்டும் என்றும், அதைச் செய்வார்களா என்றும் கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே இந்த மருந்து போடப்பட்டிருந்தாலும்கூட, டெஸ்ட் ஊசி போடுவதால் நமக்குப் பலன் கிடைக்கிறதோ இல்லையோ, நம்முடைய திருப்திக்காக, There is no human failure என்ற வகையிலே நிச்சயமாகச் செய்யப்படும் என்ற வாக்குறுதியை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(5) தமிழ் நாட்டிலிருந்து கேரள மாநிலத்திற்குச் செல்கிற லாரிகளில் பொருட்களை ஏற்றி இறக்குவதற்கான கூலி சம்பந்தமாக தகராறு ஏற்பட்டதையொட்டி கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பதட்ட நிலை குறித்து.**

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"தமிழ்நாட்டிலிருந்து கேரள மாநிலத்திற்குச் செல்கிற லாரிகளில் பொருட்களை ஏற்றி இறக்குவதற்கான கூலி சம்பந்தமாக தகராறு ஏற்பட்டதையொட்டி கன்னியாகுமரி மாவட்டம் போன்ற எல்லைப் பகுதிகளிலிருந்து மே 3 ஆம் தேதி முதல் லாரிகள் கேரளத்திற்குச் செல்லாததையொட்டி தொழிலாளர்களுக்கு வேலை இல்லாமை, பொது மக்களுக்குப் பொருட்களை எடுத்துச் செல்ல முடியாமை போன்ற நிலை ஏற்பட்டுள்ளதால் உருவாகியுள்ள பதட்ட நிலை குறித்து."

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவை முன் வைக்கப் பட்டிருக்கிறது. அதிலே ஒரு சின்ன திருத்தம். அதிலே இரண்டாவது

---

@ 442-444 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது





பக்கத்திலே கேரள முதலமைச்சர் அவர்கள் 13—5—1981 அன்று கோவைக்கு வந்து பேச்சுவார்த்தை நடத்துவதாக இருக்கிறார் என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே 13—5—1981 அன்று கேரள முதலமைச்சர் கோவைக்கு வந்திருந்தார். கோவை மாவட்ட லாரி சொந்தக்காரர்கள் சார்பாக பிரதிநிதிகளோடு விவாதித்தார். 16—5—1981 அன்று திருவனந்தபுரத்தில் இருக்கின்ற லாரி சொந்தக்காரர்கள் பிரதிநிதிகளோடு அங்கேயிருக்கின்ற தொழிலாளர் நல அமைச்சர் விவாதிப்பார் என்று சொல்லி அவர் சென்றிருக்கிறார்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலேயுள்ள லாரி சொந்தக்காரர்கள் இந்தப் பிரச்சினையையொட்டி ஸ்ட்ரைக் செய்திருக்கிறார்கள். இந்தப் பிரச்சினைக்கு முடிவு வர வேண்டுமென்பதற்காக, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்ற லாரி சொந்தக்காரர்கள் பொது மக்கள் தங்கள் தேவைக்காக பஸ்களிலும், இரயில்களிலும் மளிகைச் சாமான்களையும், காய்கறிகளையும் எடுத்துச் செல்வதைத் தடுக்கிறார்கள். அப்படித் தடுத்தால்தான், அரசு தலையிடுமென்ற வகையிலே சாதாரண பொது மக்கள் எடுத்துச் செல்கிற மளிகைச் சாமான்கள், காய்கறிகள் போன்றவற்றைத் தடுத்து நிறுத்தி, அடித்துப் பிடுங்கியிருக்கிறார்கள் என்று கன்னியாகுமரி மாவட்டத்திலே பேசப்படுகிறது. போலீசில் கூட புகார்கள் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அந்த அளவிற்குக் கன்னியாகுமரியில் உள்ள லாரி சொந்தக்காரர்கள், சமூக விரோதிகளைப் பயன்படுத்திக்கொண்டு பொருள்களைப் பறிக்கிறார்கள் என்று ரிப்போர்ட் வந்திருக்கிறது. அது பற்றி அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** துணைத் தலைவரவர்களே, பிரச்சினை என்று வருகிறபோது, இரண்டு பக்கமும் அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடக்கின்றன. உதாரணமாக, தொழிற் சங்கங்கள் போராட்டத்தை அறிவிக்கிறபோதுகூட, இப்படிப்பட்ட சூழ்நிலைகளுக்கு ஏதோ காரணத்தாலே ஆளாக்கப்படுகிறார்கள். எனவே, அவர்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள சில பாதகமான நடவடிக்கைகள் எடுக்கும் சூழ்நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கின்ற முழு விவரமும் என்னிடம்

இல்லையென்றாலும், கொடுத்திருக்கிற விவரங்களையொட்டி கண்காணிக்க தேவையான அறிவிப்புகளை அரசாங்க அதிகாரிகளுக்குக் கொடுக்க முடியும்.

கேரளாவிலே இருக்கின்ற பிரச்சினை நாமும் சிந்தித்துப் பார்க்க வேண்டிய பிரச்சினையாக இருக்கிறது. இங்கிருந்து போகக்கூடிய லாரிகளுக்கு அபாயம் இருக்கிறதென்று அங்கிருந்து வந்திருக்கக் கூடிய நண்பர்கள் சொன்னார்கள். எனவே, கேரள அரசோடு பேசி சுமுகமான உறவை ஏற்படுத்த வேண்டுமென்று நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல சம்பவங்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலே நடந்திருக்குமானால், தகுந்த நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யலாம்.

**திரு. ஆ. நல்லசிவன் :** துணைத் தலைவரவர்களே, இந்த மாதிரி லாரி சொந்தக்காரர்கள் பண்ணுகிறார்களே என்று சொல்கிறபோது, தொழிற் சங்கங்களிலும் இப்படிப் பண்ணுகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுவது சரியாகப்படவில்லை. அப்படிப்பட்ட முறை தொழிற் சங்கத்தில் நடந்தாலும், கண்டிக்கக் கூடியதுதான். தமிழ் நாட்டிலுள்ள கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்தப் பிரச்சினைக்கு முடிவு வேண்டும் என்பதற்காக லாரி சொந்தக்காரர்கள் தங்கள் கையில் சட்டத்தை எடுத்துக் கொண்டு பொது மக்கள் சாமான்களைப் பறிக்கிறார்கள் என்றால், கேரளாவிலே பிரச்சினை அப்படி இருக்கிறது, வேறு வழியில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லுவது, லாரி சொந்தக்காரர்களுக்கு வக்காலத்து வாங்குவது போல ஆகாதா ? கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள லாரி சொந்தக்காரர்கள் தைரியமாக மறியலில் ஈடுபடும் அபாயம் ஏற்படும். ஆகவே, அப்படிப்பட்ட நிலை வரக்கூடாது என்று சொல்லுகிறேன். ஆகவே, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், கன்னியாகுமரி மாவட்டத்தில் செல்கின்ற லாரி சொந்தக்காரர்களின் போக்கை நிறுத்த அரசு முன்வருமா ? மே 1 ஆம் தேதி முதல் கடந்த 15 நாட்களாக இது நடைபெறுகிறது. ஆனால், அரசுக்குத் தகவல் இல்லையென்று சொல்லுகிறார்களே. அது எப்படி சரியாக இருக்குமென்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-30)

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அங்கத்தினர் அவர்கள்தான் தொழிற் சங்க வாதி, நாங்கள்



எல்லாம் தொழிற் சங்க வாதிகள் அல்ல என்பது போலப் பேசுகிறார்கள். நான் இப்போது தொழிற் சங்கத்திலே இருப்பவர்களைப்பற்றிக் குறை கூறுவதற்காகச் சொல்லவில்லை. அந்தப் பிரச்சினை தீர வேண்டும். யாருக்காக என்று செய்ய வேண்டியதில்லை. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அப்படிப்பட்ட நிலைமைகள் வந்திருக்கின்றன. அதன் காரணமாகத்தான் அந்தப் பிரச்சினையில் தீவிரமாக அணுக வேண்டும், அதன்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கருதுகிறோம். இந்த நேரத்தில் அந்தப் பிரச்சினைகள் தீர கேரள அரசோடு பேசியிருக்கிறோம். அதன்மீது நடவடிக்கை எடுத்தும் இருக்கிறோம். லாரி சொந்தக்காரர்கள், அதிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் இன்னும் அதிகமாகத் தொல்லை கொடுத்தால், அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்தும் தமிழகத்திலே இருந்தும் லாரிகளிலே செல்கின்ற சாமான்களைக் கேரளாவிலே கொண்டுபோய் இறக்கும்போது, அங்கே வாடகை கேட்பவர்கள், பேரம் பேசியிருக்கின்றார்கள். அவர்கள் அந்த வாடகையைக் கொடுக்க மறுத்தால், அந்த லாரியின் சக்கரத்தில் உள்ள காற்றை எடுத்துவிடுகிறார்கள். அதனால் லாரிக்காரர்கள் அங்கேயிருந்து போக முடியாத நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. அது குறித்து லாரிக்காரர்கள் தகவலைத் தெரிவித்திருக்கிறார்கள். அதைப் பொறுத்து இந்த அரசு என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றது ? தமிழ் நாட்டிலிருந்து கேரளத்திற்குச் செல்லும் பயணிகள், இத்தகைய சூழ்நிலையில் அவர்களுடைய சொந்த சாமான்களை தாங்களே தூக்கிக் கொண்டு போனாலும், அவர்களுக்கு வேண்டிய கூலியைக் கொடுங்கள் என்று கேட்கிறார்கள் என்றும் சொல்கிறார்கள். ரூபாய் ஏழு விலையுள்ள பலாப்பழத்தை எடுத்துச் செல்ல ரூ. 10 கேட்கிறார்கள். அந்தப் பலாப்பழத்தை, கூலி கொடுக்க முடியாததால், அவர்களையே வைத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னாலும் ஒப்புக்கொள்வதில்லை. இப்படிப்பட்ட தொல்லைகள் ஏற்பட்டிருக்கின்றன. அதைப்பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது. அரசு அதன் மீது என்ன நடவடிக்கைகள் எடுத்தது ? பொதுமக்கள் இந்தவிதமான நிகழ்ச்சிகளால் இடர்ப்படுகிறார்கள் என்பதை அரசு உணருமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்ன கருத்துக்கள் எங்களுக்கு மனுக்களாக வந்திருக்கின்றன. அதைப் பற்றிச் சொல்லியும் இருக்கிறார்கள். இரண்டு பக்கத்திலும் விசாரித்தால் தான், உண்மை தெரியும். ஒரு பக்கத்திலேயிருந்து வருகின்ற கருத்துக்களை வைத்து நிச்சயிக்க முடியாது. எதுதான் உண்மை என்பதை ஏற்றுக்கொள்கின்ற சூழ்நிலைகள் வரவேண்டும் என்ற அடிப்படையில்தான், நாம் கேரள அரசோடு பேசி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னேன். நம் தலைமைச் செயலாளர், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் எல்லாம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேசி தீர்வு காண வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அங்கத்தினர்கள் சொன்ன பிரச்சினைகள் இருந்தால், இரண்டு அரசும் சேர்ந்து பேசித் தான் தீர்க்க வேண்டும். நான் தனியாகப் பதில் சொன்னதனால் மட்டும் தீர்வு ஏற்படும் என்ற நம்பிக்கை இல்லை. இன்னும் பேச வேண்டும். பேச்சுவார்த்தைகளின் மூலம்தான் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** அங்கு தமிழக லாரிகள் செல்ல முடியவில்லை என்று இருக்கிறது. கேரள முதல்வர், கேரளச் செயலர் எல்லோரும் தமிழகத்திலே முகாமிட்டு பேச்சுவார்த்தை நடத்துவதாகக் கூறுகிறார்கள். இதுபோன்ற பயணிகளுக்கும், லாரி தொழிலாளர்களுக்கும், போக்குவரத்திற்கும் தொல்லைகள் ஏற்பட்டிருக்கின்றன. இதுபற்றி கடந்த ஆறு மாத காலமாகத் தெரிந்திருக்கிறது. தமிழக அரசு இதுபற்றி நடவடிக்கை எடுக்கவில்லை. இங்கே இருக்கின்ற அரசு அதிகாரிகள், அமைச்சர்கள் எல்லாம் பேச்சுவார்த்தை நடத்தியிருக்க வேண்டும். அப்படியெல்லாம் வேண்டிய முயற்சிகளை எடுக்காததனால்தான், இந்த நிலைமைகள் உருவாகியிருக்கின்றன என்பதை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** பக்கத்திலே இருக்கின்ற மாநிலத்திற்கு இங்கேயிருந்து போகின்ற லாரிகள், தொழிலாளர்கள் விஷயத்தில் இந்த மாதிரியான பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. நம்முடைய மாநிலத்தில் இருந்தால், நமக்கும் நம்முடைய மாநில லாரிகாரர்களுக்கும் தொழிலாளர் களுக்கும் பிரச்சினை என்று இருக்கும். ஆனால் அதுவே தமிழகத்திற்கும் கேரளத்திற்கும் உள்ள பிரச்சினை என்ற அளவுக்குப் போய்விடக் கூடாது. கர்நாடகத்திலேயிருந்தும், பாண்டிச்சேரியிலேயிருந்தும் போகின்ற லாரி





களுக்கும்கூட அந்தப் பிரச்சினைகள் அங்கே இருக்கின்றன. ஆகவே பாண்டிச்சேரி முதலமைச்சர் அவர்கள் அதில் ஏன் செயல்படவில்லை என்று கேட்கக்கூடாது. அது எல்லோருக்கும் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இருக்கிறது. சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்கு, சம்பந்தப்பட்ட அரசுக்கு இந்தப் பிரச்சினையைக் கவனத்திற்குக் கொண்டுவந்து அதைப் பற்றிப் பேச வேண்டும் என்று சொல்கின்றேன். அந்த அடிப்படையிலேதான் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினை தீவிரமாக வந்த பிறகுதான், இந்த இரண்டு மாநிலங்களும் தலையிட்டுச் செய்யவேண்டிய நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த அளவில் இப்போது நாம் முழுமையான முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** On a point of order: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களிடம் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள வரிசை 6-இல் உள்ள கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற அறிக்கையில் கடைசிப் பத்தியில் "அரசு ஏற்கெனவே நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதால் இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது மேற்கொண்டு விவாதம் தேவையில்லையெனக் கருதுகிறேன்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதிலே விவாதம் என்பது இடையாது. உறுப்பினர்கள் விளக்கங்கள் தான் கேட்கலாம். இதிலே மாறுதலாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத்தலைவர் :** அது ஒருவேளை தவறுதலாகப் போடப்பட்டிருக்கும். கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் விளக்கம் தான் கேட்கலாம்.

* **மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையில் அந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்த பிறகு, அங்கத்தினர் அவர்கள் கவனத்தை ஈர்த்த பிறகு, அந்த அறிக்கையை அமைச்சர் அவர்கள் வைத்துப் பேசிய பிறகு, இந்த மாதிரி குற்றம் குறைகள் இருப்பதைச் சொல்லலாம். ஆர்டர்படி வரவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**(6) 450-க்கு மேற்பட்ட கால்நடை கிளை நிலையங்களில் அலுவலர் பதவிகள் நிரப்பப்படாமல் காலியாக இருப்பதும், 300-க்கும் மேற்பட்ட இளங் கால்நடை மருத்துவர்கள், வேலை இல்லாமல் தவிப்பதும் குறித்து.**

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

''450-க்கு மேற்பட்ட கால்நடை கிளை நிலையங்களில் அலுவலர் பதவிகள் நிரப்பப்படாமல் காலியாக இருப்பதும், 300-க்கும் மேற்பட்ட இளங் கால்நடை மருத்துவர்கள், வேலையில்லாமல் தவிப்பது குறித்தும்.''

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ அவையின் முன் வைக்கப் பட்டுள்ளது.

**திரு. சி. ரா. லட்சுமிகாந்தன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே இரண்டு உண்மைகள் இருக்கின்றன. ஒன்று பல மாவட்டங்களில் 87 கால்நடை உதவி மருத்துவர்கள் பதவி தற்போது காலியாக உள்ளது என்பது. இன்னொன்று 275 கிளை நிலையங்கள் காலியாக உள்ளன என்ற உண்மை. இந்த உண்மைகள் அதில் இருக்கின்றன. ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஆய்வாளர்களைத் திரும்பப்பெற்று, இந்தக் கிளை நிலையங்களில் நியமிப்பது என்பது நிர்வாக அளவிலே முடிவு செய்யப்பட வேண்டிய சாதாரணமான விஷயம். இது குறித்து பலமுறை அரசின் சார்பாக கடந்த இரண்டு ஆண்டுகளாக அறிவிப்பு செய்யப்பட்டும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. குறிப்பாக 18—1—1980 அன்று ஒரு சட்ட முன்வடிவிலே, இது குறித்து அப்போது இருந்த அமைச்சர் அவர்கள் கூட அரசின் சார்பிலே வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். இது போன்ற காலதாமதத்தைத் தவிர்க்கும் வகையிலே, இந்த 87 நிலையங்களில் உள்ள காலி இடங்களில், இப்போது வேலையில்லாமல் இருக்கின்ற பட்டம் பெற்றவர்களை, பயிற்சி பெற்றவர்களை விரைவில் நியமிப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 275 கிளை நிலையங்கள் காலியாக இருக்கின்றன என்றும் 87 கால்நடை உதவி மருத்துவர்கள் பதவிகள் காலியாக இருக்கின்றன என்றும் கூறியுள்ளார்கள். அதையேதான் விவர அறிக்கையில் விவரமாகக்

@ 444-445 ஆம் பக்கங்களில் இணைப்பு VII ஆக அச்சிடப்பட்டுள்ளது.



கூறியிருக்கிறார்கள். இந்த 275 கிளை நிலையங்களில் உள்ள ஆய்வாளர்கள் இடங்கள் காலியிருப்பதால் மற்ற இடங்களில் பணிபுரியும் கால்நடை மருத்துவர்களை விரிவாக்க அலுவலர்களாக ஆக்கி அங்குள்ள ஆய்வாளர் களைக் கொண்டு இந்தக் கிளை நிலைய ஆய்வாளர் இடங்களை நிரப்ப இருக்கிறோம். அதற்கான ஆணையைப் பிறப்பிக்க இருக்கிறோம். அந்த வகையில் இதைப் பரிசீலித்து அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** துணைத் தலைவர் அவர்களே, அறிக்கையிலே கண்டுள்ள இன்னொரு முக்கிய செய்தி, 168 பட்டதாரி மருத்துவர்கள்தான் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக் கிறார்கள். அந்த பணிப் பயிற்சிபெற்றவர்கள் பலர் வேலையில்லாமல் இருப்பது உண்மை. அதுமட்டுமல்லாமல், ஒவ்வொரு ஆண்டும் 120 கால்நடை மருத்துவர்கள் பட்டம் பெற்று வருகிறார்கள். அப்படிப் படித்துவிட்டு ஒவ்வொரு ஆண்டும் வெளியே வருகிறார்கள். அந்தக் கணக்குகளையெல்லாம் சேர்த்துப்பார்த்தால், இன்னும் அதிகமாக இருக்கும். தற்போது வேலை யில்லாமல் இருக்கின்ற பட்டதாரிகளுக்கு, மருத்துவர்களுக்கு வேலை கொடுக்கக்கூடிய வாய்ப்புகள் மிகத் தெளிவாக அறிக்கையிலே கூறப் பட்டிருப்பதால், அரசு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்போது அப்படி இருப்பவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அரசு விரைந்து நடவடிக்கை எடுத்து அந்தக் காலி பதவிகளைப் பூர்த்தி செய்தால், அவர்களுக்கும் வேலை கிடைக்கும், அதன்மூலம் ஊராட்சி ஒன்றியப் பகுதி மக்களுக்கும், அங்கேயுள்ள பல கிராமப்புற மக்களுக்கும் அது பயனுள்ளதாக இருக்கும். ஆகவே அரசு அது குறித்து விரைவான நடவடிக்கைகளை எடுக்குமா ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்த விவரத்தின்படி, இந்த மார்ச் மாதம் 1981 ஆம் ஆண்டுக்குள் 168 கால்நடைப் பட்டதாரிகள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்ற விவரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில்தான் இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களில் விரிவாக்க அலுவலர்களாக ஆக்கி, போட இருக்கிறோம். அந்த வகையிலே நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். அந்த வகையிலே தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-40)

### 4. உரிமைப் பிரச்சினை குறித்து.

**திரு. ம. சங்கரலிங்கம் :** துணைத் தலைவரவர்களே, நான் ஓர் உரிமைப் பிரச்சினைக்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறேன். 'அண்ணா' பத்திரிகையில், இந்தித் திணிப்பை எதிர்த்து . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மேலவை விதி 157-ன்படி உரிமை பற்றிய பிரச்சினையை எழுப்பும் முன்னறிவிப்பு, எந்நாளில் எழுப்பப் படுகிறதோ அந்த நாள் கூட்டம் தொடங்குவதற்குக் குறைந்தது ஒரு மணி நேரத்திற்கு முன்னதாக, அது பற்றிய சுருக்கமான குறிப்புடன் (1) தலைவர், (2) அவை முன்னவர், (3) செயலாளர் ஆகியோரிடம் சேர்ப்பிக்கப்பட்டு, அதை எழுப்புவதற்கு தலைவரின் இசைவைப் பெற வேண்டும் என்று இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் உரிமைப் பிரச்சினைக்கான முன்னறிவிப்பை அவை தொடங்கிய பிறகு கொடுத்திருப்பதால், உரிமைப் பிரச்சினை மறுக்கப்படுகிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** உரிமைப் பிரச்சினையைத் தலைவரவர்கள் மறுக்க முடியாது. நான் சொல்வதைக் கேட்டுத்தான் மறுக்க முடியும். துணைத் தலைவரவர்களே, என்னைத் தாங்கள் அனுமதிக்க வேண்டும். அவை நடந்து கொண்டிருக்கும்போது . . .

(துணைத் தலைவர் மணி அடித்தார்)

துணைத் தலைவரவர்களே, எங்களுடைய உரிமை பாதிக்கக்கூடாது. மேலவையில் இந்தி எதிர்ப்புத் தீர்மானம் வந்தபோது, மௌனியாக இருந்தது ஏன் என்று கேட்டு, அவையில் நடக்காத ஒன்றை மாண்புமிகு அமைச்சர் திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள் கூறியதாகச் செய்தி வந்திருக்கின்றது . . .

நான் விதியைச் சொல்கிறேன். அவை நடந்து கொண்டிருக்கும்போது எழும் உரிமைப் பிரச்சினையைப் பொறுத்தவரை, விதிகளின்படி தேவைப் படும் முன்னறிவிப்பின்றி, தலைவர் தாம் தகுதியெனக் கருதினால் அனுமதிக்கலாமென்று இருக்கிறது. நாங்கள் மேலவையில் முக்கியமான எதிர்க் கட்சியாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். மேலவையில் இந்தி எதிர்ப்புத் தீர்மானம் வந்தபோது, மௌனியாக இருந்தோமென்று சொல்லப்படுகிறது. இந்தி எதிர்ப்புத் தீர்மானம் இங்கே வரவே இல்லை. வந்தது ஒத்தி வைப்புத் தீர்மானம்தான். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் அதைக் கொண்டு வந்தார்கள். அந்தத் தீர்மானத்தை எதிர்த்தது அ.தி.மு.க.வினர் தான்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உரிமைப் பிரச்சினையை முன்மொழிய அனுமதித்த பிறகுதான் விளக்கங்களைக் கொடுக்க வேண்டும்.



**திரு. ம. சங்கரலிங்கம் :** துணைத் தலைவரவர்களே, உரிமைப் பிரச்சினை கொண்டுவர அனுமதி தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கொஞ்சம் உணர்ச்சிவயப்படாமல் இருப்பது நல்லது. தனிப்பட்ட முறையில் அவருக்குள்ள ஆழமான இந்தி எதிர்ப்பு உணர்வுபற்றி நமக்குத் தெரியும். அதுவல்ல பிரச்சினை. விதி மிகத் தெளிவாக இருக்கிறது. தலைவரிடம் ஒரு மணி நேரத்திற்கு முன்னதாகக் கொடுத்து, தலைவரின் அனுமதி பெற்று, முன்மொழிய வேண்டும் அல்லது அவை நடந்து கொண்டிருக்கும்போது ஏதாவது உரிமை மீறல்கள் வந்தால், உடனடியாகத் தலைவரின் அனுமதி பெற்று, தலைவர் தகுதியென்று கருதினால் அனுமதிக்கலாமென்று இருக்கிறது. அந்த முறையைக் கடைப் பிடிக்க வேண்டும். அந்த முறையில் இது வராததால், இப்போது அனுமதிக்க இயலாது. இப்போது முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அதைப் பரிசீலனை செய்து, அடுத்த கூட்டத்தொடரில் எழுப்ப அனுமதிக்கலாம். ஆனால் இன்று கடைசி நாள் என்பதால், ஒரு கருத்தைப் பதிவு செய்ய வேண்டுமென்று வரும்போது, நாங்களும் அதைப்பற்றிய கருத்துக்களைச் சொல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இந்தி எதிர்ப்புத் தீர்மானம் வரவில்லை என்று சொன்னார்கள். இம்ப்ளைட் மீனிங்கில் அது வருகிறது. இந்தி எதிர்ப்பு என்று வரும்போது, இந்தி ஆதிக்க உணர்வில் இராணுவத்தில் பதவி உயர்விற்கு இந்தி படித்திருக்க வேண்டும், இந்தி தெரிந்திருக்க வேண்டும் என்று சொல்லி, இந்தியைத் திணிக்கிறார்கள். அதைக் கண்டிக்கும் வகையில் ஒத்தி வைப்புத் தீர்மானம் வருகிறது. 'மோஷன்' என்ற அர்த்தத்தில் சொல்லியிருக்கிறார்கள். அமைச்சரவர்கள் அதற்கு 'இன்டர்பிரடேஷன்' எந்த வகையிலும் கொடுக்கலாம். எத்தனையோ ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் வந்தபோது, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். எல்லோரும் சேர்ந்து கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இதில் ஏன் கலந்துகொள்ளவில்லை என்ற அர்த்தத்தில்தான் வருகிறது. முறைப்படி இந்தப் பிரச்சினையை எழுப்ப வேண்டும்.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. ஆறுமுகம் எழுந்தார்.)

மன்னிக்க வேண்டும். நான் பேசி முடித்த பிறகு மாண்புமிகு உறுப்பின ரவர்கள் பேசலாம். அவையை ஒத்தி வைத்துப் பேச வேண்டுமென்று தீர்மானம் கொண்டு வந்தார்கள். It is also a motion. Adjournment motion.

**திரு. சோ. ஆறுமுகம் :** ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் எல்லோரையும் பேச அனுமதிக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் முன்னறிவிப்பு கொடுத்திருக்கலாம். ஏன் அதில் கலந்துகொள்ளவில்லை என்பதுதான் கேள்வி. எத்தனையோ ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் வந்தபோது, அவர்களும் சேர்ந்து முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். இது முக்கியமான விஷயம். இப்படி இந்த விவாதத்திற்கு எடுத்துக் கொண்டால், இந்த விவாதத்திலே உத்வேகமாகப் பங்கு பெற வேண்டிய அவசியம் வந்துவிடும். விதிகள் தெளிவாக இருக்கின்றன. நேற்றே 'அண்ணா' பத்திரிகையில் வந்திருக்கிறது. ஒரு மணி நேரத்திற்கு முன்னாலேயே முன்னறிவிப்பு கொடுத்திருக்கலாம். இல்லையென்று சொன்னால், அவை நடக்கும்போது உரிமை மீறல்கள் வந்தால், உடனே எழுப்பலாம். அவை நடக்கும்போது கொடுத்திருக்கிறார்கள். இது விதிமுறைகளுக்கு உட்பட்டதல்ல. எனவே தலைவரவர்கள், இதை அனுமதிக்கக்கூடாதென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** துணைத் தலைவரவர்களே, விதிக்கு மாறாக நடக்க வேண்டுமென்று விரும்பவில்லை. இந்த அவையைப் பொறுத்த அளவில், மேலவை நிகழ்ச்சிகளைப் பொறுத்த அளவில் பொறுப்பான அமைச்சர் ஒருவர் மேலவையில் பொறுப்பாக இருக்கக் கூடிய கட்சியை, முக்கிய எதிர்க் கட்சியைப் பற்றிச் சொல்லியிருக்கக்கூடியது பற்றிய பிரச்சினை இது. அவை நடந்து கொண்டிருக்கிறது. இன்றோடு முடிகிறது. இந்த அவையிலே ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்த உறுப்பினரையே மீண்டும் பேச அனுமதிப்பதில்லை. அவர் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்தது எங்களுக்குத் தெரியாது. அந்தப் பிரச்சினையை நாங்கள் அடுத்த நாள் கொடுத்திருக்கலாம். அன்று கொடுக்கவில்லை என்றவுடன், அதற்கு எதிரி என்று தவறான ரீதியில் சொல்லி, இந்த அவையில் ஜனநாயக ரீதியில் இயங்கும் கட்சியை இயங்காமல் செய்ய வேண்டுமென்ற தவறான நோக்கத்தோடு, ஜனநாயக முறைக்கு மாறாக ஆளும் கட்சி செயல்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த முறையில் பொறுப்பான அமைச்சர் 'அண்ணா' பத்திரிகைக்குப் பேட்டி அளிக்கிறார். விதிகள் எப்படி இருந்தாலும், இந்த அவையின் முக்கியத்துவத்தையும், அவை இயங்கும் முக்கியத்துவத்தையும், பிரச்சினையின் முக்கியத்துவத்தையும் கருதி, தாங்கள் இதற்கு நேரம் குறித்து, இந்தப் பிரச்சினையை எழுப்ப எனக்கு அனுமதி தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** விதிப்படி ஒரு மணி நேரம் முன்னதாக முன்னறிவிப்பு கொடுக்க வேண்டுமென்று இருப்பதாலும், அவை நடந்து கொண்டிருக்கும்போது ஏதாவது உரிமை மீறல்கள் இருந்தால் உரிமைப்



பிரச்சினை கொண்டு வரலாமென்று இருப்பதாலும், இந்த உரிமைப் பிரச்சினையை அடுத்த கூட்டத் தொடரில் ஆய்வு செய்யலாமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** நான் கொண்டு வந்த உரிமைப் பிரச்சினை ஒரு நோக்கத்தோடு கொண்டு வந்ததல்ல. எங்கள்மீது ஒரு நோக்கத்தோடு சொல்லப்பட்ட கருத்து, இந்த அவையினுடைய செயலிலே நாங்கள் நடந்து கொள்ளக்கூடிய முறைக்குக் களங்கம் கற்பிக்கும் கருத்து, ஆளும் கட்சியைச் சேர்ந்த அமைச்சரவர்கள் சொன்ன கருத்தாகும். எனவே அவர்கள் இருந்து, விவாதித்து, அதற்குத் தெளிவு காண அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதை ஆளும் கட்சி அனுமதிப்பதற்கு மறுப்பதால், அவர்களுடைய ஜனநாயக விரோதப் போக்கினைக் கண்டித்து, நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)*

### 5. அரசு உறுதி மொழிக் குழுவின் முப்பத்தைந்தாவது அறிக்கையை அளித்தல்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அரசு உறுதி மொழிக் குழுவின் முப்பத்தைந்தாவது அறிக்கையை அளிக்கிறேன்.

### 6. அரசின் தீர்மானங்கள்.

**(1) விதிகள் குழு, உரிமைக் குழு, அவைக் குழு ஆகியவற்றின் உறுப்பினர்களின் பதவிக் காலத்தை 31—3—1980 வரை நீட்டிப்பது குறித்து.**

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

"மேலவை விதிகளின்படி 1980 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் அமைக்கப்பெற்ற மேலவை விதிகள் குழு, உரிமைக் குழு, அவைக் குழு, அரசு உறுதிமொழிக் குழு ஆகியவற்றின் காலவரம்பு, இவற்றிற்கு அமைக்கப்பெற்ற நாளிலிருந்து ஓராண்டு முடிவிலும், மற்றவற்றிற்கு நிதியாண்டு இறுதியிலும் முடிவடைகிறது. அவ்விதிகளைத் தளர்த்தி, தற்போது பணியாற்றிக் கொண்டிருக்கும் உறுப்பினர்களே தொடர்ந்து 31—3—1982 வரையில் அக் குழுக்களில் பணியாற்ற வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

“மேலவை விதிகளின்படி 1980 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் அமைக்கப்பெற்ற மேலவை விதிகள் குழு, உரிமைக் குழு, அரசு உறுதிமொழிக் குழு ஆகியவற்றின் காலவரம்பு, சிலவற்றிற்கு அமைக்கப்பெற்ற நாளிலிருந்து ஓராண்டு முடிவிலும், மற்றவற்றிற்கு நிதியாண்டு இறுதியிலும் முடிவடைகிறது. அவ்விதிகளைத் தளர்த்தி, தற்போது பணியாற்றிக் கொண்டிருக்கும் உறுப்பினர்களே தொடர்ந்து 31—3—1982 வரையில் அக்குழுக்களில் பணியாற்ற வேண்டும்”

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(2) பொதுக் கணக்குக் குழு, மதிப்பீட்டுக் குழு, பொது நிறுவனங்கள் குழு, சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களின் பதவிக் காலத்தை 31—3—1982 வரை நீட்டிப்பது குறித்து.**

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

“1980 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் அமைக்கப்பெற்ற பொதுக் கணக்குக் குழு, மதிப்பீட்டுக் குழு, பொது நிறுவனங்கள் குழு, சட்ட விதிகள் ஆய்வுக் குழு ஆகிய குழுக்களின் பதவிக் காலத்தை பேரவையில் நீட்டித்திருப்பதால், அக் குழுக்களில் தற்போது பணியாற்றுகின்ற மேலவை உறுப்பினர்கள் தொடர்ந்து 31—3—1982 முடிய பணியாற்ற வேண்டும்” என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

“1980 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் அமைக்கப்பெற்ற பொதுக் கணக்குக் குழு, மதிப்பீட்டுக் குழு, பொது நிறுவனங்கள் குழு, சட்ட விதிகள் ஆய்வுக் குழு ஆகிய குழுக்களின் பதவிக் காலத்தை பேரவையில் நீட்டித்திருப்பதால், அக் குழுக்களில் தற்போது பணியாற்றுகின்ற மேலவை உறுப்பினர்கள் தொடர்ந்து 31—3—1982 முடிய பணியாற்ற வேண்டும்”.

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.





## 7. அரசின் சட்ட முன்வடிவுகள்.

**(1) தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித் துறைகளும்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 42/1981).**

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

“சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித் துறைகளும்) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 42/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்” என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம் :

“சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித் துறைகளும்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 42/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்”.

(முற்பகல் 9-50)

**திரு. சி. இராமலிங்கம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, 1981 ஆம் ஆண்டு, தமிழ் நாடு கைத்தறித் தொழிலாளர்கள் வேலை நிலைமைகளும் பல்வகை விதித் துறைகளும் பற்றிய சட்ட முன்வடிவினை இந்த அவையிலே இன்றைக்கு மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் இந்தச் சட்ட முன்வடிவை பேரவையிலே 12—5—1981 அன்றைக்கே முன்மொழிந்திருக்கிறார்கள். அந்த நாள் எங்களுடைய, நெசவாளர்களுடைய வாழ்க்கையிலே ஒரு பொன்னாள். தமிழக முதல்வராக இருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையில் அமைந்த இந்த அரசில் கைத்தறித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்டு அன்றைக்கு அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. கா. இராசா முகமது அவர்களும், தொழிலாளர் நல அமைச்சராகப் பொறுப் பேற்றிருந்த, இப்போதும் இருக்கும் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு. எஸ். இராகவானந்தம் அவர்களும் நெசவாளர்களுக்கு பல நன்மைகளைச்

@ 445-468 ஆம் பக்கங்களில் இணைப்பு VIII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

செய்ய வேண்டுமென்று கருதியிருந்தார்கள். அதன் அடிப்படையில் நெசவாளர் சம்பந்தப்பட்ட சட்ட முன்வடிவினை சட்டமன்றத்தில் அறிமுகப் படுத்தி, அதை ஆய்வுக் குழுவுக்கு விட்டு, தமிழகம் முழுவதும் சென்று, அவர்கள் ஆராய்ந்து அறிந்து சட்ட முன்வடிவாக நிறைவேற இருந்த நேரத் தில், புரட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையில் அமைந்திருந்த ஆட்சி கலைக்கப்பட்டது. தில்லையிலே நடராஜன் ஆடிக்கொண்டிருக்கிறான் என்று சொல்வார்கள். அவன் ஆடா விட்டால் உலகமே ஆடிவிடும் என்று சொல் வார்கள். அப்படிப்பட்ட சிதம்பரத்திற்கு எங்கள் குழு வந்த நேரத்தில் எங்களை ஆட்டி வைத்தது அன்றைக்கு இருந்த அரசு. அன்றைக்கே நான் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரிடத்தில் ஒன்றைச் சொன்னேன். "நாங்கள் கைத்தறி நெசவாளர்கள். பரம்பரையாக, ஜாதி வாரியாக உலகத் தில் மனிதன் தோன்றியதிலிருந்து, உணவுக்கு முன்பு உடை இருந்தால் போதும் என்ற நிலையில் ஆடை நெய்யும் தொழிலைச் செய்துகொண்டிருந் தவர்கள்".

8. தகவல் கோரல்.

தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறப்பது குறித்து.

டாக்டர் இரா. சனார்த்தனம்: தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறந்து கொண்டிருக்கிறது. என்ன சம்பவம் என்பதை அவைக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அதுபற்றி விசாரிக்கிறேன்.

7. அரசின் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(1) தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித் துறைகளும்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு 42/1981)—தொடர்ச்சி.

திரு. சி. இராமலிங்கம்: அன்றைக்கே நான் சொன்னேன்: "எங்களுடைய நெசவுத் தொழில் தடுமாறிக்கொண்டிருக்கிறது. எங்களுக்கு என்று நல்லது செய்யக்கூடிய ஆட்சி அது எந்த அரசாக இருந்தாலும் தடைப்படுகிறது". அன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் இந்தச் சட்ட முன்



வடிவு வர இருந்தது. மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தங்களுக்குத் தெரியும், நெசவாளர்களுக்கு பாதிப்பு ஏற்படுகின்ற வகையிலே மத்திய அரசு, இந்தியாவினுடைய பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் சதியின் காரணமாக, சூழ்ச்சியின் காரணமாக புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியைக் கலைத்து விட்டார்கள். அன்றைக்கு நான் அழுதுவிட்டேன். இன்றைக்குக்கூட ஆனந்தக் கண்ணீரால் அழுதுகொண்டுதான் பேசுகிறேன். பாட்டன் காலத்திலிருந்து, முப்பாட்டன் காலத்திலிருந்து என்று சொல்லக் கூடாது, நாங்கள் யாராலும் கேட்பாரற்று, வாழ்வற்று, கதியற்றுக் கிடந்தோம். இரவு பகலாக நாங்கள் உழைக்கின்றோம். எங்களுக்குத் தேவையான ஊதியம் கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை எழுப்புவோம். அரசாங்கங் களோ, நீதிமன்றங்களோ, தொழிலாளர் மன்றங்களோ எங்களை ஏற்றுக் கொள்ளவில்லை. நாங்கள் செய்கின்ற நெசவுத் தொழிலை ஒரு தொழிலாகக் கருதாமல் எங்களை விட்டுவிட்டார்கள். போனஸ் வேண்டும், கூலி உயர்வு வேண்டும், தொழில் பாதுகாப்பு வேண்டும் என்றால், அதற்குச் சட்டத்தில் இடமில்லை. ஆகையால் தொழிலாளர் மன்றங்களும் எங்களுடைய கோரிக் கைகள் குறித்து ஒன்றும் செய்ய முடியவில்லை. வேண்டுமானால் ஏதோ ஆர்.டி.ஓ., தாசில்தார் போன்றவர்கள் ஒருசிலர் எங்கள்மீது இரக்கம் காட்டி முதலாளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஓரளவு கூலியைப் பெற்றுத் தரு வார்கள். ஆனால் சட்டப்படி எங்களையும் மனிதர்களாக, உரிமையுடைய தொழிலாளர்களாக ஆக்கியது எங்களுடைய புரட்சித் தலைவர் அவர்கள்தான். புரட்சித் தலைவர் அவர்களை 25 லட்சம் இதயக் கமலங்கள், தாமரைக் கமலங் கள் வாழ்த்துவதுடன் அவரோடு இணைந்து நின்ற எங்களுடைய தொழிலாளர் நல அமைச்சர் அவர்களையும் அதோடுகூட அன்றைக்கு கைத்தறித் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. கா. இராசா முகமது அவர்களையும் வாழ்த்துகின்றன. நடுவில் முருகனும், வலது பக்கம் தெய்வயானையும், இடது பக்கத்தில் வள்ளியுமாய் அமர்ந்து காட்சி தருவதுபோல் இங்கு அமைச்சரவை யிலும் காட்சி தரும் புரட்சித் தலைவர் அவர்களை 25 லட்சம் மக்கள் சார்பாக வாழ்த்தி நன்றியறிதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: யாரை தெய்வயானை என்று குறிப்பிடுகிறார்கள்? யாரை வள்ளி என்று குறிப்பிடுகிறார்கள்?

திரு. சி. இராமலிங்கம்: தெய்வயானை என்று மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களையும், வள்ளி என்று மாண்புமிகு திரு. இராசா முகமது அவர்களையும் குறிப்பிடுகிறேன். (சிரிப்பு) மதத் துறையிலே நாம்

பார்க்கும்போது நான் சொல்லுவது மிக மிகப் பொருத்தமாக இருக்கிறது. நாராயணனுக்கு 2 ஆம் தாரமாக துலுக்க நாயகி இருப்பாள். ஆகவே இஸ்லாம் மதத்தைச் சார்ந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் 25 லட்சம் மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பூமாரி பொழிகின்றேன். ஏளனமாகப் பேசிய எங்களுக்கு சக்தி கொடுத்து தலை நிமிர்த்திய புரட்சித் தலைவர் அவர்கள் காலடியில் பூமாரி பொழிகின்றேன். தமிழகத்தில் இன்றைக்கு 5½ லட்சம் பேர் நெசவுத் தொழிலைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அதேநேரத்தில் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஜாதிகளையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பட்டுநூல்காரர்கள் எனப்படும் சௌராஷ்டிரர்கள், தெலுங்கு கன்னடம் பேசுகின்ற சேடர் என்கின்ற ஜாதி, பத்மசாலியர் பட்டுசாலியர் போன்ற தெலுங்கு பேசும் மக்கள், பண்ணாடியார் என்ற ஜாதி, சேணியர் என்ற ஜாதி, இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த அம்சாரிகள் என்று அழைக்கப்படுகின்ற லப்பைகள், ஆதி திராவிட மக்களில் பாதிரியர் என்பவர்கள், இல்லத்து பிள்ளைகள் போன்ற ஜாதியினர் இந்த சமுதாயத்திலே இன்றைய தினம் இந்த நெசவுத் தொழிலை நாடு பூராவும் பரவலாகச் செய்து வருகிறார்கள். இவர்கள் எல்லாம் பாதிக்கப்பட்டு கவனிப்பாரற்று இருந்தார்கள். ஆனால் இன்றைக்கு இந்தச் சட்டத்தின் மூலம் நாங்களெல்லாம் பெரிய நன்மையை அடைந்திருக்கிறோம். எங்களுடைய முன்னோர்கள் பரம்பரை பரம்பரையாக மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே இந்தத் தொழிலைச் செய்து வந்தவர்கள். சாம்ராஜ்யங்கள்; சேர சோழ பாண்டியர்கள் காலத்திலிருந்தே இந்தத் தொழிலைச் செய்து வந்திருக்கிறார்கள். அப்போதெல்லாம் அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுத்திருந்தார்கள். ஆனால் வெள்ளைக்காரன் எங்களை பாதுகாப்பற்றவர்கள் ஆக்கினான். லண்டனில் நூல் நெய்து ஆலை மூலமாகத் துணியைக் கொண்டு வந்து விற்றான். கிழக்கு இந்திய வர்த்தகக் கம்பெனி மூலம் துணிகளை இங்கே கொண்டு வந்து விற்றார்கள். அப்போது எங்களுக்குத் தொழிலே இல்லாமல் செய்துவிட்டார்கள். கை விரல்களையே எடுத்துவிட்டார்கள் என்று கூட சொல்லுவார்கள். ஆனால் சுதந்திரம் பெற்ற பிறகு, அந்த நிலை எல்லாம் மாறியது. எங்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்பதற்காக மகாத்மா காந்தியடிகள் சுதேசிப் பொருள்களையே நாட்டு மக்கள் அணிய வேண்டுமென்ற தத்துவத்தைக் கொண்டு வந்தார்கள். சுதேசிப் பொருள்களையே அணிய வேண்டுமென்று சொல்லி, சுதேசி உணர்வை நாட்டு மக்களிடத்திலே ஊட்டினார்கள். தேசிய மனப்பான்மையோடு அவர்கள்



அதைச் செய்தார்கள். அதன் பிறகு தந்தை பெரியார் இராமசாமி அவர்கள், சுயமரியாதைத் தந்தை அவர்கள் தோளில் சுமந்து தெருத் தெருவாகக் கைத்தறித் துணியை விற்று தேசிய உணர்வையும் ஊட்டினார்கள். அதே சமயத்தில் எங்களுக்கு உணவையும் ஊட்டினார்கள். அதன் பிறகு, பேரறிஞர் அண்ணா அவர்கள் 1952 ஆம் ஆண்டில் கைத்தறி தேங்கியிருந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கூட்டிய மாநாட்டிலே இதுபற்றி தீர்மானம் கொண்டு வந்தார்கள். கைத்தறித் துணிகளைதான் திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களும், தலைவர்களும் அணிய வேண்டுமென்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். அதுபோல் தொண்டர்கள் தலைவர்களுக்கு மாலைக்குப் பதிலாக கைத்தறித் துண்டுகளையே அணிவிக்க வேண்டும் என்றும் தீர்மானம் கொண்டு வந்து, ஜனவரி 4 ஆம் தேதி கைத்தறித் துணிகளை தோளிலே சுமந்து விற்றார்கள். அது மாத்திரமல்ல, அன்றைக்கு இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்த இளைய தலைவர்கள் எல்லாம் தோளில் சுமந்து கைத்தறித் துணியை விற்றார்கள். குறிப்பாக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், எதிர்க் கட்சித் தலைவராக இருக்கிற கலைஞர் கருணாநிதி அவர்கள், திரு. அன்பழகன், மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், மாண்புமிகு திரு. இராகவானந்தம் போன்றவர்கள் எல்லாம் அன்றையதினம் விற்றார்கள்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** எதிர்க் கட்சி வரிசையிலுள்ளவர்களின் பெயர்களுடன் மாண்புமிகு திரு. இராகவானந்தம் அவர்களையும் சேர்த்துச் சொன்னார்கள். அதற்குக் காரணம் என்ன?

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

அதாவது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பெரியாரிலிருந்து, அண்ணாவிலிருந்து ஆரம்பித்து, ஆளும் கட்சியினரைச் சொல்லி பிறகு மாண்புமிகு திரு. இராகவானந்தம் அவர்களையும் சொன்னார்கள். அதற்குக் காரணம் என்ன?

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** எதிர்க் கட்சி வரிசையிலிருந்து சொல்லவில்லை. பரம்பரை வரிசையிலிருந்து சொல்கிறார்.

(முற்பகல் 10-00)

**திரு. சி. இராமலிங்கம்:** நான் அண்ணா அவர்களுடைய, தந்தை பெரியார் அவர்களுடைய பாசறையில் 1943 ஆம் ஆண்டிலிருந்து தொடர்பு கொண்டவன். யார் யார் அவர்களிடம் இருந்தார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்,

நாங்கள் ஒரே இலையிலே சாப்பிட்டிருக்கிறோம், ஒரே படுக்கையிலே படுத்திருக்கிறோம்; இன்றைக்கு கால சூழ்நிலையாலே நீங்கள் அங்கே இருக்கிறீர்கள், நாங்கள் இங்கே இருக்கிறோம். மாண்புமிகு அண்ணா அவர்கள் சொல்வதுபோல, நான் திராவிட முன்னேற்றக் கழகத்திற்காகப் பாடுபட்டவன். பின்னர் அங்கே நிலைமை சரியில்லாததால், சுயநலம் பேணும் போக்கு அங்கே இருந்ததால், அங்கிருந்து இங்கே வந்திருக்கிறோமேயொழிய வேறல்ல. இந்தச் சட்ட முன்வடிவு நிறைவேற்றப்படும் இந்த நேரத்தில் நீங்களும் எங்களுடன் வந்து சேர வேண்டும், இணைய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அண்ணா அவர்கள் கூட இந்தச் சட்ட முன்வடிவு வரவேண்டும் என்று ஆசைப்பட்டார்கள். ஆனால், அப்போது ஒருசில தேக்க நிலைமைகள் காரணமாக அது வரவில்லை. இப்போது இந்தச் சட்ட முன்வடிவு வந்திருக்கிறது. நான் இதை வெகுவாகப் பாராட்டுகிறேன். மாண்புமிகு தலைவர் அவர்களே, தங்களுடைய தலைமையிலே, இந்த அவை இருக்கும் இந்த நேரத்திலே இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருப்பது மிகவும் பொருத்தமாகும். தாங்கள் வாழ்க்கையிலே தேவாங்க செட்டியார்களிடத்திலே சித்தாளாகப் பணியாற்றியவர்கள். அப்பேர்ப்பட்ட உங்களுடைய தலைமையில் ஆன இந்த. . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இந்த இரகசியத்தை நான் இங்கே சொல்லவில்லை, நான் வெளியிலேதான் சொல்லியிருக்கிறேன். இதை இந்த அவையிலே சொல்லி ரெக்கார்டிலே பதிவு பண்ணிவிட்டீர்களே !

**திரு. சி. இராமலிங்கம் :** சிலம்புச் செல்வர் என்று சொல்லக் கூடிய பெருமை படைத்த, தமிழைக் காத்த தங்களுடைய தலைமையில் இந்தச் சட்ட முன்வடிவு நிறைவேற்றப்படுகிறது என்பதைப் பார்க்கும்போது, நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். தமிழ் நாட்டிலே மட்டுமல்ல, இந்தியாவின் பல பகுதிகளிலே கைத்தறி நெசவுத் தொழிலாளர்களைப் போல பவர் லூம் தொழிலாளர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களும் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், அவதிப்படுகிறார்கள். அவர்களுக்கும் போதுமான அளவுக்குக் கூலி கிடைப்பதில்லை. எல்லா நாட்களிலும் வேலையும் கிடைப்பதில்லை. மேலும் ஷிப்ட் என்ற முறையையெல்லாம் வைத்து பாதி நாட்கள்தான் அவர்களுக்கு வேலை கொடுக்கிறார்கள். பவர் லூம் முதலாளிகள் எல்லாம் குறைந்த செலவில் துணிகளை நெய்து, குறைந்த விலைக்கே விற்கிறார்கள். நாங்கள் கையாலே நெசவு செய்பவர்களுக்கு அதிகக் கூலி கொடுத்து நெசவு



செய்கிறோம். எங்களுடைய துணியை அவர்களுடன் போட்டிபோட்டு விற்க முடியவில்லை. நாங்கள் நெசவாளர்களுக்கு அதிக அளவு கூலி கொடுக்க வேண்டியிருப்பதால் துணியின் விலையையும் சிறிதளவுக்கு உயர்த்த வேண்டியிருக்கிறது. அவர்களால்தான் இந்த நிலை என்று நான் சொல்லமாட்டேன். ஆனால் அங்கே வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் இதுபோன்று ஒரு பாதுகாப்பு வேண்டும். அவர்களும் 'ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ்' என்ற அளவிலே வைத்திருக்கிறார்கள். இந்த நாட்டிலே சிறு தொழில் வளர வேண்டும். அந்த பவர் லூம் தொழிலாளர்களுக்கும் ஒரு பாதுகாப்புச் சட்டம் கொண்டு வரவேண்டும். விசைத்தறியிலே வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் நிரந்தர வேலை, நியாயமான கூலி என்ற அளவிலே ஒரு சட்டம் கொண்டு வரவேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன். இப்போது இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டதால், நான் முழு மனிதன் ஆனேன். என்னுடைய சமுதாயத்தினர் முழு மனிதர்கள் ஆனார்கள். நாங்கள் குறைந்த கூலி வாங்குபவர்கள். நாங்கள் அடிமையாக இருந்த நிலைமையை மாற்றி, எங்களை சுதந்திர மனிதர்களாக ஆக்கிவிட்டார் புரட்சித் தலைவர் அவர்கள். எங்களுடைய சமுதாயத்தைச் சேர்ந்த தலைவர்கள் எல்லாம் பாராட்டுகிறார்கள். சர் தியாகராஜ செட்டியார் அவர்களின் காலத்திலேயே இந்தச் சட்டம் வரவேண்டும் என்று அவர் ஆசைப்பட்டார். சென்னை-ராஜ்யம் என்று 4 மொழிகள் இணைந்த ராஜ்யம் இருந்த போது, மூதறிஞர் இராஜாஜி அவர்கள் கைத்தறி நெசவாளர்களுக்குக் கரை போட்ட வேட்டியையும், சேலைகளையும் ஒதுக்க வேண்டும் என்று தீர்மானத்தை நிறைவேற்றி மத்தியில் இருந்த பண்டித நேரு அவர்களுடைய அரசுக்கு அனுப்பினார்கள். பண்டித நேரு அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்த அந்தத் தீர்மானத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் மீண்டும் ஒருமனதாக நிறைவேற்றினார்கள். அண்ணா அவர்கள் நிறைவேற்றி அனுப்பிய அதற்கும் இதுவரையிலும் பதில் இல்லை. அதற்குப் பிறகு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அந்தத் தீர்மானத்தை மத்திய அரசுக்கு அனுப்பினார்கள், அதுவும் நிறைவேற்றப்படவில்லை. எங்களுடைய தொழிலுக்கு உதவியாக இந்தச் சட்ட முன்வடிவு வர ஒத்துழைப்பு தந்த அமரர் ஜீவா அவர்களையும், திரு. பி. இராமமூர்த்தி அவர்களையும், திரு. எம். கல்யாணசுந்தரம் அவர்களையும் நான் மனமாரப் பாராட்டுகிறேன். அவர்கள் அனைவருடைய ஒத்துழைப்பினால்தான் இந்தச் சட்ட முன்வடிவு

வந்திருக்கிறது. தென்னாற்காடு மாவட்டத்திலே புதுப்பேட்டையில் கைத்தறி பற்றி மாநாடு போட்டவர்கள் எல்லாம் இதற்கு ஒரு சட்ட முன்வடிவு வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால், அது இன்றைக்கு வந்திருக்கிறது. அந்தக் கூட்டு ஆய்வுக் குழுவிலே இடம் பெற்று இதற்கு ஒத்துழைத்த அங்கத்தினர்களுக்கு எல்லாம் என்னுடைய மனமார்ந்த நன்றி. இந்த ஆய்வுக் குழுவிற்கு ஒத்துழைப்பு தந்த சட்ட நிபுணர்களுக்கும், அதிகாரிகளுக்கும் என்னுடைய நெசவாளர் சமுதாயத்தின் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இதை ஏற்றுக்கொண்ட எல்லாக் கட்சிகளுக்கும், அது திராவிட முன்னேற்றக் கழகம் ஆனாலும் சரி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆனாலும் சரி, வலது கம்யூனிஸ்ட் கட்சி ஆனாலும் சரி, முஸ்லீம் லிக் கட்சி ஆனாலும் சரி, கா.கா.தே.க. கட்சி ஆனாலும் சரி, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியானாலும் சரி அவர்களுக்கெல்லாம் என்னுடைய 25 லட்சம் நெசவாளர் சமுதாய மக்கள் சார்பாக நன்றி சொல்லிக்கொள்கிறேன். (மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது அவைக்கு வந்தார்கள்.) இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றும் இந்த வேளையில் என்னுடைய குலக் கடவுள், பொன்மனச் செம்மல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய இதயக் கதவுகளைத் திறந்து, நன்றி தெரிவித்து, மனதார வாழ்த்தி, முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஆ. நல்லசிவன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்-தொழிலாளர் பாதுகாப்புச் சட்ட முன்வடிவு கொண்டுவரப் பற்றிருப்பதை நான் வரவேற்கிறேன். தமிழ் நாட்டிலே இருக்கும் 6 லட்சம் கைத்தறிகளையும், அந்தக் கைத்தறித் தொழிலிலே ஈடுபட்டிருக்கும் 13 லட்சம் நெசவாளர்களையும் ஓரளவுக்குப் பாதுகாக்கக் கூடியது இந்தச் சட்ட முன்வடிவு. அந்தத் தொழிலிலே ஈடுபாடு கொண்டு நல்ல அனுபவம் மிக்க மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் எந்த அளவுக்கு மனம் நெகிழ்ந்து போயிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, இந்தச் சட்ட முன்வடிவு எவ்வளவு தேவையாக இருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். இந்தச் சட்ட முன்வடிவு முன்னாலேயே சட்ட முன்வடிவாக வந்திருக்கும். போன சட்ட மன்றத்தாலே போடப்பட்ட கூட்டுப் பொறுக்குக் கமிட்டி கலைக்கப்பட்டதன் காரணமாக சட்டமாக வந்திருக்க வேண்டிய இந்தச் சட்டத்திற்கு 1 ஆண்டு காலதாமதம் ஏற்பட்டது. 1 வருஷம் நெசவாளர்கள் ஏமாற்றம் அடைந்து இப்போது இது சட்ட முன்வடிவாக வந்திருக்கிறது. இது மிகவும் மகிழ்ச்சிகரமான ஒன்று. இதிலே குறிப்பிட்டி



ருக்கக்கூடிய ஷரத்துக்கள் எல்லாம் இதற்காக நியமிக்கப்பட்ட ராஜா சுப்ரமணியம் கமிட்டியினுடைய சிபார்சுகளினுடைய அடிப்படையிலேதான் இருக்கின்றன. ராஜா சுப்ரமணியம் கமிட்டியினுடைய சிபார்சுகள்தான் சட்ட மன்ற உறுப்பினர்களுக்குத் தரப்பட்டிருக்கின்றன. அந்தக் கமிட்டியினுடைய அறிக்கையை முழுமையாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், தமிழ் நாட்டு மக்களுக்கும் கொடுத்தால் மிகவும் உதவியாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது, ராஜா சுப்ரமணியம் கமிட்டியின் முழு அறிக்கையும் தமிழ் மக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், கைத்தறி நெசவாளர்களுக்கும் அளிக்கப்படும் என்ற வாக்குறுதியை அளிப்பார்கள் என்று நான் நம்புகிறேன். இந்த மசோதா வருவதன் மூலமாக இடைத் தரகர்களால் கொடுமைப்படுத்தப்பட்ட, சுரண்டப்பட்ட கைத்தறி நெசவாளர்களுக்குப் பாதுகாப்பு ஏற்படுகிறது. அவர்களுடைய ஊதியம், வேலை நிலைமைகள் போன்றவற்றிலே திட்டவட்டமான முறைகளைக் கையாள வேண்டும் என்ற உத்தரவாதம் அளிக்கும் ஷரத்துக்கள் இதிலே இருக்கின்றன. குறிப்பாக பாக்டரீஸ் ஆக்ட், சம்பளப் பட்டுவாடா சட்டம், ஸ்டான்டிங் ஆர்டர்ஸ் ஆக்ட், மகப்பேறு உதவிச் சட்டம், தொழில் தகராறுச் சட்டம் போன்ற சட்டங்கள் இந்தக் கைத்தறி நெசவாளர்கள் விஷயத்திலே அமுல் படுத்தப்பட வேண்டும் என்ற முறையிலே இந்த மசோதா அவர்களுடைய உரிமையைச் சட்டபூர்வமாக அங்கீகரிக்கிறது.

(முற்பகல் 10-10)

அடுத்து, சட்டத்தின் மூலமாக நாம் சில நன்மைகளை கைத்தறி நெசவாளர்களுக்குச் செய்ய விரும்பினாலும், அந்தச் சட்டங்களைச் சரியாக அமுல்படுத்துவதன் மூலம்தான் அவர்கள் அதன் பலனை அனுபவிக்க முடியும். இந்தச் சட்ட முன்வடிவை அரசு அமுல்படுத்த நினைக்கும்போது, அவ்வாறு அனுகூலம் பெற வேண்டியவர்களை, அனுகூலம் பெற முடியாதவாறு தடுப்பதற்கான பல சந்தர்ப்பங்கள் இங்கே இருக்கின்றன என்பதை மட்டும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இந்தச் சட்டத்தில் கைத்தறி நெசவாளர்கள் மூன்று பிரிவினராகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். 'டொமஸ்டிக் வீவர்' என்று சொல்லப்படும் சொந்தத் தறிக்காரர்கள். அடுத்து, பேக்டரியில் வேலை செய்கிறவர்கள்—அதாவது மாஸ்டர் வீவர்களிடம் வேலை செய்பவர்கள்—மூன்றாவது வகையினர்

சுயேச்சையான தறியாளர்கள். இந்த மூன்று பிரிவினரில் சுயேச்சையான தறிக்காரர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இந்தச் சட்டத்தில் இல்லை. காரணம் அவர் தனக்குத்தானே தொழில் செய்து கொள்கிறார்.

பேக்டரியில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு இந்தச் சட்டத்தில் பாதுகாப்பு இருக்கிறது. அதற்குக் காரணம் அவர்கள் தங்கள் பெயரைப் போட்டு பதிவு செய்துகொண்டிருப்பதால், அந்தப் பாதுகாப்பு கிடைக்கிறது. ஆனால் மாஸ்டர் வீவர்களிடம் நூல் வாங்கி நெய்கின்ற 'ஹோம் ஒர்க்கர்ஸ்' என்ற பிரிவில் வருகிறவர்களுக்குப் பாதுகாப்பு கிடைக்காமல் செய்வதற்கும் இதில் வசதி இருக்கிறது. கேட்டால் அவர்களெல்லாம் 'இண்டிபெண்டண்ட் வீவர்ஸ்' என்றும், தங்களிடம் வேலை செய்பவர்கள் அல்ல என்றும் மாஸ்டர் வீவர்கள் சொல்லக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இந்த நிலையை மாற்ற வேண்டுமென்றால், மாஸ்டர் வீவர்களிடம் நூல் வாங்கி நெய்யும் தொழிலை மேற்கொண்ட தறிக்காரர்கள் அனைவருக்கும் கார்டுகள் வழங்கப்பட வேண்டும். அவர்கள் எந்த மாஸ்டர் வீவரிடம் வேலை செய்கிறார்கள் என்ற விவரம் பதியப்பட்டு அவர்களுக்குக் கார்டுகள் வழங்கப்பட வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், அவர்களுக்குச் சட்டப்படி பாதுகாப்பு அளிக்க வேண்டிய மாஸ்டர் வீவர்களே தங்களை மாஸ்டர் வீவர்கள் அல்ல என்று சொல்லிக்கொள்ளும் நிலையும் இருக்கிறது. தானும் தன்னுடைய குடும்பத்தினரும் நெய்யும் வேலையில் ஈடுபட்டிருப்பதாகத் தங்களை 'இன்டிபெண்டண்ட் வீவர்ஸ்' என்று சொல்லித் தப்பித்துக்கொள்ளும் நிலையும் இருக்கிறது. எனவே யார், யார் 'மாஸ்டர் வீவர்ஸ்' என்ற விவரமும் கண்டறியப்பட்டு அவர்கள் பெயரும் பதிவு செய்யப்பட வேண்டும். அவ்வாறு மாஸ்டர் வீவர்கள் யார், 'ஹோம் ஒர்க்கர்கள்' யார் யார் என்பதை விதிமுறைகளில்தான் நாம் தெளிவாகப் போட முடியும். சட்டத்திலே அதைச் செய்ய முடியாது என்பதை நான் அறிவேன். எனவே ஹோம் ஒர்க்கர்களுக்கும், பேக்டரி ஒர்க்கர்களுக்கும் விதிகளில் பாதுகாப்புக் கிடைக்கும்படி உத்தரவாதம் செய்யப்பட வேண்டும்.

மாஸ்டர் வீவர்களாக இருப்பவர்கள் தங்களை இன்டிபெண்டண்ட் வீவர்கள் என்று போட்டுக்கொண்டு, தங்களிடம் வேலை செய்யும் ஹோம் ஒர்க்கர்களின் பெயர்கள் அதிகமாக இருந்தாலும், அதையெல்லாம் மறைத்து, கம்பனியைச் சிறிது சிறிதாக ஆக்கிக்கொண்டு தாங்களும் தங்கள் குடும்பத்தினரும்



மட்டுமே வேலை செய்வதால் 'இன்டஸ்ட்ரியல் பிரிமிசிஸ்' அல்ல என்று சொல்லும் ஆபத்தும் இருக்கிறது. அத்தகைய லூப்ஹோல்கள் நிறைய இதில் இருக்கின்றன.

நான் பல திருத்தங்களைக் கொடுத்திருக்கிறேன். அதில் முக்கியமான திருத்தத்தைப்பற்றி மட்டும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்தச் சட்டத்தில் ஒரு முக்கியமான ஷரத்து இருக்கிறது. அதாவது இந்த அரசு இந்தச் சட்டம் நிறைவேறிய பிறகு, அது அறிவிக்கும் தேதியிலிருந்துதான் அறிவிக்கப்படும் பகுதிகளுக்கு மட்டும் அமுலுக்கு வரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது நல்லதல்ல. இதைப்போன்று, தமிழ் நாட்டில் வேறு ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டபோது, சொன்னதால் ஏற்பட்ட விளைவை நாம் ஏற்கெனவே பார்த்தோம். நமது மாநிலத்தில் பீடித் தொழில் குறித்த சட்டம் வந்தபோது, அரசாங்கம் அறிவிக்கும் தேதியிலிருந்து அரசாங்கம் குறிப்பிடும் பகுதிகளுக்கு மட்டுமே அது அமுலுக்கு வரும் என்று சொல்லப்பட்டதால், ஒரு சில பகுதிகளில் அந்தச் சட்டத்தை விஸ்தரித்தபோது, உடனே பீடித் தொழிற்சாலைகள் சித்தூருக்குப் போய்விட்டதை நாம் அறிவோம். அதைப்போலவே தமிழ் நாட்டில் ஒரு குறிப்பிட்ட 2 மாவட்டங்களில் அந்தச் சட்டத்தை அமுல் செய்தபோது, அந்தத் தொழில், சட்டம் அமுல்படுத்தப்படாத மாவட்டத்திற்குப் போன நிலையையும் பார்த்தோம். அந்த அளவுக்குத் தொழிற்சாலையின் பெயரையும் இடத்தையும் அந்த முதலாளிகள் மாற்றிக் கொண்டிருந்தார்கள். இப்படிப்பட்ட படிப்பினையை நாம் பெற்ற பிறகும், இந்தச் சட்டத்திலும் அத்தகைய ஷரத்தைச் சேர்ப்பது எந்த வகையிலும் நியாயமில்லை. எனவே இந்தச் சட்டத்தை தமிழ்நாடு முழுவதும் ஒரு குறிப்பிட்ட நாளில் அமுலுக்குக் கொண்டுவரும்படி செய்ய வேண்டும். அப்படி இல்லாமல் தற்போது கிளாஸ் 1-ல் சொல்லப்பட்டிருப்பதைப்போல், அரசு அறிவிக்கும் தேதியிலிருந்து அறிவிக்கப்படும் பகுதிகளுக்கு மட்டுமே இந்தச் சட்டம் அமுலுக்கு வரும் என்று சொன்னால், சட்டத்தை இவ்வாறு பகுதி பகுதியாகப் பிரித்து அமுல்படுத்தினால், இந்தச் சட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்ளக்கூடிய வாய்ப்புதான் அதிகமாகும். எனவே இந்தச் சட்டத்தை ஏககாலத்தில் அமுலுக்குக் கொண்டு வருவதாகத் திருத்த முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட ஒரு ஷரத்தைக் கொண்டுவர வேண்டியதன் அவசியம் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். என்னுடைய திருத்தத்தை ஏற்பதைப்பற்றியோ, மறுப்பதைப்பற்றியோ நான்

கவலைப்படவில்லை. என்றாலும் இத்தகைய ஷரத்தைக் கொண்டு வருவதற்கான விளக்கத்தை அவர் அளிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். தமிழ்நாடு முழுவதும் இந்தச் சட்டத்தை ஒரே நாளில் அமுல்படுத்துவதால் என்ன பாதகம், என்ன ஆபத்து வந்துவிடும் என்று அறிய விரும்புகிறேன்.

முன்பு ஒரு முறை கைத்தறி நெசவாளர்களுக்கு அனுகூலம் செய்ய வேண்டுமென்று ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டபோது, அதை அமுல் செய்ய முடியாத நிலையை மாஸ்டர் வீவர்கள் ஏற்படுத்தினார்கள். அந்த விவகாரம் சுப்ரீம் கோர்ட்டுக்கே போனது. அங்கே, தங்களுக்கும் தங்களிடம் வேலை செய்யும் நெசவாளர்களுக்குமிடையே தொழிலாளர்-முதலாளி உறவில்லை என்று சொன்னார்கள். நாங்கள் நூலை அவர்களுக்கு விலைக்குக் கொடுக்கிறோம். நூலுக்கான கிரயத்தை அவர்கள் எங்களுக்குக் கொடுத்து விடுகிறார்கள். பிறகு நெய்து அவர்கள் எங்களிடம் கொண்டுவந்து அதை விற்கிறார்கள். நாங்கள் அதற்கு விலை கொடுத்து வாங்குகிறோமே தவிர, அவர்களுக்கு நெய்ததற்கான கூலி கொடுப்பதில்லை என்று சொன்னார்கள். இப்படிச் சொல்லி, இன்டஸ்ட்டிரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட்டின் கீழ் அவர்களுக்குள் எம்ப்ளாயர்-எம்ப்ளாயி ரிலேஷன்ஷிப் இல்லை என்று வாதிட்டார்கள். அதைப்போலவேதான் அவர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் கொடுக்கும் சட்டத்தை அமுல்படுத்த விரும்பியபோது, கும்பகோணத்தில் இந்த நிலைமையை நேரடியாகவே கண்டார்கள். அங்கே சென்ற தொழிற் சங்கப் பிரதிநிதிகளிடமும், அரசின் அதிகாரிகளிடமும் அங்கே உள்ள மாஸ்டர் வீவர்கள் அப்படித்தான் சொன்னார்கள். உண்மை நிலை அதுவல்ல என்றாலும், ரெக்கார்டு பர்ப்பசுக்கு அப்படித்தான் சொன்னார்கள். இப்போது இந்தச் சட்டத்தைக் கொண்டு வரும்போது, அதுபோன்ற வாதத்தை எழுப்பி மாஸ்டர் வீவர்கள் தப்பித்துக்கொள்ள வகை இல்லாதபடி விதிமுறைகளை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, இந்தச் சட்டத்தை அமுல்படுத்தும்போது, மாவட்டத்திற்கு மட்டும் அதிகாரிகளைப் போட்டு கண்காணிப்பது என்ற நிலையில்லாமல், தாலுக்கா அளவிலும் விசேஷமாக இன்ஸ்பெக்டர்களைப் போட்டு கண்காணிக்க வேண்டும். தமிழ் நாட்டில் 6 லட்சம் தறிகளும், 13 லட்சம் நெசவாளர்களும் பரவி இருப்பதால், இதில் சரியான கண்காணிப்பு இருக்க வேண்டும் என்றால், தாலுக்கா மட்டத்திலும் இதற்கான அதிகாரிகளை நியமிக்க வேண்டும். தமிழ் நாட்டில் விவசாயத்திற்கு அடுத்து இருக்கும் பெரிய தொழிலாக நெசவுத் தொழில் இருக்கிறது. எனவே மாவட்டத்திற்கு ஒரு அதிகாரியைப் போடு



வதன் மூலம் இதை உரிய முறையில் கண்காணிக்க முடியாது. எனவே தாலுக்கா அளவிலும் கண்காணிப்பதற்கான வகையில் அதிகாரிகளை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விதிமுறைகளைத் தயாரிப்பதைப்பற்றியும் ஒரு வார்த்தை குறிப்பிட விரும்புகிறேன். இந்தச் சட்டம் சீரான முறையில் அமுல் செய்யப்பட வேண்டுமென்றால், இதற்கான விதிமுறைகள் காலதாமதமில்லாமல் உருவாக்கப்பட வேண்டும். சட்டத்தை மட்டும் நிறைவேற்றிவிட்டு அதற்கான விதிமுறைகளைச் செய்யாமல் காலம் கடத்தினால், நெசவாளர்களுக்கு எந்த வகையான பாதுகாப்பும் கிடைக்காது. அதுமட்டுமல்ல. இந்தச் சட்டத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கு வேலை நிலையும் பாதுகாப்பும்தான் உறுதி செய்யப்படுகிறதே தவிர, அவர்களின் சம்பளத்தைப் பொறுத்தவரையில், ஒன்றும் செய்யப்படவில்லை. எனவே அவர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் அடிப்படையிலோ, அவர்களுக்கு என்று தனியான ஒரு சம்பள போர்டை ஏற்படுத்தியோ இன்றைய காலகட்டத்தில் அவர்களின் தேவைகளை உணர்ந்து ஊதியம் வழங்குவதற்கான வழிவகை செய்யப்பட வேண்டும் என்று கூறி, என்னுடைய திருத்தங்களுக்கு உட்பட்டு இந்தச் சட்ட மசோதாவை ஆதரிக்கிறேன்.

திரு. சோ. ஆறுமுகம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களின் நலனைப் பாதுகாக்கக் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்தச் சட்ட முன்வடிவை நான் பாராட்டவும் வரவேற்கவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மசோதாவை வரவேற்றுப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. அனகாபுத்தூர் இராமலிங்கம் அவர்கள் இந்தத் தொழிலில் தன்னை இணைத்து கொண்டவராதலால் உணர்ச்சி வசப்பட்டுப் பேசியதோடு, இந்தத் துறையில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தொழிலாளர்களின் சார்பிலும் தன்னுடைய கருத்தை எடுத்து வைத்திருக்கிறார்கள்.

(முற்பகல் 10-20)

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், இதிலே எந்தவிதமான மாறுபட்ட கருத்துமில்லை. ஆனால் இந்தச் சட்டத்தை நாம் இங்கே கொண்டு வந்து நிறைவேற்றிவிட்டு நடைமுறைப்படுத்துகிறபோது பல சிக்கல்கள் இருக்கும். அந்தச் சிக்கல்களையெல்லாம் களைந்து நிறைவேற்றும்போது

தான் நெசவாளர்களுக்கு முழுமையான பாதுகாப்பு கிடைக்கும். ஆனால் இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாக மாஸ்டர் வீவர்கள் எடுக்கக் கூடிய முயற்சிகளுக்குத் துணையாக நாம் சென்று விடக்கூடாது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட ஏதோ ஒரு படத்திலே பாடியது என்னுடைய நினைவுக்கு வருகிறது. "சட்டம் போட்டு தடுக்கிற கூட்டம் தடுத்துக் கொண்டேயிருக்கிறது. திட்டம் போட்டு திருடுகிற கூட்டம் திருடிக் கொண்டேயிருக்கிறது" என்று பாடினார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இன்னுமொரு முறை சொல்லுங்கள்.

திரு. சோ. ஆறுமுகம் : "சட்டம் போட்டு தடுக்கிற கூட்டம் தடுத்துக் கொண்டேயிருக்கிறது; திட்டம் போட்டு திருடுகிற கூட்டம் திருடிக்கொண்டேயிருக்கிறது".

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு நல்ல கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறார். அதை அவர் நினைவில் வைத்துக்கொண்டிருப்பதற்காக நான் நன்றி கூறிக்கொள்கிறேன். அதற்குப் பிறகு "திருடுகிற கூட்டம் மனம் திருந்தினால்தான் வெற்றிகரமாக அமையும்" என்ற கருத்தும் சொல்லப்பட்டிருக்கிறது.' அதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

திரு. சோ. ஆறுமுகம் : ஆகவே இந்தச் சட்டம் தொழிலாளர்களுக்காக, தொழிலில் ஈடுபடுபவர்களுக்காகக் கொண்டுவரப்பட்ட சட்டம். இதை நாமும் ஒத்துக்கொள்ள வேண்டுமென்று முதலாளிகள் இந்தச் சட்டத்திற்குத் துணையாக இருக்க வேண்டும். அதற்கு மாறாக இந்தச் சட்டத்திலே இருக்கின்ற சில ஓட்டைகளைப் பயன்படுத்திக்கொண்டு, தொழிலாளர்களுக்குப் பாதகமாகச் செயல்படக் கூடாது என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கருத்தாகும்.

இந்தச் சட்ட முன்வடிவின் அத்தியாயம் 2, பிரிவு ஐந்தில் "உரிமங்கள்" என்ற தலைப்பில், "மேல் முறையீட்டு அதிகாரியின் தீர்ப்பே முடிவானது" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏதோ ஒரு காரணத்தாலே அந்த அதிகாரி ஒரு முடிவைச் சொல்லுவாரானால், அதுவே முடிவானது என்று வருமானால், அது தொழிலை நடத்தக்கூடியவர்களைப் பெரிதும் பாதிக்கும். இதனால் தொழில் பாதிப்பதோடு மட்டுமல்லாமல், தொழிலாளர்களும் நிச்சயமாகப்



பாதிக்கப்படுவார்கள். ஆகவே அந்த முடிவு குறித்து நீதிமன்றம் செல்வதற்கும் இதிலே இடம் இருக்க வேண்டும் என்ற என்னுடைய கருத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அத்தியாயம் 3, பிரிவு 2 (இரண்டு)-ல் "அதிகாரிகள் செய்ததில் விதிமீறல்கள் இருக்கின்றன என்று ஆய்வாளர்கள் சந்தேகப்பட்டால், தொழிற்சாலையை ஆய்வு செய்யும் முன் தொழிலதிபர்களுக்கு முன்னறிவிப்பு கொடுக்க வேண்டும்" என்று இந்த விதியில் இருக்கிறது. இதை நிச்சயமாக தொழிலதிபர்கள், குறிப்பாக மாஸ்டர் வீவர்கள் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். எத்தனை பேர் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள், அவர்கள் இந்த சட்டத்தின்படி கொண்டுவரப்பட்டிருக்கிறார்களா என்று கண்டறிய முன்னறிவிப்பின்றி திடீரென்று அதிகாரிகள் சென்று பார்த்து கண்டுபிடித்தால் தான், தொழிலாளர்களுக்கு நம்மால் பாதுகாப்பு தேடித்தர முடியும். அப்படி இல்லாமல் முன்னறிவிப்பு கொடுத்துவிட்டுத்தான் தொழிற்சாலைக்குள்ளே நுழைய வேண்டுமென்று சொன்னால், அதிகாரிகள் நோட்டீஸ் கொடுத்தோ, ஆள் மூலமாகச் சொல்லி அனுப்பியோ போவார்களானால், நெய்துகொண்டிருக்கிற ஆட்களையெல்லாம் முதலாளிகள் வெளியே அனுப்பிவிட்டு, இன்றைக்கு ஆள் வரவில்லை, ஆகவே ஒன்றும் நெய்யவில்லை என்று சொல்லி தப்பித்துக் கொள்வார்கள். ஆகவே முன்னறிவிப்பு கொடுத்துவிட்டுத்தான் போக வேண்டும் என்று இருப்பது தேவையில்லாத ஒன்று. அதை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அத்தியாயம் ஐந்து, பிரிவு 19-ல் அதிகப்படியான வேலைக்கான ஊதியங்கள் என்று போட்டிருக்கிறோம். எட்டு மணி நேரத்திற்கு மேல் வேலை செய்தால், ஓவர்-டைம் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறோம். இது நடைமுறைக்கு ஒத்துவருமா என்பது ஐயப்பாடாகவே இருக்கிறது. ஓவர்-டைம் கொடுப்பதென்பதை வைத்துக்கொண்டால், அதை நம்மால் நிறைவேற்ற முடியுமா என்றால், முடியாது. ஏனென்றால், ஏற்கெனவே உணவு நிறுவனங்களிலும் மற்ற பல நிறுவனங்களிலும் பணிபுரிபவர்களுக்கு ஓவர்-டைம் கொடுக்க வேண்டுமென்று சட்டம் போட்டும், அதை நம்மால் நிறைவேற்ற முடியவில்லை.

ஓட்டல்களிலும், தனியார் நிறுவனங்களிலும் ஓவர்-டைம் கொடுப்பது நடைமுறையில் முழுமையாக நிறைவேற்றப்படாததால், பல இடங்களில் தொழில் தகராறுகள் ஏற்பட்டு போராட்டங்கள்கூட உருவாக்கப்பட்டிருக்கின்றன. இதை

நாம் மறந்துவிடுவதற்கில்லை. ஆகவே ஓவர்-டைம் கொடுக்க வேண்டுமென்று சட்டத்தை நிறைவேற்றினாலும்கூட, நடைமுறையில் அதை நிறைவேற்ற முடியாது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அத்தியாயம் எட்டு, பிரிவு 55-ல் "குடும்பம்" என்றால் என்ன என்பதற்கான விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே, கணவன், மனைவி, குழந்தைகள், வயது வந்த மகன், மகள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தாய், தந்தை பற்றிச் சொல்லப்படவில்லை. தாய், தந்தையையும் இதிலே சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தனியார் துறையைப் பொறுத்தவரையில், குறைந்தபட்ச ஊதியம் கொடுக்க வேண்டுமென்று நாம் சட்டத்தைப் போட்டிருந்தாலும், அது அமுல்படுத்தப்படுகிறதா என்று பார்த்தால், இல்லை. இவைகள் எல்லாம் செயல்பட முடியாமல் தொழிலாளர்கள் பாதிக்கக் கூடிய நிலையிலே இருக்கிறார்கள். குறைந்தபட்ச ஊதியத்தைப்பற்றி இந்தச் சட்ட முன்வடிவிலேயும் சேர்த்திருக்கிறார்கள். ஆகவே இந்த நிலைமைகளையெல்லாம் அரசு கவனத்திலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கைத்தறித் துறையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு நிரந்தரமாகப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமானால், இந்தச் சட்ட முன்வடிவை அமுல்படுத்த அரசாங்கம் சரியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நெசவாளர்களுக்கு உதவ வேண்டுமானால், நூல் விலையைக் கட்டுப்படுத்தியாக வேண்டும். இன்றைக்கு நூல் விலை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்குள்ளே இருக்கிறதா என்றால், இல்லை. இன்றைக்கு நம்முடைய நாட்டிலே பல கூட்டுறவு நூற்பாலைகள் இருக்கின்றன. ஒரு சில கூட்டுறவு நூற்பாலைகள் 20 சதவீதம், 40 சதவீதம் நூலை கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குக் கொடுத்து விட்டு மீதமுள்ளதை, தனியார் கூட்டுறவு நூற்பாலைகள் எப்படி மார்க்கட்டில்வாத்தை அனுசரித்து வெளிச் சந்தையில் விற்றுக் கொண்டிருக்கிறார்களோ, அதைப்போலவே விற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதனால் இரண்டு, மூன்று தறிகளை வைத்துக்கொண்டிருக்கிற சாதாரண நெசவாளிகள் அதிக விலையைக் கொடுத்து நூல் வாங்க வேண்டியிருக்கிறது. நூலுக்கு அதிக விலை கொடுக்க வேண்டியிருப்பதால், தொழிலாளர்களுக்கு அதிக ஊதியம் கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. நூல் விலை சில நேரங்களில் ஏறுகிறது. அதே நேரத்தில் அவர்கள் செய்த துணியின் விலை இறங்குகிறது. இதனாலே தொழிலாளர்கள் பாதிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. இவையெல்லாம்



கவனத்திலே கொண்டு, கூட்டுறவு நூற்பாலைகள் உற்பத்தி செய்கின்ற நூல்கள் அனைத்தையும், அரசாங்கம் நிர்ணயிக்கின்ற விலைக்கு கைத்தறி நெசவாளர்களுக்குத்தான் தர வேண்டும் என்ற நிரந்தர முடிவை நம்முடைய அரசாங்கம் இந்த நேரத்திலே எடுப்பது மிகப் பொருத்தமாக இருக்கும். அப்படிச் செய்தால்தான், அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய வேட்டி, புடவை, சட்டை ஆகியவைகள் பொது மக்களுக்குக் கட்டுபடியாகக் கூடிய விலையில் கிடைக்க வாய்ப்பு ஏற்படும். அப்போதுதான் இந்தத் தொழில் நசிந்து போகாமல் இருக்கும் என்பதை எடுத்துச் சொல்லி, இத்தகைய குறைபாடுகளையெல்லாம் போக்குகிற வகையிலே எதிர்காலத்திலே சட்டத்தை நடைமுறைப்படுத்துகிற போது முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னுமொன்றை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதிலே இன்னொன்று சொல்லியிருக்கிறார்கள்.

(முற்பகல் 10-30)

"ஒரு நபர் வரையறுக்கப்படக்கூடிய காலத்துக்குள்ளும், இருபது ரூபாய்க்கு மேற்படாத கட்டணத்தைச் செலுத்துவதன் பேரிலும், இது தொடர்பாக, அரசிதழில் வெளியிடப்படும் அறிவிப்பு ஒன்றின் மூலம் அரசு குறிப்பிடக் கூடிய அதிகாரிக்கு மேல் முறையீடு செய்யலாம்" என்றும் இருக்கிறது.

இதிலே திரு. நல்லசிவன் அவர்கள் சொன்னதுபோல, இந்தச் சட்டம் தமிழ் நாடு பூராவுக்கும் இன்றைக்கு நிறைவேற்றப்படுகிறது என்று சொன்னால், அது ஒரே நேரத்தில் அமுல்படுத்தப்பட வேண்டும். அதிலே பகுதி பகுதியாக அமுல்படுத்துவது என்று இருக்கக்கூடாது. சேலம் மாவட்டத்தில் குமாரபாளையத்தில் கொஞ்சம் செல்வாக்குப் படைத்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இப்போது அந்தச் சட்டத்தை எங்கள் பகுதியில் அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுப் பெறுகின்ற நிலை இருக்கிறது. எந்தக் கட்சியினர் என்று நான் சொல்ல விரும்பவில்லை. அதுபோலவே சேலம் மாவட்டத்தில், குகைப் பகுதியில் உள்ளவர்களில் செல்வாக்குப் படைத்தவர்கள் இருக்கிறார்கள், அவர்கள் அமுல்படுத்த வேண்டாம் என்று கேட்பார்கள். ஆனால், வேம்படித்தாளம், கொண்டாம்பட்டி, இளம்பள்ளி போன்ற இடங்களில் உள்ள சாதாரண நெசவாளிகள் வந்து கேட்டு அப்படிப் பெற முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே பகுதி பகுதியாக அந்தச் சட்டத்தை அமுல்படுத்துவது என்று இல்லாமல் ஒரே சமயத்தில் அமுல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதிலே இன்னொன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்ட முன்வடிவை முழுமையாக அமுல்படுத்துவது என்று சொல்லும்போது, இதற்கு என தனியாக ஒரு அதிகாரி இருக்க வேண்டும். ஏற்கெனவே இருக்கின்ற தொழிலாளர் நலத் துறை அதிகாரிகள் அல்லது தொழில் ஆய்வாளர்கள் இவர்களைக்கொண்டு இந்தச் சட்ட முன்வடிவை நடைமுறைப்படுத்தலாம் என்று சொல்வார்களானால், அதை நிச்சயமாகச் செயல்படுத்த முடியாது. ஆகவே இதற்கு என்று தனியாக அதிகாரிகள் நியமிக்க வேண்டும், அந்த அதிகாரிகளுக்கு இந்தப் பொறுப்பைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று நான் அமைகிறேன். வணக்கம்.

***மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின்மீது பேசிய அனைவருக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியாவிலேயே, உழவுத் தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்களுக்கு அடுத்தாற்போல், அதிக எண்ணிக்கையிலே இருப்பவர்கள் கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் தான். அந்தத் தொழிலாளர்களுக்கு என்று சட்டம் கொண்டுவர வேண்டுமென்ற முயற்சியில் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிதான் ஈடுபட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இது யாருடைய வற்புறுத்தலின் மீதோ, வேண்டுகோளின் மீதோ கொண்டுவரப்படவில்லை. பெரும்பான்மையான கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. அவர்கள் பாதுகாப்பு இல்லாமல் தவிக்கிறார்கள். அவர்களுக்காக இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வர வேண்டுமென்று அரசே நினைத்துக்கொண்டு, கொண்டு வந்ததாகும். இதிலே மிகச் சிறப்பான அம்சம், நான் நினைப்பது சரியாக இருக்குமானால், இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலுமே இதுவரையில் இந்தமாதிரி கைத்தறித் தொழிலாளர்களுக்கு பாதுகாப்புச் சட்டம் கொண்டு வரவில்லை. (We steal over the other States) நாம் மற்ற மாநிலங்களை முந்தி பரிசு பெறக்கூடிய அளவிலே, முதல் பரிசு பெறுகிறோம் என்பதிலே நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். மாண்புமிகு அங்கத்தினர்கள் திருவாளர்கள் நல்லசிவன் அவர்களும் இராமலிங்கம் அவர்களும் பேசும்போது, இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வருவதில் ஏற்பட்ட காலதாமதத்திற்கான காரணங்களை எடுத்துச் சொன்னார்கள். இந்தச் சட்ட முன்வடிவு ஓராண்டு முன்னதாகவே வந்திருக்க வேண்டியதுதான். அது செலக்ட் கமிட்டிக்கு அனுப்பப்பட்டு, அந்த செலக்ட் கமிட்டி நாடு பூராவும் சுற்றி வந்து, இறுதியாக தென்னாற்காடு மாவட்டம் சென்று, தென்னாற்காடு மாவட்டத்திலே சாட்சியங்



களை எல்லாம் எடுத்து, அதற்குப் பின்னாலே செலக்ட் கமிட்டி உட்கார்ந்து பரிசீலனை செய்து, இந்தச் சட்ட முன்வடிவிற்கு முழு வடிவம் கொடுக்க வேண்டும் என்று இருந்த நேரத்தில், எங்களுடைய அரசு 'டிஸ்மிஸ்' செய்யப் பட்டுவிட்டது. 'டிஸ்மிஸ்' செய்வதற்காக ஏதாவது 'ஷோ காஸ் நோட்டீஸ்' கொடுத்தார்களா என்றால் இல்லை. ஒரு எக்ஸ்பிளனேஷன் கேட்டார்களா என்றால் இல்லை. எதுவுமே இல்லை. தமிழ் நாட்டு அரசை இந்தக் காரணங்களுக்காக 'டிஸ்மிஸ்' செய்கிறோம் என்று சொல்லவில்லை. அதற்கு என்ன காரணங்கள் சொல்கின்றீர்கள் என்று கேட்டார்களா என்றால், அப்படிக் கேட்கவில்லை. அவர்களிடம் ஏதோ அதிகாரம் இருந்தது, செய்துவிட்டார்கள்.

(திரு. சோ. ஆறுமுகம் அவர்கள் குறுக்கிட்டுப் பேச எழுந்தார்கள்.)

மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கடைசியிலே பேசலாம். இப்போது குறுக்கிட வேண்டாம். அங்கத்தினர் அவர்கள் பேசும்போது, நான் தலையிடவில்லை. தயவுசெய்து என்னுடைய பேச்சிலேயும் தலையிட வேண்டாம். நான் பேசி முடித்த பிறகு கடைசியிலே பேசலாம். 'ட்ரெண்ட்' எனக்குப் போய் விடுகிறது அல்லவா? அதனால்தான் சொல்கிறேன்.

'டிஸ்மிஸ்' செய்துவிட்டார்கள். எனக்குக்கூட ஒரு ஆசை இப்போது வந்திருக்கிறது. ஸ்டேட் கவர்ண்மென்ட்டையேகூட இன்டஸ்டரியல் டிஸ்பியூட்ஸ் ஆக்டின் கீழ் கொண்டுவந்து, ஸ்டேட் கவர்ண்மெண்ட் ஒரு 'இன்டஸ்ட்ரி' மாதிரி இருந்தால், ஒரு நோட்டீஸ் கொடுப்பார்கள். அப்படிக் கொடுத்தால்கூட தேவலாம் போல் இருக்கிறது. எல்லோருக்கும் நோட்டீஸ் கொடுத்து 'டிஸ்மிஸ்' செய்யலாம். என்ன காரணம் என்று அவர்கள் கேட்கலாம். What happened to natural justice? இயற்கை நியதி என்று ஒன்று இருக்கிறது. இயற்கை நியதியை மறந்து 'டிஸ்மிஸ்' செய்துவிட்டார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆங்கிலத்திலேயே பேசிவிட்டால், குறுக்கீடுகள் இல்லாமல் இருக்கும். நமக்குக் கொஞ்சம் நேரம் கிடைக்கும்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் என்ன சொல்கின்றார்கள் என்பது எனக்குப் புரிகிறது. மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடம் நான் ஒரு வருடத்திற்கு முன்னாலேகூட பர்மிஷன் வாங்கியிருக்கிறேன். நான் ஸ்டேஷன் மாஸ்டராக இருந்த காரணத்தினாலே ஆங்கிலத்தில் இடையிடையே பேச்சு வந்துவிடும். அதற்கு மன்னிக்க வேண்டும் என்று கேட்டேன். மன்னிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை நான் அவர்கள் ஞாபகத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1981 மே 15

அன்று அப்படி 'டிஸ்மிஸ்' செய்துவிட்ட காரணத்தினால், காலதாமதம் ஆகிவிட்டது. அப்படி ஆகாமல் இருந்திருந்தால், முன்பே கொண்டு வந்திருப்போம். இன்றைய தினம் திரு. அனகாபுத்தூர் இராமலிங்கம் அவர்கள் நெசவாளர்கள் நிலைமையைப்பற்றிச் சொல்லும்போது கண்ணீர் வடித்தார்கள். நெசவுத் தொழில் செய்பவர்களுக்குத்தான் மோசமான வியாதிகள் வருகின்றன. டி.பி. போன்ற வியாதிகள் வருகின்றன. இதற்குக் காரணம் என்னவென்றால், குறைந்த ஊதியம், வேலை செய்யும் முறை இவைகள் எல்லாம் அவர்களை மோசமான நிலைக்கு ஆளாக்கி விடுகின்றன. அவர்கள் குடும்பமே சேர்ந்து வேலை செய்தாலும்கூட, கிடைக்கின்ற கூலி மிகக் குறைவுதான். அது அன்றைக்கே போதுமா என்றால், போதாது என்றுதான் சொல்ல வேண்டும். இந்த நிலையிலே இருக்கக்கூடிய பெரிய சமுதாயம் அது. அந்தச் சமுதாயத்திற்காக இந்தச் சட்ட முன்வடிவை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி கொண்டுவந்திருக்கிறது. அது பாராட்டக்கூடிய அளவிலே இருக்கிறது. அப்படிப் பாராட்டிய மகிழ்ச்சியிலே மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமலிங்கம் அவர்கள் பேசும்போது முதலிலே ஆனந்தக்கண்ணீர் வடித்தார்கள். கடைசியில் அந்த நெசவாளர்கள் இருக்கின்ற நிலைமையை நினைத்துக் கொண்டு, இன்னும் அந்தமாதிரியான நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றனவே என்ற அளவில் வருந்தினார்கள். இனி இந்த மாதிரி நிலைமைகள் இருக்காது என்றும் அந்த அச்சம் வேண்டாம் என்றும் இந்த நேரத்திலே அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவைப்பற்றிச் சொல்லும்போது, மாண்புமிகு உறுப்பினர் அருமை சகோதரர் திரு. நல்லசிவன் அவர்கள் சொன்னார்கள். இந்தச் சட்ட முன்வடிவை அமுல்படுத்துவதுபற்றிச் சொன்னார்கள். இது ஒரு 'எனேபிளிங் மெஷர்'. அநேகமாக பல சட்டங்களில் இந்தப் பிரிவு உண்டு. 1961 ஆம் ஆண்டு அப்பிரண்டீஸ் ஆக்ட்-ல் இந்தப் பிரிவு இருக்கிறது. பீடி அண்ட் சிகார் ஒர்க்கர்ஸ் கண்டிஷன்ஸ் ஆஃப் சர்வீஸ் ஆக்ட், 1966-ல் இருக்கிறது. அதுபோலவே எம்ப்ளாயிஸ் ஸ்டேட் இன்சூரன்ஸ் ஆக்ட், 1948-ல் இருக்கிறது. அதுமாதிரி தமிழ் நாடு ஷாப்ஸ் அண்ட் எஸ்டாபிளிஷ்மெண்ட்ஸ் ஆக்ட், 1947-ல் இருக்கிறது. இது ஒரு எனேபிளிங் மெஷர். நிலைமைகளைப் பார்த்து எங்கெங்கே எதையெதைக் கட்டாயம் அமுல் படுத்த வேண்டுமோ அங்கங்கே அமுல்படுத்த வேண்டும். எங்கே தேவையில்லையோ அங்கே தேவையில்லை. இது பாதுகாப்பாக இருக்கக்கூடிய சட்ட முன்வடிவு. இதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1981 மே 15] [திரு. எஸ். இராகவானந்தம்]

பதிவு பண்ணுவதுபற்றிச் சொன்னார்கள். இந்தச் சட்ட முன்வடிவில் 'மாஸ்டர் அண்ட் சர்வெண்ட்ஸ் ரிலேஷன்ஷிப்' இருக்கிறது. முக்கியமான சட்டப் பிரிவுகள் 4, 56 இவை இரண்டையும் ஒத்திட்டுப் பார்த்தால் தெரியும். இந்தச் சட்ட முன்வடிவின் முக்கிய நோக்கமே கைத்தறி நெசவாளர்களோ, மாஸ்டர் வீவர்களோ, இவர்களை வேலை வாங்கக் கூடியவர்களோ, அது யாராக இருந்தாலும், அவர்களுடைய முதலாளிகளாக ரிஜிஸ்டர் செய்ய வேண்டும் என்று இருக்கிறது. பத்து பேர்களை வைத்துக்கொண்டு வேலை வாங்குகின்றார் என்றால், அவரையும் பதிவு செய்து கொள்ள வேண்டும். தொழிலாளர்களும் பதிவு செய்துகொள்ளலாம். லேபர் ஆபிசிலே பதிவு செய்து கொள்ளலாம் என்ற அளவுக்குக்கூட ரூல்ஸ் கொண்டுவரலாமா என்று பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவர்கள் பதிவு செய்துகொள்வதன் மூலம் 'மாஸ்டர் அண்ட் சர்வெண்ட்ஸ் ரிலேஷன்ஷிப்' அங்கே வருகிறது. அதிலே அங்கத்தினர் அவர்களுக்கு அச்சம் தேவையில்லை. யாரும் ஏமாற்றிவிட முடியாது என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

அத்தோடு 'மாஸ்டர் வீவர்ஸ்' பற்றிச் சொன்னார்கள். அதற்கும் சட்டத்திலே விரிவான விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. யார் 'மாஸ்டர் வீவர்' என்பதைப்பற்றி நல்ல விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே 'மாஸ்டர் வீவர்' யாராவது எனக்கும் அந்தத் தொழிலாளிக்கும் சம்பந்தமில்லை, நான் நூலை வாங்கிக்கொடுப்பதோடு சரி என்று சொல்லிவிட்டால்கூட, அதிலிருந்து அவர்கள் தப்பித்துக்கொள்ள முடியாது. அதற்குத்தான் சேப்டர் 1, ஜி-பிரிவில் இருக்கிறது.

## CHAPTER I Cl. 2 (g).

"'employer' means a person who has the ultimate control over the affairs of any industrial premises or who has, by reason of his advancing money, supplying goods or otherwise, a substantial interest in the control of the affairs of any industrial premises and includes—

(i) any other person to whom the affairs of any industrial premises are entrusted, whether such other person is called the managing agent, manager, superintendent or by any other name; and"

அதிலே இரண்டாவது இருப்பதைப் பார்த்தால். . .

"a president or a Chief executive of any weavers co-operative society or a master weaver engaged in handloom industry."

[திரு. எஸ். இராகவானந்தம்] [1981 மே 15

இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வர காலதாமதம் ஆனதற்குக் காரணத்தை நான் முன்பே சொல்லியிருக்கிறேன். கூடுமானவரையில் பீடித் தொழிலாளர்களுக்கும் சுருட்டுத் தொழிலாளர்களுக்கும் இருக்கும் சட்டத்திலே இருக்கக்கூடிய ஓட்டைகள் இந்தச் சட்டத்திலும் இருக்கக்கூடாது என்ற காரணத்தினாலேதான் இதைக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் பேசும்போது, ஒரு முக்கியமான விஷயத்தைச் சொன்னார்கள். மாஸ்டர் வீவர் என்றால் யார் என்பதை அந்தப் பிரிவில் விளக்கியிருக்கிறோம்.

"master weaver' means and includes any person not being a co-operative society, who supplies raw materials to any other person, whether or not the other person is a domestic weaver or an employee for the purpose of converting the same into finished product."

எந்த விதத்திலும் மாஸ்டர் வீவர், நூல் கொடுத்துவிட்டேன், அங்கேயிருந்து துணியை வாங்குகிறேன், எனவே அவர்களுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை என்று சொல்லிவிட முடியாது என்பதற்காக அவரையும் அதில் பிணைத்திருக்கிறோம் என்பதையும், எந்தவிதத்திலும் தப்பித்துக்கொள்ள முடியாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. சோ. ஆறுமுகம் அவர்கள் பேசும்போது, நோட்டீஸ் கொடுத்துவிட்டு உள்ளே போனால் எச்சரிக்கை ஆகிவிடுவார்களே என்று சொன்னார்கள். 7 (சி)-ஐப் படித்தால் தெரியும்.

'enter at all times any industrial premises, with such assistants as he thinks fit, if he has reason to believe that such industrial premises is being used for carrying on handloom industry or any other operation connected with handloom industry'

ஹேண்ட்லூம் இண்டஸ்ட்ரி நடக்கக்கூடிய இடத்தில் அவர் போய் பறிமுதல் செய்ய வேண்டுமென்றால், எப்போது வேண்டுமானாலும் எந்த நேரத்திலும் போகலாம். அதற்கு அதிகாரம் இருக்கிறது. 8 (ஏ)-ல்

'make such examination and hold such inquiry as may be necessary for ascertaining whether the provisions of this Act have been or are being complied with.'

அதற்கும் போகலாம்.



1981 மே 15] [திரு. எஸ். இராகவானந்தம்]

'If an Inspector has reasonable grounds for suspecting that any handloom industry is being carried on in any industrial premises in contravention of the provisions of this Act, he may after giving due notice ....... enter such industrial premises .........'

இருக்கக்கூடிய இண்டஸ்டிரியைப் பார்க்க எந்தவிதத் தடையுமில்லை. எப்போதும் போகலாம். ஆனால் இந்தச் சட்ட முன்வடிவிற்கு மாறாக கைத்தறித் தொழில் நடத்துகிறார்களென்று புகார் வந்தால், அதை 'இன்ஸ்பெக்ட்' பண்ண நோட்டீஸ் கொடுத்துவிட்டுப் போகலாமென்றுதான் இருக்கிறது.

இறுதியாக என்னுடைய வேண்டுகோள், இந்தச் சட்ட முன்வடிவு உண்மையாக நிறைவேற்றப்பட வேண்டுமென்றால், அரசியல்வாதிகள், தொழிற் சங்கவாதிகள் ஆகியோர்களின் ஒத்துழைப்பு இல்லையென்றால் முடியாது. அதுதான் முக்கியமான அம்சம். ஆங்காங்கே இருக்கிற தொழிலாளர் சங்கங்களிலே, எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், இவர்களுக்குச் சங்கங்களை அமைக்க வேண்டும். சங்கங்களை அமைத்து, அந்தச் சங்கத்தின் பிரிவுகள் எல்லாவற்றையும் சங்கங்களை நடத்துகிறவர்களுக்குச் சொல்லிக் கொடுத்து, அது செயல்படுகிறதா என்று பார்த்து, செயல்படவில்லை என்றால், அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். இதற்காக அரசு எவ்வளவு அதிகாரிகளை நியமிக்க வேண்டுமோ அவ்வளவு அதிகாரிகளை நியமிக்கத் தயாராக இருக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக பீல்ட் ஒர்க்கர்ஸ் என்று சொல்லக்கூடிய தொழிற் சங்கத் தலைவர்களின் ஆதரவைப் பொறுத்துத்தான் இந்தச் சட்டம் வெற்றி பெறுவது இருக்கிறது. எனவே தொழிற் சங்கத் தலைவர்கள் போராதரவைத் தர வேண்டுமென்று சொல்கிற நேரத்தில், விதி 4, 56 ஆகியவற்றை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பிரிவு 56. அதுதான் முதலாளி-தொழிலாளி உறவை உண்டு பண்ணுகிறது. கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் ஆங்காங்கே சிதறிக் கிடப்பவர்கள். அவர்களுக்குச் சலுகைகள் கொடுப்பது சாமானியமானதல்ல. முதலில் முதலாளி-தொழிலாளி உறவைக் கொண்டு வந்த பிறகு, ஊதியத்துடன் கூடிய வார விடுமுறை கிடைக்கிறது. ஆறு நாட்கள் வேலை செய்தால், 7 ஆம் நாள் ஓய்வு எடுத்துக்கொள்ளும்போது, அதற்கு ஊதியம் கொடுக்க வேண்டும். இன்றைக்கு ஒரு மாதத்தில் 25, 26 நாட்கள்தான் வேலை செய்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமைகளுக்கு ஊதியம் கிடையாது, சிம்சன் போன்ற கம்பெனிகளை எடுத்துக்கொண்டாலும், அங்கேயுள்ள தொழிலாளர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை 'அன்பெயிட் ஹாலிடே'தான். இவர்களுக்கு ஊதியத்துடன் கூடிய விடுமுறை வாரம் ஒரு முறை இருக்கிறது. இந்தச் சட்ட

முன்வடிவைக் கூர்ந்து படிக்கிறவர்களுக்கு எவ்வளவு பெரிய சலுகையை புரட்சித் தலைவரவர்களின் அரசு கைத்தறி நெசவாளர்களுக்கு அளிக்க முன் வந்திருக்கிறது என்பது தெரியும்.

The more you read the more you will find the benefits comferred on the working class.—Weavers.

இங்கே இருக்கக்கூடிய நெசவுத் தொழிலாளர்களுக்கு எவ்வளவு சலுகைகளைக் கொடுத்திருக்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். வார விடுமுறை ஊதியம் உண்டு; ஓவர்-டைம் உண்டு. ஓவர்-டைம் கொடுக்காமல் அவர்கள் தப்பித்துக் கொள்ள முடியுமா என்றால், முடியாது. அதற்கு ரெஜிஸ்டர் வைக்க வேண்டும். ரெஜிஸ்டர் வைக்கவில்லை என்றால் பிராசிக்யூட் செய்யப்படுவார்கள். சட்டத்தை மீறி பிராசிக்யூட் செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர் என்பதைச் சொல்லியிருக்கிறேன். எனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர் களுக்கு எந்தவிதமான அச்சமும் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல் தேசிய பண்டிகை விடுமுறை நாட்களுக்கு ஊதியம் உண்டு. நான்கு நாட்கள் தேசிய விடுமுறை, ஐந்து பண்டிகை நாட்களுக்கு (நேஷனல் பெஸ்டிவல் ஹாலிடே) ஆக மொத்தம் ஒன்பது நாட்களுக்கு விடு முறை கைத்தறி நெசவாளர்களுக்கும் பொருந்தும். எந்த 'மாஸ்டர் வீவர்' வேலை வாங்குகிறாரோ, அவர் தொழிலாளியின் பெயரைப் பதிவு செய்து வைத்து விடுகிறார். அதனால் மாஸ்டர்-சர்வண்ட் ரிலேஷன்ஸ் வந்துவிடுகிறது. கூட்டுறவு சொசைட்டிகளுக்கு இந்தப் பிரச்சினையில்லை. பிரச்சினையே மாஸ்டர் வீவர் வெர்சஸ் ஹேண்ட்லூம் வீவர்தான். அவர்கள் தொழிலாளர்கள் என்பதால், நேஷனல் மற்றும் பெஸ்டிவல் ஹாலிடே ஒன்பது நாட்கள் கொடுத் தாக வேண்டும். இருபது நாட்களுக்கு ஒரு நாள் பெரியவர்களுக்கும், 15 நாட் களுக்கு ஒரு நாள் இளைஞர்களுக்கும் லீவ் கொடுக்க வேண்டும். அப்படி ஒரு வருடத்தில் 14 நாட்கள் கிடைக்கும். அதுவும் ஊதியத்துடன் கிடைக்கிறது. குடும்ப நல அறுவை சிகிச்சை செய்துகொண்டால், ஆண்களுக்கு ஆறு நாட்களும், பெண்களுக்கு 14 நாட்களும் ஊதியத்தோடு விடுப்பு கிடைக்கும். நெசவில் உள்ள அல்லது பொருள்களிலுள்ள குறைபாடுகளைச் சொல்லி, அதற்கான காரணங்களை எழுத்து மூலமாகக் கொடுத்தாலன்றி, அதற்காக ஊதியத்தைக் குறைப்பது தொழிற் தகராறு சட்டத்திற்கு விரோதமானதாகும். [illegible] நெய்து கொடுத்த பிறகு சரியில்லை என்று சொல்லி, சம்பளம் பிடித்தல் கூடாது. இன்ன குறை இருக்கிறது, இதனால் சரியில்லை என்று



எழுத்து மூலமாக எழுதிக் கொடுத்து, செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் தொழில் தகராறு சட்டத்தின் மூலம் தொழில் தகராறு எழுப்பலாம். பிரிவு 38-ல் அவர்கள் மனுச் செய்து, லே-ஆஃப் ஊதியம் பெற வழிவகை செய்யப் பட்டிருக்கிறது. அடுத்து, பிரிவு 47 மிக முக்கியமானது. அந்தத் தொழி லாளர்களுக்கு மருத்துவ வசதி, கல்வி வசதி, ஓய்வு வசதி—இப்படி வசதிகள் செய்வதற்கு அதில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. எனவே கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் கனவில்கூட கண்டிராத அளவிற்கு இந்த அரசு வார விடுமுறை ஊதியம் தேசீய விடுமுறை நாட்களுக்கு ஊதியம், 20 நாட்களுக்கு ஒரு நாள் விடுப்பு, குடும்ப நல அறுவை சிகிச்சை செய்து கொண்டால் ஊதியத்துடன் கூடிய விடுப்பு, ஓவர்-டைம் அலவன்ஸ் போன்ற பல நன்மைகளைக் கொடுக்கும் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் நான் சொன்ன விளக்கத் திற்குப் பின்னர், தம்முடைய திருத்தத்தை பின்வாங்கிக் கொள்வார்கள் என்று நம்பி, இதை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன்: மாநிலம் முழுவதும் ஏக காலத்தில் இதை அமல் நடத்துவதில் என்ன சிக்கல் இருக்கிறது? ஏககாலத்தில் இல்லாமல், அரசு விரும்பும் நேரத்தில், விரும்பும் பகுதியில் செய்வது என்பது ஏன்? அதை அமைச்சரவர்கள் விளக்கினால் திருத்தத்திற்கு அவசியமில்லை.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: நான் ஏற்கெனவே சொன்னேன். (It is an enabling measure) பாதுகாப்பாக போடப்பட்டுள்ள சட்டம். எந்தெந்தச் சட்டங்களில் இந்தமாதிரி இருக்கிறதென்று சொல்லி யிருக்கிறேன். ராஜா சுப்ரமணியம் அறிக்கை கிடைக்கவில்லை என்று சொன் னார்கள். அதைக் கொடுத்திருக்கிறோம். உறுப்பினர்களுக்கு 'சர்குலேட்' செய்திருக்கிறோமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான பரிந்துரைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்ப தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசாணை எண் 1108, தேதி 25—1—1976 கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு, கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித் துறைகளும்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 42/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 57 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

### பிரிவு 1.

**திரு. ஆ. நல்லசிவன் :** தலைவரவர்களே, என்னுடைய பெயரில் கொடுக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன் :—

" (1). 1-வது பிரிவில் 3-வது உப பிரிவில் 'இது அரசு அறிவிக்கையின் மூலம் வரையறுக்கும் நாளிலிருந்து' என்பதற்குப் பதிலாக செயலுக்கு வரும் என்ற வார்த்தைகளுக்கு முன் 'தமிழகத்தில்' என்ற வார்த்தைகளைச் சேர்க்கவும்.

(2). 1-வது பிரிவில் 3-வது உட்பிரிவில் 'வெவ்வேறு பகுதிகளுக்கும், இச்சட்டத்தில் வெவ்வேறு விதித் துறைகளுக்கும் வெவ்வேறு நாட்களை வரையறுக்கலாம்' என்ற வார்த்தைகளை நீக்கவும் ".

**திரு. சோ. ஆறுமுகம் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை வழிமொழிகிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** அமைச்சரவர்கள் 'எனேபிளிங் ப்ரோவிஷன்' பற்றிச் சொன்னார்கள். அரசு விரும்புகிறபோது, எந்தப் பிராந்தியத்திலும் அமல் நடத்துவதற்கு அதிகாரம் இருக்கிறது. விவசாயம் என்பது எப்படி எந்த மாவட்டத்திலும் இல்லாமல் இல்லையோ, அது போல கைத்தறி நெசவு இல்லாத மாவட்டமே இல்லை. பீடித் தொழில் என்று எடுத்துக்கொண்டால், வட ஆற்காடு மாவட்டம் என்று குறிப்பிட்டுச் சொல்ல அவசியமிருக்கிறது.

(முற்பகல் 10-50)

ஆனால் கைத்தறி தமிழகம் பூராவும் எங்கும் நிறைந்த தொழிலாக இருக்கிறது. கிராமங்கள் பூராவும் இருக்கிறது. அதற்கு 'எனேபிளிங் புரவிஷன்' அவசியமா? நான் கேட்ட கேள்விக்கு இன்னும் அமைச்சர் பதில் சொல்லவில்லை. ஆகவே திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

**திரு. சோ. ஆறுமுகம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது மாநிலம் பூராவும் ஒரே நேரத்தில் அமுலாக்கப்படுமென்ற உறுதிமொழியைத் தருவார்களா ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இதுகுறித்து முன்பே கேட்டு அதற்கு அமைச்சர் பதிலும் சொல்லிவிட்டார்.



**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

" (1). 1-வது பிரிவில் 3-வது உப பிரிவில் 'இது அரசு அறிவிக்கையின் மூலம் வரையறுக்கும் நாளிலிருந்து' என்பதற்குப் பதிலாக செயலுக்கு வரும் என்ற வார்த்தைகளுக்கு முன் 'தமிழகத்தில்' என்ற வார்த்தைகளைச் சேர்க்கவும்.

(2). 1-வது பிரிவில் 3-வது உட்பிரிவில் 'வெவ்வேறு பகுதிகளுக்கும், இச்சட்டத்தில் வெவ்வேறு விதித் துறைகளுக்கும் வெவ்வேறு நாட்களை வரையறுக்கலாம்' என்ற வார்த்தைகளை நீக்கவும் ".

திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவரவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு, கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித் துறைகளும்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 42/1981) நிறைவேற்றப்படவேண்டும் "
என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு, கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித் துறைகளும்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 42/1981) நிறைவேற்றப்படவேண்டும் ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அமைச்சர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் ஒரு வேண்டுகோள். இன்னும் 11 சட்ட முன்வடிவுகளை நிறைவேற்றியாக வேண்டும். பல உறுப்பினர்கள் என்னிடம் வந்து மாலை நேரத்தில் இருப்பது கஷ்டம், ஊருக்குப் போக வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் உறுப்பினர்களும், அமைச்சர்களும் கூட சுருக்கமாகப் பேசி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(2) 1981 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1981).

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு, குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1981) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு, குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1981) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

**திரு. ஆ. நல்லசிவன் :** தலைவரவர்களே, பொதுவாக குறைந்தளவு ஊதியங்கள் திருத்தச் சட்ட முன்வடிவு வரவேற்கக் கூடிய ஒன்று. மினிமம் வேஜஸை அமுல்படுத்தும்போது ஏற்படுகின்ற சிக்கல்களைத் தவிர்ப்பதற்காக இதைக் கொண்டு வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கமிட்டி செயல் படும்போது ஏதாவது காலி இடம் வந்தால், அந்தக் கமிட்டி சமர்ப்பிக்கும் ரிப்போர்ட் செல்லுபடியாகாது என்று சொல்லும் நிலை இருக்கக்கூடாது என்பதற்காக இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். முதலாளிகள் இதற்குக் காரணமாக இருக்கக்கூடாது என்பதற்காக இது கொண்டுவரப்படுகிறது. ஆகவே இதை வரவேற்கிறேன். கமிட்டி கொடுக்கும் ரிப்போர்ட்டை, கமிட்டியில் ஏதாவது ஒரு மெம்பர் இல்லையென்ற காரணத்திற்காக, ரத்து செய்யக் கூடாது என்பது வரவேற்கத்தக்கது. ஆனால் ஒரு கமிட்டி அமைப்பதில் ஏதாவது ஒழுங்கீனம் இருந்தால், டிபெக்ட் இருந்தால் அதன் காரணமாகக் கோர்ட்டுக்குப் போகக் கூடாது என்று சொல்வது சரியல்ல.

"No act or proceeding ......... shall be called in question in any manner in any Court of Law on the ground merely of the existence of any vacancy in or of any defect or irregularity in the constitution of such Board, Committee or Sub-Committee."

'இர்ரெகுலாரிட்டீஸ்' இருக்கும்போது, டிபெக்ட் இருக்கும்போது, அந்தக் கமிட்டி ரிப்போர்ட் கொடுக்கும்போது, அதை எதிர்த்து கோர்ட்டுக்குப் போகக் கூடாது என்று சொன்னால், அது சரியாக இருக்குமா? இதுகுறித்து அமைச்சரின் விளக்கம் தேவை.

---

@ 148-149 ஆம் பக்கங்களில் இணைப்பு IX ஆக அச்சிடப்பட்டுள்ளது.



**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவரவர்களே, குறைந்தளவு ஊதியங்கள் திருத்தச் சட்ட முன்வடிவின் நோக்கத்தை நான் வரவேற்கிறேன். குறைந்தளவு ஊதியத்தை நிர்ணயம் செய்கிற ஒரு குழு அல்லது ஒரு வாரியத்தை அமைத்து அந்த வாரியம் அல்லது குழு நிர்ணயம் செய்கிற சம்பளத்தைத் தொழிலாளர்களுக்குக் கொடுக்க வழிவகை செய்யும் சட்டம் ஏற்கனவே இருக்கிறது. அந்தச் சட்டத்தை அமுல்படுத்துவதில் உள்ள சில சங்கடங்களை மனதில் வைத்து, இதை இப்போது திருத்தமாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். நாங்கள் பல தடவை இந்த அவையிலே சொல்லி யிருக்கிறோம். எந்தச் சட்டங்களை நிறைவேற்றுவதாக இருந்தாலும், அதிக வேகம் காட்டக் கூடாது, நிதானம் தேவை என்று சொல்லியிருக்கிறோம். சட்டங்களை நிறைவேற்றும்போது, எந்தவிதத் தவறும் இருக்காமல் நிறைவாக நிறைவேற்ற வேண்டும். சட்டங்களை நிறைவேற்றும்போது, நிதானத்துடன் அமைச்சர்களைத் தவிர எல்லோரும் ஒத்துழைப்பு தருகிறோம். ஆனால் நாங்கள் சொல்வதைக் கேட்காத காரணத்தால், பின்னால் சட்டத் திருத்தம் கொண்டுவரவேண்டிய நிலை ஏற்படுகிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அமைச்சர் கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** சட்டத்தில் தவறு இருக்கும்போது, அதை அவசரமாக நிறைவேற்றுவது சரிதானா? காலியிடம் ஏற்பட்டதன் காரணமாக கமிட்டி கொடுத்த ரிப்போர்ட் செல்லுபடியாகாது என்று சொல்லி, கோர்ட்டுக்குப் போகக் கூடாது, கோர்ட்டு தலையிடக் கூடாது என்று சொல்லு கிறார்கள். சரி, ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அமைப்பிலேயே குறைபாடுகள் இருந்தால் கூட, கோர்ட்டுக்குப் போகக் கூடாது, கோர்ட்டு தலையிடக் கூடாது என்று சொல்லுவதற்கு நமக்கு என்ன உரிமை இருக்கிறது? ஜனநாயகத்தில் எக்சிகியூட்டிவ் நிர்வாகம் என்பது ஒன்று, சட்டமன்றம் என்பது ஆதிபத்திய உரிமை உடையது. சட்டங்களைச் செயல்படுத்தும்போது, எக்சிகியூட்டிவ் நிர்வாகம் என்று சொல்லக்கூடிய அரசு அமைப்பு தான் அவற்றைச் செயல்படுத்த வேண்டும். அப்படி நிறைவேற்றும்போது, எக்சிகியூட்டிவ் நிர்வாகம் சட்டங்களை சரியாகச் செயல்படுத்தவில்லை யென்றால், அதன்மேல் நீதிமன்றம் தான் விளக்கம் கொடுக்க வேண்டும். தவறு இருந்தாலும் கூட, அதில் நீதிமன்றம் தலையிடக் கூடாது என்று சொல்வது சரியல்ல. யார் இதற்கு டிராப்ட் போட்டது என்பது எனக்குப் புரியவில்லை பொதுவாக நிர்வாக அமைப்பிலே தவறு அல்லது முறைகேடு இருந்தால், அதற்காக வேண்டி கோர்ட்டுக்குப் போகக் கூடாது என்று சொல்லக்கூடிய

வார்த்தையை எப்படி அதில் போட்டார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. சட்ட நிபுணர்கள் அதை எப்படி அனுமதித்தார்கள் என்று எனக்கு விளங்கவில்லை. இப்படிப்பட்ட நிலையில் இதை நாங்கள் நிறைவேற்றித் தருவது எங்களுக்கு அச்சத்தையும் கவலையையும் தருகிறது. இந்த வார்த்தையில் திருத்தம் வேண்டும், அல்லது மாற்ற வேண்டும். அடுத்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலாவது இதற்கான திருத்தத்தைக் கொண்டுவர வேண்டும். சுப்ரீம் கோர்ட்டில் போய் கோர்ட்டு தலையிடக் கூடாது என்று ஒரு சட்டத்தை நாம் போட முடியாது. இந்தியாவிலுள்ள எந்தக் கோர்ட்டிலும் முறைகேடு நடந்தால் அல்லது தவறு நடந்தால், வழக்குப் போட பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிமை இருக்கிறது. ஆனால் எமர்ஜென்சி பீரியடில் மட்டும் அரசியல் அமைப்புச் சட்டத்தை சில காலத்துக்கு 'சஸ்பென்ட்' பண்ணி அந்த உரிமை திரும்பப் பெறப்படுகிறது. யாரும், எந்தக் கோர்ட்டுக்கும் போய் நீதியைப் பெறலாம் என்ற அந்த எமர்ஜென்சி சமயத்தில் மட்டும் 'சஸ்பென்ட்' பண்ணப் படுகிறது. இப்போது அதுமாதிரி நாட்டிலே எமர்ஜென்சி இல்லை. அப்படி இருக்கும்போது, கோர்ட்டுக்குச் செல்லக் கூடாது என்று சொல்லுவது எப்படி முறையாகும்? இடம் காலியானதன் வாயிலாக கமிட்டி கொடுக்கும் ரிப்போர்ட் சம்பந்தமாக கோர்ட்டுக்குப் போகக் கூடாது என்று சொல்லுவதற்கு உரிமை இருக்கிறது. ஆனால் அமைப்பிலே ஒரு முறைகேடு, தவறு இருந்தால் கூட, கோர்ட்டுக்குப் போகக் கூடாது என்று இருக்கக்கூடிய இந்தத் திருத்தத்தை மாற்ற வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அவசரமாகக் கொண்டு வந்து விடுகிறார்கள். நாங்கள் சொல்லுவதைக் கேட்பதில்லை, அதற்குப் பின்னால் இந்தமாதிரியான திருத்தங்களையெல்லாம் கொண்டுவரக்கூடிய நிலை வருகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் சொன்னார். அவருக்கு நான் ஒன்று சொல்வேன். இந்தத் திருத்தம் கொண்டு வர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதே 1972 ஆம் ஆண்டு தொழிலாளர்கள் சம்பந்தமாக அமைத்த ஒரு குழுவின் விளைவால்தான். 1972 ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியம் இவ்வளவு என்று நிர்ணயிப்பதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டது. அதில் தொழிலாளர்கள் சார்பாக மூன்று பேரும், தொழில் அதிபர்கள் சார்பாக மூன்று பேரும் இருந்தார்கள். அந்தத் தொழில் அதிபர்களில் ஒருவர் பின்னர் இறந்து விட்டார். ஒரு தொழில் அதிபர் மூன்று கூட்டங்களுக்கு மேல் வரவில்லையென்ற காரணத்தினால், அந்தப் பதவியை இழந்தார். இது நடந்தது 1973, 1974, 1975 ஆம் ஆண்டுகளில். அரசு பிறகு அந்த இடங்களைப்



சட்டசபைகளுக்கு அதிகாரம் உண்டு. இத்தகைய சட்டம் மத்திய பிரதேசம், இராஜஸ்தான் போன்ற மாநிலங்களிலே இருக்கிறது. டெக்னிக்கல் டிஃபெக்ட் என்று சொல்லி அதைத் தள்ள முடியாது. கோர்ட் அதைத் தள்ள முடியாது. அந்த அடிப்படையிலே சட்டமியற்ற சட்டசபைகளுக்கு அதிகாரம் உண்டு. உறுப்பினருடைய அச்சமெல்லாம் ஒருகால் இப்படி ஒரு பிரிவு இருப்பதால், வழக்குமன்றத்திற்குச் சென்று வழக்காடி தொழிலதிபர்கள் வெற்றி பெறுவார்கள். அந்த அச்சம் இருப்பதால்தான், மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக இப்படிச் செய்ய முடியாது, அதற்கு இடமில்லை என்ற நம்பிக்கையோடு செய்கிறோம். இதை சட்டத் துறை பார்த்திருக்கிறது. அவர்களுடைய ஒப்புதலை வாங்கித்தான் இதைக் கொண்டுவந்திருக்கிறோம் என்று சொல்லி, இதை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** 'டெக்னிக்கல் டிஃபெக்ட்' என்று சொன்னார்கள். அந்த wordinᵒ லே technical defect என்று போட்டால் அர்த்தம் இருக்கிறது. Technical defect க்கும் technical irregularities க்கும் இடையில் difference இருக்கிறது. அதாவது, உள்ளடக்கம் சரியாக இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** டெக்னிக்கலைவிட உறுப்பினர் சொல்வது விரிவாக இருக்கிறது.

**திரு. ஆ. நல்லசிவன் :** சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனாலும் அடிபட்டுவிடக் கூடாதே என்று தான் நான் பயப்படுகிறேன். டெக்னிக்கல் டிஃபெக்ட் என்று சொன்னால், இந்தப் பிரச்சினையில் உள்ளடக்கம் சரியாக இருக்கிறது. வாதாட முடியும். பொதுவாக defect என்று சொன்னால் சரி ஒரு குறிப்பிட்ட formality ஐக் கடைப்பிடிக்கவில்லையென்றால், நாம் வாதாட முடியும். பொதுவாக defect என்று சொன்னால் சரியில்லை. இந்த technical என்ற ஒரு வார்த்தை கூட போடவில்லை. Law Department எப்படி இதை விட்டுவிட்டது?

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன நோக்கத்தை ஏற்றுக்கொள்கிறோம். அப்படிப் போட வேண்டுமென்று சொன்னால், அந்தக் குழுவில் காலியிடம் இருப்பதன் காரணமாகவோ அல்லது அந்தக் குழுவில் நிர்வாகத்தின் சார்பில் உள்ளவர்கள் வராமலிருந்தோ, அல்லது வந்து அவர்கள் வேண்டுமென்றே technical irregularities-ஐ create பண்ணினால் நீதிமன்றத்திற்குப் போகக்கூடாது என்று போட்டால், தெளி

பூர்த்தி செய்தது. அதற்குப் பிறகு அந்த மூன்று தொழில் அதிபர்களில் ஒருவர் குழுவில் இருந்தாரே அவரும் ஒழுங்காக வேலை செய்யாமல் பொறுப்பிலிருந்து விலக வேண்டிய சூழ்நிலை வந்தது. அவர் செயலாளர். அந்த சென்ச்வரி

(முற்பகல் 11-00)

மில்லுக்கு அவர் செயலாளர். அவர் போய்விட்ட பிறகு, அவருக்குப் பதிலாக 'பர்சானேல் ஆப்பீசர்' ஒருவர் நியமிக்கப்பட்டார். அவர் கூட்டத்திற்கு வருவதில்லை. பின்னர் அவர் விலகிவிட்டார். 31—5—1975-லேயிருந்து அவர் கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டு விலகிவிட்டார். ஆகவே, பிரதிநிதித்துவம் 'ஷார்ட்' ஆகப் போய்விட்டது. 'எம்பிளாயிஸ் ரெப்ரசென்டேஷன்' குறைந்துவிட்டது. 31—10—1975 ஆம் தேதி குழு தன்னுடைய பரிந்துரையை வழங்கிவிட்டது. 31—5—1975 முதல் 31—10—1975 வரை இந்த 5 மாத கால அளவில் பல கூட்டங்கள் நடந்திருக்கின்றன. அந்தக் கூட்டங்களில் எடுத்த முடிவு தான் இது. செக்ஷன் 9-லே 'the number should be equal' என்று இருக்கிறது. தொழிலதிபர்களின் பிரதிநிதிகளும், தொழிலாளர்களின் பிரதிநிதிகளும் சரிசமமாக இருக்க வேண்டும். ஆனால், ஒருபுறம் மூன்று பேரும், மறுபுறம் இரண்டு பேரும் இருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பரிந்துரை செல்லுபடியாகாது என்று சொல்லிவிட்டார்கள். அந்த நிலை ஏற்படக்கூடாது என்றுதான் இதைக் கொண்டு வருகிறோம். பல தொழில்களுக்கு ஊதியமே நிர்ணயிக்க முடியாத நிலை இருக்கும்போது, அந்தத் தொழிலாளர்களுக்கெல்லாம் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்றுதான் இதைக் கொண்டு வருகிறோம். ஒரு ஸ்டேட்டிலே ஒரு தொழிலிலே ஆயிரம் பேர் இருந்தால், அவர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கலாம் என்று இருக்கிறது. இதுதான் ஜெனரல் விதி. அது எந்தத் தொழில் என்று பார்த்து, அந்தத் தொழிலை ஷெட்யூலில் சேர்த்து, பிறகு குழு அமைத்து, அந்தக் குழு ஆறு மாத காலம் எடுத்து, பரிந்துரை கொடுத்து, அந்தப் பரிந்துரை வந்த பிறகு அதை அறிவித்த பின்னர் வழக்கு மன்றத்திற்குச் சென்று, மூன்று பேர், இரண்டு பேர் தான் இருக்கிறார்கள் என்று சொன்னால், இப்படி குழு வேலை செய்வதை முதலாளியின் சார்பாகத் தடுக்க முடியும். வேண்டுமென்றே முதலாளி இராஜிநாமா செய்துவிட்டேன் என்று சொன்னால், இன்னொருவரை அந்த இடத்திற்குப் போட வேண்டும். அந்த நிலை வந்தால், தொழிலாளர்களுக்குச் சம்பளம் கிடைக்காது. இந்த நிலைமைகள் வருவதால்தான், இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ரூல்கள் சட்டத்தின் அடிப்படையிலே அமைக்கப்பட்டிருக்கின்றன. டெக்னிக்கல் irregularities இருந்தால் அதைக் குறையாகக்கொண்டு கோர்ட் தள்ளுபடி செய்யக்கூடாது என்று சட்டம்போட



வாக இருக்கும். "குறைபாடு இருந்தாலும் நீதிமன்றத்திற்குப் போகக் கூடாது" என்று இருந்தால், அது வார்த்தைகள் அமைப்பிலே ஏற்பட்ட குறை. கருத்திலே குறை இல்லை. ஆகவே, இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே, இதைப் பற்றி நன்றாக ஆராய்ந்து தேவையான வார்த்தைகளை மிகவும் 'கெயர்ஃபுல்' ஆக, ஜாக்கிரதையாகப் போட்டிருக்கிறோம். இதைப்பற்றி விவாதித்திருக்கிறோம். சட்டத் துறையோடு விவாதித்திருக்கிறோம். Not justiciable என்ற அளவிலே, கோர்ட்டாலே தலையிட முடியாது என்ற அளவிலே பல சட்டங்கள் இருக்கின்றன. Not justiciable என்று போட்டு தலையிட முடியாது என்று இருக்கிறது. தமிழிலே சொல்லியிருப்பதால் சிறிய குறைகளை எடுத்துக் காண்பித்து, இந்த ஊதியம் நிர்ணயிப்பது தவறு என்று சொல்லி நம்முடைய நோக்கத்தைக் கெடுத்துவிடக்கூடாது என்ற நல்லெண்ணத்திலேதான் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதிலே போதுமான சட்டப்பாதுகாப்பு இருக்கிறது என்று சட்டத்துறை சொல்லியிருக்கிறது. ஆகவே, இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு, குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1981 ஆம் ஆண்டு, குறைந்த அளவு ஊதியங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/1981) நிறைவேற்றப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவைமுன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு, குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/1981) நிறைவேற்றப்படவேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(3) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு விற்பனை வரி (மேல்வரி) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/1981).

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு, விற்பனை வரி (மேல்வரி) திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1981) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம் —

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு விற்பனை வரி (மேல்வரி) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1981) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

அடுத்த சட்டமுன்வடிவும் விற்பனை வரி பற்றியதாக இருப்பதால், இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளலாம். நிறைவேற்றும்போது தனித்தனியாக நிறைவேற்றலாம்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் இந்த இரண்டு சட்டமுன்வடிவுகளையும் எதிர்க்கிறேன். இந்த இரண்டு சட்டமுன்வடிவுகளும் மறைமுகமான வரியை அதிகப்படுத்த வகை செய்கிறது. மத்திய அரசினுடைய "எக்சைஸ் ட்யூட்டி" மூலமாக எப்படி பொருட்களை வாங்குபவர்கள் தலையிலே சுமை ஏற்றப்படுகிறதோ அதுபோல சேல்ஸ் டாக்சைப் பொறுத்தவரையில், இது பொதுமக்களின் தலையிலே சுமத்தப்படுவதால் இந்த இரண்டு மசோதாக்களையும் நான் எதிர்க்கிறேன். ஒரு

@469-470 ஆம் பக்கங்களில் இணைப்பு X ஆக அச்சிடப்பட்டுள்ளது.



மசோதாவைப் பொறுத்தவரையில், பெட்ரோல் மீது போடும் வரி 9 பைசா என்பது 11 பைசாவுக்கு உயருகிறது. அதன் மூலம் நம்முடைய பஸ் சார்ஜ் போன்றவைகள் உயராமல் இருக்காது என்று சொல்ல முடியாது. அப்படிப்பட்ட நிலைமைகள் இருப்பதால், நான் இதை எதிர்க்கிறேன். 'அடிஷனல் சர்சார்ஜ்' போடுகிறபோது, அதுவும் மறைமுகமாக இருப்பதால், அதனால் விலைவாசி உயர்வு ஏற்படும். நம்முடைய நாட்டிலே 30 சதவீதம் என்று இருந்த மறைமுக வரி 70 சதவீதம் என்ற அளவுக்கு வந்து, இப்போது அந்த அளவையும் தாண்டியிருக்கும்போது, இந்த சேல்ஸ் டாக்சைச் சேர்ந்த அந்த வரியை மேலும் அதிகப்படுத்தும் வகையிலே இருப்பதால், இந்த இரண்டு சட்ட முன்வடிவுகளையும் நான் எதிர்க்கிறேன். மேலும், உடனடியாகக் கணக்குகளைச் சமர்ப்பிக்க வேண்டும் என்ற ஷரத்தும் இருக்கிறது. ஆனால் இப்போதுள்ள நிலையில் கணக்குகளை உடனடியாகச் சமர்ப்பிக்கும் நிலை இல்லை. சேல்ஸ் டாக்ஸ் அதிகாரிகள் சின்ன வியாபாரிகளைப் பிடித்து மாட்டும் நிலை, கணக்குகளை உடனடியாகச் சமர்ப்பிக்கும் நிலை வந்தால், இருக்காது. இப்போது கணக்குகளை உடனடியாகச் சமர்ப்பிக்க முடியாது என்று சொல்லி குறைந்தது இரண்டு—மூன்று வருஷங்கள் எடுக்கிறார்கள். இந்தச் சட்டத்தில் உடனுக்குடன் கணக்கைத் தரவேண்டும் என்று சொல்லியிருக்கும் ஷரத்து வரவேற்கத் தக்கதுதான். ஆனால், சாதாரண வியாபாரிகளை மாட்டிவிடும் நிலை இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இந்தத் துறையிலே லஞ்சம் பயங்கரமாக இருக்கிறது. எனக்குத் தெரிந்த ஒரு சுருட்டுத் தொழிலாளி, அந்தத் துறையிலே பியூனாக வந்த கடந்த 10 வருஷங்களுக்கு உள்ளே 1 லட்சம் ரூபாய் பெருமானம் உள்ள வீட்டைக் கட்டியிருக்கிறார். அந்த அளவுக்கு அந்த டிப்பார்ட்மென்ட் இருக்கிறது. இந்தக் கணக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்ற பிரச்சினை மீது சேல்ஸ் டாக்ஸ் அதிகாரிகள் சாதாரண, சிறிய, மத்திய தர வியாபாரிகளைத் தொந்தரவுபடுத்தக்கூடாது என்பதைச் சொல்லி, இப்போது இருக்கும் மறைமுக வரியை அதிகப்படுத்துவதை ஆட்சேபித்து, அமைகிறேன்.

(முற்பகல் 11-10)

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கும் இரண்டு சட்ட முன்வடிவுகளையும் நான் எதிர்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஜனநாயகத் தத்துவத்தின் அடிப்படையில் பார்த்தாலும், பட்ஜெட் கூட்டத் தொடர் நடந்து கொண்டிருக்கும்போது, பட்ஜெட்டிலேயே வரிவிதிப்பைச் சேர்க்காமல், பிறகு பைனான்சியல் இம்ப்ளிகேஷன் உள்ள வரிவிதிக்கும் சட்டங்களைக் கொண்டு வருவது என்பது சம்பிரதாயத்திற்குக்கூட நல்லதல்ல.

தாகும். பட்ஜெட்டில் நாங்கள் வரியே போடவில்லை என்று சொல்லிவிட்டு, 'அப்ரோபிரியேஷன் பில்' முடிந்த பிறகு இப்படி வரி விதிக்கும் சட்ட முன்வடிவுகளைக் கொண்டு வந்திருப்பது எந்த வகையிலும் சரியல்ல. . .

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** நான் இதற்கு இறுதியில் பதில் அளித்தால், மாண்புமிகு உறுப்பினருக்கு அது பயன்படாது என்ற காரணத்தால்; இப்போதே சொல்லிவிடுகிறேன். இந்த இரண்டு வரிவிதிப்பு சட்ட முன்வடிவுகளும், நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்ட இனங்களைப் பொறுத்ததே தவிர வேறல்ல.

**திரு. ம. சங்கரலிங்கம் :** நிதிநிலை அறிக்கையிலேயே இத்தனை சதவீதம் இன்னின்ன பொருள்களின் மீது வரிவிதிக்கப் போகிறோம் என்று தெளிவாகச் சொல்லி இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவந்திருந்தால் நான் ஆட்சேபிக்கவில்லை. இதோடு அதை விட்டுவிடுகிறேன்.

மறைந்த திரு. இராஜாஜி அவர்கள் இங்கே ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது, தமிழகத்தில் மதுவிலக்குச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றியதால் அரசுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பை ஈடுகட்டுவதற்காக அன்றைக்கு விற்பனை வரி கொண்டு வரப்பட்டது. மதுவிலக்கைக் கைவிடும் போது இன்றையதினம் இந்த ஆட்சி விற்பனை வரியை அதிகப்படுத்துவது— ஆட்சியாளர்களின் பாஷையில் மதுவிலக்கைத் தளர்த்துவது, எங்கள் பாஷையில் மதுவிலக்கைக் கைவிடுவது—எந்த வகையில் சரி என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** எங்கள் பாஷை மற்றும் எதிர்க்கட்சியினர் பாஷை எல்லாமே "மதுவிலக்குச் சட்டத்திற்குத் திருத்தமே" தவிர, அதைத் தளர்த்துவதோ நீக்குவதோ அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** ஆட்சியில் இருப்பவர்கள் அதை எப்படி வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம். நாங்கள் அதைத் திருத்தம் என்று ஒப்புக் கொள்ள இயலாது. ஆக, மதுவிலக்கு காரணமாக ஏற்பட்ட இழப்பைச் சரிக்கட்ட கொண்டுவரப்பட்ட விற்பனை வரியை, தற்போது மதுவிலக்கையே கைவிட்ட பிறகும், தொடர்ந்து அதிகரித்துக் கொண்டிருப்பது எந்த வகையிலும் நியாயமில்லை. எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டதைப்போல், இந்த இரண்டு சட்ட முன்வடிவுகளுமே விலைவாசிகளை அதிகரித்து, மக்களின்



வரிச்சுமையைத்தான் இன்னும் அதிகரிக்க உதவும். ஆட்சியாளர்களைப் பொறுத்த வரையில், நாங்கள் ஒன்றிரண்டு திருத்தத்தைத்தான் செய்திருக்கிறோம் அல்லது இன்ன பொருளில் விற்பனை வரி வீதத்தை நான்கு சதவீதமாக்கி ஒருமுனைப்படுத்தியிருக்கிறோம் என்றெல்லாம் சொல்ல முடியும். ஆனால் இவைகள் அனைத்துமே ஏற்கெனவே ஏறி உள்ள பொருள்களின் விலையைத்தான் உயர்த்தும் என்பதோடு, விலைவாசி உயர்வால் கஷ்டப்படும் சாதாரண மக்களை இன்னும் அதிகமாகப் பிழிந்து நெருக்கும் நிலையைத்தான் உருவாக்கும்.

முதலில், விற்பனை வரி இலாக்கா செயல்படும் விதத்தைச் சரிசெய்தாக வேண்டும். இப்போது உள்ள வரியையே அந்த இலாக்காவில் இருப்பவர்கள் ஒழுங்காக வசூலிப்பார்களானால், மேற்கொண்டு எந்தவிதமான சர்சார்ஜும் போட வேண்டிய அவசியமே இருக்காது. ஒழுங்காக அவர்கள் வசூலிப்பார்களானால், இரண்டு மடங்கு அளவுக்கு அரசாங்கத்திற்கு வருவாய் கிடைக்கும். ஆனால் அந்தத் துறையில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகள் வரி ஏய்ப்பதற்குத் தான் துணை போகிறார்கள். அந்த இலாக்காவில் பணியாற்றும் ஒவ்வொரு அதிகாரியும் எந்த அளவுக்கு சம்பாதித்திருக்கிறார் என்ற கணக்கைப் பார்த்தாலே, இது தெரியும். அவர் அந்த இலாக்காவில் பணியில் சேருவதற்கு முன் எவ்வளவு சொத்து இருந்தது, இப்போது அவருக்கு எவ்வளவு சொத்து இருக்கிறது என்பதை இரகசியமாகவே டிபார்ட்மெண்டல் என்கொயரியாகச் செய்து பார்த்தாலேகூட, இது நன்றாகப் புரியும். அந்த அளவுக்கு அந்த இலாக்காவில் ஊழல் மலிந்திருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனக்குத் தெரிந்த ஒரு விவரத்தை இங்கே குறிப்பிட்டார்கள். நான்கூட ஒரு விவரத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அவரின் பெயரைக் குறிப்பிடாமல் விஷயத்தை மட்டும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நாமெல்லாம் தென்னந்தோப்பு வைத்திருந்தால், அதைச் சுற்றி முள்வேலி போடுவது வழக்கம். எங்கும் அதைத்தான் செய்வதை நாம் பார்த்திருப்போம். ஆனால் இந்த இலாக்காவில் பணியாற்றும் அதிகாரி ஒருவர் தன்னுடைய தென்னந்தோப்பு இருக்கும் இடத்தைச் சுற்றி சிமிண்ட் சுவர் போட்டிருக்கிறார். முடிந்தால் மார்பிள் சுவர்கூட கட்டுவார் போலிருக்கிறது. அந்த அளவுக்கு ஆச்சரியப்படுவதற்கில்லை. காரணம் அந்த அளவுக்கு அவருக்கு வருவாய் கணக்கு வழக்கில்லாமல் வருகிறது. இவ்வாறு வரி ஏய்ப்போருக்குத் துணை போவதால் அப்படிப் பட்டவர்களுக்கு நல்ல வருவாய் இன்றையதினம் கிடைத்து வருகிறது. இதை முதலில் தடுப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டும். எனவே

புதிதாக வரிவிதிப்பை அதிகரிப்பதற்குப் பதில் ஏற்கெனவே உள்ள வரிகளை ஒழுங்காக வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லி, அதைச் செய்வதை விடுத்து மக்கள் மீது அரசாங்கத்தின் கவனம் திசை மாறிச் செல்லக் கூடாது என்று கூறி, சட்ட முன்வடிவுகளை எதிர்த்து அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இங்கே அவையில் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் மொத்தமாக இரண்டு சட்ட முன்வடிவுகளையும் எதிர்த்திருக்கிறார்கள். அவர்களுக்கு நான் ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

சர்சார்ஜைப் பொறுத்தவரையில், அது சென்னைக்கு மட்டும்தான் போடப்பட்டிருக்கிறதே தவிர, தமிழகத்தில் எல்லா இடங்களுக்கும் போடப்படவில்லை. சென்னையில் மட்டும் ஏன் போட வேண்டிய நிலை ஏற்பட்டது என்பதை இங்கே விளக்க விரும்புகிறேன். நாடு விடுதலை அடைவதற்கு முன்பு சென்னை மாநகரம் இந்தியாவிலேயே மூன்றாவது பெரிய நகரமாக விளங்கிக் கொண்டிருந்தது. இப்போது நான்காவது பெரிய நகரமாக இல்லை என்றாலும், கண்டிப்பாக ஐந்தாவது நகரத்திற்குப் பின்னாலே இருக்க முடியாது என்றுதான் நினைக்கிறேன்.

பொறுப்பில்லாத வகையில் நாட்டில் ஜனப் பெருக்கம் ஏற்பட்டுக்கொண்டு வருகிறது. ஜனப் பெருக்கத்தைத் தடுக்க வேண்டும் என்று நாம் எவ்வளவுதான் குடும்பக் கட்டுப்பாடு முறைகளைப் புகுத்தினாலும், எல்லா இடங்களிலும் ஜனத்தொகை மிகவும் அதிகரித்துக்கொண்டேதான் வருகிறது. சென்னை நகரத்தில் அந்த அடிப்படையில் அதிகரிக்கும் ஜனப் பெருக்கத்தோடு, மற்ற இடங்களில் பெருகி வரும் ஜனப் பெருக்கத்தின் பெரும்பகுதி வேலை தேடி வந்து இங்கே தங்கி விடுகிற காரணத்தால், சென்னை நகரில் உள்ளவர்களுக்குச் செய்ய வேண்டிய எந்தப் பணியையும் சென்னை மாநகராட்சி மன்றம் முழுமையாகச் செய்ய முடியாமல் தவிக்கிறது. சென்னை மாநகராட்சிக்கு மிகக் குறைந்த அளவுக்குத்தான் வருவாய் வந்து கொண்டிருக்கிறது. உறுப்பினர்கள் கேட்டால் ஆச்சரியப்படுவார்கள். சென்னை மாநகராட்சியின் வருஷ வருமானம் ஏறத்தாழ 23 முதல் 24 கோடி ரூபாய்தான். விஞ்ஞான வளர்ச்சி அதிகரித்து வருகிற இந்த நாளில் மக்களின் தேவைகள் நாள்தோறும் பெருகிக்கொண்டே வருகின்றன. அதற்கேற்ப மாநகராட்சியால் மக்களுக்கு வசதி செய்து கொடுக்க முடியாமல் இருக்கிறது. நகரத்தில் உள்ள மக்களுக்கு வசதி செய்து தர வேண்டும் என்பதற்காக நாம் கிராமங்களில் உள்ளவர்களின்மீது வரி போட்டு வசூல் செய்து கொடுக்க முடியாது. சட்டமன்றப் பேரவையிலும்



சட்டமன்ற மேலவையிலும் இடம் பெறும் உறுப்பினர்களில் பெரும்பாலோர் கிராமப்புறங்களிலிருந்துதான் வந்திருக்கிறார்கள். அவர்கள் அப்படிப்பட்ட முறைக்கு ஒப்புக்கொள்ள மாட்டார்கள். எனவே மாநகராட்சி மற்றவர்களிடம் கடன் கேட்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அரசாங்கமே அவர்களின் தேவை அனைத்தையும் பூர்த்தி செய்யவும் முடியாது என்பதை நாம் எல்லோரும் அறிவோம்.

சென்னை மாநகராட்சியிலிருந்து உலக வங்கியிடம் கடன் கேட்கப்பட்டது. யாரிடம் கடன் கேட்டாலும், அவர்கள் கடன் பெறுகிறவர்களின் பைனான்சியல் ஸ்டெபிலிடியைப் பார்த்துத்தான் கடன் தருகிறார்கள். கை மாற்றாக வாங்குவதானாலும் சரி அல்லது பிராமிசரி நோட்டு கடனானாலும், வங்கிக் கடனானாலும், கூட்டுறவுக் கடனானாலும், நண்பர்களிடமிருந்து பெறும் கடனானாலும் அவர்கள் அனைவருமே நாம் திருப்பிக் கொடுக்கிற நிலையில் இருக்கிறோமா என்று பார்த்துத்தான் தருகிறார்கள். அதே அடிப்படையில் உலக வங்கியிடம் மாநகராட்சி கடன் கேட்டபோது, "உங்களுடைய வருவாயை அதிகப்படுத்தினால்தான் கடன் தர முடியும் என்று சொல்லி விட்டார்கள்". ஆக, சென்னை மாநகராட்சியின் வருவாயை அதிகரிக்கத்தான் இன்றைக்கு நாம் இந்த வரியைப் போட்டிருக்கிறோம். பட்ஜெட்டிலேயே இதை நாம் தெளிவுபடுத்தியிருக்கிறோம். இந்த இரண்டு சட்ட முன்வடிவுகளுமே நிதிநிலை அறிக்கையில் தெரிவித்த கருத்தின் அடிப்படையில்தான் கொண்டு வரப்பட்டிருக்கின்றனவே தவிர வேறல்ல. மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் இந்தச் சட்ட முன்வடிவுகளை முழுமையாக எதிர்ப்பதற்கு எந்த நியாயமும் இல்லை என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது பெட்ரோலுக்கு மட்டும் வரியை உயர்த்தியிருக்கிறோம். இதை வரவு-செலவுத் திட்டத்திலேயே சொல்லியிருக்கிறோம். அவ்வாறு அதிகப்படுத்தியிருக்கிறோம் என்றாலும், உண்மை நிலை என்ன என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழகத்தில்தான் பெட்ரோலுக்கு 11 சதவீதம் வரி. கேரளத்தில் 15 சதவீதம், கர்நாடகத்தில் 12½ சதவீதம், ஆந்திரத்தில் 11 சதவீதம், மகாராட்டியத்தில் 11 சதவீதம். அதைப்போலவே விமானத்திற்கான பெட்ரோலைப் பொறுத்த வரையிலும், தமிழகத்திலும் கேரளத்திலும் மட்டும் தான் 8 சதவிகிதம் வரி, கருநாடகத்தில் 16 சதவீதம், ஆந்திராவில்

(முற்பகல் 11-20)

10 சதவீதம், மகாராட்டியத்தில் 12 சதவீதம் என்று இருக்கின்றன. ஹை ஸ்பீட் டீசலைப் பொறுத்தவரையில் இங்கே 11 சதவீதம். ஆனால் கேரளாவிலே

29 சதவிகிதம், கர்நாடகாவிலே 16 சதவிகிதம், மகாராஷ்டிரத்திலே 9 சதவிகிதம். இப்படி எல்லாவற்றையும் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்துப் போட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், இதற்கு முன்பு பெட்ரோலுக்கு சர்சார்ஜ் இருந்ததை இப்போது எடுத்துவிட்டிருக்கிறோம். பெட்ரோலைப் பொறுத்த வரையிலே, ஒரு பக்கத்திலே வரியைப் போட்டிருந்தாலும், இன்னொரு பக்கத்திலே சர்சார்ஜ் வரியை நீக்கியிருக்கிறோம். ஆகவே அதிகமான வரி எதையும் புதிதாகப் போடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றபடி எந்த வரியும் இல்லையென்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் தெரியும். வேறு எங்கேயாவது வரி போட்டிருந்தால், சொல்லலாம். நாங்கள் கொடுத்திருப்பதெல்லாம் விளக்கம்தானே தவிர, வரி ஒன்றும் புதிதாகப் போடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிரஸ்கிரைப்ட் மேனர் என்று 'ஃபார்ம்' தர வேண்டுமென்றால், எப்போது வேண்டுமானாலும் தரலாம். 'Within the prescribed Period' என்று சொல்லியிருக்கிறோம். கணக்குகளைப் பொறுத்தவரையில், 1972, 1973, 1974 என்று சொல்லாமல், "ட்ரூ அண்டு கரெக்ட் அக்கவுண்ட்ஸ்" என்று போட்டிருக்கிறோம். வேறு ஒன்றுமில்லை. வரி போடவில்லை. "அப்-டு-டேட்" என்று மூன்று வார்த்தைகளைத்தான் மாற்றிப் போட்டிருக்கிறோம். இப்போது புதிதாக வரி ஒன்றும் போடவில்லை என்பதற்காக ஒவ்வொன்றையும் படித்துக் காண்பிக்க முடியும். ஆனால் சில இடங்களில் விளக்கம் மட்டும் கொடுத்திருக்கிறோம். பி.வி.சி. கண்டியூட் பைப்புக்கு 9 சதவிகிதம் என்று இருக்கிறது. அதற்கு 8 சதவிகிதம் என்று சொல்லுகிறபோது அதற்கு, விளக்கம் கொடுத்திருக்கிறோம். "எம்ப்டையர் கிளாத்" என்றால், துணிதானே அதற்கு வரியில்லையே என்று கேட்பார்கள் என்பதற்காக விளக்கம் கொடுத்திருக்கிறோம். இப்படி எல்லாவற்றுக்கும் விளக்கம் கொடுத்திருக்கிறோமே தவிர, எதற்கும் புதிதாக வரி போடவில்லை என்று சொல்லி இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, In the Statement of Objects and Reasons, it is said, "In order to augment the resources of the State, the Government have decided to levy an additional surcharge on sales tax . . . ." அந்த பாயிண்டை நான் கேட்கிறேன். நான் கணக்குக் கேட்கவில்லை.



**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** அந்த இடத்திலே சொல்லித் தான் ஆக வேண்டும். பெட்ரோலின் மீதான சர்சார்ஜை எடுத்திருக்கிறோம். வரியைப் போட்டு சர்சார்ஜை நீக்கியிருக்கிறோம். மதராசுக்குள்ளே வர வேண்டுமானால் சர்சார்ஜ் உண்டு. ஆனால் இப்போதில்லை. போட்ட சர்சார்ஜை நீக்கியிருக்கிறோம். பெட்ரோலுக்குப் போடப்பட்ட வரியைத் தவிர, வேறு எந்த வரியையும் புதிதாகப் போடவில்லை. நான்கு பக்கத்திற்கு அச்சடித்துக் கொடுத்திருக்கிறோம். அதிலே 16 ஐட்டங்கள் இருக்கின்றன. அதைப் பார்த்தால் வரி போடவில்லை என்பது தெரியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இலாக்கா மோசமான இலாக்கா என்று சொன்னார்கள். எனக்கே ரொம்ப வருத்தம்தான். மோசமான இலாக்கா புரட்சித் தலைவரின் தலைமையில், மேற்பார்வையில் இருக்கிறதே என்பதிலே வருத்தம் தான். அவர்கள் மோசமான இலாக்கா என்றாலும், அதை நான் ஒத்துக்கொள்ள வில்லை. ஏழையெளியவர்களுடைய வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்று வதற்கு உறுதுணையாக பணத்தைத் தேடித் தருகிற பல இலாக்காக்களில் இந்த இலாக்காவும் ஒன்று என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். எல்லா இடங்களிலும் தவறு செய்பவர்கள் இருப்பார்கள். சமுதாயத்தில் தவறு செய்கிறவர்கள் யார் என்பதைப் படிப்படியாக எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்கள் எங்கேயிருந்து வருகிறார்கள்? ஆப்பிரிக்கா விலிருந்தா வருகிறார்கள்? ஜப்பானிலிருந்தா வருகிறார்கள்? அமெரிக்கா விலிருந்தா வருகிறார்கள்? இந்தியாவிலேயே தவறு செய்தவர்களும் இருக்கிறார்கள், நல்லவர்களும் இருக்கிறார்கள். தவறு செய்பவர்கள் எல்லா இடங்களிலும் இருக்கிறார்கள். அரசியல் கட்சியிலும் இருப்பார்கள். நல்லவர் களும், எல்லாக் கட்சியிலும் இருப்பார்கள். பிரைவேட் கம்பெனியிலும் நல்லவர்களும் இருப்பார்கள். தவறு செய்பவர்களும் இருப்பார்கள். அதைப் போலவே அரசு இலாக்காவிலும் நல்லவர்களும் இருப்பார்கள், கெட்டவர்களும் இருப்பார்கள். நல்லவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கின்றபோது திறமையாக வேலை செய்வார்கள். தவறு செய்கிறவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும்போது, தவறு செய்ய தங்களுடைய திறமையைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். திறமையைப் பயன்படுத்திக்கொண்டு தவறு செய்கிறவர்கள் எல்லா இடங் களிலும் நிறைந்திருக்கிறார்கள். இப்படி நல்லவர்களும் கெட்டவர்களும் இருக்கிறார்கள் என்பதை மறுக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். இந்த இலாக்காவைப் பொறுத்த வரையில், பல சீர்திருத்தங்கள் செய்து நேர்மையாக, தூய்மையாக ஆக்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்

கொள்கிறேன். மேலும் இந்த இலாக்காவை தூய்மையாக ஆக்கிக் கொண்டிருக்கிறோம். தவறு செய்தவர்கள், இன்னும் தவறு செய்து கொண்டிருப்பவர்கள் பலர் அல்லது சிலர் இருக்கக் கூடும். ஆனால் துறையைத் தூய்மையாக, திறமையாக ஆக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தூய்மையாக, திறமையாக, தவறு செய்யாமல் ஆக்குவதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. சம்பந்தப்பட்ட அமைச்சரும், சம்பந்தப்பட்ட இலாக்காவின் தலைமையில் உள்ளவர்களும் இதுகுறித்து நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். ஆனால் அது மட்டும் போதாது. உங்களுடைய ஒத்துழைப்பும், உறுதுணையும் வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஒருவன் வீடு கட்டிக்கொண்டான் என்று சொன்னார்கள். அவரை நாம் தண்டிப்பதிலே அரசுக்கு நன்மை வராது என்றாலும், அவர்கள் தண்டிக்கப் படுவார்கள் என்ற பயம் இருந்தால், மீண்டும் அப்படிப்பட்ட தவறுகள் செய்யாமல் காப்பாற்ற வழிவகை செய்ய முடியும். ஆகவே தவறு செய்தவருடைய பெயரை எனக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். மாந்தைச் சுற்றிலும் முள்வேலி போடுவதற்குப் பதிலாக கருங்கல் செங்கல் வைத்துக் கட்டி சிமெண்ட் பூசியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவருடைய பெயரைச் சொல்ல வேண்டும் என்று கேட்கிறேன். இதை நான் சொல்வதற்குக் காரணம் அவரைத் தண்டிக்க வேண்டும் என்பதற்காக அல்ல. அவரைத் தண்டிப்பதன் மூலமாக சமுதாயத்தைச் சீர்திருத்த வேண்டுமென்பதற்காக. அவரைத் தண்டித்தோம் என்று மற்றவர்களுக்குத் தெரிந்தால், மற்றவர்களும் தவறு செய்யாமல் இருப்பார்கள். தூய்மையாக, திறமையாக நடத்த வேண்டும் என்ற அக்கறையின் காரணமாகத்தான் நான் இப்படிக் கேட்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இருக்கிற அக்கறையை நான் மனதார வரவேற்கிறேன். இந்த அரசின் மீதும், என் மீதும் உறுப்பினருக்கு நம்பிக்கை இருக்கிறது என்று நினைக்கிறேன். ஆகவே அவருடைய பெயரை என்னிடத்திலே கொடுக்க வேண்டும். சட்டத்திலே இடம் இருக்கிறதோ, இல்லையோ எனக்குத் தெரியாது. அப்படி தகுதியற்ற முறையில் முறையற்ற முறையில் பணமோ, சொத்தோ சேர்த்துவிட்டால், அதைப் பறிமுதல் செய்ய ஒரு சட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்கின்ற ஆசையை உடையவன் நான். தகுதியற்ற முறையில், முறையற்ற முறையில் சேர்த்த சொத்தை ஏன் பறிமுதல் செய்யக்



கூடாது? அந்த அளவிற்கு நான் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே சொன்ன இரண்டு பிரச்சினைகள் மட்டுமல்லாமல், வேறு எந்தப் பிரச்சினைகளாக இருந்தாலும் சொல்லலாம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களுக்கு நாடு பூராவும் இயக்கம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்களுக்கும் நாடு பூராவும் இயக்கம் இருக்கிறது. ஆகவே அந்த இயக்கத்தின் நண்பர்களை அனுப்பி யார் யார் எங்கே தவறு செய்கிறார்கள் என்பதைக் கண்டறிந்து அவர்களுடைய பெயர்களையெல்லாம் என்னிடத்திலே கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நானும் அதைப் பெற முயற்சி செய்கிறேன். இந்த அரசு மீது, என் மீது அவர்களுக்கு நம்பிக்கை இருக்கும் என்று கருதுகிறேன். அப்படிக் கொடுத்தால், யார் பெயர் கொடுத்தார்கள் என்று நிச்சயமாக வெளியே சொல்லமாட்டேன். யார் பெயரைக் கொடுக்கிறார்களோ, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன் என்று சொல்லி இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு, விற்பனை வரி (மேல்வரி) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1981) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பரிந்துரை எதுமில்லை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு, விற்பனை வரி (மேல்வரி) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1981) திருப்பி அனுப்பப்படவேண்டும்". என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு, விற்பனை வரி (மேல்வரி) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1981) திருப்பி அனுப்பப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(முற்பகல் 11-30)

**(4) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1981).**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1981) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1981) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரித்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பரிந்துரை எதும் இல்லை.

---

@ 471-473 ஆம் பக்கங்களில் இணைப்பு XI ஆக அச்சிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1981ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1981) திருப்பி அனுப்பப்படவேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை —

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1981ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1981) திருப்பி அனுப்பப்படவேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(5) 1981 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 50/1981)**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு, இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/1981) @ பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு, இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 50/1981) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

மன்னிக்க வேண்டும். நேரத்தைச் சுருக்குவதிலே மாண்புமிகு அமைச்சர்களும் இன்னும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, அங்கத்தினர்களும் மாண்புமிகு அமைச்சர்கள் பேசுவதற்கு ஏற்ப சொல்லவேண்டியதாக இருக்கிறது.

---

@ 474-477ஆம் பக்கங்களில் இணைப்பு XII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

நாங்கள் சொல்ல வேண்டும் என்று நினைப்பதைத் தெரிவித்துத்தான் ஆக வேண்டும்.

இந்தச் சட்ட முன்வடிவிலே இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. ஒன்று ஸ்டாம்ப் டியூட்டியை அதிகப்படுத்துகிறார்கள். ஸ்டாம்ப் டியூட்டியை அதிகப்படுத்துவதை நான் ஆட்சேபிக்கிறேன். ஆனால் இன்னொரு பகுதி ஸ்டாம்ப் டியூட்டி போடுகின்ற காலத்திலே, சொத்து மதிப்பைக் குறைத்துப் போடுவதைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காக ஒரு ஏற்பாடு செய்திருக்கிறார்களே அந்த அம்சத்தை நான் வரவேற்கிறேன். இந்த ஏற்பாட்டைப் பலப்படுத்துவதன் மூலமாக, ஸ்டாம்ப் டியூட்டி குறைவாகப் போடுவதற்காக சொத்து மதிப்பை குறைவாகப் போடுகிறார்களே அதைக் கண்காணிக்க வேண்டும், ஒழுங்குபடுத்த வேண்டும் என்று போடுகின்றார்களே அதை நான் வரவேற்கிறேன். ஏனென்றால் அந்தப் பகுதியிலே அதிக கவனம் செலுத்துவதால், அதிகமான வருமானம் அரசாங்கத்திற்கு வரும். அதே நேரத்தில் ஸ்டாம்ப் டியூட்டியை அதிகமாக்குகின்றபோது, லட்சக்கணக்கான சாதாரணமான மக்களை, ஏழை மக்களை பாதிக்கின்ற அளவில் இருப்பதால், அந்த ஸ்டாம்ப் டியூட்டியை அதிகப்படுத்துவதை ஆட்சேபிக்கிறேன். சொத்து மதிப்பைக் குறைத்துப் போடுவதைத் தடுக்கின்ற ஏற்பாட்டைச் செய்திருப்பதற்கு நான் வரவேற்பு கொடுக்கிறேன். இப்படி ஒரு பகுதியை ஆதரிக்கவும் இன்னொரு பகுதியை எதிர்க்கவும் வேண்டியதாக இருக்கிறது என்பதைக் கூறி அமைகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, முத்திரைத்தாள் சட்டமுன்வடிவு முன்னால் ஒரு தடவை இங்கே வந்தபோதுகூட நான் அதைப்பற்றிச் சொன்ன கருத்துக்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நினைவில் இருக்கும் என்று நினைக்கிறேன். முத்திரைத்தாள் சட்டம் மாநிலத்திற்கு மாநிலம் மாறுபட்டதாக இருக்கிறது. நம்முடைய மாநிலத்திலே முத்திரைத்தாள் சட்டத்திலே முத்திரைத்தாள் பதிவு செய்வதற்கு, ரிஜிஸ்ட்ரேஷன் பீஸையெல்லாம் கூட்டியிருக்கிறார்கள். கேரள மாநிலத்திலே குறைவாகவே இருக்கிறது. ஆகவே கோயம்புத்தூர், கன்னியாகுமரி மாவட்டத்திலே உள்ளவர்கள் இம்மாதிரி பத்திரங்கள் பதிவு செய்யும்போது, அங்கே வேறுவேறு காரணங்களைச் சொல்லி, பத்திரங்களையெல்லாம் பதிவு செய்து விடுகிறார்கள். அதனால் நமது அரசாங்கத்திற்குப் பேரிழப்பு ஏற்படுகிறது. இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு முன்னர் கொண்டுவந்திருக்கிறேன். அதற்கு நாம் மத்திய அரசோடு தொடர்புகொண்டு, 1899 ஆம் வருட முத்திரைத்தாள் சட்டப்படி, வருவாய்த் துறை அமைச்சர்கள் மகாநாடு



கூடும்போது, மத்திய வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடம் இதைப்பற்றி எடுத்துச் சொல்லி தக்க நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். இதைப் பற்றி கடந்த ஆண்டே சொல்லியிருக்கிறேன். ஆனால் அதற்கு மாறாக, இப்போது முத்திரைத்தாள் சட்டத்தின்கீழ், ரூ. 20 என்பதை ரூ. 25 என்று ஆக்கி, ரூ. 25 என்று இருப்பதை ரூ. 30 என்று ஆக்கி, ரூ. 30 என்பதை ரூ. 35 என்று ஆக்கி அதிகமாக ஆக்கியிருக்கிறார்கள். இப்படி உயர்த்தியிருப்பது நம்முடைய எல்லையோரப்பகுதி மக்களுக்கு வசதியாக இருக்கிறது. இந்தப் பக்கத்திலே கர்நாடகப் பகுதிக்கு அருகாமையில் உள்ளவர்களுக்கு நல்லதாக இருக்கிறது என்பதை இந்த சந்தர்ப்பத்திலே எடுத்துச் சொல்லிக் கொள்கிறேன். மையப் பகுதியிலே இருப்பவர்கள் அதிகமாகக் கட்டி பதிவு செய்ய வேண்டியதாக இருக்கிறது.

அந்தக் காலத்தில் யார் பத்திரத்தைக் கொண்டுவந்து பதிவு செய்கின்றார்களோ அவர்களே அந்தச் சொத்தின் மதிப்பைச் சொல்லி பதிவு செய்து கொள்ளலாம் என்று இருந்தது. அந்த நிலையை மாற்றிச் செய்யலாம் என்ற அளவில் அன்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அங்கங்கே இருக்கின்ற தாசில்தார் பகுதியிலே ஒரு நிலத்திற்கு இவ்வளவு மதிப்பு என்று நிர்ணயித்து அதன்படி பதிவு செய்வது என்று ஒரு சீர்திருத்தம் செய்யப்பட்டது. அதையே இன்னும் சீர்திருத்த வேண்டும் என்ற அளவில் இப்போது முயற்சி எடுத்திருக்கிறார்கள். அந்த முயற்சியை நான் வரவேற்கிறேன். அதையே இன்னும் கொஞ்சம் ரோசனையைச் செய்து, விரைவான ரீதியிலே கொண்டுவர வேண்டும். அந்த விலை மதிப்பீடுகளைப் போடுவதற்கு முறைகளைப் போட வேண்டும். இப்போதுகூட நாம் ஒரு முறையை வைத்திருக்கிறோம். அரசாங்கம் ஒரு சொத்தை எடுத்துக் கொள்கின்றபோது, அரசாங்கத்தின் நன்மைக்காக, பொது நன்மைக்காக வீடுகள் கட்டிக்கொடுக்க நிலங்களை எடுக்கும்போது பக்கத்தில் உள்ள நிலங்களுக்கு 3 வருடங்களாக இருக்கக்கூடிய விலையைப் பொறுத்து வாங்குகிறார்கள். என்ன விலை அங்கு இருக்கின்றதோ அந்த விலையைத்தான் கொடுக்கிறார்கள். நீதிமன்றத்திலேயும் அதை ஏற்றுக்கொள்கிறார்கள். இது உண்மையான மதிப்பைப் போடுவதற்கு மக்களுக்கு ஊக்கம் அளித்திருக்கிறது. எனவே இத்தகைய நடவடிக்கைகள் மூலமாக உண்மையான மதிப்பைப் போட்டு பதிவு செய்கிறார்கள். இதற்கான முயற்சிகளை இன்னும் வேகமாக இந்த அரசு எடுப்பதற்கு நாங்கள் துணையாக இருப்போம். ஆனால் இதன் காரணமாக முத்திரைத்தாள் மதிப்பை உயர்த்தியிருப்பதால், சாதாரண மக்கள் பாதிக்கப்படுகின்ற நிலைமைகள் இருக்கின்றன. ஒரு

லட்சம் ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள சொத்து இருப்பவர்கள், ஒரு ஐந்து லட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்து இருப்பவர்கள் பதிவு செய்யும்போது, அவர்களால் இதைச் செலுத்த முடியும். யார் யாரால் செலவு செய்யமுடியுமோ அவர்களிடம் நாம் வசூலித்துக்கொள்ளலாம். அதைத் தாங்குகின்ற சக்தி உடையவர்களிடம் வரிவிதித்துப் பெற முயற்சிக்கலாம். ஆனால் ஒரு சின்ன வீட்டை ஐந்து பேர்கள் குடும்பத்தில் பங்காகப் பெறுகிறார்கள் என்னும்போது, பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும். ஏழைகளைப் பாதிக்கக்கூடியதாக இருப்பதால், இந்த வரிவிதிப்பை எதிர்ப்பது என்னுடைய கடமை. அதை அரசின் உணர்வுக்குக் கொண்டு வருவது என் கடமை. இந்த நிலைமைகளையெல்லாம் உணர்ந்து, அரசு திருத்திக்கொள்ளும் என்று நம்புகிறேன்.

அடுத்ததாக, இன்னொன்றைச் சொல்கிறேன். இதற்கு முன்னாலே சொன்னதுபோல, விற்பனை வரி இலாகாவில் எப்படி இருக்கின்றார்களோ அதே முறையில் அந்தப் பத்திரப் பதிவுத் துறையினரும் இருக்கிறார்கள். அங்கேயும் அப்படித்தான் இருக்கிறது. ரிஜிஸ்ட்ரேஷன் அலுவலகத்தில் அந்த அதிகாரி எப்படி இருக்கிறார் என்று பார்க்க வேண்டும். அங்கேயுள்ள கிளார்க் எப்படி இருக்கிறார் என்று பார்க்க வேண்டும். பியூன்கள் எப்படி இருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். எல்லா இடத்திலேயும் அப்படித்தான் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அங்கிங்கெனாதபடி, எங்கெங்கும் நிறைந்திருக்கக்கூடியதாக இருக்கிறது என்று சொல்லலாம். அந்தப் பழியை எங்கள் மீது போடாமல், எல்லா அதிகார வசதிகளையும் பெற்று இருக்கின்ற அரசு, அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதற்கு ஆதரவாக நாங்கள் இருக்க வேண்டும். அதற்கு எதிராக நாங்கள் இருக்கக் கூடாது, தடையாக இருக்கக்கூடாது. அதுதான் எங்கள் பொறுப்பு. இதைச் சொல்லி இந்த இலாகாவில் இருக்கின்ற குறைபாடுகளைத் தவிர்த்து, சீர்திருத்துகின்ற முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும். இன்று உண்மையான விலை மதிப்பீட்டைக் கொண்டுவர வேண்டும் என்று சொல்லி, என் இந்த இரண்டு கருத்துக்களையும் கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொல்கின்றபோது 'இதிலே ஒன்றை நான் எதிர்க்கிறேன். இன்னொன்றை ஆதரிக்கிறேன்.' என்று சொன்னார்கள். அவர்கள் எதிர்க்கிறேன் என்று சொன்ன பகுதியில் நாங்கள் ஒன்றும் அதிகமாகப் போடவில்லை. இப்போது 6 பர்சென்ட் என்று இருக்கிறது. கிராமப்புறங்களிலே அப்படி இருக்கிறது.



நகரப்புறங்களிலே ஏற்கெனவே 8 பர்சென்ட் என்று இருக்கிறது. இப்போது கிராமப்புறங்களிலே இருப்பதை 7 பர்சென்ட் என்றுதான் உயர்த்தியிருக்கிறோம். அதிகமாக உயர்த்தவில்லை என்பதை அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அது மட்டுமல்ல, இதை உயர்த்தியதற்கு உள்ள காரணத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். சாதாரணமாக செட்டில்மெண்ட் என்று எழுதி ஏமாற்றிவிடக்கூடாது. அப்படி செட்டில்மெண்ட் என்று எழுதிக்கொள்ளும்போது, குறைவான தொகையைப் போட்டு எழுதிக்கொள்கிறார்கள். அப்படி எழுதி வைக்கக்கூடாது என்பதற்காகத்தான் சட்டம் கொண்டுவந்திருக்கிறோம். யார் யார், யார் யாருக்கு எழுதிவைக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். மதர், பாதர், மனைவி, மக்கள், பேரப்பிள்ளை என்று உறவினர்களுக்குத் தான் எழுத வேண்டும், மற்றவர்களுக்கு எழுதி வைக்கக்கூடாது என்று வரையறை செய்திருக்கிறோம். அப்படி ஏமாற்றுவதைத் தடுக்க வழிவகை செய்து வைத்திருக்கிறோம். யாராவது கிராமத்திலே ஒன்றும் தெரியாதவர் இருக்கிறார் என்றால், அவர்களை ஏமாற்றி அதிகமாகப் பத்திரச் செலவு ஆகும் என்ற அளவில் சொல்லி, 2 ஆயிரம், 3 ஆயிரம் ரூபாய் என்று ஆகிவிடும் என்று சொல்லி, ஒரு நூறு ரூபாய் மதிப்பு என்று வைத்து விடுவது என்று செய்துவிடுகின்றார்கள். அது நீதிமன்றத்திற்குப் போகிறபோது, அதிலே பல சங்கடங்கள் வந்துவிடுகின்றன. அப்போது அவர்கள் பல ஆயிரக்கணக்கான ரூபாய் செலவழிக்கவேண்டியதாக இருக்கிறது. அந்த மக்கள் நன்மை அடைய வேண்டும் என்பதற்காகவே இதை நாம் கொண்டுவந்திருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் சட்டத்தின் மூலமாக வரியை அதிகமாக ஏற்றிவிட்டோம் என்பதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், தமிழகத்தின் கன்னியாகுமரியிலே இருந்து கேரளாவிற்குச் சென்று பதிவு செய்து விடுகிறார்கள், அதனால் அரசுக்குப் பேரிழப்பு ஏற்படுகிறது என்று சொன்னார்கள். அது உண்மைதான். இன்றைக்கு இருக்கின்ற விகிதாசாரத்தில் 1/2 சதவிகிதம் தான் குறைவாக இழப்பு ஏற்படுகிறது என்பதைத்

(முற்பகல் 11-40)

தெரிவித்துக்கொள்கிறேன். அரை சதவிகிதத்திற்காகப் போகிறவர்கள் அதிகமாக இருக்கமாட்டார்கள். அப்படிப் போனாலும், எதிர் காலத்தில் அது பற்றி என்ன செய்வதென்பதை யோசிக்கலாம்.

[1981 மே 15

**திரு. ம. சங்காலிங்கம்:** சொத்து மதிப்புபற்றி தாசில்தார் அலுவலகத்திலிருந்து சர்ட்டிபிகேட் வாங்கி, பிறகு பதிவு செய்ய வேண்டுமென்று வைத்திருக்கிறோம். எனவே மத்திய அமைச்சர் மூலமாக எல்லா மாநில அமைச்சர்களையும் கலந்து, இதே முறையை அங்கும் கொண்டுவர ஏற்பாடு செய்தால் நல்லது.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** இங்கே நாம் சொத்து மதிப்பைப் பார்த்து, அதைப் பதிவு செய்கிறபோது. இந்த முறை அங்கே இல்லை. சில நேரங்களில் அதிக மதிப்புள்ள சொத்தைக் குறைவாக மதிப்பிடுகிறார்கள் என்று சொன்னார்கள். அதுபற்றித் தகவல் தெரியவில்லை. சட்ட முறைப்படிதான் அது இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல. உண்மையான மதிப்பீடு செய்ய 'கைட்லைன்ஸ் ரெஜிஸ்டர்' என்று போடப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக ஏய்ப்புகள் குறையும். முழுவதுமாக இல்லாமல் போகுமென்று சொல்ல முடியாது. கொஞ்சம் குறையும். அதையும் செய்ய அரசு தயாராக இருக்கிறது. சப்-ரிஜிஸ்டிரார்கள் பணக்காரர்கள் ஆகிவிட்டார்களென்று சொன்னார்கள். லட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களைப் பதிவு செய்யும்போது, அவர்களுக்கு ஆயிரக் கணக்கில் வருவதை நான் நியாயமென்று சொல்லவில்லை. அப்படி வரக்கூடாது. இதிலே எல்லோருக்கும் சம பங்கு இருக்கிறது. ஆளும் கட்சிக்கு அதிகார பலமிருக்கிறது, மற்ற சூழ்நிலைகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அப்படி இருக்கிறதென்று ஏற்றுக்கொண்டாலும், எல்லோரும் சேர்ந்து லஞ்சத்தை ஒழிக்க முயற்சி செய்வோமாக.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு, இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/1981) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பரிந்துரை எதுமில்லை.



1981 மே 15]

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மேலவைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு, இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/1981) திருப்பி அனுப்பப்பட வேண்டும்." என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1981 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/1981) திருப்பி அனுப்பப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## (6) தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1981)

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** மாண்புமிகு தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1981) @ ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** முன்மொழியப்பட்ட தீர்மானம்:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

உறுப்பினர்கள் இந்தச் சட்ட முன்வடிவோடு, தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவின்மீதும் கருத்துக்களைச் சேர்த்துச் சொல்லிவிடலாம். பின்னாலே, அதை விவாதமின்றி நிறைவேற்றிவிடலாம்.

**திரு. ஆ. நல்லசிவன்:** தலைவரவர்களே, ஒரேயொரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். முதல் மசோதாவில் உறுப்பினர்களுக்கான அலவன்சைக் கூட்டித்தர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இரண்டாவது மசோதாவில்

---

@ 478 ஆம் பக்கங்களில் இணைப்பு XIII ஆக அச்சிடப்பட்டுள்ளது

வீட்டு வாடகைப்படிபற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டிலே, மக்கள் தரப்பிலேயிருந்து வரக்கூடிய சில கோரிக்கைகளை அரசு, போதிய நிதி ஆதாரம் இல்லாததால், மறுக்க வேண்டியிருக்கிறது. மக்களுடைய கோரிக்கைகள் மறுக்கப்படுகிறபோது, சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், மற்றவர்களெல்லாம் தங்கள் வருமானத்தைப் பெருக்க ஏற்பாடு பண்ணுகிறார்கள் என்ற தவறான எண்ணம் ஏற்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இரண்டாவது மசோதாவிலே விட்டு வாடகைப் படி 250 ரூபாய் என்பதை 2,000 ரூபாய் என்று போட்டிருக்கிறார்கள். எனக்குப் பிரச்சினை புரிகிறது. ஆனால் திடீரென்று அப்படிச் செய்யும்போது, வெளியே தவறான அபிப்பிராயம் ஏற்படுகிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சம்பளம் 1,000 ரூபாய் என்றிருப்பதை 1,500 ரூபாய் என்று ஏற்றியிருக்கலாம். அதில் நியாயம் இருக்கிறது. வாடகையைப் பொறுத்தவரையில், ரூ. 250 என்பதை ரூ. 2,000 என்று உயர்த்தும்போது, ரூ. 100 என்பதை ரூ. 1,000 என்று உயர்த்தும்போது பத்திரிகையில் வரும் முறை வேறு, இங்கே வரும் முறை வேறு. பி.டபிள்யூ.டி. நிர்ணயிக்கும் அளவிற்கு வாடகை இருக்கிறது. ஆனால் இந்தப் பிரச்சினையில் பொது மக்களிடையே ஏற்படும் உணர்வு வேறு மாதிரியாக இருக்கிறது. எனவே முன்கூட்டியே யோசித்து, சம்பளம் 1,000 ரூபாய் என்றிருப்பதை 1,500 ரூபாய் என்று போட்டிருந்தாலும் வேறு விதமாக அது இருந்திராது. இதுகுறித்து மக்களின் கவனத்தையும் கருத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது. மக்களின் உணர்வையும் கணக்கில் எடுத்துக் கொண்டு, வீட்டு வாடகைப் படியை உயர்த்தாமல், சம்பளத்தை உயர்த்தியிருக்கலாமென்று கூற விரும்புகிறேன். மேலும் இந்தப் பிரச்சினையில் அரசு எல்லாக் கட்சிகளையும் கூட்டி வைத்துப் பேசுவது நல்லது. அதனால் இங்கே வந்து இவற்றையெல்லாம் பேச வேண்டிய நிலைமை இராதென்று கூறி அமைகிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தலைவரவர்களே, அரசின் இரண்டு சட்ட முன்வடிவுகளின் மீதும் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். மரியாதைக்குரிய உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொல்லிய கருத்திலிருந்து நான் மாறுபடுவதற்காக வருந்துகிறேன். 1951-க்கும் 1981-க்கும் இடையே எவ்வளவு மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன, விலைவாசிகள் எப்படி உயர்ந்திருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். குறிப்பாக சென்னையிலே வீட்டு வாடகை என்றால், எவ்வளவு பெரிய சுமையாக இருக்கிறதென்பதை நாட்டு மக்கள்



நன்றாக உணர்வார்கள். அந்தக் கண்ணோட்டத்தின் அடிப்படையிலே வீட்டு வாடகைப் படி உயர்த்தப்பட்டதை நான் ஆதரிக்கிறேன். அமைச்சர்கள், பேரவைத் தலைவர், மேலவைத் தலைவர் ஆகியோர் பெரிய பதவிகளில் இருப்பவர்கள். அவர்களுக்கு இப்படிப்பட்ட சங்கடங்களை ஏற்படுத்தக் கூடாது. அவர்களுக்கு அரசு வீடுகள் கிடைக்காத நிலையில், இந்த வாய்ப்பு தரப்படுகிறது. அரசு எல்லோருக்கும் வீடுகளை ஒதுக்கும் நிலையிலே இல்லை. வீடுகளைக் கட்டுவதற்கும் ஏராளமான செலவாகும். எனவே வீட்டு வாடகைப் படியை உயர்த்தியதை வரவேற்கிறேன். சம்பளத்தை உயர்த்தினால்தான் மக்கள் எதிர்ப்பார்கள். இவ்வளவு சம்பளமா என்று கேட்பார்கள். வீட்டு வாடகைப் படி என்றால், இந்த நிலைமை ஏற்படாது. சென்னையில் இருக்கும் நிலைமையையொட்டி நான் இதை ஆதரிக்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், சில செய்திகளைச் சொல்லி, முடிக்க விரும்புகிறேன். பல முறை சொல்லியிருக்கிறார்கள். பல்வேறு உறுப்பினர்களும் சொல்லியிருக்கிறார்கள். சட்டப் பேரவை, மேலவை உறுப்பினர்கள் தங்களுடைய ஜனநாயகக் கடமைகளைத் திறமையாக, ஒழுங்காகச் செய்வதற்கு அவர்களுடைய தொகுதியிலே ஒரு அலுவலகம் வேண்டுமென்ற கோரிக்கையை மீண்டும் வற்புறுத்துகிறேன். அந்த அலுவலகத்திலே ஆரம்பக் கட்டமாக சுருக்கெழுத்தாளர் ஒருவரை நியமிக்க வேண்டும். உத்திரப்பிரதேசத்தில் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் சுருக்கெழுத்துப் பயிற்சி பெற்றவர்களை உதவியாளர்களாக அரசு நியமித்திருக்கிறது. எந்த அளவிற்கு அதன்மூலம் அவர்கள் தங்கள் ஜனநாயகக் கடமைகளைச் செய்ய உறுதுணையாக இருக்கிறதென்பதை அவர்கள் சொன்னார்கள். அது மிகவும் அவசியமானதென்பதை இந்த நேரத்தில் மீண்டும் வற்புறுத்துகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இப்போது வீட்டு வாடகைப் படி கிடையாது. பொதுவாக காம்பன்சேடரி அலவன்ஸ் என்று இருக்கிறது. வீட்டு வாடகைப் படியும் நிர்ணயிக்கலாமென்பது என்னுடைய கருத்து. அதை அரசு பரிசீலிக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களான பிறகு அவர்கள் பல செய்தித் தாள்களையும், பல சஞ்சிகைகளையும் படிக்க வேண்டியிருக்கிறது. முன்னால் ஒரு செய்தித்தாளைப் படித்தால் போதுமென்ற நிலை இருக்கும். பொறுப்பேற்ற பிறகு பல கட்சிப் பத்திரிகைகளையும், பல்வேறு சஞ்சிகைகளையும் படிக்க வேண்டியிருக்கிறது. இதற்காக மாதத்திற்கு 200 ரூபாய்க்கு மேல் செலவாகிறது. அதற்குக் கணக்கு வைத்திருக்கிறேன்.

எனவே அப்படி செய்தித்தாள்கள், சஞ்சிகைகள் வாங்க ஒரு படி கொடுக்க வேண்டும். இல்லையென்றால், செய்தித் தாள்களை அரசே உறுப்பினர்களுக்கு வாங்கிக் கொடுக்கலாம். இதில் எது வேண்டுமானாலும் செய்யலாம்.

கடிதப் போக்குவரத்திற்காக உறுப்பினர்களுக்கு ஆகும் செலவு ஒரு சுமையாக இருக்கிறது. அஞ்சல் தலைகள், கார்டுகள், கவர்கள் ஆகியவற்றுக்கு மாதமொன்றுக்கு இவ்வளவு என்று ஒரு குறிப்பிட்ட தொகை அரசு உறுப்பினர்களுக்குத் கொடுத்து, உதவி செய்யலாம். அல்லது அதற்கான செலவை ஈடு செய்ய சிறப்புப் படி கொடுக்கலாமென்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ரயில் பயணச் சலுகைபற்றி முன்பே சொல்லியிருக்கிறேன். முன்பு 2,000 ரூபாய் அளவிற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது. இப்போது 500 ரூபாய் உயர்த்தப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-50)

இரண்டாயிரம் ரூபாய் என்று எப்போது நிர்ணயித்தோமோ அதற்குப் பிறகு இரண்டு முறை மத்திய அரசால் ரெயில்வே கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளன. ஆகவே அந்தத் தொகை போதுமானதல்ல. அது தான் அனைத்து உறுப்பினர்களின் கருத்தும் கூட. உத்தரப்பிரதேசத்தில் அந்த மாநிலத்திற்குள்ளே எங்கே வேண்டுமானாலும், எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் முதல் வகுப்பில் பிரயாணம் செய்ய ரெயில்வே பாஸ் கொடுத்திருக்கிறார்கள். அதுபோல் வெளி மாநிலங்களுக்குப் பயணம் செய்ய 4,500 ரூபாய்க்கான கூப்பன்கள் வழங்கியிருக்கிறார்கள். உத்திரப் பிரதேசத்தைப் பின்பற்றி நம் மாநிலத்திலும் கொடுப்பதுபற்றிப் பரிசீலனை செய்து இந்த வசதியைச் செய்து கொடுக்கலாம்.

அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பேருந்து வசதி அளிப்பதைப் பொறுத்தவரை, சட்டமன்றப் பேரவையிலே மசோதா அறிமுகப்படுத்தப்பட்ட போது in sub-section (4-A), in clause (a), after the words "to travel", the words "either singly or with his or her spouse or any other relative" shall be inserted என்று தெளிவாக இருந்தது. ஆனால் As passed by the Assembly என்று வரும்போது, வேறு மாதிரியாக வந்திருக்கிறது. பெண் உறுப்பினர்



களாக இருந்தால், அவர்கள் உறவினர்களை அழைத்துச் செல்லலாம் என்று இருக்கிறது. ஆனால் ஆண் சட்டமன்ற உறுப்பினர்கள் என்றால், மனைவியைத் தான் அழைத்துச் செல்லலாம் என்று இருக்கிறது. இன்றைக்கு ஆண் சட்டமன்ற உறுப்பினர்கள் பெண் சட்டமன்ற உறுப்பினர்களுக்குள்ள சலுகையை எங்களுக்கும் தர வேண்டுமென்று கேட்கக் கூடிய நிலையில் இருக்கின்றோம். (சிரிப்பு) ஆண் சட்டமன்ற உறுப்பினர்களில் பலர் திருமணமாகாதவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய உறவினர்களை அழைத்து வரக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். அதுபோல் மனைவியை இழந்த சட்டமன்ற உறுப்பினர்கள் உறவினர்களை அழைத்து வரக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். ஆகவே பெண் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதே சலுகையை ஆண் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்க வேண்டும். பில்லை introduce பண்ணும்போது இதுபற்றித் தெளிவாக இருந்தது. ஆனால் இப்போது அது மாற்றப்பட்டிருக்கிறது. ஒரு ஆணை மூலம் கூட இதை மாற்றியமைத்து பிறகு சட்டமுன்வடிவாகக் கொண்டு வந்து இதனை நிறைவேற்றலாம். ஆகவே இதுபற்றிப் பரிசீலனை செய்ய வேண்டும்.

அடுத்து, வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமான வீடுகள், மனைகள் சென்னையில் இருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முன்னுரிமை தர வேண்டுமென்று கூட நான் சொல்லவில்லை. ஒரு குறிப்பிட்ட சதவிகித வீடுகளை அல்லது மனைகளை சட்டமன்ற உறுப்பினர்களுக்காக ஒதுக்கீடு செய்யலாம். அப்படிச் செய்தால், சட்டமன்ற உறுப்பினர்கள் சென்னையிலே அந்தச் சலுகையைப் பயன்படுத்தி வீடுகளையும், மனைகளையும் பெற வாய்ப்பாக இருக்கும். சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலுள்ள இட நெருக்கடியும் குறையும். இப்போதே எல்லோருக்கும் சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் அறை கிடைக்கவில்லை.

அடுத்து, அரசின் கமிட்டிகள் பல இருக்கின்றன. ஒவ்வொரு கமிட்டிக்கும் ஒரு அலுவலகமும், உதவியாளர் வசதிகளும் இருக்க வேண்டும், சட்டமன்ற விடுதியில் இப்போது சட்டமன்றம் சம்பந்தப்படாத பல துறைகளின் அலுவலகங்கள் இருக்கின்றன. காலிசெய்துவிட்டு உங்களுடைய துறை தொடர்பான அலுவலகத்திற்குச் செல்லுங்கள் என்று அவர்களிடம் சொல்லிவிட்டு, அந்த இடங்களில் நம்முடைய அரசாங்கக் கமிட்டி சம்பந்தமான அலுவலகத்தை அமைத்து உதவியாளர்களையும் நியமிக்க அரசு ஆவன செய்ய

வேண்டும். கமிட்டிக்காக அந்த அலுவலகங்களை ஒதுக்க வேண்டும். வேறு மாநிலங்களில் எல்லாம் இதுமாதிரி கமிட்டிகளுக்கு தனித் தனியாக அலுவலகங்களும், அலுவலக உதவியாளர்களும் இருக்கிறார்கள்.

அடுத்து, அங்கீகரிக்கப்பட்ட சட்டமன்ற கட்சிகளுக்கு அலுவலகங்கள் இருக்கின்றன. அங்கு தொலைபேசி வசதியையும், உதவியாளர் வசதியையும், ஒரு கடைநிலை ஊழியர் வசதியையும் அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டும். இது மிகவும் முக்கியமானது. அங்கீகரிக்கப்பட்ட சட்டமன்ற கட்சிகளிலிருந்து அவர்கள் சார்பில் சாதாரணமாகக் கேட்கிற கோரிக்கை இது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தலைவரைப் பற்றி ஒன்றுமே பேசவில்லையே.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** சட்டமன்றக் கட்சிகளுக்கு நான் சொன்ன வசதியைச் செய்து கொடுக்கவேண்டும்.

அடுத்து, பொதுவாக உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, அமைச்சர்களாக இருந்தாலும் சரி, பாராளுமன்ற ஜனநாயகத்தில் பயிற்சி தேவை. படித்தவர்களும், படிக்காதவர்களும் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிறார்கள். படிக்காதவர்களிலும், படித்தவர்களிலும் விவரம் தெரியாதவர்களும் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு அறிமுகப் பயிற்சி, Orientation course தேவை. ஒரு சட்டமன்ற உறுப்பினர், ஒரு சார்புச் செயலாளர், அல்லது இணை இயக்குநர் லெவலில் சென்று பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய நிலையில் இருந்தால்கூட, அவற்றையும் அமைச்சர்களிடம் எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அதைத்தான் நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். ஒரு சார்புச் செயலாளர் அல்லது துணை இயக்குநர் எளிதாகத் தீர்க்கக் கூடிய பிரச்சினைகளைக்கூட அமைச்சர்களிடம் கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு அதுபற்றித் தெரிவதில்லை. அதேபோல் சென்னையிலே எங்கெங்கெல்லாம் அரசாங்க அலுவலகங்கள் பரவி இருக்கின்றன, எந்த இடத்தில் குறிப்பிட்ட அலுவலகம் இருக்கிறது என்கிற விவரம் கூட தெரிவதில்லை. இதற்காக வேண்டித்தான் நான் அறிமுகப் பயிற்சி தேவை என்று சொல்கிறேன்.

அடுத்து, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுடைய முக்கியமான பிரச்சினைகள் குறித்து விவாதிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு மாதத்தில் இரண்டு நாட்களாவது நேரம் ஒதுக்க வேண்டும். முதலமைச்சரை உறுப்பினர்கள் பார்த்து, சந்தித்து, பேசி முக்கியமான பிரச்சினைகளைப் பேசித் தீர்க்க அது வாய்ப்பாக இருக்கும்.





அதுபோல் சட்டமன்றக் கூட்டத் தொடரை 3 மாதங்களுக்கு ஒரு முறை அவசியம் கூட்ட வேண்டும். இப்போது சில கொள்கைக் குறிப்புகள் மீது மட்டும் தான் சட்டமன்ற மேலவையில் விவாதம் நடைபெறுகிறது. அதற்குப் பதிலாக வரும் ஆண்டிலிருந்து இன்னும் அதிகமான கொள்கைக் குறிப்புகளை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும். அது வலிமையான ஜனநாயகத்திற்கு உறுதுணை புரிவதாக இருக்கும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இப்போதே நிறைய நேரம் எடுத்துக் கொண்டு பேசுகிறார்கள். இன்னும் அதிகமாகச் சேர்த்துக்கொள்ளவேண்டுமா?

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்கள் மிகக் கண்டிப்பாக இருந்து மேலும் அதிகமான கொள்கை விளக்கக் குறிப்புகளை விவாதத்தில் சேர்ப்பது ஜனநாயக வலிமைக்கும் வளர்ச்சிக்கும் உறுதுணை புரிவதாக இருக்கும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** (மணியடித்துக் கொண்டு) இப்போதே உறுப்பினரிடத்திலே கண்டிப்பாக இருக்கிறேன். (சிரிப்பு)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** அரசு உறுதிமொழிகளை 3 மாதத்திற்குள் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். நிதிச் சுமை அதற்குத் தடையாக இருக்கிறது என்று சொல்லி உறுதிமொழிகள் நிறைவேற்றப் படுவதில்லை. எந்தக் காரணத்தைக் கொண்டும் அரசு உறுதிமொழிகளை நிறைவேற்றுவதில் முட்டுக்கட்டை இருக்கக்கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நேரத்தில் மாண்புமிகு தலைவரவர்களின் [illegible] லோக் சபா செக்கரட்டேரியட் வெளியிட்டிருக்கின்ற 'Legislature in India' என்ற புத்தகத்தை அரசின் கவனத்திற்குச் சமர்ப்பிக்கிறேன். பல்வேறு மாநிலங்களில் லெஜிஸ்லேச்சர் எப்படி இயங்குகின்றன என்கிற விவரம் அதில் இருக்கிறது. நம்முடைய மாநிலத்தை விட எந்த மாநிலத்தில் வசதி குறைவு என்கிற பட்டியலை எடுக்காமல், நம்முடைய மாநிலத்தை விட எந்த மாநிலத்தில் வசதிகள் அதிகம் என்கிற கணக்கை எடுத்து, அந்த மாநிலத்திலுள்ள வசதிகளை நம்முடைய மாநிலத்திலும் அளிக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

THIRU J. M. MIAKHAN: Hon. Chairman, Sir, I welcome this measure of the Government to raise the emoluments of the Legislators and the Ministers. As a matter of fact, in our State the emoluments received by the Legislators and Ministers are meagre and are less than what are being enjoyed by their counterparts in other States. To fulfil the responsibility cast upon the elected representatives of the people, there are certain items of expenditure which have to be incurred by them. The hon. Member Thiru Lakshmikandan mentioned about many such items of expenditure like expenses on postage, travel expenses, etc., and he also pointed out the necessity for the Legislators to have an office in their respective Constituencies. Because it is essential to provide such amenities, I request the Hon. Minister concerned to go through the details of amenities that are provided to Legislators in other States and do justice to us.

As far as rail travel is concerned, I request the Government to consider whether it is possible to issue, as has been done in other States, free railway passes enabling Legislators to travel free within the State. The coupons that are now being given may be utilised for travelling outside the State. As a matter of fact, some of the Members wanted me to say here that in the clause relating to rail travel, instead of the expression 'wife' the expression 'wives' might be used because many of the Members have more than one wife and, therefore, they are afraid that if they take one of the wives, the other wives will quarrel with them. Therefore, they request that instead of the expression 'wife' the expression 'wives' or the expression 'any other one companion' may be used. This is the suggestion made by one of the Members and he did not want me to divulge his name here.

As far as housing for the Legislators is concerned, I request the Government to consider whether a small percentage of the available houses may be allotted to the Legislators so that if they want to have a house at Madras and if they fulfil the other conditions like income-limit, etc., they may have a house at Madras. This will also reduce the pressure on the availability of accommodation in the Legislators' Hostel. The facilities available in the Legislators' Hostel are very meagre and the whole thing has to be completely revamped. They have to be given all the necessary amenities in the Hostel. The amenities now provided are



(நண்பகல் 12-00)

very meagre. The Telephone Service in the Hostel is not available throughout the day. If a telephone call is made in the night, there is nobody to attend and give connection. Either the rooms should be given direct connection or there should be persons to work throughout 24 hours to attend to the calls and give connection. Sometimes occasions may arise when somebody from the Constituency of the Legislator has to communicate with the Legislator even at dead of night. I, therefore, request that the telephone facilities in the Hostel should be improved and the food facilities should be improved.

As far as the emoluments of the Legislators are concerned, they have been given only a meagre amount. But, for various reasons, they do not want to voice their grievance here and demand any increase in their allowances. What we receive here is not in consonance with what we spend for the Constituency and as Member of the Legislature. The Government should consider enhancing of the pay to at least Rs. 1.000 per month. Only then, they will be able to discharge a part of their responsibilities. My hon. Friend Thiru Lakshmikandan suggested that the Members should be provided with Shorthand-typists and with telephone facilities in their constituency. These facilities are essential and they cannot be considered luxuries. The provision of such facilities will enhance the usefulness of the legislators and will improve their service to the people. They will be able to do better work. I completely welcome the measure and I request the Government to consider my various suggestions and do the needful.

*மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:* மாண்புமிகு தலைவர் அவர்களே, சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட சட்டமுன்வடிவு 51/1981-ன் மீது கருத்து தெரிவித்து, அதேநேரத்தில் சட்டமுன்வடிவு 55/1981 லேயும் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். இரண்டுக்கும் சேர்த்து நான் சுருக்கமாகப் பதில் சொல்கிறேன். சட்டமன்றப் பேரவையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த உணர்வுகளின் மேல் உடனடியாக இப்போது அறிவிக்கப்பட வேண்டிய சலுகைகளை மட்டும் ஆக இப்போது அறிவித்திருக்கிறது. சட்டமன்றப் பேரவை முன்னவர், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தெரிவித்த சில கருத்துக்களையொட்டி, தொலைபேசிக்கு உண்டான 3 மாதக் கட்டணச் செலவு 175 ரூபாயை அரசே ஏற்றுக்கொள்ளும் என்றும், தொலை

பேசி சொந்தமாக இல்லாதவர்களுக்கு அவர்களுக்குக் கொடுத்துவந்த 150 ரூபாயை 200 ரூபாயாக உயர்த்தித் தரலாம் என்றும் அறிவித்திருக்கிறோம். இந்த அறிவிப்பைச் செயல்படுத்த இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அதற்குப் பிறகு இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் இந்த மாதிரி சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சில வசதிகள் கொடுப்பதை மற்றவர்கள் தவறாகக் கருத ஏதுவாகும் என்றும அதைக் கவனத்திலே கொள்ள வேண்டும் என்றும் சொன்னார்கள். தேவை இருக்கிறதா, இல்லையா என்பதை முதன்மைப்படுத்திப் பார்ப்பது ஒன்று. தேவை இருக்கிறது என்று தெரிகிறபோது, அந்தத் தேவையையொட்டி நாம் ஒன்றைச் செய்யும்போது, அது மற்றவர்கள் மத்தியிலே ஒரு கருத்தை உருவாக்குகிறதா என்பதை நினைப்பது பொதுவாக சரியாக இருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவர்களுக்குத் தேவைப்படும் வசதிகளைச் செய்து கொடுப்பது நம்முடைய கடமை. அவர்களுடைய அன்றாடக் கடமைகளைச் செய்வதிலே ஒரு நடுத்தரக் குடும்பத்திலேயிருந்து வருபவர்கள் கூட எந்த அளவுக்குச் சிரமம் அடைகிறார்கள் என்பதை நாம் பார்க்க வேண்டும். இந்த உதவியைச் செய்யாவிட்டால், வசதி படைத்தவர்கள் தான் இனிமேல் சட்டமன்ற உறுப்பினர்களாக வரவேண்டும். நம்மால் அந்தப் பணியைச் செய்ய முடியாதோ என்று சாதாரண குடும்பங்களிலேயிருந்து வருபவர்கள், நினைக்கும் நிலைமை ஏற்பட்டுவிடும் என்பதால் தான் இந்த உதவியைச் செய்கிறோம். நம் நாட்டிலே, சாமான்ய மனிதர்கள் கூட பணம் படைத்தவர்களை எதிர்த்துப் போட்டியிட்டு வெற்றிபெறும் ஒரு புரட்சியை நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். சாதாரண குடும்பங்களாக இருந்து, சாதாரண நிலைமைகளிலே அன்றாடம் தொழில் செய்து வாழ்பவர்கள் எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களாக வந்து பணியாற்றும் போது அவர்களுடைய குடும்பங்கள் பாதிக்கப்படாத அளவுக்கு அவர்கள் தங்களுடைய அன்றாடக் கடமைகளைச் செய்யும் அளவுக்கு அவர்களுக்குத் தேவைப்படும் வசதிகளைச் செய்துகொடுப்பது நல்லது. அப்படிச் செய்வதன் மூலமாக அவர்களுக்கு ஒரு அங்கிகாரத்தை நாம் ஏற்படுத்திக் கொடுக்கிறோம். ஒரு அலுவலரைச் சந்திக்கும்போது, நாம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எந்த அளவுக்கு அங்கீகாரம் கொடுக்கிறோமோ அந்த அளவுக்குத்தான் அவர்களின் காரியங்கள் நடக்கின்றன. இப்போது இருக்கும் சமூக அடிப்படையிலே சில அந்தஸ்துகளை நாம் உருவாக்கித் தரவேண்டும். அப்படி இருந்தால்தான் அவர்கள் சில அலுவலர்களைப் பார்க்கும்போது, அவர்களுக்கு மரியாதை





கிடைக்கிறது. ஒவ்வொரு நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிக்கும்போதும் அவர்களுக்குச் சில சலுகைகளை நாம் அறிவிக்கிறோம். பொதுவாக நிறைய கோரிக்கைகள் இருந்தாலும், உடனடியாகச் செய்ய வேண்டியவை எவை என்பதைப் பார்த்து சிலவற்றை நாம் அறிவித்திருக்கிறோம்.

இன்னும் பல மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் சொன்னார்கள். அரசு இன்னும் சில சந்தர்ப்பங்களிலே சலுகைகளை அறிவிக்கும்போது, இந்தக் கருத்துக்களை கவனத்தில் கொண்டு செய்யும். அரசு ஊழியர்களைப் பொறுத்தவரையில், அவர்களுடைய கோரிக்கைகள் ஒருபுறமிருக்க சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மட்டும் ஊதியத்தை உயர்த்துவது வேறொரு கருத்தை உருவாக்காதா என்ற கருத்தும் சொல்லப்பட்டது. அரசு ஊழியர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு விலைவாசி ஏற்றத்திற்குத் தகுந்த மாதிரி சம்பள உயர்வு கொடுக்கிறோம். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு முறை அறிவித்தால், அதுதான் குறைந்தது 5 ஆண்டுகளுக்கு இருக்கும். மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு இருக்கும் நிலை போல அது. தலைவர் பதவி எப்போது ஏற்பட்டதோ அப்போதிலிருந்து அந்த நிலைதான் இப்போதும் இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் குறைந்த அளவு சம்பளத்திலே இருந்து எல்லாவற்றையும் நடத்த வேண்டும் என்று நாம் நினைக்கிறோமா? அல்லது அவர்கள் எப்படியாவது சமாளித்துக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறோமா? பொது வாழ்க்கையிலே தூய்மையாக இருந்து மக்களுக்குப் பணியாற்ற வேண்டும் என்று சொன்னால், அவர்களுக்கு உள்ள தேவைகளை நாம் உணர வேண்டும். அரசு அதைக் கவனிக்கிறது. அதை ஒவ்வொரு கூட்டத்திலேயும் நாம் செய்யலாம்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உதவியாளர்கள் நியமனம் சம்பந்தமாக எல்லாத் தரப்பிலேயும் அதைக் கேட்டார்கள். அது தேவைதான். இதுபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நானே பேசினேன். அதை எல்லோரும் விரும்புகிறார்கள், பரிசீலிக்க வேண்டும் என்றும், அடுத்த அமைச்சரவை கூட்டத்திலே அதுபற்றிப் பேசி, அந்த வசதி செய்து கொடுப்பதுபற்றி அப்போது யோசிக்க வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அந்தக் கருத்தை நிறைவேற்ற வேண்டும் என்று இருப்பதால், அது பற்றி ஒரு நல்ல முடிவு எடுக்கப்படும். பத்திரிகைகள் வாங்குவது, கடிதப் போக்குவரத்து, ரயில்வே போக்குவரத்து எல்லாம் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்து

சரி தான். அரசு அதைப் பரிசீலிக்கக் கடமைப்பட்டிருக்கிறது. இரண்டு பேரை அழைத்துக்கொண்டு செல்வதைப் பற்றிய பிரச்சினைபற்றிப் பேசப்பட்டது. பெண் உறுப்பினர் என்று வரும்போது, அவர்கள் விரும்புகின்ற உறுப்பினர்களை அழைத்துச் செல்லலாம் என்று சொல்வதற்குக் காரணம், அவர் திருமணமானவர் என்றால், அவருடைய கணவனுக்குச் சில பொறுப்புகள் இருக்கலாம், சட்டமன்றத்திற்கு அந்த உறுப்பினர் வரும்போதெல்லாம் அவரை அழைத்துக்கொண்டு வர இயலாத நிலை இருக்கலாம், ஆகவேதான் அப்படி வைத்திருக்கிறோம். ஆண் உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் எப்போதும் வெளியே இருப்பவர்கள். ஆகவேதான் இப்படிப் போட்டிருக்கிறோம். சட்டமன்ற உறுப்பினர்கள் மீது சந்தேகப்பட்டு இப்படிச் செய்யவில்லை. இருக்கிற நிலைமைகளுக்கேற்பத்தான் இப்படிச் செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. மியாகான் அவர்கள் பேசும்போது, இரண்டு மனைவிகள் என்று கூட போட்டுவிடலாம் என்று சொன்னார்கள். முஸ்லீம் சட்டத்திலே 4 பேர்களைக் கூட மணந்துகொள்ளலாம், 2 பேர் என்று வைத்தால், யாரை அழைத்துச் செல்வது என்ற பிரச்சினைகள் வரும். இருந்தாலும், இந்தக் கருத்தையும் இன்னொரு சந்தர்ப்பம் வரும்போது பரிசீலிக்கலாம்.

ஹௌசிங் போர்டைப் பொறுத்தவரையில், இங்கே மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். சென்னை வளர்ந்து வரும் ஒரு பெருநகர். அலுவலர்களுக்கும் மற்றவர்களுக்கும் இட வசதி கொடுப்பதிலேயே பல இடர்ப்பாடுகள் இருக்கின்றன. இருந்தாலும், அவர்களிடம் அதுபற்றி கலந்து பேசிப் பார்க்கிறேன்.

(பிற்பகல் 12-10)

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இதுவரை கொடுக்கப்பட்ட வசதிகள் அல்லது சலுகைகளேகூட யாருடைய கண்ணையும் உறுத்தக்கூடியவை அல்ல. "வல்கர் எக்சிபிஷன்" என்று சொல்லப்படுவதைப்போன்ற ஆடம்பரமான வசதிகளைக் காட்டுவன அல்ல அவை. தொழிலாளர்களுக்கும் முதலாளிக்கும் போராட்டம் நடைபெற்று, தொழிலில் லாபமே கிடைக்கவில்லை, எனவே தொழிலாளர்களுக்கு நான் ஒன்றும் கொடுக்க முடியாது என்று சொல்லிக் கொண்டிருக்கும் முதலாளி ஆடம்பரமான வாழ்க்கை நடத்தினால், தொழிலாளர்களின் கண்ணை உறுத்துகிற நிலை ஏற்படுத்துவதைப் பார்க்கிறோம். அப்படிப்பட்ட ஆடம்பரமான வசதிகள் இங்கே செய்து கொடுக்கப்பட



வில்லை. சட்டமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள் இலவசமாக பஸ் பயணம் செய்வதோ, அல்லது ரயிலில் கூப்பன் கொண்டு பயணம் செய்வதோ அல்லது தனக்கு ஒரு உதவியாளரை வைத்துக் கொண்டிருப்பதோ பெரிய ஆடம்பரமான வசதிகளல்ல. அவை யாருடைய கண்ணையும் உறுத்தப் போவதில்லை. அரசு ஊழியர்களுக்கும், பொதுமக்களுக்கும் மற்றவர்களுக்கும் நன்மை செய்யவும், அவர்களின் பிரச்சினைகளை இங்கே கொண்டு வந்து பேசி தீர்வு காணவும்தான் இவையனைத்தும் தரப்பட்டிருக்கின்றனவே தவிர, யாருடைய கண்ணையும் இவை உறுத்துவதாகச் சொல்ல முடியாது. அரசு ஊழியர்களையேகூட நான் கேட்டிருக்கிறேன். "எங்களுக்குச் சில நிலைமைகள் இருக்கின்றன என்ற காரணத்தால், நீங்கள் ஏன் உங்களுக்குச் செய்து கொள்ள வேண்டிய சில வசதிகளைச் செய்து கொள்வதில் தயக்கம் காட்டுகிறீர்கள்?" என்று கேட்கிறார்கள். அவர்களின் கோரிக்கைகளைக்கூட அரசாங்கத்தில் அவ்வப்போது பரிசிலனை செய்து எதைச் செய்ய முடியுமோ அதையெல்லாம் நாம் செய்து கொண்டுதான் இருக்கிறோம். அண்மையில்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரண்டாவது முறையாக அகவிலைப்படி உயர்வை அரசு ஊழியர்களுக்கு அறிவித்திருக்கிறார்கள். இவ்வாறு முடிந்த வகையில் நாம் அவர்களுக்கும் உதவி செய்து வருகிறோம். எனவே இப்போது சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் செய்து தரப்பட்டுள்ள சலுகைகளேகூட தேவையின் அடிப்படையில் முழுமையாகச் செய்யப்பட்டவை அல்ல என்பதை நாம் அறிவோம். அவர்களின் தேவையில் ஓரளவுக்குத்தான் பூர்த்தி செய்து தரப்பட்டிருக்கிறது என்பதால், இதில் யாரும் ஆட்சேபிக்கக்கூடிய அம்சம் ஏதுமில்லை என்று தெரிவித்து, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

[1981 மே 15

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1981) நிறைவேற்றப்பட வேண்டும் "
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1981) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(7) 1981 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1981).**

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு, தொழிற் தகராறுகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1981) @ ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பட வேண்டும் "
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு, தொழிற் தகராறுகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

---

@ 47[illegible]-480 ஆம் பக்கங்களில் இணைப்பு [illegible] ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1981 மே 15] [மேலவைத் தலைவர்]

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, நெடுந்தலைப்பு, சட்டமியற்றும் முறை ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு, தொழிற் தகராறுகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1981) நிறைவேற்றப்பட வேண்டும் "
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு, தொழிற் தகராறுகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1981) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(8) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுதியை அளித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1981).**

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு, தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுதியை அளித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1981) @ ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."
என்று முன்மொழிகிறேன்.

---

@ 480-484 ஆம் பக்கங்களில் இணைப்பு XV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** முன்மொழியப்பட்ட தீர்மானம்:

**" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு, தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுதியை** அளித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

**திரு. ஆ. நல்லசிவன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, பல ஆண்டுகளாக பல தொழிற்சாலைகளில் வேலை செய்தும் நிரந்தரப்படுத்தப் படாத தொழிலாளர்களின் பணியை நிரந்தரப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. இரண்டாண்டுகளில் ஒரு தொழிற்சாலையில் ஒரு தொழிலாளி 480 நாள் வேலை செய்திருந்தாலே அவரை அங்கே நிரந்தரப்படுத்த வேண்டும் என்ற வகையில் இதில் உள்ள ஷரத்து இருக்கிறது. ஏற்கெனவே மத்திய அரசு இதுபோன்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. அதாவது 12 கேலண்டர் மாதங்களில் 240 நாட்கள் ஒரு தொழிலாளி வேலை செய்திருந்தால், அவர் நிரந்தரத் தொழிலாளியாகக் கருதப்பட்டு, அவருக்குள்ள உரிமைகள் கொடுக்கப்பட வேண்டும் என்றிருக்கிறது. அது மட்டுமல்ல, அப்படிப்பட்ட தொழிலாளிக்கு, 'லே ஆஃப்' காலத்தில் சம்பளம் கொடுக்க வேண்டும், அவருக்கு பிராவிடெண்ட் பண்டு பிடிக்க வேண்டும் என்றெல்லாம் மத்தியச் சட்டத்தின் மூலம் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு ஏற்கெனவே மத்திய அரசு கொண்டு வந்துள்ள சட்டத்தை முன்னுதாரணமாகக் கொண்டு இங்கேயும் ஒரு சட்டம் அதே அடிப்படையில் கொண்டு வந்திருந்தால்கூட, நன்றாக இருந்திருக்கும். அது தொழிலாளர்களுக்குக் கொஞ்சம் பிரயோசனமாக இருந்திருக்கும். அந்தச் சட்டம் அமலில் இருந்தாலும், எந்த முதலாளியும் தொழிலாளியை மாதத்தில் 20 நாள் வேலை செய்ய அனுமதிப்பதில்லை. மாதத்தில் 20 நாள் வேலை செய்தால்தான், 12 மாதத்தில் 240 நாள் வேலை செய்ய முடியும். ஆனால் மாதத்தில் 15 அல்லது 16 நாள் வேலை செய்ய அனுமதித்துவிட்டு, பிறகு வேலை இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். இதுதான் எங்கேயும் நடக்கும் நிலைமையாகும். இப்போது தமிழ் நாட்டில் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்தச் சட்டத்தின்படி, இரண்டு ஆண்டுக் காலத்தில் 480 நாள் ஒரு தொழிலாளி வேலை செய்திருந்தால், அவரை நிரந்தரப்படுத்த வேண்டும் என்று சொல்லி விடுவதால், அவர்கள் யாரையும் நிரந்தரப்படுத்தப் போவதில்லை. ஏற்கெனவே மாதத்தில் 15 நாளைக்கு மட்டும் வேலை கொடுத்துவிட்டு, பிறகு வேலை இல்லை என்று சொல்லி வீட்டுக்கு அனுப்பி விடுகிறார்கள். 24 கேலண்டர்



மாதங்களிலும் அந்தத் தொழிலாளிக்கு 480 நாட்களுக்கு வேலை கிடைக்காதபடி முதலாளிகள் பார்த்துக்கொள்வார்கள். மத்திய அரசு 12 மாதத்தில் 240 நாள் வேலை செய்தால் போதும் என்று போட்டிருக்கும்போது, இங்குள்ள அரசு இரண்டு வருடத்தில் 480 நாள் வேலை செய்தால் போதும், நிரந்தரப் படுத்தலாம் என்று சொல்வதால், என்ன அனுகூலம் தொழிலாளிக்குக் கிடைக்கும் என்று எனக்குப் புரியவில்லை. அந்தச் சட்டத்தில் கிடைக்காத வசதி இந்தச் சட்டத்தில் கிடைத்துவிடப் போவதில்லை. அதைப்போலவே மூன்று ஆண்டுக் காலத்தில் 720 நாள் வேலை செய்திருந்தால், நிரந்தரப்படுத்த லாம் என்று சொல்வதாலும், பெரிய அனுகூலம் கிடைத்துவிடப் போவதில்லை. அந்த அளவுக்கு தொழிலாளியை வேலை செய்வதற்கு இந்த நாட்டில் இருக்கிற முதலாளிகள் எப்போதும் விடமாட்டார்கள். எனவே இப்படிப்பட்ட சட்டங் களாலே தொழிலாளிக்குப் பலன் ஏற்படப் போவதில்லை. அதைப்போலவே இப்படிப்பட்ட சட்டங்களாலும் முதலாளியைக் கட்டுப்படுத்தவும் முடியாது. அதற்கு மாறாக, ஒரு தொழிலாளியின் பெயர் இரண்டாண்டுக் காலத்திலே மஸ்டர் ரோலில் இடம் பெற்றிருந்தாலே போதும், அந்தத் தொழிலாளியை நிரந்தரப்படுத்த வேண்டும் என்று கொண்டுவர வேண்டும். அதற்கு மாறாக 12 மாதத்தில் 240 நாள் வேலை செய்தாலோ, 24 மாதத்தில் 480 நாள் வேலை செய்தாலோ, 36 மாதத்தில் 720 நாள் வேலை செய்தாலோ போதும், நிரந்தரப் படுத்தலாம் என்று சொல்வதால், எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை. காரணம், எந்த ஆண்டிலும் அந்த அளவுக்கு முதலாளிகள் தொழிலாளர்களை வேலை செய்ய அனுமதிக்கவே மாட்டார்கள்.

எனவே 24 கேலண்டர் மாதங்களில் ஒரு தொழிலாளியின் பெயர் மஸ்டர் ரோலில் இடம் பெற்றால், அவர் நிரந்தரப்படுத்தப்பட வேண்டும் என்று செய்வதன் மூலம்தான் தமிழ் நாட்டில் உள்ள தொழிலாளர்களை ஏமாற்றுகிற முதலாளிகளின் தந்திரங்களை முறியடிக்க முடியும். இந்தச் சட்டம் நிறைவேறுவதன் காரணமாக தொழிலாளிக்கு எந்தப் புதிய நன்மையும் ஏற்படப் போவதில்லை. அவன் பழையபடியேதான் இன்னும் திண்டாடப்போகிறான். நான் என்னுடைய கருத்தைத்தான் திருத்தமாகக் கொடுத்திருக்கிறேன். மற்ற திருத்தங்களெல்லாம் மிகச் சாதாரணமாக இருந்தாலும், இந்தத் திருத்தம் மிகவும் முக்கியமான திருத்தமாக இருப்பதால், நான் அதை வலியுறுத்த விரும்புகிறேன். இந்தத் திருத்தத்தை ஏற்கும் வகையில் அரசு இதற்கு ஒப்புக் கொள்ள வேண்டும் என்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 12-20)

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்டத்தினுடைய நோக்கத்தை நாங்கள் முழு மனதோடு ஆதரிக்கிறோம். தொழிற்சாலைகளிலும் மற்ற தனியார் நிறுவனங்களிலும் பல ஊழியர்களை பல வருடங்களாக தற்காலிகமாகவே வைத்துக்கொண்டு அவர்களுக்கு எந்தவிதமான சலுகைகளையும் கொடுக்காமல் இருக்கும் நிலையை அகற்றி, தொழிலாளர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதிலே இருக்கக்கூடிய சிக்கல்களால் நாம் என்ன நோக்கத்திற்காக இதை நிறைவேற்றுகிறோமோ அந்த நோக்கம் நிறைவேறாமல் இருக்கிறது என்பதை எனக்கு முன்னால் பேசிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. நல்லசிவன் அவர்கள் விளக்கமாகச் சொன்னார்கள்.

இதற்கு முன்னால் ஒரு சட்டத்தை முன்மொழிகிறபோது, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள், இத்தகைய சட்டங்களைக் கொண்டு வருவதைப் பார்த்தால் அரசைக்கூட இன்டஸ்ட்ரியல் டிஸ்பியூட் ஆக்டின் கீழ் கொண்டு வந்து, காரணம் காட்டாமல் வெளியேற்ற முடியாத நிலையை உருவாக்கினால் நல்லது என்று சொன்னார்கள். அந்த உணர்வு அவர்களுக்கு வந்ததற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன். சுமார் 12,500 பஞ்சாயத்துக்களை, காரணம் காட்டாமல் கலைத்துவிட்டவர்களுக்கு இந்த உணர்வு வந்துவிட்டதால், இனிமேல் இத்தகைய தவறைச் செய்ய மாட்டார்கள் என்று நம்புகிறேன். அவர் தன்மீது பாய்கிறபோது, அவர்கள் இந்த உணர்வை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இந்த உணர்வை வெளிப்படுத்தியதற்காக நான் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பாதுகாப்பற்ற நிலை அரசுத் துறையிலே எப்படி இருக்கிறது என்பதை தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் மற்ற அமைச்சர்களுக்குச் சுட்டிக் காட்ட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். பத்தாண்டுகாலமாக தற்காலிகப் பணியில் பி.எ., பி.டி. ஆசிரியர்களும், எம்.ஏ. படித்துவிட்டு அரசுத் துறையிலே தற்காலிகப் பணியில் 10ஏ(1)-படியும் இருக்கிறார்கள். பப்ளிக் சர்வீஸ் கமிஷன் சொல்லுகிறது என்பதை வைத்துக் கொண்டு அவர்கள் சர்வீஸ் கமிஷன் தேர்வுக்குச் சென்று, அதன் முன்னால் ஆஜராகி எப்போதுதான் நிரந்தரமாக்கப்படுவார்களோ தெரியவில்லை.



இதையும் அரசு மறந்துவிடக்கூடாது. அதைப் போலவே தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலும் இருக்கக் கூடிய தற்காலிக ஊழியர்களை 200 நாட்கள் ஆன பிறகு வேலை கிடையாது என்று சொல்லி அனுப்பிவிட்டு புதிய ஆளை வைக்கிறார்கள். ஆகவே இந்தச் சட்டம் தொழிலதிபர்கள் இருக்கக் கூடிய தொழிற்சாலைகளில் மட்டுமல்ல, அரசாங்கத்தின் அமைப்புக்குள்ளேயும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிக்குள்ளேயும் புக வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த நியதிகளை பிறருக்குச் சொல்லி நமக்கு அந்த நியதி இல்லை என்று இந்த அரசு 12,500 பஞ்சாயத்துக்களைக் கலைத்துவிட்டு இப்போது எப்படி அதை உணர்கிறதோ அதைப் போலவே மற்ற அரசுத் துறைகளிலும் இத்தகைய நிலை நீடித்துக் கொண்டிருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டுகிறேன். அந்த வகையிலே ஓராண்டுக்குள் குறைந்தது 200 நாட்கள் பணிபுரிந்திருந்தால், அவர்களுக்கு எல்லாச் சலுகைகளையும் கொடுக்கிற வகையிலே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொன்ன மாதிரி அவருடைய திருத்தத்தை ஏற்று இந்தச் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் மிகச் சிறப்பானது என்பதிலே இருவேறு கருத்துக்கள் இல்லை என்பதை ஒத்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் பேசும்போது, இன்னும் இதை விரிவாக்க வேண்டுமென்று சொன்னார்கள். 1969 ஆம் ஆண்டிலேயிருந்து 1975 ஆம் ஆண்டு வரையில் ஏழு ஆண்டுகளாக திராவிட முன்னேற்றக் கழகத்திலேதான் திரு. சங்கரலிங்கம் இருந்தார். அப்போது இந்த ஆலோசனையை வற்புறுத்தியிருப்பார்களேயானால், நிச்சயமாக அது நடந்திருக்கும். இவர் அப்படி வற்புறுத்தவில்லையா அல்லது இவருடைய வார்த்தை எடுபடவில்லையா ? இவருடைய வார்த்தை எடுபடும். ஆனால் அப்போதிருந்த அரசினுடைய கொள்கை அதுவல்ல என்பதை இந்த நேரத்திலே சொல்லுகிறேன். இதைக்கூட அவர்கள் செய்யவில்லை. இதிலே 'டிராஜெடி' என்னவென்றால் 1973 சனவரி 30 ஆம் தேதி எடுத்த முடிவை 1973, 1974, 1975 ஆகிய ஆண்டுகளில் அவர்கள் அமுல்படுத்தவில்லை. அப்போது மாண்புமிகு உறுப்பினருடைய கட்சிதான் ஆட்சியில் இருந்தது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** துணைத் தலைவர் அவர்களே, 1973-ல் அப்படியொரு முடிவெடுக்க நானும், அவரும் ஒரு காரணம். அவரும் அப்போது அந்தக் கட்சியில்தான் இருந்தார்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** அந்தக் காலத்திலே அவ்வளவு தெரிந்து பேசியதற்கு எனக்குக் கிடைத்த வெகுமதி என்னவென்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். அதை நான் சொல்ல வேண்டிய தில்லை. ஏனென்றால் கசப்பான விஷயங்களை மறந்துவிடுவது நல்லது. இருந்தாலும் இந்த அரசுதான் இதைக் கொண்டு வந்திருக்கிறது. இதை இன்டஸ்ட்ரியல் ஒர்க்கர்களுக்காகக் கொண்டு வந்திருக்கிறோம். சுதந்திர மடைந்து 32 ஆண்டுகள் ஆகிவிட்டன. பல கட்சிகள் ஆண்டிருக்கின்றன. ஆனாலும் டெம்பரரியாக இருந்தவர்கள் பெர்மனென்ட்டாக ஆகவில்லையே என்ற கவலை யாருக்குமே இல்லாமல் இருந்தது. புரட்சித் தலைவர் ஆட்சியில் தான் கொண்டு வந்திருக்கிறோம் என்பதற்காக நாம் பெருமைப்பட வேண்டும்.

ஐந்தாறு ஆண்டுக் காலம் டெம்பரரியாக என்.எம்.ஆர்., கேஷுவல் லேபர் ஆக இருந்தவர்களுக்கு, வேலைக்குத்தான் போய்விட்டானே என்று பெற்றோர்கள் கல்யாணம் பண்ணிவிடுகிறார்கள். மாதத்திற்கு 250 ரூபாய் பணம் வந்தாலே கல்யாணம் பண்ணிவிடுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மியாகான் சொன்னதைப் போல கல்யாணங்கள் கூட பண்ணி விடுகிறார்கள். நான்கைந்து ஆண்டுகள் ஆன பிறகு, வருஷத்திற்கு ஒரு குழந்தை விதம் நான்கைந்து குழந்தைகள் பிறப்பதுண்டு. ஒரு சிலருக்கு ஒரேயாண்டில் இரண்டு குழந்தைகள் பிறந்ததுகூட உண்டு. ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகள் கூட பிறக்கும் என்று ரெவின்யூ மினிஸ்டர் சொல்லு கிறார்கள். அது அவருக்குத் தெரிகிறது, எனக்குத் தெரியவில்லை. இது உண்மைதான். ஏழைகளுக்குத்தான் இப்படிக் குழந்தைகள் பிறக்கின்றன. இப்படிக் குழந்தைகளைப் பெற்றுவிட்டு வேலை செய்பவர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும்போது, Hire and fire என்பதைப் போல "வேலையில்லை போ" என்று சொல்லி அனுப்பிவிடுகிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் கிடையாது. அப்படிப்பட்டவர்களுக்கு 'பெர்மனென்ட் ஸ்டேடஸ்' கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் புரட்சித் தலைவர் ஆட்சியில் தோன்றவேதான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதற்காக நாம் உண்மையிலேயே பெருமைப்படலாம். மாண்புமிகு உறுப்பினர்களும் பாராட்டியிருக்கிறார்கள். ஒரு திருத்தத்தையும் கொடுத்திருக்கிறார்கள். ஓராண்டில் 240 நாட்கள் வேலை செய்திருந்தால், சில சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. அவை என்னென்ன என்பது எல்லோருக்கும் தெரியும். ஏனென்றால் சிறந்த தொழிற்சங்கவாதிகள் இங்கு இருக்கிறார்கள். 'பெர்மனென்ட் ஸ்டேடஸ்' கிடையாது என்றாலும் 'கன்சாலிடேட்டெட் வேஜஸ்' கிடைக்கும். டி.ஏ. கிடைக்காது. 24 மாதங்களில் 480 நாட்கள்



பணிபுரிய வேண்டுமென்றால், ஓராண்டுக்குள் 240 நாட்கள் வேலை செய்யவில்லையென்றாலும், ஒரு பத்துப் பதினைந்து நாட்கள் குறைந்தாலும், அடுத்த ஆண்டில் 240 நாட்களுக்கு மேல் பணிபுரியும்போது சரியாக இருக்கும். ஓராண்டு ஆன பிறகு சில சலுகைகள் இருக்கும், ஆனால் 'பெர்மனென்ட் ஸ்டேடஸ்' இருக்காது. ஆகவேதான் இரண்டு ஆண்டுகள் என்று போட்டிருக்கிறோம். அதே நேரத்தில் there should not be resistance from the employers also. மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிற அளவிற்கு எங்களால் போக முடியாது. எங்களது ஆட்சியைப் பொறுத்த வரையில், தொழிலாளர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற அதே நேரத்தில் தொழிற்சாலைகள் மூடிவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதிலும் அக்கறை கொண்டுள்ளது. ஆகவே via media policy follow பண்ணுவது முக்கியம். Let us not be rash

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எங்களைப் போல "ரெவலூஷனரியாக" புரட்சிகரமாக வர வேண்டியதில்லை. சீர்திருத்தமான நிலைக்கு ரெஃபாமிஸ்ட்டாக வரலாம் அல்லவா? 24 காலண்டர் மாதங்களில் 480 நாட்கள் வேலை செய்ய முடியுமென்று அமைச்சர் சொல்லுகிறார்கள். தமிழ் நாட்டிலும், இந்தியாவிலும் உள்ள முதலாளிகள் ஒவ்வொரு மாதத்திலும் 20 நாட்களுக்குக் கூட வேலை செய்ய விடமாட்டேன் என்கிறார்கள். அப்படிச் செய்யாவிட்டால், 12 காலண்டர் மாதங்களில் 240 நாட்கள் வந்துவிடும், பிறகு சட்டப்படி சலுகையைக் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே 20 நாளைக்கு வேலை செய்ய முடியாமல் 15 நாட்களுக்குள்ளேயே அனுப்பிவிடுகிற தந்திரத்தைக் கையாளுகிறார்கள். மத்திய அரசு கொண்டு வந்திருக்கக் கூடிய சட்டத்திலே 240 நாட்கள் ஓராண்டுக்கு என்பதையே அமுல்படுத்த முடியாமல் இருக்கிறபோது, இரண்டாண்டுகளுக்கு 480 நாட்கள் என்றால் எப்படி முடியும்? முதல் ஆண்டில் 240 நாட்கள் இல்லாவிட்டாலும், அடுத்த ஆண்டு 240 நாட்களுக்கு மேல் பணி செய்தால், சரியாக வருமென்று சொல்லுவதைப் போல் நடக்குமா? இருபது நாட்களுக்கே வேலை செய்ய விடமாட்டேன் என்று சொல்லும்போது, 12 காலெண்டர் மாதங்களில் எப்படி 240 நாட்கள் வரும்? ஆகவே இங்கே கொண்டு வந்திருக்கக் கூடிய சட்டம் முதலாளிகளின் தந்திர சூழ்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்காது. அதற்கு மாறாக 2 ஆண்டுக்குள் 480 நாட்கள் என்பது சட்டமாக இருக்கத்தான் பயன்படுமே தவிர, தொழிலாளர்கள் அனுபவிக்கப் பயன்படாது. ஆகவே தயவு செய்து மாற்றுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** எங்களைப் போல ரெவலூஷனரியாக வர வேண்டுமென்று சொல்லவில்லை என்று சொல்லி அவர் 'ரெவலூஷனரி' என்று தனக்குத்தானே முத்திரை குத்திக்கொள்கிறார்.

**திரு. ஆ. நல்லசிவன் :** துணைத் தலைவர் அவர்களே, இதை நான் சொல்லவில்லை. எங்கள் அளவிற்கு வர முடியவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னதால்தான், நான் அதைச் சொன்னேன். எங்கள் அளவிற்கு ரெவலூஷனரியாக வராவிட்டாலும் ரெஃபார்மிஸ்டாக வாருங்கள் என்றேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** உறுப்பினர் அவர்களை ரெவலூஷனரி என்று நான் ஒத்துக்கொள்ளவில்லை. எங்களை ரெஃபார்மிஸ்ட் என்றும் ஒத்துக்கொள்ளவில்லை. What is a revolution ? It has got a wider meaning. ரெவலூஷன் என்பது என்ன ? பெரிய தத்துவத்திற்குரிய பிரச்சினை. எங்களைப் பொறுத்த வரையில், இந்தியாவில் இன்றைக்கு இருக்கக் கூடிய நிலைமைகளை எடுத்துக்கொண்டு, ஜனநாயக அமைப்பில்— உங்கள் ஆட்சி வந்தால் ஜனநாயகம் கிடையாது, அது ஒரு பார்ட்டி ரூல் . . .

(பிற்பகல் 12-30)

என்னைப் பொறுத்தவரையில் சொல்கிறேன். உங்களுக்கு இன்றைக்கு இருக்கக்கூடிய நிலை ஒரு பார்ட்டி ரூல் என்ற அளவில்தான் அங்கே இருக்கிறது. அங்கே ஒரு ஸ்ட்ரைக் பண்ண முடியாது.

(திரு. ஆ. நல்லசிவன் எழுந்தார்)

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** நான் சொல்கிறேன். உட்கார வேண்டும்.

**திரு. ஆ. நல்லசிவன் :** போலந்து நாட்டில் என்ன நடக்கிறது ? சரித்திரத்தையே இஷ்டப்படி மாற்றிப் பேசக்கூடாது என்று சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** போலந்து நாட்டில் நடக்கின்ற விஷயங்களைப்பற்றிப் பேசுவதானால் இன்னும் அதற்கு 15 நிமிடங்கள் வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இன்றைய நிகழ்ச்சிகள் முடியும் வரை காலவரையறை நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** போலந்து பற்றி எல்லாம் பேச விரும்புகிறார்கள். துணைத் தலைவர் அவர்களே, நிறைய 'பில்'-கள் இருக்கின்றன. எனவே உரிய காலத்திலே ஒரு மணி அல்லது ஒன்றரை மணி



அளவில் அனைத்தையுமே முடித்துக்கொள்ளலாம் என்று இருக்கிறோம். இப்போது தத்துவ விளக்கங்களைப் பற்றியெல்லாம் பேசிக்கொண்டிருந்தால், நேரமாகிவிடும். இரண்டு தரப்பினரும் பில்களை பற்றி மட்டும் பேசி முடிக்க வேண்டும். இந்த அவையின் நடவடிக்கைக்கு அதற்காகத்தான் நேரம் கூட்டப்பட்டிருக்கிறது. இரண்டு பேர்களுமே அதைப்பற்றிப் பேசாமல் நிறுத்திவிட்டால், வசதியாக இருக்கும். அதற்கு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அங்கத்தினர் திரு. நல்லசிவன் அவர்கள் நினைப்பதுபோல, முதலாளிகள் ஏமாற்ற முடியாது. தொழிலாளர் நலத் துறை அதிகாரிகளும், சட்டத் துறை அதிகாரிகளும் பல நாட்களாக உட்கார்ந்து பேசிய பிறகு, நாங்கள் ஆய்ந்து பார்த்து கொண்டு வந்திருக்கின்ற இந்தத் திருத்தத்தை அங்கத்தினர் அவர்கள் ஆழ்ந்து படிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே ஒரு சட்ட முன்வடிவைக் கொடுத்திருக்கிறோம். அந்த எண்ணம் எங்களுக்கும் வந்தது. அதனாலே, அவர்களை 'பர்மனென்ட்' செய்யவேண்டும் என்று போட்டிருக்கிறோம். அவர்கள் 10 பேர்களை 10 நாட்கள் போடுகிறார்கள். அவர்களை வேலையிலிருந்து நிறுத்திவிட்டு, அடுத்தாற்போல், இன்னொருவரை 20 நாட்கள் போடுகின்றார்கள். இப்படி டர்னில் போடுகிறார்கள். இப்படிப் போடுவதால் யாருக்குமே 240 நாட்கள், 480 நாட்கள் என்று வராது என்று திரு. நல்லசிவன் அவர்கள் சொல்கிறார்கள். அது உண்மைதான். அவர் தான் மட்டும் சிறந்த தொழிற்சங்க வாதி என்பது மாதிரி சொல்கின்றார்கள். அவர்கள் அந்த பீல்ட்டிலே உள்ளவர்கள்தான். அவர் சொன்னது அத்தனையும் உண்மை. அந்த உண்மைகள் எங்களுக்கும் தெரிந்தவைகள்தான் என்பதை அவர்கள் அறிய வேண்டும். அதை அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். அதற்காகத்தான் இப்படி ஒரு 'கிளாஸ்' கொண்டு வந்திருக்கிறோம்.

'............. which is not illegal, or a lock-out or a cessation of work ............. .... ........
or on account of non-employment or discharge of such workmen for a period which does not exceed three months and during which period a substiute has been employed in his place by the employer' யாராவது ஒருவருக்கு 20 நாட்களுக்கு வேலை கொடுத்துவிட்டு அவரை நிறுத்திவிட்டு, 90 நாட்களுக்குள் அவருக்குப் பதிலாக வேறு யாரையாவது வைத்தால், நிறுத்தப்பட்டவருக்கு 'கன்டினியூடி ஆஃப் சர்வீஸ்' கிடைத்துவிடும். What a wonderful amendment The hon. Member must appreciate it now.

மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்ன மாதிரி, அவர்கள் ஏமாற்ற முடியாது. முதலாளிகள் ஒன்றும் செய்ய முடியாது. அந்த மாதிரி எண்ணம் உறுப்பினர் அவர்களுக்கு வந்தது நியாயம். அந்த எண்ணம் எங்களுக்கும் வந்துவிட்டது. சட்ட முன்வடிவைக் கொண்டு வந்து அறிமுகம் செய்த பிறகு, எங்களுக்கும் அந்த எண்ணம் வந்தது. உடனே நாங்கள் திருத்தம் கொண்டு வந்தோம். அந்த இலாகாவினருடன் உட்கார்ந்து பேசி கொண்டுவந்திருக்கிறோம். முதலாளிகள் இப்படியெல்லாம் செய்கின்றார்கள் என்று சொல்வது நியாயம் தான். உண்மைதான். ஒரு 20 நாட்களுக்கு வேலை கொடுப்பார்கள். அப்புறம் நிறுத்திவிடுவார்கள். இன்னொருவருக்கு ஒரு 30 நாட்கள் வேலை கொடுப்பார்கள். அவரை நிறுத்திவிடுவார்கள். இப்படி பேட்ச் பேட்ச் ஆக வேலை கொடுத்து அப்போதைக்கப்போது நிறுத்திவிடுவார்கள். அதனால் யாருக்கும் 240, 480 நாட்கள் என்று இரண்டு ஆண்டுகளில் வராது. அப்படி இப்போது செய்ய முடியாது. இருபது நாட்களுக்கு வேலை கொடுத்துவிட்டு அவருக்குப் பதிலாக வேறு ஆளை 90 நாட்களுக்குள்ளாக 'சப்ஸ்டிட்யூட்' ஆக நியமித்தால், ஏற்கெனவே நியமிக்கப்பட்டு வேலையில் இருந்தவருக்கு 'கன்டினியுட்டி ஆஃப் சர்விஸ்' கிடைக்கிறது. அவர் வேலை செய்யாமலேயே 'கன்டினியுட்டி ஆஃப் சர்விஸ்' கிடைக்கிறது. அப்படித்தான் அந்த அமென்ட்மென்ட்-லே இருக்கிறது.

**திரு. ஆ. நல்லசிவன் :** அமென்ட்மென்ட் கிடைக்கவில்லை.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** அந்த அமென்ட்மென்ட் அங்கத்தினர் அவர்களுக்குக் கிடைக்கவில்லையா? I am sorry அந்த அமென்ட்மென்டை இங்கேயே படித்துக்காட்டிவிடுகிறேன்.

'A workman shall be said to be in continuous service for a period if he is, for that period, in uninterrupted service, including service which may be interrupted on account of sickness or authorised leave or an accident or a strike, which is not illegal or a lock-out or a cessation of work which is not due to any fault on the part of the workman or on account of non-employment or discharge of such workmen for a period which does not exceed three months and during which period a substitute has been employed in his place by the employer.'

அப்படி ஒரு 'சப்ஸ்டிட்யூட்' போட்டால், முன்பு நிறுத்தப்பட்டவருக்குக் 'கன்டினியுட்டி ஆஃப் சர்விஸ்' கிடைத்துவிடுகிறது. I meet that point I am sorry அந்த அமென்ட்மென்ட் உறுப்பினர் அவர்களுக்குக் கிடைக்கவில்லை.



**திரு. ஆ. நல்லசிவன் :** அதே கிளாசிலே பிரிவு 2-லே கடைசி பாராவிலே கொடுக்கப்பட்டிருக்கிறது.

'Or a strike, which is not illegal, or a lock-out or a cessation of work which is not due to any fault on the part of the workman.'

அது அப்படியே இருக்கிறது. எடுக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** அப்படி நிறுத்திவிட்டு substitute போட்டுக் கொண்டு, முதலாளிகள் ஏமாற்ற முடியாது. இது ஒரு சிறந்த சட்டம். இந்தச் சட்டத்தை எப்போதும் இல்லாமல், கொஞ்சம் உரக்கவே சத்தம் போட்டு ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு, தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுதியை அளித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1981) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

(மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஆ. நல்லசிவன் அவர்களின் திருத்தங்கள் முன்மொழியப்படவில்லை.)

பிரிவுகள் 2 முதல் 10 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு, தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுதியை அளித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1981) நிறைவேற்றப்படவேண்டும்." என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு, தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுதியை அளித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1981) நிறைவேற்றப்படவேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(9) தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 41/1981).**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்** : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

---

485-4 ஆம் பக்கங்களில் இணைப்பு XVI ஆக அச்சிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்** : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1981) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1981) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(10) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மாவட்டக் காவல்-சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 33/1981).**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, மாவட்டக் காவல்-சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்ட முன் வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1981) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, மாவட்டக் காவல் -சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

---

487-489 ஆம் பக்கத்தில் இணைப்பு XVII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, சுவற்றிலே எழுதுவதற்கு ரூ. 250 அபராதமும் மற்றும் சிறைத் தண்டனையும் கொடுக்க வேண்டுமென்று முன்னாலே சட்டம் கொண்டு வந்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். இப்போது அதிலே இரண்டு புதிய ஷரத்துக்களைச் சேர்த்திருக்கிறார்கள். அதாவது வீட்டுச் சுவற்றிலே, பொது அமைப்புச் சுவற்றிலே எழுதினால், அந்த எழுத்துக்களை அழிப்பதற்கோ, அதிலே ஏற்படுகின்ற ரிப்பேர்களைச் சரி செய்வதற்கோ ஆகின்ற செலவுகளுக்காக ரூ. 500 அபராதம் அதை எழுதுபவர்களிடம் வசூலித்து, அதை வீட்டுக்காரர்களுக்குக் கொடுக்கலாம். இது ஒரு கருத்து. இன்னொரு புதிய கருத்து, இதற்கு முன்னாலே எழுதியவர்கள் மட்டும் தண்டிக்கப்பட்டார்கள். இப்போது அதை எழுதுவதற்குத் தூண்டுபவர்களைத் தண்டிப்பது என்ற அளவுக்கு வருகிறது. இரண்டு புதிய ஷரத்துக்கள் இருக்கின்றன. இதைப்பற்றிப் பேரவையிலேகூட விவாதம் வந்தது. அதைப்பற்றி அங்கேயே கேட்டிருக்கிறார்கள். அதை நானும் படித்துப்பார்த்தேன். அங்கே ஒரு ஆளும் கட்சி உறுப்பினரே ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்த ஷரத்தை எலெக்ஷன் காலத்திலேயாவது தளர்த்த வேண்டும் என்று சொன்னார்கள். அதற்கு அரசு சட்டம் கொண்டு வருகிறது. இந்த நாட்டின் நடைமுறையிலே உள்ள விளம்பரப் பிரச்சாரம் மறுக்கப்படுகிறது. அதை அனுபவத்திலே பார்த்திருக்கிறார்கள். அந்த உறுப்பினர் அவர்களே இதை எதிர்த்துப் பேசியிருக்கிறார்கள். எலெக்ஷன் காலத்திலேயாவது இதைத் தளர்த்திக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதில் நான் சொல்ல விரும்புவது நம் நாட்டில் பாரம்பரியத்திலே இருப்பது இந்த விளம்பரம்தான். மேல்நாடுகளிலே இருப்பதுபோல ரேடியோவிலே அல்லது பத்திரிகையிலே விளம்பரம் செய்ய முடியவில்லை. அதை நம்பி இருக்க முடியவில்லை. அப்படிப்பட்ட

(பிற்பகல் 12-40)

நிலைமைகள் இருக்கின்றன. மேல் நாடுகளிலே 'லிடரசி பெர்சன்டேஜ்' அதிகம். தமிழ் நாட்டில் 40 சதவிகிதம்தான். போதிய அளவிற்குப் படிப்பு இல்லாத மக்கள் மத்தியிலே, போஸ்டர்கள், விளம்பரம் மூலம் தேர்தல் பிரச்சாரம் செய்ய வேண்டியிருக்கிறது. இந்த நிலையில், விளம்பரம் செய்வது தவறு, வீட்டுக்காரர்கள் அனுமதி வாங்கித்தான் செய்ய வேண்டும், அப்படிச் செய்யாவிட்டால் அவர்களுக்கு அபராதம், சிறைத் தண்டனை என்பதோடு நஷ்ட ஈடும் வசூலித்துக் கொடுக்க வேண்டுமென்று சொல்லுவது பெரும் சிக்கல்களை ஏற்படுத்தும். போஸ்டர்களை யார் ஒட்டினார்கள் என்பது தெரியாவிட்டாலும், எந்தக் கட்சியின் பெயர் போட்டிருக்கிறதோ அந்தக் கட்சியின் செயலாளரைப் பிடித்து, சிறைக்கு அனுப்பும் நிலை ஏற்படும். ஆளுங்



கட்சிக்காரர்களே, தேர்தல் நேரத்தில் இதைத் தளர்த்த வேண்டுமென்று பேசியிருக்கிறார்கள். இந்த ஷரத்து ஆபாச விளம்பரங்களைத் தடுக்க என்று சொல்லுகிறார்கள். அண்ணா சாலையில் கட்டிங் எப்படி இருக்கிறது? டீசன்டாக இருக்கிறதா ? அதை எப்படித் தடுக்கப் போகிறோம் ? ஆபாச விளம்பரங்களைத் தவிர்க்கிறோம் என்று சொல்லி, சுவரில் எழுதுவது, போஸ்டர் ஒட்டுவது போன்ற காரியங்களில் குறுக்கிட்டு, மக்களுக்கு 'டிசிப்ளின்' சொல்லித் தருகிறோமென்று சொல்லும்போது, பல சிக்கல்கள் ஏற்படும். ஒரு தெருவில் 10 வீடுகள் இருந்தால், அங்கே நான்கு கட்சிக்காரர்கள் இருப்பார்கள். ஏதாவது ஒரு கட்சிக்கு ஆளில்லை என்று சொல்லும்போது, தகராறுகள் வரும். பொது மக்கள் மத்தியிலே நிறைய கட்சிகள் இருக்கின்றன. தெருவிற்குத் தெரு தொண்டர்கள் இருக்கிறார்கள். 40, 45 வருடங்களாக இது நடந்து வருகிறது. இப்போது அனுமதி வாங்கித்தான் ஒட்ட வேண்டுமென்று சொன்னால், எப்படி ? மீறிச் செய்தால் தண்டனை. ஒட்டுவதற்குத் தண்டனை. இரவு இரண்டு மணிக்கு ஒட்டுகிறார்கள். அதை யார் தூண்டுகிறார்களோ, அவருக்கும் தண்டனை இருக்கிறது. அண்ணா தி.மு.க., தி.மு.க. என்று அதில் பெயர் போட்டால், அந்தக் கட்சியின் செயலாளரைப் பிடிக்க ஏற்பாடு செய்வார்கள். ஆபாசச் சுவரொட்டிகளைத் தடுக்காமல், சுவரில் ஜனநாயகக் கோஷங்களை எழுதினால், அபராதம் என்று சொல்லப்படுகிறது. சட்டத்தைக் காட்டி, தண்டனையைச் சொல்லி, பொது மக்களைப் பயமுறுத்தலாமென்று நினைக்கிறார்கள். மதுவிலக்கில் அப்படிச் சொல்லி, தோற்றார்கள். இல்லையென்றால் அதிகமானவர்களைச் சிறைக்கு அனுப்ப வேண்டியிருக்கும். அதிகமானவர்களைச் சிறைக்கு அனுப்பினால், தோற்றுவிட்டோமென்றுதான் பொருள். எனவே இதுபற்றி மீண்டும் யோசிக்க வேண்டுமென்று சொல்லி, இதை ஆட்சேபித்து, என் பேச்சை முடிக்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்டத்திலே மூன்று பிரிவுகள் இருக்கின்றன. முதலிலே இருக்கக்கூடிய பிரிவுப்படி மலபார் தனி காவல் படை, ஸ்பெஷல் ஆர்ம்ட் ரிசர்வ் போலீஸ் எல்லாம் தமிழ் நாடு தனி காவல் படை என்று பெயர் மாற்றம் செய்யப்படுகிறது. அதை வரவேற்கிறேன்.

அடுத்த பிரிவு. ஒரு குறிப்பிட்ட நாளிலிருந்து 1859 மத்திய சட்டம், 1880 ஆண்டு சென்னை மாநில காவல் சட்டத்திலே பல விதிகளை ஏற்படுத்த ஒரு வழி வகை செய்யப்பட்டிருக்கிறது. அந்த விதிகளை ஏற்படுத்துவதாலே, போலீஸ்காரர்களுக்கு சஸ்பென்ஷன் செய்து, பதவி உயர்விலிருந்து இறக்குவது போன்றவைகளை எப்படிச் செய்வது என்று விதி வகுக்கப்பட்டதென்று சொல்கிறார்கள். அதை அரசு சொல்கிற நாளிலிருந்து செயலுக்கு வருகிற

தென்று சொல்லுகிறார்கள். போலீசார் சர்வீஸ் கண்டிஷனைச் சரியான முறையில் சொல்ல இயலவில்லை என்று போலீஸ் சங்கம் ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். அதில் பல சிக்கல்கள் ஏற்பட்டன. இப்போது அதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் அது சரியாகச் செயல்பட முடியவில்லை என்று சொல்லுகிறார்கள். போலீசாருடைய நலனுக்கு ஏற்ற வகையில் அரசு சர்வீஸ் கண்டிஷன்களை ஏற்படுத்துவதற்கு முன்னால், சம்பந்தப்பட்ட சங்கத்தின் பிரதிநிதிகள், பொது மக்கள், இதற்கு முன்னால் காவல் துறையை நிர்வகித்தவர்கள் ஆகியோர்களின் ஆலோசனையைக் கேட்டு, அவர்களின் நலனுக்கேற்ப விதி முறைகளை வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது அரசுத் துறையிலே பணி புரிகிறவர்களுக்கு, சிறப்பாக காவல் துறையிலே பணி புரிகிறவர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டால், அதனால் அவர்கள் மனச்சங்கடத்திற்கு உள்ளாகி அதன் காரணமாக நாட்டின் அமைதி கெடுமென்பதால் சொல்லுகிறேன். பல்வேறு குறைகள் அவர்களுக்கு இருந்து வருகிறது. அப்ரோப்பிரியேஷன் பில்லிலே பேசும்போதுகூட அவர்களுடைய டிரஸ் அலவன்ஸ், விடுப்பு விதி முறைகள் பற்றிச் சொன்னேன். அங்கே விடுப்பு விதிமுறைகள் கடுமையாக இருக்கின்றன. காவல் துறை போக்கத்தவர்கள் போவது என்று ஒருகாலத்தில் சொல்லக் கூடியதாக இருந்தது. அவர்களுக்கு விடுப்பு வசதியில்லை. 'டிசிப்ளின் ஸ்குவாட்' என்று சொல்லி வைத்திருக்கிறார்கள். அமைச்சர் காலை 10 மணிக்கு வருகிறார் என்றால், அவர்களுக்கு டியூட்டி போடுகிறார்கள். அமைச்சர் இரவுதான் வருவார். இப்படிப்பட்ட முறைகளெல்லாம் இருக்கின்றன. இந்தத் துறையிலே டிசிப்ளினைக் குறைக்க நான் விரும்ப வில்லை. அவர்களுக்கு வாய்ப்புகளையும், வசதிகளையும் ஏற்படுத்த வேண்டு மென்றுதான் இவைகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, சுவரொட்டிகளைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. மிக விரிவாக மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். உண்மையிலேயே இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் அரசியல் கட்சிகளை ஒடுக்க, வேண்டாதவர்களை சட்டத்திற்கு உட்படுத்தி தண்டிக்க வழி வகை இருக்கிறது. முன் அனுமதி பெற்று சுவரொட்டிகளை ஒட்ட வேண்டுமென்று சொல்லும்போது, அதற்கு மாற்று அமைப்புகளை ஏற்படுத்தும்வரை அது முடியாது. ஒவ்வொரு நகரிலும் முக்கிய சந்திப்புகள், ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள முக்கிய ஊர்கள், கிராமப் பஞ்சாயத்துக்களில் முக்கிய இடங்கள்—ஆகியவற்றில் விளம்பரம் செய்ய, பஞ்சாயத்து, ஒன்றியம், நகராட்சி, மாநகராட்சி சார்பிலே பெரிய சுவர்களை ஏற்படுத்தி, விளம்பரப் பலகைகளை ஏற்படுத்தி சிறிய கட்டணம் மூலம் விளம்பரம் செய்ய வாய்ப்புகளை ஏற்படுத்திவிட்டு, இதைக் கொண்டுவர வேண்டும். இப்போது ஜனநாயக முறையில் தேர்தல்களை நடத்துகிறோம். பஞ்சாயத்துத் தேர்தல்கள் வரப் போகிறதென்று சொல்லுகிறார்கள். நம்முடைய மாநிலத்திலே நடை பெற்ற சட்டமன்றத் தேர்தலை எடுத்துக்கொள்வோம். என் வீட்டிலேயேகூட இரட்டை இலையை எழுதிவிட்டுப் போய்விட்டார்கள். அவர்கள்மீது கேஸ் போடுவதா? ஒரு சின்னப் பையனைத் தூண்டிவிட்டு, அவனுக்கு ரூபாய் கொடுத்து, எழுதச் சொல்லுகிறார்கள். அதை அழித்தால் தகராறு வரும். இப்போது வந்துள்ள சட்ட முன்வடிவின்படி, யார் அதை எழுதத் தூண்டி விட்டாரோ அவர்மீது வழக்கு போடலாம். இப்போது இருக்கிற சட்டத்திலேயே இருக்கிறது. இருக்கிற சட்டமே அதைத் தடை செய்கிறது. இதை வேகப்படுத்துவதன்மூலம் நாட்டிலே பல குழப்பங்களையும், விரும்பத் தகாத நிகழ்ச்சிகளையும்தான் ஏற்படுத்த முடியும். இதனால் நன்மைகளை ஏற்படுத்த முடியாது. எல்லாக் கட்சிகளையும் அழைத்துப் பேசி, இதற்கு மாற்று ஏற்பாடு என்ன என்பதை யோசித்து, விளம்பரப் பலகைகளை அமைத்து, அதற்குப் பிறகு பாக்கியுள்ள இடங்களில் செய்யக்கூடாதென்று சொல்ல வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. ஆறுமுகம் அவர்கள்கூட விளம்பரம் செய்ய வேண்டுமென்றால், பெண் படத்தைப் போட்டு எழுதுங்கள் என்று சொன்னார். அந்த அளவிற்கு ஈர்க்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் இப்படி ஒரு சட்டம் போட்டால், அதிகாரிகளுக்குத் தவறான வாய்ப்பைக் கொடுக்கும், பழி வாங்கும் சூழ்நிலையை உருவாக்குமென்று சொல்லி, இப்போது இது தேவைதானா என்பதைப் பரிசீலனை செய்து, தேவையானால் அதற்கு சில இலக்கணங்களை ஏற்படுத்தி, மாற்று ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று சொல்லி, அமைகிறேன்.



(பிற்பகல் 12-50)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு மேல்வைத் துணைத் தலைவரவர்களே, மலபார் ஸ்பெஷல் ஆர்ம்ட் போலீஸ் பட்டாலியன், தமிழ் நாடு ஸ்பெஷல் போலீஸ் பட்டாலியன் என்று இருந்த இரண்டு பிரிவையும், இரண்டு சட்டங்களையும் ஒழுங்குபடுத்தி தமிழ் நாடு ஸ்பெஷல் போலீஸ் பட்டாலியன் என்று 1971 ஆம் ஆண்டிலேயே அமைக்கப்பட்டதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். ஆனால் 1971 ஆம் ஆண்டு தமிழ் நாடு ஸ்பெஷல் போலீஸ் பட்டாலியன் என்று அமைக்கப்பட்ட பிறகு, அதற்காக வகுக்கப்பட்ட தமிழ் நாடு இன்டகிரேடட் பட்டாலியன், ஒருங்கிணைந்த பட்டாலியன் ஆக 1971 ஆம் ஆண்டிலிருந்தே நடைமுறைக்கு

கொண்டுவரப்பட வேண்டுமென்ற எண்ணத்தில் இங்கே மாவட்டக் காவல்-சென்னை மாநகரக் காவல் திருத்தச் சட்டமாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசுகிறபோது, போலீஸ்காரர்களின் பணி முறைகளுக்கான விதிகள் கூட மாற்றப்பட வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. ஏற்கெனவே அவர்களுக்காக வகுக்கப்பட்டிருக்கின்ற விதிகளின்படி, 1971 ஆம் ஆண்டிலிருந்தே விதிகளுக்கு 'ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட்' கொடுக்க வேண்டுமென்ற நிலை இல்லாததால், 1971 ஆம் ஆண்டிலேயே இரண்டையும் ஒருங்கிணைத்த பிறகு விதிமுறைகளுக்கு 'ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட்' கொடுக்க நடவடிக்கை எடுக்க சட்டரீதியாகத் தவறி விட்டதால், காவல் துறையினர் பலருக்குப் பலன் கிடைக்காமல் இருந்தபடியால் அவர்களுக்குப் பலன் கிடைக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில், ஒரு சலுகையாக இது இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிறதேயல்லாமல், மற்றபடி ஒன்றுமில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. நல்லசிவன் அவர்களும், திரு. சங்கரலிங்கம் அவர்களும் பேசுகின்றபோது, இரண்டாவது பிரிவைப்பற்றிச் சொன்னார்கள். இரண்டாவது பிரிவைப் பொறுத்தவரைக்கும், புதிதாக ஒரு விதி, காம்பன்சேஷன் ஒன்று தான் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இருக்கின்ற விதியிலே, 1880 ஆம் ஆண்டு மெட்ராஸ் சிட்டி போலீஸ் ஆக்டிலே

"Whoever in any public place commits any of the following offences shall be liable on conviction to fine not exceeding rupees two hundred and fifty or to imprisonment which may extend to three months."

என்று இருக்கிறது. அதாவது அனுமதியில்லாமல் பொது இடங்களில் தனியாருக்குச் சொந்தமான இடங்களில் எல்லாம் சுவரொட்டி மட்டுமல்ல, சுவரை உருக்குலைத்து விடுவது போன்ற செயல்களில் ஈடுபட்டாலும், அது குற்றம் தான். தற்போது என்ன சேர்க்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அப்படிக் குற்றம் இழைப்பவர்கள் நஷ்ட ஈடு தர வேண்டும் என்பது மட்டும் தான் சேர்க்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆ. நல்லசிவன் : "Whoever whether by himself or by any other person" என்று தான் கடைசி பிரிவிலே இருக்கிறது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : நஷ்ட ஈடு போன்று "Whoever whether by himself or by any other person on his behalf" என்று சேர்த்து இரண்டு திருத்தங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் பேசுகின்றபோது, அது தேவை என்பதைக் குறித்து சற்று மறைமுகமாகப் பேசினார்கள். என் வீட்டுச்



சுவரிலே இரட்டை இலை ஒட்டப்பட்டிருக்கிறது, யாரோ இப்படி ஒட்ட தூண்டி விடுகிற நிலை இருக்கிறது என்று சொன்னார்கள். தூண்டி விடுபவர்களைத் தண்டிப்பதற்காகத் தான் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. சுவரில் ஒட்டி விட்டு 25 பைசா, 50 பைசா வாங்கிக் கொண்டு வாழ்கிற ஏழைகள் மட்டும் தண்டனை பெறக் கூடாது என்பதற்காகத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொன்னதைப்போல், தூண்டி விடுபவர்களுக்கும் தண்டனை தரத்தக்க வகையில் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட குற்றங்கள் புதிதாக வருவனவல்ல. ஏற்கெனவே இருந்த விதிப்படி சிறிய தண்டனைக்கு வழி இருக்கிறது. நஷ்ட ஈடு என்றால், உச்ச கட்டத் தொகை 500 ரூபாய். ஆனால் 5 ரூபாய், 10 ரூபாய் என்று கூட அது இருக்கலாம். அது குற்றத்தின் தன்மையைப் பொறுத்தது. சாதாரண ஒரு ஏழையெளிய குடிமகனின் வீட்டுச் சுவர் முழுவதுமாக எழுதிவிட்டால், சேதப்படுத்தி விட்டால், அப்போது அது பெரிய குற்றம். அந்த ஏழை மறுபடியும் ஒரு 200 ரூபாய், 300 ரூபாய் செலவு செய்து, கஷ்டப்படாமல், பாதிக்கப்படாமல் இருப்பதற்காகத் தான் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆனால் அதே சமயத்தில் அனுமதி பெற்று ஒட்டுவது அல்லது எழுதுவது என்பது வேறு. அப்படிச் செய்பவர்களுக்குப் பாதுகாப்பு உண்டு. நான் இதுவரை சொன்ன விளக்கங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்று சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு, மாவட்டக் காவல்-சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, " சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு, மாவட்டக் காவல்-சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1981) நிறைவேற்றப்பட வேண்டும் " என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு, மாவட்டக் காவல்-சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1981) நிறைவேற்றப்பட வேண்டும் ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(11) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பட்டா பாஸ் புத்தகம் வழங்கல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/1981).**

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

" தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு, பட்டா பாஸ் புத்தகம் வழங்கல் சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/1981) ஆய்வு செய்வதற்காக 24 உறுப்பினர்கள் அடங்கிய (16 சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களும், 8 சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும்) கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைக்க, சட்டப் பேரவைக்கு, மேலவை தனது இசைவைத் தெரிவிக்கின்றது. மேற்படி குழுவில் பணியாற்றுமாறு கீழ்க்கண்ட மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் :—

1. திரு. எஸ். ஆர். இராதா
2. திரு. எஸ். முத்து
3. திரு. ஓ. எஸ். துரைசாமி
4. திரு. காடுவெட்டி கண்ணப்பன்
5. டாக்டர் இரா. சனார்த்தனம்
6. திரு. சோ. ஆறுமுகம்
7. திரு. க. இராமமூர்த்தி
9. திரு. ஆ. நல்லசிவன் "

என்று முன்மொழிகிறேன்.



மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

" தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு, பட்டா பாஸ் புத்தகம் வழங்கல் சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/1981) ஆய்வு செய்வதற்காக 24 உறுப்பினர்கள் அடங்கிய (16 சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களும், 8 சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும்) கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைக்க, சட்டப் பேரவைக்கு, மேலவை தனது இசைவைத் தெரிவிக்கின்றது. மேற்படி குழுவில் பணியாற்றுமாறு கீழ்க்கண்ட மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் :—

1. திரு. எஸ். ஆர். இராதா
2. திரு. எஸ். முத்து
3. திரு. ஓ. எஸ். துரைசாமி
4. திரு. காடுவெட்டி கண்ணப்பன்
5. டாக்டர் இரா. சனார்த்தனம்
6. திரு. சோ. ஆறுமுகம்
7. திரு. க. இராமமூர்த்தி
8. திரு. ஆ. நல்லசிவன் ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(12) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 55/1981)**

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 55/1981) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 55/1981) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

---

@ 167-170 ஆம் பக்கங்களில் இணைப்பு XVIII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 55/1981) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 55/1981) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (3) நடப்பு கூட்டத் தொடரில் நடைபெற்ற அவை அலுவல்கள் குறித்த சில விவரங்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவைக்கு இந்தக் கூட்டத் தொடரின் அவை அலுவல்கள் குறித்த சில விவரங்களை அறிவிக்க விரும்புகிறேன்.

| | |
|---|---|
| 1. மேலவை நடைபெற்ற நாட்கள் | 43 |
| 2. மேலவை நடைபெற்ற நேரம் | 133 மணி 36 நிமிடங்கள் |
| 3. நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவுகள் | 50 |



| | |
|---|---|
| 4. கவன ஈர்ப்புத் தீர்மானங்களின் மீது அளிக்கப்பட்ட அறிக்கைகள் | 67 |
| 5. அவையில் முன்மொழியப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானங்கள் | 17 |
| 6. அவையில் எழுப்பப்பட்ட உரிமைப் பிரச்சினைகள் | 2 |
| 7. ஆளுநர் உரை மீதான விவாதத்தில் பங்குகொண்ட உறுப்பினர்கள் | 34 |
| 8. நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதத்தில் பங்குகொண்ட உறுப்பினர்கள் | 27 |
| 9. அவையில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்புகள் | 7 |
| 10. கொள்கை விளக்கக் குறிப்புகள் மீதான விவாதத்தில் பங்குகொண்ட உறுப்பினர்கள் | 66 |
| 11. விடையளிக்கப்பட்ட வினாக்கள் (உடுக்குறியிட்டவை) | 305 |
| 12. குறுகிய கால வினா | 2 |
| 13. அவைமுன் வைக்கப்பட்ட உடுக்குறியிடாத வினாக்கள் | 21 |
| 14. கேட்கப்பட்ட துணை வினாக்கள் | 965 |
| 15. ஆற்றிய உரைகளின் எண்ணிக்கை (14—5—1981 முடிய) | 547 |
| 16. அவைக்கு அளிக்கப்பட்ட குழுக்களின் அறிக்கை | 2 |
| 17. விவாதிக்கப்பட்ட தனி உறுப்பினர் தீர்மானம் | 3 |
| 18. பார்வையாளர்கள் எண்ணிக்கை | 1,166 |
| 19. விதி 82-ன் கீழ் அமைச்சரின் அறிக்கை | 3 |

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மேலவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து, அவை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்படுகிறது.

பின்னர், அவை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-00)

9. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

281. Notifications issued with G.O. Ms. No. 572, Labour and Employment, dated the 18th March 1981 in regard to an exemption from certain provisions of Act and Rules of Tamil Nadu Catering Establishments Act, 1958 and Rules 1959 to the Tamil Nadu Accountant General's Office Staff Co-operative Canteen Limited, Madras. [Laid on the table of the House under section 29(4) of the Tamil Nadu Catering Establishments Act, 1958 (Tamil Nadu Act XIII of 1958).]

282. Notification issued with G.O. Ms. No. 267, Commercial Taxes and Religious Endowments, dated the 16th March 1981 in regard to an amendment to the Regional Committee Rules, 1978. [Laid on the table of the House under section 116 (3) of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Tamil Nadu Act 22 of 1959).]

283. Fourth Annual Report of the Tamil Nadu Poultry Development Corporation Limited for the year 1976-77 (Tamil and English). [Laid on the table of the House under section 619(A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

*B. Reports, Notifications and Other Papers.*

197. Answers to Unstarred Questions Nos. 18 to 21.

198. Seventh Report of the Committee on Public Undertakings on the paragraphs relating to Water Supply Schemes in the Reports (Civil) of the Comptroller and Auditor-General of India for the years 1974-75 and 1975-76 (1980-81) (Tamil).

199. Eighth Report of the Committee on Public Undertakings on the paragraphs pertaining to Transport Department in the Reports (Commercial) of the Comptroller and Auditor-General of India for the years 1974-75 and 1975-76 (1980-81) (Tamil).

200. Thirty-Fifth Report of the Committee on Government Assurances.

* 201. The Industrial Disputes (Tamil Nadu Amendment) Bill, 1981 (L.A. Bill No. 43 of 1981), as passed by the Assembly.

* 202. The Tamil Nadu Industrial Establishment (Conferment of Permanent Status to Workmen) Bill, 1981 (L.A. Bill No. 40 of 1981), as passed by the Assembly.



*B. Reports, Notifications and Other papers—cont.*

* 203. The Tamil Nadu Agricultural Land Records of Tenancy Rights (Amendment) Bill, 1981 (L.A. Bill No. 41 of 1981), as passed by the Assembly.

* 204. The Tamil Nadu District Police and Madras City Police (Amendment) Bill, 1981 (L.A. Bill No. 33 of 1981), as passed by the Assembly.

* 205. The Tamil Nadu Payment of Salaries (Second Amendment) Bill, 1981 (L.A. Bill No. 55 of 1981), as passed by the Assembly.

* Circulated to all M.L.Cs. on 14th May 1981.

## இணைப்பு-I

323 ஆம் பக்கத்தில் உடுக்குறியிடாத வினா எண் 21-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

சென்னை அண்ணா நகர் பகுதியில் எந்த மன்றத்திற்கும் குடியிருப்பு ஒதுக்கப்படவில்லை. கீழ்க்கண்ட நிறுவனங்களுக்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தினரால் மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன:—

| பெயர். | மனை எண். | பரப்பளவு மனைகள். | சதுர அடிகள். | ஒதுக்கீடு தேதி. | ஒரு மனையின் விலை.. |
|---|---|---|---|---|---|
| கிருஷ்ணசாமி கல்வி அற நிறுவனம். | 4968ஏ | 27 | 1988 | 13.7.1972 | 7,100.00 |
| வசதியற்றோர் துயருற்றோர் மறுவாழ்வு நிலையம் (மித்ரா). | .. | 10 | .. | 24.8.1972 | 8,210.00 |
| பஞ்சாபியர் சங்கம். | 5042ஏ | 855 | 10 | 30.6.1976 | 8,210.00 |
| விவேகானந்தா கல்வி அற நிறுவனம். | 4187ஏ | 27 | 882 | 30.9.1976 | 8,210.00 |
| ஹோப் மறுவாழ்வு இல்லம். | 3623ஜி | 10 | 85 | 28.2.1977 | 12,375.00 |
| வள்ளியம்மாள் கல்வி அற நிறுவனம். | 4648பி | 76 | 1765 | 20.7.1977 | 12,500.00 |
| பெயின் பள்ளிக்கூடம் | 1010இ | 38 | 1372 | 24.5.1978 | 13,500.00 |

அண்ணா நகரில் கட்டிடங்கள் கீழ்க்கண்ட நிறுவனங்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.

| | | மாத வாடகை. ரூ. |
|---|---|---|
| சி. கந்தசாமி நாயுடு கல்லூரி (பச்சையப்பா அற நிறுவனம்) | நாய்லாந்து கட்டிடம். | 6,917 |
| அண்ணா நகர் மன்றம். | ஃபேபக்ட் பெவிலியன் | 992 |
| அண்ணா நகர் பெண்கள் மன்றம் | தாய்லாந்து பெவிலியன் | 25 |



## இணைப்பு II

[326 ஆம் பக்கத்தில் இனம் 3 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

1-12-1974 முதல் இம்மாநிலத்தில் செயற்பட்டு வரும் தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் வரன்முறைச் சட்டம், 1973 மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகள் ஆகியவற்றில் தனியார் துறை அங்கீகரிக்கப்பட்ட துவக்கப்பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத ஊழியர்கட்கும் பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது. ஆனால் இச்சட்டத்திலும் அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகளிலும் மேல்நிலைப் பள்ளிகள் சேர்க்கப்படவில்லை. ஏனெனில், இச்சட்டம் அமுலிற்கு வந்த பொழுது மேல்நிலைக் கல்வித் திட்டம் இம்மாநிலத்தில் இல்லை. எனவே தான் பள்ளிக் கல்வி இயக்குநர் தன்னுடைய 15-10-1979 நாளிட்ட ந.க. எண் 193361/W2/79 என் கொண்ட நடவடிக்கைகளில் மேற்சொன்ன சட்டமும் விதிகளும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு உரியதாகாது என்று விளக்கம் கொடுத்து, அக்காரணத்தினால் மேல்நிலைப்பள்ளிகளுக்கென வெளியிடப்பட்ட செயல்முறை ஆணைகள் பின்பற்றப்பட வேண்டும் என்று ஆணையிட்டுள்ளார்.

மேல்நிலைக் கல்வி திட்டம் நன்கு செயல்படும் வகையில் தமிழ்நாடு அரசு ஆணை (பலவகை) எண் 587, கல்வி, நாள் 22-3-1978-ல் மேல்நிலைப் பள்ளிகளுக்கான அங்கீகார விதிமுறைகளை நிர்ணயித்து ஆணையிடப்பட்டுள்ளது. அவ்வாணையில் மேல்நிலைப் பள்ளிகளின் நடைமுறைகள் குறித்தும் தெளிவான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் அவ்வப்போது பள்ளியின் நடைமுறைகள், பணியாளர்கள் நியமனங்கள் சம்பந்தமாகவும் அரசு ஆணைகளும் அவைகளின் பேரில் இயக்குநரின் அறிவுரைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. எனவே தமிழ்நாடு தனியார் பள்ளிகள் வரன்முறைச் சட்டம், 1973-ல் மேல்நிலைப் பள்ளிகள் சேர்க்கப்படாத காரணத்தால் அதில் பணிபுரியும் ஆசிரியர்கட்கு பாதுகாப்பு இல்லை என்பது சரியல்ல. மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் உயர்நிலைப் பள்ளி வகுப்புகளைக் கொண்ட பிரிவுகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும், ஆசிரியரல்லாத பிற பணியாளர்கட்கும் ஏற்கெனவே 1973 ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட தனியார் பள்ளிகளின் ஒழுங்குபடுத்தும் சட்டத்தைப் பின்பற்றியே பாதுகாப்பு அளிக்கப்பட்டு நடைமுறையில் இருந்தும் வருகிறது. மேல்நிலைப் பள்ளி வகுப்புகளில் பணியாற்றும் ஆசிரியர்களைப் பொறுத்தவரை மேற்கூறிய சட்டத்தை அமுலாக்கயாவிடினும் நியமனமுறை, கல்வித் தகுதிகள் குறித்து வழங்கப்பட்டுள்ள அரசாணை எண் 1091, கல்வி, நாள் 15-6-1978 அடிப்படையில் துறைத் தலைவர் என்ற முறையில் இயக்குநரே முறையீடு தீர்க்கும் அலுவலராக செயலாற்றி வருகிறார். மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் சார்பாக பணிப் பாது

காப்புக் கோரி சார்நிலை அலுவலர்களிடமிருந்தோ அல்லது நிர்வாகத்தினரிடமிருந்தோ பிரச்சினைகள் வருதால் அவ்வப்போது உரிய பரிகாரம் காணப்பட்டு அறிவுரைகள் வழங்கி நிலைமை சீர் செய்யப்படுகிறது.

இருப்பினும் தமிழ்நாடு தனியார் பள்ளிகள் வரன்முறை விதிகள், 1974-க்கு உரிய திருத்தங்கள் மேற்கொண்டு மேல்நிலைப் பள்ளிகளையும் இச் சட்டம் மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகள் ஆகியவற்றின் வரம்பிற்குள் கொண்டு வருவதற்குரிய கருத்துருவும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் உள்ளது. மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குரிய பணி விதிகள் தற்போது வெளியிடப்பட்டுள்ளது. இவைகளையும் கவனத்தில் கொண்டு தகுந்த ஆணைகள் வெளியிடப்படும்.

## இணைப்பு III

[327 ஆம் பக்கத்தில் இனம் 3 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

அரசு ஊழியர்களைப் போலவே குறிப்பிட்ட ஆண்டுகள் பணி செய்த உதவிப் பேராசிரியர்கள் பேராசிரியர்களாகப் பதவி உயர்வு பெற வேண்டும் என்பது பல கோரிக்கைகளில் ஒன்று.

இதனை அரசு ஏற்று பத்து ஆண்டு காலம் உதவிப் பேராசிரியர்களாகப் (Assistant Professors) பணிபுரிந்தவர்கள் 1-4-1980லிருந்து பேராசிரியர்களாக (Professors) பதவி உயர்த்தப்பட வேண்டுமென்று முடிவு செய்துள்ளது. அத்துடன் பல்வேறு பாடங்களைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களின் பதவி உயர்வு வாய்ப்புகளில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைச் சரிப்படுத்தும் வகையில் இனிமேல் பத்து ஆண்டுகள் பணி செய்தவர்கள் மட்டுமே இவ்வாறு பதவி உயர்த்தப்படுவார்கள் என்றும் கல்வித் துறை அரசாணை எண் 893-ல், வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து விளக்கமும் வெளியிடப்பட்டது.

தனியார் கல்லூரிகளில் பணிபுரியும் அத்தகைய உதவிப் பேராசிரியர்களுக்கு பதவி உயர்வு அளிக்க அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து உரிய பரிந்துரைகளை கல்லூரிக் கல்வி இயக்குநர் பெற்று அரசாணை எண் 893-ஐ அமல் படுத்திக் கொண்டு வருகின்றார்.

அரசுக் கலைக் கல்லூரி உதவிப் பேராசிரியர்களைப் பொறுத்தமட்டில் கல்லூரிக் கல்வி இயக்குநரிடமிருந்து சுமார் 600-க்கும் மேற்பட்ட நபர்களுக்குப் பதவி உயர்வு தருமாறு அரசுக்கு பரிந்துரை வந்துள்ளது. கல்வித் துறை, அதனை நிர்வாகம் மற்றும் சீர்திருத்தத் துறை மற்றும் நிதித் துறையுடன் பரிசீலித்து வருகிறது. வெகு விரைவில் அரசாணை எண் 893 அமுல் படுத்தப்பட்டுவிடும்.



## இணைப்பு

[429 ஆம் பக்கத்தில் இனம் 3 (3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

வீரவநல்லூர் இந்து உயர்நிலைப் பள்ளியின் செயலர், பள்ளிக்குழு அமைப்பது முதலியவைகளில் தற்போது பிரச்சினை உள்ளது. அதனால் அப்பள்ளிக்கு ஆசிரியர்கள் ஊதியம் மற்றும் இதர அன்றாட நடைமுறைகளைக் கவனிக்க திருநெல்வேலி மாவட்டக் கல்வி அலுவலருக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், மேற்படி பள்ளியின் கட்டிடங்கள் பழுதடைந்துள்ளதாக மாவட்டக் கல்வி அலுவலர் தெரிவித்ததன் பேரில், அப்பள்ளியின் பொதுக்கணக்கு நிதிகளிலிருந்தும், வசதிக் கட்டண நிதியிலிருக்கும் தொகையைக் கொண்டு, பழுதடைந்த கட்டிடங்களை பழுது பார்க்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

## இணைப்பு

[332 ஆம் பக்கத்தில் இனம் 3 (4)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

திரு. சுந்தரேசன் என்பவரின் மகளும், என். கே. டி. மகளிர் உயர்நிலைப் பள்ளியின் மாணவியுமான 14 வயது சாந்தி சென்னை கஸ்தூரிபா காந்தி மருத்துவ மனையிலுள்ள பள்ளி சுகாதார வெளியிருப்பு நோயாளி பகுதிக்கு 15—4—1981 அன்று காலை 9-30 மணிக்கு சிகிச்சைக்காக வந்தார். அவருக்கு வலது கண்ணில் ஏற்பட்ட கட்டிக்காக ஸ்ட்ரெப்டோமைசினும், ப்ரொக்கெய்ன் பென்சிலினும் போடும்படி பள்ளி மாணவர்கள் சிகிச்சைப் பிரிவிற்கான மருத்துவ அதிகாரியால் பணிக்கப்பட்டது. மேற்படி ஊசி மருந்து செவிலியால் போடப்பட்டது. ஊசி போட்ட ஐந்து நிமிடங்களில் நோயாளி வாந்தி எடுத்ததுடன் மயக்கமுற்றார். பாயில்ஸ் கருவியின் மூலம் செயற்கை முறையில் சுவாசிக்க வைக்கும் முறை மேற்கொள்ளப்பட்டது. நோயாளிக்கு நாம்பு மூலம் குளுகோஸ் மற்றும் டெரிபினின் ஊசி மருந்துகள் செலுத்தப்பட்டன. முக்கிய முதலுதவி அளித்தபின் நோயாளி தீவிர சிகிச்சைப் பிரிவிற்கு மாற்றப்பட்டார். இ.ஸி.ஜி. எடுக்கப்பட்டது. நோயாளியின் நிலைமை 11 மணியிலிருந்து தேற ஆரம்பித்தது. மூச்சு விடுதல், நாடித் துடிப்பு, இரத்த அழுத்தம் முதலியன தேறின. ஆனால், பகல் 1 மணிக்கு மேல் நோயாளிக்கு பல்மோனரி ஈடிமா (Pulmonary Oedema) ஏற்பட்டது. இருதய சிகிச்சை நிபுணர் நோயாளியைப் பார்த்து இரத்த ஓட்டம் நின்றுவிட்டதாக அறிவித்தார். மேலே கூறப்பட்ட சிகிச்சைகளுடன் லோமோடெக்ஸ் IV ட்ரிப் நோயாளிக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் நோயாளியின் பொது உடல்நிலை தொடர்ந்து மோசமாகிக்கொண்டே போய், நோயாளி 4-45-க்கு இறந்து போனார். நோயாளியின் உயிரைக் காக்க அனைத்து முயற்சிகளும்

மேற்கொள்ளப்பட்டன என்று மருத்துவமனைக் கண்காணிப்பாளர் அறிவிக்கிறார். குழந்தை மருத்துவர்களும், இருதய நோய் சிகிச்சை நிபுணரும் பணியாளர்களும் காலை 9-45 முதல் மாலை 4-45 வரை இந்தப் பெண்ணின் உயிரைக் காக்க போராடினார்கள். 1977 ஆம் ஆண்டிலிருந்து பல தடவைகள் ஸ்ட்ரெப்டோமைசின் பென்சிலின் ஊசி மருந்துகள் இந்த நோயாளிக்குப் போடப்பட்டுள்ளதாக இம்மருத்துவமனைக் கண்காணிப்பாளர் தெரிவிக்கிறார். ஏற்கனவே பல தடவை இந்த ஊசி போடப்பட்டுள்ளதால் இப்பெண்ணிற்கு 15-4-1981 அன்று சோதனை ஊசி ( (Test dose) ) போடவில்லை என்று மருத்துவமனை கண்காணிப்பாளர் அறிவிக்கிறார். ஸ்ட்ரெப்டோமைசின் மற்றும் பெனிசிலின் ஊசிகள் (Combination) ) போட்டதால் ஏற்பட்ட விளைவு என்றும் கூறுகிறார். இந்த இறப்பு மருத்துவர்களின் சக்திக்கும் மீறியதாகும்.

இந்தச் செய்தியைக் கேட்டவுடன் மருந்து ஆய்வாளர் மருத்துவமனையில் ஏனைய வார்டுகளிலிருந்து பெறப்பட்ட இம்மருந்தின் இருப்பிலிருந்து சோதனைக்காக சிறிது எடுத்துக் கொண்டார் என்றும், 75 வயில் (Vial) ஸ்ட்ரெப்டோமைசின் 2 வயில் புரோ-பென்சைல் பெனிசிலின் இருப்பை நோயாளிக்குக் கொடுக்கக் கூடாதென்று தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டது என்று மருந்து கட்டுப்பாடு அதிகாரி அறிவிக்கிறார். இதே இருப்பிலிருந்து போடப்பட்ட ஊசியினால் மற்ற நோயாளிகளுக்கு எந்த விதமான ஊறும் ஏற்படவில்லை என்று மருந்து ஆய்வாளர் அறிவிக்கிறார். இந்த மருந்தின் தரத்தைப் பற்றிய அறிக்கை கிங் நிலையத்திலுள்ள சோதனைக் கூடத்திலிருந்து மருந்துக் கட்டுப்பாடு அதிகாரியால் எதிர்பார்க்கப்படுகிறது. மராட்டிய மாநிலத்தில் செய்யப்படும் ஸ்ட்ரெப்டோமைசின் ஊசி மருந்தின் தரத்தை ஆய்வு செய்யுமாறு மகாராட்டிர மாநில அரசு கேட்டுக்கொள்ளப்பட்டிருப்பதாகவும் மருந்து கட்டுப்பாடு அதிகாரி தெரிவிக்கிறார். ஐ.டி.பி.எல். (I. D. P. L.) நிறுவனத்திற்காக இன்டிராக் (Intrac) நிறுவனம் தயாரிக்கும் புரோ-பென்சைல் பெனிசிலினை ஆய்வு செய்யுமாறு காஞ்சிபுரத்திலுள்ள முதுநிலை மருந்து ஆய்வாளர் பணிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கிறார்.

## இணைப்பு VI

[336 ஆம் பக்கத்தில் இனம் 3 (5)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

கேரளாவில் இதுவரை லாரி சொந்தக்காரர்களால் கொடுக்கப்பட்டு வந்த சுமை ஏற்றி, இறக்குவதற்கான கூலியை அவர்கள் கொடுக்க முடியாதெனவும் அந்தக் கூலியை பொருட்களின் சொந்தக்காரர்கள் (வியாபாரிகள்) தான்



கொடுக்க வேண்டும் என்ற முடிவும் செய்துள்ளார்கள். இது குறித்து தீர்வு ஏதும் ஏற்படாததால் லாரி சொந்தக்காரர்கள் லாரிகளை ஓட்டுவதில்லை என்று முடிவு செய்துள்ளனர்.

தமிழ்நாட்டிலிருந்து (கன்னியாகுமரி, திருநெல்வேலி, மதுரை, கோயம்புத்தூர் மாவட்டங்கள்) கேரளாவிற்கு செல்லுகின்ற லாரிகளையும் தமிழ்நாட்டு லாரி சொந்தக்காரர்கள் ஓட்டுவதில்லை என்று அவர்களாகவே முடிவு செய்துள்ளதால் தமிழ்நாட்டிலும் வியாபாரம் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு லாரிகள் சென்றால் லாரிகளுக்கு சேதம் ஏற்படும் என்று அஞ்சுவதால் அவர்களாகவே கேரளாவிற்கு லாரிகளை ஓட்ட வேண்டாமென்று முடிவு செய்துள்ளனர்.

லாரி சொந்தக்காரர்களுடன் ஒரு கூட்டம் நடத்தி அவர்கள் கேரளாவிற்கு ஏற்கனவே எடுத்து செல்வதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்ட பொருட்களை, குறிப்பாக உணவுப் பொருட்கள், காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றை எடுத்துச் செய்வதற்கு அவர்களை ஊக்குவிக்கவேண்டும் என்று கன்னியாகுமரி, திருநெல்வேலி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய மாவட்ட ஆட்சியாளர்களை சென்னை போக்குவரத்து ஆணையர் கேட்டுக்கொண்டுள்ளார். இணை போக்குவரத்து ஆணையர்களும் ஒத்துழைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் இது குறித்து கூட்டம் நடத்தியுள்ளார். இதில் லாரி சொந்தக்காரர்கள் சங்க பிரதிநிதிகள் மட்டுமின்றி பிற லாரி சொந்தக்காரர்களும் கலந்து கொண்டனர். அவர்கள் தங்கள் சங்கத்தில் கலந்து ஒரு முடிவை விரைவில் தெரிவிக்கிறோம் என்று கூறியதாக மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

கேரள அரசின் தலைமைச் செயலாளர் தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளரிடம் தனது 7-5-1981 ஆம் நாளிட்ட தந்தி மூலம் திரு. சக்காரியா மாத்யூ மற்றும் திரு. என். கோபால கிருஷ்ணன் நாயர் ஆகிய இரண்டு வருவாய் வாரியத்தின் உறுப்பினர்களை முறையே கோயம்புத்தூர் மற்றும் நாகர் கோவிலுக்கு அனுப்பி அங்குள்ள அதிகாரிகள் மற்றும் லாரி போக்குவரத்து சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி போக்குவரத்தை திரும்பவும் ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ள அனுப்பியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். மாவட்ட ஆட்சியர்களுக்கும் தந்தி மூலம் செய்தி அனுப்பியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதுபற்றி ஏற்கனவே மாவட்ட ஆட்சியாளர்கள், போலீஸ் அதிகாரிகள், இணை போக்குவரத்து ஆணையர்களுக்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

[1981 மே 15

கேரள முதல் அமைச்சர் 13-5-1981 புதன்கிழமை அன்று கோவைக்கு வர இருக்கிறார். அதையொட்டி கோயம்புத்தூரிலிருந்து கேரளாவின் பல்வேறு பகுதிகளுக்கு லாரிப் போக்குவரத்து பற்றியும் . கேரளாவிலிருந்து மாற்று ஏற்பாடாக இரயில் மூலமாக சரக்குகள் ஏற்றிச் செல்ல இரயில்வே நிர்வாகத்தினரோடு கலந்து பேசவும் இருக்கிறார் என கேரள முதல்வரின் அந்தரங்க செயலாளர் தந்தி அடித்துள்ளார். இதன்பேரில் நம் மாநில தலைமைச் செயலாளர் வழங்கிய அறிவுரைக்கிணங்க உள்துறைச் செயலாளர் கோவை மாவட்ட ஆட்சி தலைவரோடு தொடர்பு கொண்டு அவருக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

கேரள முதல்வர் 8-5-1981-ல் நம் முதல்வருக்கு அனுப்பிய தந்தி ஒன்றில் கேரளத்திலிருந்து தமிழகத்திற்கும், தமிழகத்திலிருந்து கேரளத்திற்கும் செல்லும் லாரிகளுக்கு தகுந்த போலீஸ் காவல் அளிக்குமாறு கோரியுள்ளார். இதுபற்றி ஏற்கனவே சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சி தலைவர்களுக்கும் போலீஸ் கண்காணிப்பாளர்களுக்கும் உள்துறைச் செயலாளர் 8—5—1981-ல் தக்க அறிவுரை வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இணைப்பு VII

[342 ஆம் பக்கத்தில் இனம் 3 (6)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

தமிழகத்தில் மொத்தம் 2,227 கால்நடைக் கிளை நிலையங்கள் உள்ளன. 11 மாதம் பயிற்சி பெற்ற கால்நடை ஆய்வாளர்கள் இங்கு பணியாற்றி வருகின்றனர். தற்போது 275 கிளை நிலையங்கள் காலியாக உள்ளன. கிளை நிலையங்களில் கால்நடைகளுக்கு முதலுதவி வழங்கப்படுகிறது. இங்கு பட்டம் பெற்ற கால்நடை மருத்துவர்கள் நியமிக்கப்படுவதில்லை. கால்நடை ஆய்வாளர்களின் பயிற்சியினை மீண்டும் துவக்க வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தற்போது மிக அதிக அளவில் அதாவது 275 கிளை நிலையங்கள் காலியாக இருப்பதனைக் கருத்திற்கொண்டும், கால்நடைகளைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தைக் கருத்திற்கொண்டும் தற்போது 168 கால்நடை மருத்துவர்கள் வேலை இல்லாமல் இருப்பதைக் கருத்திற் கொண்டும் ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றிவரும் கால்நடை ஆய்வாளர்களை ஒன்றியங்களிலிருந்து திரும்பப்பெற்று அவர்களை காலியாக உள்ள கிளை நிலையங்களில் வேலையில் அமர்த்தவும் ஊராட்சி ஒன்றியங்களில் விரிவாக்க அலுவலர்களாக கால்நடை உதவி மருத்துவர்களை நியமிக்கவும் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். விவசாய விரிவாக்க அலுவலர்கள் அந்தந்த ஆண்டில் பட்டம்



1981 மே 15]

பெற்றவர்களே. அதேபோன்று கால்நடை மருத்துவத்தில் பட்டம் பெற்றவர்களை ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை விரிவாக்க அலுவலர்களாக நியமிப்பது மக்களுக்கு நல்ல பயன் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்படி கால்நடை மருத்துவர்களை ஒன்றியங்களில் நியமிப்பதால் கால்நடை பட்டதாரிகளிடையே வேலையின்மை என்கிற நிலை மறையும். இங்குள்ள கால்நடை ஆய்வாளர்களை காலியாக உள்ள கிளை நிலையங்களில் நியமிப்பதால் எல்லாக் கிளை நிலையங்களும் உடனடியாக செயல்பட்டு அந்தப்பகுதியில் உள்ள கால்நடைகளுக்கு உடனடியாக மருத்துவ வசதியும் கிடைக்கும்.

மேலும், கால்நடை பராமரிப்புத் துறையில் பல மாவட்டங்களில் 87 கால்நடை உதவி மருத்துவர்கள் பதவி தற்போது காலியாக உள்ளன. தமிழ்நாடு தேர்வாணைக்குழு மூலம் மருத்துவர்களைத் தேர்ந்தெடுத்து நியமிப்பதில் காலதாமதம் ஏற்படுவதைக் கருத்திற்கொண்டு வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் தேர்ந்தெடுத்து இந்த 87 காலி இடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. உறுப்பினர் அவர்கள் கூறுவது போல் 300-க்கும் மேற்பட்ட பட்டதாரிகள் வேலையில்லாமல் தவிக்கின்றனர் என்பது உண்மை அல்ல என்றாலும் வேலையில்லாமல் இருக்கும் 168 பட்டதாரிகளுக்கு வேலை கொடுக்கும் வாய்ப்புகளை அரசு செய்து வருகிறது. இவ்வாறாக வேலையில்லா கால்நடை மருத்துவ பட்டதாரிகளை வேலையில் அமர்த்த அரசு ஏற்கெனவே நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதால் இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது மேற்கொண்டு விவாதம் தேவையில்லையெனக் கருதுகிறேன்.

## இணைப்பு VIII

L.A. Bill No. 42 of 1981.

(As passed by the Assembly.)

[349 ஆம் பக்கத்தில் இனம் 7 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

*A Bill to provide for the welfare of the workers in the handloom industry and to regulate the conditions of their work and security of their employment and for certain other matters connected therewith.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-second Year of the Republic of India as follows:—

### CHAPTER I.

### PRELIMINARY.

1. *Short title, extent and commencement*.—(1) This Act may be called the Tamil Nadu Handloom Workers (Conditions of Employment and Miscellaneous Provisions) Act, 1981.

(2) It extends to the whole of the State of Tamil Nadu.

(3) It shall come into force on such date as the Government may, by notification, appoint; and different days may be appointed for different areas and for different provisions of this Act.

2. *Definitions*.—In this Act, unless the context otherwise requires,—

(*a*) 'adult' means a person who has completed eighteen years of age;

(*b*) 'child' means a person who has not completed sixteen years of age;

(*c*) 'competent authority' means any authority authorised by the Government by notification to perform all or any of the functions of the competent authority under this Act and for such areas as may be specified therein;

(*d*) 'day' means a period of twenty-four hours beginning at mid-night;

(*e*) 'domestic weaver' means any person who gets the raw materials from a master weaver or employer and attends to any operation connected with handloom weaving whether such operation is carried on in the home, in which such worker works or in any other place but does not include an independent weaver:

(*f*) 'employee' means any person employed in any work connected with handloom industry under an employer and includes a domestic weaver, but excludes an independent weaver, to do any work skilled, unskilled, manual or clerical.

(*g*) 'employer' means a person who has the ultimate control over the affairs of any industrial premises or who has by reason of his advancing money, supplying goods or otherwise, a substantial interest in the control of the affairs of any industrial premises and includes—

(i) any other person to whom the affairs of any industrial premises are entrusted, whether such other person is called the managing agent, manager, superintendent or by any other name: and

(ii) a president or a chief executive of any weavers co-operative society or a master weaver engaged in handloom industry;

(*h*) 'Government' means the State Government;



(*i*) 'handloom industry' means an industry which is engaged in the manufacture or production by a loom, other than a powerloom of any cloth or fabric or product and includes any process or work pertaining to handloom weaving;

(*j*) 'independent weaver' means any person who carries on any weaving operation in his dwelling place but does not include a domestic weaver;

(*k*) 'industrial premises' means any place or premises (not being a private dwelling house) including the precincts thereof, in which or in any part of which any type of work relating to handloom industry is carried on;

(*l*) 'Inspector' means the Inspector appointed under sub-section (1) of section 6;

(*m*) "lay-off' means the failure, refusal or inability of an employer on account of shortage of raw materials or the accumulation of stock of finished products or the breakdown of any machinery to give employment to a person employed, who is a registered worker but does not include retrenchment;

(*n*) 'master weaver' means and includes any person not being a co-operative society, who supplies raw materials to any other person, whether or not the other person is a domestic weaver or an employee for the purpose of converting the same into finished product;

(*o*) 'powerloom' means a loom which is worked by power as defined in clause (*g*) of section 2 of the Factories Act, 1948 (Central Act LXIII of 1948), and includes any automatic loom;

(*p*) 'private dwelling house' means a house in which persons engaged in any work connected with handloom industry, reside;

(*q*) 'retrenchment' means the termination by the employer of the service of an employee for any reason whatsoever, otherwise than as a punishment inflicted by way of disciplinary action, but does not include—

(i) voluntary retirement of the employee; or

(ii) retirement of the employee on reaching the age of superannuation if the contract of employment between the employer and the workman concerned contains a stipulation in that behalf; or

(iii) termination of the service of an employee on the ground of continued ill-health;

(r) 'week' means a period of seven days beginning at midnight on Saturday;

(s) 'young person' means a person who has completed sixteen years of age but has not completed eighteen years of age.

## CHAPTER II.

### LICENSING OF INDUSTRIAL PREMISES.

3. *Industrial premises to be licensed.*—Save as otherwise provided in this Act, no employer shall use or allow to be used any place or premises as on industrial premises unless he holds a valid licence issued under this Act and no such premises shall be used except in accordance with the terms and conditions of such licence.

4. *Licences.*—(1) Any person who intends to use or allows to be used any place or premises as industrial premises shall make an application in writing to the competent authority, in such form and on payment of such fees as may be prescribed for a licence to use, or allow to be used, such premises as an industrial premises:

Provided that nothing contained in this section shall apply to an independent weaver carrying on the weaving operation in his dwelling place assisted only by the other members of his family.

(2) The application for a licence shall specify the number of employees proposed to be employed at any time of the day in the place or premises and shall be accompanied by a plan of the place or premises prepared in such manner as may be prescribed.

(3) The competent authority shall, in deciding whether to grant or refuse a licence, have regard to the following matters:—

(a) the suitability of the place or premises which is proposed to be used for the weaving operation;

(b) the financial resources of the applicant including his financial capacity to meet the demands arising out of the provisions of this Act or of any other law for the time being in force relating to welfare of labour;



(c) whether the application is made *bonafide* on behalf of the applicant himself or in *benami* of any other person;

(d) the welfare of the labour in the locality, the interest of the general public and such other matters as may be prescribed.

(4) (a) A licence granted under this section shall not be valid beyond the financial year in which it is granted, but may be renewed every year on payment of such fees as may be prescribed.

(b) An application for renewal of a licence granted under this Act shall be made at least thirty days before the expiry of the period thereof, on payment of such fees as may be prescribed and where such application has been made, the licence shall be deemed to continue, notwithstanding the expiry of the period thereof, until the renewal of the licence or the rejection of the application, as the case may be:

Provided that if any application for a licence or for renewal of the licence is not made within thirty days of commencement of any process connected with weaving operation or before thirty days of expiry of any licence already issued but is made after this period of thirty days, a sucharge of 25 per cent of the fee to be prescribed for issue or renewal of the licence, as the case may be, shall be levied, subject, however, to the condition that such an option to get a licence or renewal wih surcharge shall be allowed only up to a period of ninety days either after the commencement of any operation connected with the weaving process or after the expiry of the licence already issued but not renewed under the foregoing provisions of this Section. In that event, it shall be construed that the weaving operation is carried on without a valid licence which shall in turn be a contravention of the provisions of this Act warranting penal action as prescribed.

(c) The competent authority shall, in deciding whether to renew a licence or not, have regard to the matters specified in sub-section (3).

(5) The competent authority may, after giving the holder of a licence an opportunity of being heard, cancel or suspend any licence granted or renewed under this Act, if it appears to such authority that such licence has been obtained by misrepresentation or fraud or that the licencee has contravened or failed to comply with any of the provisions of this Act or the rules made thereunder or any of the terms and conditions of the licence.

(6) The Government may issue in writing to the competent authority such directions as the Government may consider necessary in respect of any matter relating to the grant or renewal of licences under this section.

(7) Subject to the foregoing provisions of this section, the competent authority may grant or renew licences under this Act on such terms and conditions as it may determine and where the competent authority refuses to grant or renew any licence, it shall do so by an order in writing, communicated to the applicant giving the reasons for such refusal within a reasonable time.

5. *Appeals.*—Any person aggrieved by the decision or order of the competent authority refusing to grant or renew a licence or cancelling or suspending a licence under section 4 may, within thirty days of receipt of the said order and on payment of such fees, not exceeding twenty rupees, as may be prescribed, appeal to such authority as the Government may, by notification specify in this behalf and such authority may, by an order in writing either confirm, modify or reverse any order refusing to grant or renew a licence or suspending or cancelling a licence. The order of such appellate authority shall be final and binding and shall not be questioned in any Court of Law.

## CHAPTER III.

### APPOINTMENT OF INSPECTORS, ETC.

6. *Inspectors.*—(1) The Government may, by notification, appoint such persons possessing the prescribed qualifications to be Inspectors for the purposes of this Act. The Government or such authority as may be prescribed may assign to the Inspectors the local limits within which they shall exercise their functions under this Act.

(2) The Government may, by notification, appoint any person possessing the prescribed qualifications to be a Chief Inspector who shall exercise the powers of an Inspector throughout the State.

7. *Inspectors, Chief Inspector, etc, to be public servants.*—Every Inspector, Chief Inspector, Authority and Appellate Authority appointed under this Act shall be deemed to be a public servant within the meaning of section 21 of the Indian Penal Code (Central Act XLV of 1860).



8. *Powers of Inspectors.*—(1) Subject to any rules made in this behalf by the Government, an Inspector may, within the local limits assigned to him—

(*a*) make such examination and hold such inquiry as may be necessary for ascertaining whether the provisions of this Act have been or are being complied with:

Provided that no person shall be compelled under this section to answer any question or to give any evidence which may tend to incriminate himself;

(*b*) require the production of any prescribed register or form and any other document required to be maintained by him, and take on the spot or otherwise statements of any person which he may consider necessary for carrying out the purposes of this Act;

(*c*) enter at all times any industrial premises, with such assistance as he thinks fit, if he has reason to believe that such industrial premises is being used for carrying on handloom industry or any other operation connected with handloom industry;

(*d*) exercise such other powers as may be prescribed for carrying out the purposes of this Act.

(2) If an Inspector has reasonable grounds for suspecting that any handloom industry is being carried on in any industrial premises in contravention of the provisions of this Act, he may after giving due notice to the employer or in the absence of the employer to the occupier, enter such industrial premises with such assistants, if any, as he may think fit.

(3) Every employer or occupier shall afford to every Inspector all reasonable facilities in the discharge of his duties under this Act.

## CHAPTER IV.

### HEALTH AND WELFARE.

9. *Cleanliness.*—Every industrial premises or any place, excepting the dwelling place of a weaver, wherein any handloom industry or any other operation connected with handloom industry is ordinarily carried on, shall be kept clean and free from effluvia arising from any drain privy or other nuisance and shall also maintain such standard of cleanliness including white washing, colour washing, varnishing or paintaing as may be prescribed.

10. *Ventilation.*—(1) For the purpose of preventing injury to the health of the persons working therein, every industrial premises shall maintain such standards of ventilation as may be prescribed.

(2) Wherever dust or fume or other impurity of such a nature and to such an extent as is likely to be injurious or offensive to the employees in any industrial premises or weaving centre is given off by reason of the manufacturing process carried on in such premises or weaving centre the competent authority may require the employer to take such effective measures as may prevent the inhalation of such fume or dust or other impurity and accumulation thereof in any work room.

*Explanation.*—For the purpose of this section "manufacturing process" means any process for, or incidental to, making, finishing or packing or otherwise, treating any article or substance with a view to its use, sale, transport delivery or disposal as handloom fabric.

11. *Lighting.*—(1) In every industrial premises where employees are working or passing, there shall be provided and maintained sufficient and suitable lighting, natural or artificial or both.

(2) In every industrial premises, all glazed windows and sky-lights used for the lighting of any work room shall be kept clean on both the inner and outer surface.

12. *Over-crowding.*—(1) No room in any industrial premises shall be over-crowded to an extent injurious to the health of the employees therein.

(2) Wihout prejudice to the generality of sub-section (1), there shall be in any work room of any such industrial premises at least 4-1|4 cubic metres of space for every employee therein, and for the purposes of this sub-section, no account shall be taken of any space which is more than 3 metres above the level of the floor of the work room.

13. *Drinking water.*—(1) The employer shall make in every industrial premises, effective arrangements to provide and maintain, at suitable points conveniently situated for all employees therein, a sufficient supply of wholesome drinking water.

